
கல்கி
KALKI 17-5-1959
30 காசு

கல்கி

பொருளடக்கம்

மின்சார இதழ்

'ததாஸ்து'வின் விளைவு!	(தலையங்கம்)	...	5
என்ன சேதி?	...	...	6
இணையற்ற சக்தி	முதன் மந்திரி கே. காமராஜ்	...	8
சென்னை வழிகாட்டுகிறது	நிதி மந்திரி சி. சுப்பிரமணியம்	...	9
மின்சார உற்பத்தியும் தேவையும்	அமைச்சர் எம். பக்தவத்சலம்	...	11
நடேசய்யரின் குற்றம்	ராஜாஜி	...	15
வள்ளுவர் வாசகம்	...	...	19
சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி	வி. பி. அப்பாதுரை	...	20
பெரியாறு காட்சிகள்	கதிர்	...	29
கிராமங்களில் மின்சார வசதி	எச். கே. ராமசாமி	...	33
திருவாரூர்த் திருப்பணி	சோமசுந்தரத் தம்பிரான்	...	35
கண்கள் உறங்காவோ?	மாயாவி	...	41
பாஞ்சாலி சபதம்	காந்தன்	...	51
பாண்டிமா தேவி	நா. பார்த்தசாரதி	...	55
தேன்கூடு	ஆர்வி	...	65
தங்க நகரம்	அகிலன்	...	72
தேவனுஞ்சேரிப் பண்ணை	துரோணன்	...	77
மாடும் மனிதனும்	க. பஞ்சாபகேசன்	...	87
மழை பெய்கிறது	துறைவன்	...	93
பக்தி வயல்	பௌராணிகர்	...	97
பிணக்கு	வாசவன்	...	106

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 இதழ் 42	தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்	விகாரி ௵ வைகாசி ௴ 3

‘ததாஸ்து’வின் விளைவு

எல்லாரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்; இந்த உண்மையைச் சென்னை மந்திரி சபையில் எல்லாரையும்விட நிதிமந்திரி திரு சி. சுப்பிரமணியம் நன்றாக உணர்ந்திருக்கிறார் போல் தோன்றுகிறது. உணவு விஷயம் அடைந்துள்ள ஆபத்தான நிலைமையைப் பற்றி நிதிமந்திரி அலற ஆரம்பித்துவிட்டார். இனியும் உண்மையை மூடி மறைக்கலாகாது என்ற முடிவுக்கு அவர் வந்திருக்க வேண்டும்.

இத்தனை நாட்களும் உணவு விஷயத்தில் நம்முடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து விட்டோம். நமது தேவைக்கு மேலாக நெல் விளைந்திருக்கிறது என்று புள்ளிக் கணக்கோடு நமது விவசாய மந்திரி மக்களுக்குத் திருப்தி ஏற்படுத்தும் முறையில் பேசிக் கொண்டிருந்தார்.

அந்தக் கூற்றை நாம் நம்பவில்லை. விலைவாசிகள் ஏறும்போது அந்தப் பேச்சுக்கு இடமில்லை. புள்ளி விவரம் நம்பக் கூடியதாக இல்லை என்றோம். விவசாயத்தில் ஊக்கம் செலுத்த வேண்டியவர்கள், நிலத்தை விற்று நகர்ப்புறங்களுக்கு ஓடி வருகிறார்கள். நிலத்தில் இறங்கி வேலை செய்பவர்கள் விளைவைப் பெருக்குவதில் அக்கறையின்றி ஏனோதானோ என்று வேலை செய்கிறார்கள். அதனால் விளைவு பெரிதும் குறைகிறது. சென்ற தேர்தலின்போது செய்த நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் விளைவே இது என்றெல்லாம் கூறினோம். ஆனால் சர்க்கார் நாம் கூறிய காரணங்களை ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் நாம் என்ன விளைவு ஏற்படும் என்று சொல்லி வந்தோமோ அது இன்று ஏற்பட்டு அதை ஒப்புக்கொண்டும் விட்டார்கள். விளைவு பெருகவில்லை, பெரிதும் குறைந்திருக்கிறது என்று நிதிமந்திரி கூறியிருக்கிறார்.

அதற்கு அவர் கூறும் காரணம் மட்டும் வேறு. அதாவது வட ஆர்க்காடு முழுதிலும் பயிர் தீய்ந்துவிட்டது; திருச்சி, திருநெல்வேலி ஜில்லாக்களில் சில பகுதிகளில் பயிர் கருகிவிட்டது. ஆகவே இவ்வருஷம் ஐந்து லட்சம் டன் அரிசி சென்ற வருஷத்தைவிடக் குறைவு. இந்த நிலைமையைச் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும் என்று நிதிமந்திரி சொல்லுகிறார்.

வட ஆர்க்காட்டிலும், திருச்சி, திருநெல்வேலி ஜில்லாக்களில் சில பகுதிகளிலும் தீய்வு ஏற்படுவது சகஜம். எப்பொழுதும் ராஜ்யம் பூராவிலும் நல்ல விளைவு இருப்பதில்லை. ஒரு சில பிரதேசங்களில் ஏற்படும் பற்றுக்குறையைப் பக்கத்து ஜில்லாக்கள் இட்டு நிரப்பும்.

அதற்கு வழியில்லாமல் செய்து விட்டது, சர்க்கார் சமீபத்தில் நேருஜியைத் திருப்திப்படுத்த உணவு விஷயத்தில் கடைப்பிடித்துச் செய்துவந்த பிரசாரம். உணவு தானிய விஷயத்தில், சர்க்கார் வர்த்தகம் மேற்கொள்ளச் சென்னை ராஜ்யம் தயார் என்று மார்தட்டிக்கொண்டது பெரும் விபரீதத்தில் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

ஏற்கனவே ஏறுமுகமாக இருந்த விலைவாசிகள் இன்னும் ஏறிவிட்டன.

நெல் விலையைக் கட்டுப்பாடுசெய்து, லைசென்சு பெற்ற வியாபாரிகளுக்கே நெல்லோ அரிசியோ விற்க வேண்டும் என்று சொன்னதால் அதிக விலை கொடுத்து வாங்கவந்த கேரள வியாபாரிகளுக்கு நெல் போய் விட்டது !

ஆந்திர ராஜ்யம் செய்த கட்டுப்பாடுகளினால் இதுகாறும் சென்னைக்கு வந்து கொண்டிருந்த நெல்லூர் அரிசி சென்னைக்கு வருவதில்லை.

ஆந்திர சர்க்கார் வியாபாரிகளிடமிருந்து பலாத்கார முறை அனுஷ்டித்து, கொள்முதல் செய்து சென்னைக்கு நெல் அனுப்ப மறுத்து விட்டது. ஆந்திர சர்க்கார் தனது நெல் வியாபாரிகளிடமும், விவசாயிகளிடமும் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை.' இதனால் சென்னைக்கு ஆந்திர ராஜ்ய நெல் வருவது நின்றுவிட்டது.

இப்படி மத்திய சர்க்காரின் குருட்டு யோசனைகளை, சென்னை சர்க்கார் முழுதாகவும், ஆந்திர சர்க்கார் பாதியும் கடைப்பிடித்ததால் இன்று சென்னை ராஜ்யம் கஷ்டப்படுகிறது.

சென்னை சர்க்காரோ தான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவு என்பதை ஒப்புக் கொள்ளாமல், இன்று இந்த ராஜ்யத்துக்கு ஏற்பட்ட கஷ்டமெல்லாம் மண்டல முறைதான் என்று மத்திய சர்க்காரிடம் சொல்லி வருகிறது. நமது முதன் மந்திரி தென் மண்டல முறையை ரத்து செய்துவிட்டு, சென்னை ராஜ்யத்தை மட்டும் ஒரு மண்டலமாகச் செய்து விடும்படி சொல்லப் போவதாக ஆத்திரத்தோடு பேசுகிறார். ஒரு ராஜ்யத்தைத் தனிப்படுத்தி விட்டால் மண்டலப் பேச்சு என்னத்துக்கு? ஒன்றுக்கு மேற்பட்ட ராஜ்யங்கள் சேர்ந்தால்தான் மண்டலமாகும்.

சென்னையைத் தனி மண்டலம் ஆக்கிய போதிலும் கேரளத்துக்கு அரிசி கள்ளத்தனமாகப் போகும். இந்த முறை வியாபாரிகளிடத்தில் கள்ளத்தனத்தை வளர்க்கவும் விலைகள் ஏறவும் தான் உதவும்.

பள்ளத்தைப் பார்த்துத் தண்ணீர் ஓடுவதைப் போல் பொருள் இல்லாத இடத்தை நோக்கிப் பொருள் ஓடும். இது தான் வியாபாரத்திலுள்ள அடிப்படை விஷயம். இந்த அடிப்படையான இயற்கை உண்மையை அங்கீகரிக்காமல் செயற்கை அணைகள் போட்டால் அணைகளைத் தகர்த்துக் கொண்டு ஓடப் பார்க்கும்.

கேரளத்தில் மக்களுக்கு வேண்டிய அரிசியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டும் விலைகள் மிதமிஞ்சி ஏறிவந்து அனைவரும் துயரப்பட்டுக் கொண்டுமிருந்தால் அவர்களுக்கு அடுத்த தமிழ்நாட்டில் நாம் மட்டும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்க முடியுமா? நெல் விளையும் நாஞ்சில் நாட்டைத் தமிழ் நாட்டுடன் சேர்த்தது பொருந்தவறு என்று ஆத்திரம் கேரளத்தில் பொங்கி இயக்கமும் கூட வளராதா?

உணவு நிலைமை சீர்பட முக்கியமாக இரண்டு விஷயங்கள் கவனிக்கவேண்டும்.

1. ஆந்திரரும், தமிழரும், மலையாளியரும் எல்லோரும் இந்நாட்டு மக்களே யல்லவா? ஆகவே, வியாபார விஷயத்தில் மண்டல வேலிகள் இருக்கக் கூடாது. ஆந்திர அரிசி சென்னைக்கு வரவும், தஞ்சையரிசி மலையாளத்துக்குப் போகவும் தடைகள் இருக்கக் கூடாது.

2. அடுத்தாற்போல் விவசாயத் துறையில் இதுவரை செய்த 'சீர்திருத்தங்'களும், இனிமேல் செய்யப் போவதாகச் சொல்லும் 'சீர்திருத்தங்'களும் இவற்றைப் பற்றிச் செய்யப்படும் பிரசாரங்களும் விவசாயத்தில் !செலுத்தும் ஊக்கத்தைப் பெரிதும் பாதித்து வருகின்றன. விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை மனமொடிந்து சீரழியச் செய்திருக்கின்றன. இது மறுக்கமுடியாத உண்மை. அதனுடைய பலனை இப்போதே அனுபவித்து வருகிறோம்.

இவற்றைத்தான் டில்லிக்கு ஏகும் மந்திரிகள் காங்கிரஸ் மேலிடத்தாருக்கு பயப்படாமலும் தாட்சிண்யமின்றியும் பதவி மோக மின்றியும் வற்புறுத்தப் பயில வேண்டும். நிலச் சீர்திருத்தப் பேச்சை நிறுத்தச் செய்யவேண்டும்.

மேலிடத்தார் சொல்வதற் கெல்லாம் "ததாஸ்து" சொல்லி விட்டுச் சென்னைக்குத் திரும்பும் வழக்கத்தை நிறுத்த வேண்டும். தமிழ்நாட்டு விவசாயத்தைப் பற்றி இனியாவது கவனிக்க வேண்டும்.

என்ன சேதி?

மின்சாரம் வளர்த்த பெரியார்கள்


சென்னை மாநிலம் மின்சார உற்பத்தியிலும் உபயோகத்திலும் விசேஷமாக அபிவிருத்தியடைந்திருக்கிற தென்பதைப் பற்றிப் பெருமைப் படும்போது இதைப் பேணி வளர்த்த பெரியார்களையும் நினைவு படுத்திக் கொள்வோமாக.

மின்சார அபிவிருத்திக்கென்று ஒரு தனி இலாக்கா ஏற்படுத்திய டாக்டர் வி. பி. ராமசாமி அய்யரைப் பற்றியும் தலைமை என்ஜினீயராக நீண்ட காலம் பணியாற்றி, பைகாரா திட்டத்தையும் மேட்டூர் திட்டத்தையும் வெற்றிகரமாக முடித்துத் தந்த ஸர் ஹென்ரி ஹோவர்டின் அறிவாற்றலைப் பற்றியும் மின்சாரப் பொறியியலில் அவருக்கு இருந்த விசேஷ சாமர்த்தியத்தைப் பற்றியும் எவ்வளவு சொன்னாலும் தகும்.

சென்னை மாநில மின்சார போர்டின் முன்னாள் தலைமை எஞ்சினீர் திரு ஜி. சுந்தரம், அவர் காலத்தில் தன்னிகரில்லாப் புகழுடன் விளங்கினார்.

தற்போது தலைமை என்ஜினீயராகப் பணியாற்றும் திரு வி. பி. அப்பாதுரை திரு ஜி. சுந்தரத்துடன் இணைந்து சேவை புரிந்து பழகியவர். அவருடைய உயர்ந்த லட்சியங்களையும் ஆற்றலையும் தாமும் கடைப்பிடித்துத் தமது இலாகாவின் நன்மதிப்பையும் தம்முடைய சக அதிகாரிகளின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர். குந்தா திட்டத்துக்காகக் கானடா சென்று 12½ கோடி ரூபாய் உதவி பெற்றுவரத் திரு அப்பாதுரையும் கூட்டுச் செயலாளர் திரு சி. வி. நரசிம்மனும் புரிந்த உதவி பாராட்டுதற்குரியது.

நமது என்ஜினீயர்களின் திறமையை அங்கீகரித்து அவர்களைக் கொண்டே



திபெத்தில் ஒரு இந்தியருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என்று ஒரு செய்தி கூறுகிறது. ஆனால் இது தவறு என்கிறார் சித்திரக்காரர்.

எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டதற்கு மின்சார இலாக்கா அமைச்சர் திரு வி. ராமய்யாவையும், மாநில மின்சார போர்டுத் தலைவர் திரு எஸ். கே. செட்டூர் அவர்களையும் பாராட்ட வேண்டும்.

சகஜானந்தரின் மறைவு

தமிழ்நாடு மற்றொரு நல்ல தலைவரை இழந்தது. சுவாமி சகஜானந்தர் மறைந்தார். ஹரிஜன வகுப்பில் தோன்றிய சகஜானந்தர் தமது சொந்த முயற்சியினால் கல்வி கேள்விகள் அடைந்து, தமிழோடு வடமொழியும் பயின்று பண்டிதராக விளங்கினார். அவர் மேடை ஏறிப் பிரசங்கம் செய்யும் காலங்களில் இடை இடையே வடமொழி மந்திரங்களையும் எடுத்துச் சொல்வார். சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே ஹரிஜன பணியில் ஈடுபட்டார். ராஜாஜி சேலத்திலிருந்த போது ராஜாஜிக்குத் துணையாக இருந்து சேரிகளில் ராமநாம பஜனை செய்து கொண்டு போய், சேரி மக்களிடையே புது விழிப்பை உண்டாக்கினார். சிதம்பரத்தில் நந்தனுக்கு ஒரு கோயிலையும் ஆயிரம் ஹரிஜன மாணவர்கள் படிக்கும் ஒரு ஹாஸ்டலையும் ஏற்படுத்தி இடைவிடாது பணியாற்றி வந்தார். தெய்வ பக்தியோடு தம் குலத்தின் உயர்வை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்த சகஜானந்தர் அந்த லட்சியம் நிறைவேற்றப் பட்டது கண்ட மகிழ்ச்சியுடன் மறைந்தார்.

மேயரின் ரேடியோப் பேச்சு

புதிய மேயர் சென்னை வானொலி நிலையத்தில் பேச மறுத்து விட்டார். சென்னை நகரசபைக்குப் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சியினர் தமக்கு உரித்தாகிய பெரிய கௌரவத்தையும் சந்தர்ப்பத்தையும் தகுந்த காரணமின்றி நழுவ விட்டதைப் பற்றி வருந்துகிறோம். ஆகாசவாணி என்று பெயரிட்டதனால் உலகமோ, தமிழகமோ மூழ்கிப்போகாது. கழகத்தின் பெயரிலிருக்கும் திராவிடம் என்ற சொல் மத்திய சர்க்கார் வைத்த பெயர் அல்ல. அது வடமொழிச்சொல்லே. கட்சியின் சின்னத்தின் பெயர் உதய சூரியன். இதுவும் வடமொழிச் சொற்றொடரே. சில சொற்கள் வட மொழியாயினும் தமிழாயினும் அழகிலாவது பொருத்தத்திலாவது யாதொரு குறையுமில்லை. இந்த அற்ப விஷயத்துக்காகப் புது மேயர் துவக்க வானொலி பிரசங்கத்தை இழந்ததற்கு வருந்துகிறோம்.

இணையற்ற சக்தி

முதன் மந்திரி திரு கே. காமராஜ்

மக்களுக்கான வசதிகளைச் செய்வதிலும் கைத்தொழில் துறையில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்துவதிலும் மின்சார சக்திக்கு இணை வேறில்லை. இந்தியா போன்ற கிராமங்கள் மிகுந்த நாட்டில், சுபிட்சம் ஏற்பட வேண்டுமானால் கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்துவது மிக முக்கியமாகும்.

இதை உணர்ந்துதான், சென்னை மாநிலம் மின்சார உற்பத்திப் பெருக்கத்திலும், கிராமங்களுக்கு மின்சார வசதிகளை விஸ்தரிப்பதிலும் தீவிரகவனம்செலுத்துகிறது. சென்னை மாநிலத்தில் சுமார் 19000 கிராமங்கள் இருக்கின்றன. இவற்றுள், 1958-59 ஓர் ஆண்டில் மட்டும் 1400 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதுவரை சென்னை மாநிலத்தில் மொத்தம் 7,534க்கு மேற்பட்ட கிராமங்கள் மின்சாரம் பெற்றுள்ளன. 78,205 விவசாய பம்ப் செட்டுகள் மின்சாரத்தால் இயங்குகின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் இந்தியா முழுவதற்குமாக 14,662 கிராமங்களுக்கு வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது அகில இந்திய ரீதியான லட்சிய அளவு ஆகும். அதை ஒப்பு நோக்கும் போது சென்னையின் சாதனை எவ்வளவு கணிசமானது என்பது தெரிய வரும். 1958-59ல் மாநிலத்தில் மின்சார உற்பத்தி அளவு 1 லட்சம் கிலோவாட் கூடி, மொத்த உற்பத்தித் திறன் 3,56,500 கிலோவாட் ஆகியுள்ளது.



1960-61ல் மின்சாரத் தேவை 375000 கிலோவாட் ஆகவும் 1970-71ல் 12,71,000 கிலோவாட் ஆகவும் அதிகரிக்கும். அதையொட்டி நமது ஆதார வசதிகளை மேலும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. மேட்டூர் டன்னல் மின்சார நிலையத் திட்டம், பழனி மலைகளில் கும்பாறு-அமராவதி நீர் மின்சாரத் திட்டம் முதலியன மீது ஆராய்ச்சி வேலைகள் ஏற்கனவே முடிந்துவிட்டன. ஆனைமலை நீர்மின்சாரத் திட்டஆராய்ச்சி வேலை 1959-60 ல் மேற்கொள்ளப்படும். நெய்வேலியில் 2 லட்சம் கிலோவாட் உற்பத்தித் திறனுள்ள நீராவி மின்சார உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பு சம்பந்தமாக ரஷ்யாவுடன் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சென்னையில் அணு மின்சார நிலையம் அமைப்பது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

புதிய நீர்த் தேக்கங்களின் நீரைப் பயன்படுத்துவதிலும், விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதிலும், சென்னை மாநில மக்கள் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்பது மகிழ்ச்சிக்குரியதாகும். மக்கள் தாங்களும் பயனடைந்து, நாட்டுக்கும் பலன் விளைவிக்க இரண்டு வழிகளில் பணியாற்றலாம். முதலாவது, இந்த வசதிகளைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கலாம். இரண்டாவதாக, சிறுசிறு தொழில்களைத்தொடங்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முயல வேண்டும். அரசாங்க முயற்சியில் இணைந்து செயல்படும் மக்கள் இந்த இரு விஷயங்களையும் கருத்தில் கொண்டு பணியாற்றுவார்கள் என்று நம்புகிறேன்.



சென்னை வழிகாட்டுகிறது

நிதிமந்திரி திரு சி. சுப்பிரமணியம்

நாட்டின் விடுதலைக்குப் பின்னர் நாம் பல துறைகளிலும் வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளோம். தொழில் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் மற்றும் இதுபோன்ற இதர துறைகளிலும் படிப்படியாக நல்ல வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இதில் சென்னை மாநிலத்தில் மின்சாரத் துறையில் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.


முன்பு இருந்ததைவிட இப்பொழுது நிறைய கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைப்பதுடன், விவசாயக் காரியங்களுக்காக மேலும் மின்சார சப்ளை அளிப்பதானது பெருகியுள்ளது. இது மட்டுமின்றி, போர்டு அலுவலர்களுக்கு 1-1-1959 லிருந்து அமுலாகும்படியாகச் சம்பள விகிதமும் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இருப்பினும் கட்டண விகிதத்தில் உயர்வு எதுவுமில்லை. ஆனாலும் 1958-59க்கான போர்டின் பட்ஜெட் மதிப்பீட்டில் ரெவின்யூ செலவினத்தில் ரூ. 63·12 லட்சம் பற்றுக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க்கப் பட்ட நிலை மாறி, ஆண்டு முடிவில் ரூ. 0·71 லட்சம் உபரி நிற்கக் கூடிய மகிழ்ச்சி தரத்தக்க நிலை ஏற்பட்டது. 1959-60ம் ஆண்டிலும் ரூ. 1·09 லட்சம் உபரியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது மட்டுமின்றி, பெரியாறு திட்ட வேலையிலும் ரூ. 136 லட்சம் மிச்சம் செய்ய முடிந்தது. இவ்வாறாக, பொதுமக்களின் வரிப் பணத்தைக் கொண்டு மின்சாரத் துறையில் நல்ல அபிவிருத்தியை உண்டாக்கித் தருவதுடன், மதிப்பிடப்பட்ட செலவுத் தொகையிலேயே திட்டத்தை வெற்றிகரமாக முடித்து நிதியை மிச்சப்படுத்தி, சென்னை மாநில மின்சார போர்டு மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டுகிறது.



இத்தகைய சாதனைகளை மக்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளைப் பற்றியும், அவைகளின் சாதனைகளைப் பற்றியும் மக்கள் உண்மையை அறிந்து கொள்ளுமாறு எடுத்துச் சொல்ல வேண்டும். உண்மை தானாகவே வெற்றியடையும் என்று நம்மில் பலர் எண்ணி வருகிறோம். ஆனால் உண்மை இதற்குநேர்மாறானது. "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய் போலுமே மெய் போலுமே. மெய்யுடை ஒருவன் சொல்ல மாட்டாமையால் பொய் போலுமே, பொய் போலுமே" என்னும் பழமொழியை நினைவில் வைத்துச் செயலாற்ற வேண்டும்.

கல்கி பத்திரிகை தமிழ் நாட்டின் மிகச் சிறப்பான பத்திரிகைகளுள் ஒன்று. அது மின்சாரபோர்டின்சாதனைகளை விளக்கும் அம்சங்களைத் தாங்கி விசேஷ மலராக வெளிவருவது பாராட்டுதற்குரியதே. மின்சாரத் துறையில் மட்டுமல்லாது இதர துறைகளிலும் அரசினரின் சாதனைகளை விளக்கும் முறையில் கல்கி வெளிவர வேண்டும் என்பது எனது விருப்பம்.

கல்கியின் இச்சேவையை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இந்நல்ல பணியைச் செய்யும் கல்கிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



சென்னை ராஜ்யத்தின் எதிர்காலத் தொழில் வளர்ச்சியில் மின்சார உபயோகம் எப்படி விரிவடைந்திருக்கும் என்பதையும் அத் தேவையை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதையும் மிக விரிவாக விளக்குகிறார், நம் மாநிலஅமைச்சர் திரு எம். பக்தவத்சலம்.


— ஆசிரியர்

மின்சார உற்பத்தியும் தேவையும்

அமைச்சர் திரு எம். பக்தவத்சலம்

நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குத் தொழில் வளர்ச்சி இன்றியமையாதது. தொழில் அபிவிருத்திக்கு மின்சக்தி அத்தியாவசியமானது. மின்சக்தி எவ்வளவுக்கெவ்வளவு உபயோகப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு நாம் முன்னேற்றம் அடைகிறோம் என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம். தமிழ் நாட்டுக்கு இது மிகவும் பொருந்தும். ஏனெனில் நமக்கு நிலக்கரி கிடைக்கும் வாய்ப்பில்லை. இப்போது தான் நீண்ட காலப் பெரு முயற்சிக்குப் பின் மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பினால் நெய்வேலித் திட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதிலிருந்து கிடைக்கக்கூடிய நிலக்கரியும் இரண்டாந்தர பழுப்புக் கரிதான். இவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய சக்தி, ராணிகஞ்சு, ஜரியா முதலிய பகுதிகளில் கிடைக்கக் கூடிய நிலக்கரியின் சக்தியில் பாதிக்கும் குறைவு. ஒரு டன் நிலக்கரியிலிருந்து கிடைக்கும் சக்திக்குச் சமமான சக்தியைப் பழுப்பு நிலக்கரியி லிருந்து அடைய வேண்டுமானால் இரண்டரை டன் கரி செலவாகும். இதாவது நமக்குக் கிடைத்திருக்கிறதே என்று நாம் சந்தோஷப் படத்தான் வேண்டும். ஆனால் இதிலிருந்து, நமக்கு இயற்கை நிலக்கரி மிகவும் குறைவாக இருப்பதனால் ஏற்படும் குறைவை இதர வகை சக்திகளைக் கொண்டுதான் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது.

நாம் அப்படித்தான் செய்து வந்திருக்கிறோம்; இப்போதும் செய்து வருகிறோம். அருவி மின்சாரம் மூலம் நமது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு வருகிறோம். ஏற்கனவே ஐந்து அருவி-மின் நிலையங்களும் இரண்டு நீராவி யந்திர மின் உற்பத்தி நிலையங்களும் 356000 கிலோவாட் சக்தி உற்பத்தி செய்கின்றன. எனினும், இந்த நிலையங்களும் பருவ மழையை எதிர்பார்க்கும் நீர்த் தேக்கங்களைத் தாங்கியதாக இருக்கின்றன.



திரு எம். பக்தவத்சலம்

நமக்கு இன்னொரு குறையிருக்கிறது. ஜீவ நதி யென்று சொல்லக் கூடியது காவிரியாறு ஒன்றுதான். கிருஷ்ணராஜ சாகரத்தில் அணையிடப் பட்ட பின்னரும் நமது ராஜ்யத்துக்கும் ஓரளவு கிடைக்கிறது. மற்ற ஆறுகள் எல்லாம் நமது அண்டை ராஜ்யங்களாகிய மைசூர், கேரளத்தில் உற்பத்தியாகி அங்கங்கே அணையிட்டுத் தேக்கப்பட்டு மிகுதியுள்ள தண்ணீர் மட்டுமே நமக்குக் கிடைக்கிறது. சிலசமயம் கிடைக்காமலே போய் விடுகிறது. நிலக்கரிதான் நமக்கு இல்லை யென்றால் தண்ணீர் கூட நமக்கு இல்லை. எங்கெல்லாம் தண்ணீர் கிடைக்கிறதோ அங்கெல்லாம் நமது அரசாங்கம் திட்டம் வகுத்து அணைகள் கட்டி, சுரங்கக் கால்வாய்கள் வெட்டித் தண்ணீரைத் தேக்கி, மின் சக்தியை உற்பத்தி செய்து வருகிறார்கள். இதற்கான திட்டங்களெல்லாம் மூன்றாவது திட்ட காலத்துக்குள் பூர்த்தியாகி விடும். அதாவது 1966-67ம் ஆண்டு வாக்கில் அவ்வளவு திட்டங்களும் பூர்த்தியாகிவிடும். இந்தத் திட்டங்களில் முக்கியமானவை குந்தா திட்டமும், மேட்டூர் சுரங்கக் கால்வாய் திட்டமும், நெய்வேலி யந்திர மின் நிலையத் திட்டமும். இவை பூர்த்தியடைந்துவிட்டால் நமது ராஜ்யத்தில் இத்துறையில் நமக்குள்ள வசதிகள் முழுவதையும் நாம் பயன்படுத்திக் கொண்டு விடுவோம். இதற்கு மேல் அருவி மின் உற்பத்திக்கோ, யந்திர மின் உற்பத்திக்கோ புது திட்டங்கள் வகுக்க முடியாத நிலைமையிலிருப்போம். ஆகவே இந்த

நிலைமை நமது ராஜ்ய மின்சார உற்பத்தியில் ஒரு எல்லையாக இருக்கும். ஏனெனில் நமக்கு வாய்ப்பாக உள்ள ஆதாரம் முழுவதும் அதுவரையில் நிறுவப்பட்டுள்ள நிலையங்களுக்குச் சரியாகப் போய்விடும். அதற்கு மேல் நமது தேவைகளுக்கு வேறு வகை தேடவேண்டி யிருக்கும்.

அந்த நிலையில் நமது ராஜ்யத்தின் மின் சாரத்தேவை எப்படியிருக்கும்? நமது தொழில் அபிவிருத்தி எந்த அளவில் இருக்கும்? நமது தேவைகள் கிடைக்கக் கூடிய மின்சக்திக்கு உட்பட்டிருந்தால் நமக்குக் கவலையில்லை. நம்முடைய தேவையை நாம் பூர்த்தி செய்துகொண்டு விட்டோம். நம்முடைய தொழில் அபிவிருத்தி மின் சக்திக் குறைவால் தடைப் படக் காரணம் இல்லை என்று பெருமைப் படலாம். ஆனால் உண்மையில் நமது தேவைகள் அளவுகடந்து பெருகிக் கொண்டிருக்கின்றன. இதைச் சற்றுக் கவனிக்கலாம்.

மொத்தம் உற்பத்தியாகும் மின் சக்தியை உபயோகிப்பவர்களை ஏழு பிரிவினர்களாக வகுக்கலாம். முதலாவது ஆலைகளும் தொழிற்கூடங்களும். மொத்த உற்பத்தியில் பாதிக்குச் சற்று அதிகமாகவே அவர்கள் உபயோகிக்கின்றனர். இரண்டாவது விவசாயிகளும் பாசனக் கால்வாய்களும். சுமார் ஐந்தில் ஒரு பங்கு உபயோகிக்கின்றனர். மூன்றாவது வீட்டு உபயோகத்துக்கும் பூந்தோட்டங்களுக்கும். இவ் வகையில் மின் விளக்கு, மின் விசிறி, வீட்டுப் பம்புகள், சமையல் சாதனங்கள் முதலியவை அடங்கியுள்ளன. நான்காவது சினிமாக்கள், கடைகள், வியாபாரப் பகுதிகள், விளம்பரங்கள், மற்றும் இவை போன்றவை உபயோகிப்பது. ஐந்தாவது பஞ்சாயத்துக்கள், நகரசபைகள் தெரு விளக்குக்கும் குடிதண்ணீர் போன்ற சுகாதார வசதிகளுக்கும் செலவழிப்பது. ஆறாவது, மின்சார ரயில் போன்ற போக்குவரத்துக்கான உபயோகம். ஏழாவது இதர வகை உபயோகங்கள்.

இப்படி ஏழு பிரிவினர்கள் மின்சாரத்தை உபயோகிக்கின்றனர். 1958 — 59 - ம் ஆண்டு முடிவில் நமது ராஜ்யத்தில் 282 நகரங்களிலும் 8000 கிராமங்களிலும் சுமார் 6,20,000 தனிப்பட்ட நபர்களும் ஸ்தாபனங்களும் மின்சாரத்தை உபயோகப்படுத்தி யிருக்கின்றனர். இவர்களில் 4,34,000 நபர்கள் அல்லது சற்றேறக் குறைய 70 சதத்தினர்கள் சென்னை ராஜ்ய மின்சார போர்டிலுல் நேரடியாக மின் சப்ளை பெற்றுக் கொண்டவர்கள். மற்றவர்கள் லைசென்சுதாரர்களிடமிருந்து வசதி பெற்றவர்கள்.

இவர்களுடைய எண்ணிக்கை வருஷா வருஷம் உயர்ந்துகொண்டே வருகின்றது. தொழில் துறையில் மட்டும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கணிசமானது. 139 பஞ்சாலைகள், மூன்று சிமிட்டித் தயாரிக்கும் ஆலைகள், ஒரு எஃகுத்தொழிற்கூடம், இரண்டு ரயில்வே தொழிற்சாலைகள், இரண்டு ரசாயன ஆலைகள், 5 சர்க்கரை ஆலைகள், பல எண்ணெய் ஆட்டும் யந்திர சாலைகள், தென்னிந்திய ரயில்வேயின் மின்சாரத் தேவை — இப்படிப் பலதரப்பட்டவை மின் சக்தியை மேன்மேலும் உபயோகிக்கின்றன. கிராமப் பகுதிகளில் மின்சாரத்தின் உபயோகம் பரவி வருகிறது. நமது ராஜ்யத்தின் பரப்பு 50,082 சதுர மைல். இதில் 295 டவுன்களும் 19,911 கிராமங்களும் இருக்கின்றன. இதுவரையில் 8000-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட் டிருக்கிறது. அதாவது மூன்றில் ஒரு பாகம். மற்ற இரண்டு பாகங்களுக்கு அதாவது சுமார் 13,000 கிராமங்களுக்குப் படிப்படியாக மின் வசதி அளிக்க வேண்டும். அதுதான் நமது சர்க்காரின் நோக்கம். இது முற்றிலும் கைகூடினல் நமது ராஜ்யத்தின் மின்சாரத் தேவை எந்த அளவுக்குப் பெருகும் என்பது ஒருவாறு விளங்கும்.

மேலும் நமது நாட்டின் பொருளாதார அமைப்பு கிராமப் பகுதியில் முக்கால் பாகமும் நகர்ப் பகுதிகளில் கால்பாகமுமாக ஏற்றத் தாழ்வாக இருக்கிறது. இதன் விளைவாக, கிராமப் பகுதியில் வேலையின்மையும் வறுமையும் தாண்டவமாடுகின்றன. நகரங்களில் ஜன நெருக்கமும் இட நெரிசலும், வியாதியும் வாட்டுகின்றன. இவ்விரண்டையும் சமரசப்படுத்தி ஏற்றத்தாழ்வைச் சிறிதளவுக்காவது சரிப்படுத்த வேண்டியது அவசியம். அதற்காகவாவது புது தொழிற்கூடங்கள் நகரங்களுக்கு அப்பால்தோன்றவேண்டும் என்றும், கிராம மக்களுக்கு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் காலம் போக மீதியான ஓய்வு நேரங்களில் மாற்றுத் தொழில் வசதி இருக்க வேண்டுமென்றும் கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்கைகள் நடைமுறையில் வந்தே ஆக வேண்டும்.

இந்தத் துறையில் முன்னேற்றம் காணும்போது, மின்சார உபயோகத்தின் அளவு இப்போதுள்ளதைக் காட்டிலும் மிக அதிகமாக உயர்ந்துவிடும். இப்போதுள்ள திட்டங்களாலும், நிறைவேற்றி வைக்க வேண்டிய திட்டங்கள் முடிந்த பிறகும் நமக்குக் கிடைக்கக்கூடிய மின் சக்தியின் அளவைக் காட்டிலும் நமது தேவைகள் துரிதமாக அதிகமாகி விடும். எனவே இப்போதே மின்சார உற்பத்தி-வினியோகத்தில் பற்றாக்குறை நிலை காணப்படுகிறதென்றால் வருங்காலத்தில் மூன்றாவது திட்டகாலத்துக்கு அப்பாலும் கூட இந்தப் பற்றாக்குறை நிலை இருக்கக் கூடும். இப்போதுள்ள பற்றாக்குறை நிலை தொழிலபிவிருத்தியின் ஆரம்ப நிலை. பின்னல் ஏற்படக்கூடிய பற்றாக்குறை தொழில் முன்னேற்றத்தின் வேகத்தினுலும், மக்களின் வாழ்க்கைத்தரத்தின் உயர்விலுைம், வாழ்க்கையில் சுக சாத

ஙகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அறிவு ஆற்றல் இவற்றின் அபி விருத்தியாலும் ஏற்படக் கூடியது.

அந்த நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன? சென்னை ராஜ்ய மின்சார போர்டுக்கு எதிர்காலத்தில் எழக்கூடிய பிரச்னை இதுதான். இரண்டு முறைகளில் ஏதாவது ஒன்றையோ அல்லது இரண்டையுமோ மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஒன்று அணுசக்தியின் உபயோகத்தைத் தொழில் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பது. அணுசக்தியின் உபயோகத்தைப் பற்றி அபிப்பிராய பேதமிருப்பது அணுசக்தியின் தவறுதல் அல்ல. அந்தச் சக்தியைத் தீய வழிகளில் அழிக்கும் வேலைகளுக்கு உபயோகிப்பதிலேயே முற்பட்டிருக்கும் உலக ராஜதந்திரிகளின் தவறு. அதற்குப் பொறுப்பாளிகள் அவர்கள். சக்தியை ஆக்க வேலைக்கும் உபயோகப்படுத்தலாம் என்பது இப்போது அடிக்கடி எடுத்துக் காட்டப்படுகிறது. இப்படி இச்சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளுவதாக இருந்தால், நமது ராஜ்யத்தில் ஒரு அணுசக்தி நிலையம் ஏற்பட அவசியம் இருக்கிறது. அதன்மூலம் தான் நமது ராஜ்யத்தின் மின்சாரப் பற்றாக்குறை பிற்காலத்தில் தீர வழியுண்டு.

இந்த வகையைப் பயன்படுத்திக் கொள்வது ஒருபுறமிருக்க, அடுத்த அண்டை ராஜ்யங்களிலுள்ள எல்லா நதிகளையும் பிரம்மாண்டமான ஒரு திட்டத்தின் கீழ் இணைத்து ஒவ்வொரு ராஜ்யத்தின் மின்சார உற்பத்தித் தேவைகளைத் தனித்தனியே எண்ணிப் பாராமல், நான்கைந்து ராஜ்யங்களின் உற்பத்தித் தேவைகளை இணைத்துப் பார்த்துச் சமரசப்படுத்த முற்படவேண்டும். இவ் விஷயத்தில் மத்திய சர்க்காரின் தலையீடும் கவனிப்பும் தேவைப்படும் என்பது எடுத்துக் காட்டாமலே விளங்கும்.

ஆகாச வெடி

"சென்னை மின்சார ரயில் வண்டிகளில் நிற்கும் ரயில் பிரயாணிகள் விழாமல் பிடித்துக் கொள்ளக் கயிறு வளையம் அமைக்க வேண்டும்." —ஒரு பிரயாணி

இந்த யோசனை அதிகாரிகளின் காதுக்கு எட்டினாலும், உயரமில்லாத பிரயாணிகளுக்கு எட்டுமா?

✻

"...இரவு இடி, புயல் காரணமாக மின்சாரக் கம்பிகள் அறுந்து விளக்குகள் நின்றதும், எண்ணெய் பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கு அதிர்ஷ்டம் அடித்தன." —தேவகோட்டைச் செய்தி

இந்த அதிர்ஷ்டம் மின்சாரம் வந்ததும் கம்பி நீட்டியிருக்குமென்று நம்புகிறோம்.

✻

"தேசத்தில் வளர்ந்து வரும் லஞ்சம் முதலிய ஒழுங்கீனங்களை நீக்குவதில் சாதுக்களின் உதவி சர்க்காருக்குத் தேவை." –சாதுக்கள் மகாநாட்டில் நேரு

"இந்த ஒழுங்கீனங்களை நாங்கள் இனி சாதுக்களாகப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்" என்று அறிவிக்கச் சொல்கிறாரா, என்ன?

✻

"சென்ற ஐந்து வருடங்களாக வெய்யிலை ஆராய்ந்து பார்த்த விஞ்ஞானிகள், சூரிய வெப்பம் இனி ஆண்டுதோறும் அதிகமாகி வரும் என்று கூறுகிறார்கள்." — செய்தி

"இப்படியே வெப்பம் அதிகமாகி அதிகமாகி, உதகைக்கும் போகமுடியாத நிலை ஏற்படுமோ?" என்று ஒரு எம். எல். ஏ. கேட்கிறார்.

✻

"குறைகளை வெளியிட ஒருவர் உண்ணாவிரதம் இருப்பது குற்றமாகாது." —கேரள நீதிமன்றத் தீர்ப்பு

ஆனால் தமது குறைகளை வெளியிடாமல், மென்று விழுங்கும் ஒருவரை உண்ணாவிரதி என்று கூறமுடியுமா?

நடேசய்யரின் குற்றம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

“பெரிய விலை கொடுத்து வாங்கிய சீமைப் பசுமாடு வியாதி கண்டு இறந்து விட்டது. பெருந் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறான். மகனும் போக்கிரியாகப் போய்ப் பணத்தை யெல்லாம் வீணாக்கி வருகிறான். இந்தத் தடவை வட்டியில் பாதி தள்ளிக் கொடுத்தால் பிறகு எப்படியோ கஷ்டப் பட்டுச் சரியாகச் செலுத்துவதாகச் சொன்னான் வரதராஜ கோனான். அதனால் பதினைந்து ரூபாய் தள்ளிவிட்டு ரசீது கொடுத்து விட்டேன்” என்றார் நடேசய்யர்.

“யார் காணும் உமக்கு இப்படிச் செய்ய அதிகாரம் கொடுத்தது? எவர் பணத்தை எவர் தள்ளிக் கொடுப்பது? உமக்கு மூளையில் ஏதேனும் புத்தி இருக்கிறதா இல்லையா?”

இவ்வாறு பஞ்சாக்ஷரய்யர் கடுமையாகக் கிழவரைக் கண்டித்துப் பேசிக்கொண்டிருந்தார். கிழவர் நடேசய்யர் பஞ்சாக்ஷரய்யருக்குத் தூரத்து பந்து. அவருடைய சில்லறை லேவாதேவி கணக்கு பார்த்து வரும் வேலையில் மாதம் 35 ரூபாய் சம்பளம் பெற்று வந்தார்.

“ஏதோ ஏழையென்று இரங்கித் தவறு செய்து விட்டேன். மன்னிக்க வேண்டும்; இனி இவ்வாறு செய்ய மாட்டேன்” என்றார் கிழவர்.

“மன்னிப்பாவது விபூதியாவது! ஒரு காலும் முடியாது. உம்முடைய சம்பளத்தில் இந்தத் தொகை பிடித்துத்தான் ஆக வேண்டும்” என்று சொல்லிவிட்டு, சொக்காயும் உருமாலையும் போட்டுக் கொண்டார்.

பஞ்சாக்ஷரய்யர் அன்று மாலை புரசைவாக்கம் அத்துவைத சபையில் மாயை என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்ய வேண்டியதாக ஏற்பாடு. ஆனபடியால் இந்தப் பேச்சை நிறுத்திவிட்டு மோட்டார் கார் ஏறினார்.

** ** **

அடுத்த நாள் நடேசய்யருக்குச் சம்பளம் கொடுக்கும்போது பதினைந்து ரூபாய் கழித்தே கொடுக்கப்பட்டது.

‘தவறு செய்து விட்டேன்’ என்று கிழவர் எவ்வளவு கெஞ்சியும் பஞ்சாக்ஷரய்யர் மனம் இரங்கவில்லை. அவருடைய மனைவியாரும் சொல்லிப் பார்த்தார். பயனில்லை.

“உனக்குத் தெரியாது. நீ சும்மா இரு” என்று எஜமானர் மிரட்டிவிட்டார்.

அதற்கு அடுத்தநாள் நடேசய்யர் வந்து, “அய்யர்வாள்! உங்கள் தகப்பனாரிடம் முப்பத்தைந்து வருஷங்கள் வேலை செய்தேன். உங்கள் கிழும் வஞ்சனையில்லாமல் ஐந்து வருஷங்கள் வேலை செய்தேன். என் தள்ளாத வயதுக்குள்ள சக்தியளவு உழைத்தேன். இந்தத் தவறு நான் செய்து விட்டேன். மன்னிக்க மாட்டேன் என்கிறீர்கள். நான் நின்று கொள்கிறேன். திருவல்லிக்கேணி கோ – ஆபரேடிவ் ஸ்டோரில் குமாஸ்தா வேலை தருவார்கள். அங்கே சேரப் போகிறேன். ஒரு நல்ல நடுதாசி கொடுங்கள்” என்றார்.

“நடுதாசியுமில்லை, மடிதாசியுமில்லை, போங்கள்” என்று சொல்லி விட்டார் பஞ்சாக்ஷரய்யர்வாள்.

கிழவர் போகாமல் அங்கேயே நிற்பதைப் பார்த்து, “அந்தப் பால்காரனிடம் ரசீது கொடுத்ததைத் திருப்பித் தரக் கேட்டு வாங்கிக் கொண்டு வாரும். அது முடியுமானால் நீர் வேலையில் இருக்கலாம்” என்றார்.

“ஐயோ! அது எப்படி நான் போய்க் கேட்பது! முடியாது—உங்கள் குடும்பத்துக்கே அது கெட்ட பெயராகும். என்னாலும் அது செய்ய முடியாது” என்றார் கிழவர்.

“சரி, அப்படியானால் நீர் போகலாம்” என்று முடித்து விட்டார்.

அப்போது வேங்கடேச சாஸ்திரியார் பஞ்சாக்ஷரய்யரைப் பார்க்க வந்தவர், அறையில் நுழைந்தார்.

“கிழவரே!” என்று பஞ்சாக்ஷரய்யர் மறுபடியும் வெளியே போகவிருந்த நடேச ஐயரைப் பார்த்துச் சொன்னார்: “அந்த ரசீதை வாபஸ் வாங்கி வருவதானால் வாரும். இல்லாமற் போனால், மறுமுறை அதைப்பற்றிப் பேசுவதற்கு இங்கே வர வேண்டாம். நீர் கோஆபரேடிவ் ஸ்டோரில் வேலை ஒப்புக் கொள்ளலாம். நான் ஏதும் கடிதம் தர இயலாது. அங்கேயும் ஒரு படிக்குப் பதில் ஒன்றரைப் படி அளந்து போட்டு ஸ்டோரைக் குட்டிச் சுவராக்காதிர்” என்று கிழவருக்கு உபதேசித்தார்.

“அய்யர்வாள்! நான் ஏதோ பிசகு செய்து விட்டேன். அதற்காக என்னை ஏளனம் செய்ய வேண்டாம். உங்கள் தகப்பனார் என்னை உடன் பிறந்த தம்பி போல் நடத்தி வந்தார். காலம் மாறி விட்டது. பகவான் எல்லாரையும் காப்பாற்றுவான்” என்று சொல்லிவிட்டுக் கிழவர் வெளியேறினார்.

“திருவல்லிக்கேணியில் நம் ஆஸ்திக சபையில் ஈசோபநிஷத்து பிரவசனம் இந்த ஞாயிற்றுக்கிழமை. தாங்கள்தான் அத்யக்ஷராக அமர வேண்டும். அது எனக்குப் பெரிய கௌரவம் செய்ததாகும்” என்றார் சாஸ்திரியார்.



"இந்தக் காலத்தில் சமரசம் சமரசம் என்று பேசி ஆதி சங்கரருடைய சித்தாந்தத்தை வேரோடு அழிக்கிருர்கள் சிலர். நீங்களும் சில காட்களாக உங்கள் பிரவசனங்களில் இந்தக் காலத்துக் காந்தி மடக்காரர்களைப் போல் எல்லாம் ஒன்று என்று பேசுகிறீர். நான் எப்படி உங்கள் பிரசங்கத்துக்கு அக்கிராசனம் வகிக்க முடியும்?" என்ருர் பஞ்சாக்ஷரய்யர்.

"அப்படி ஒன்றும் இல்லை. சுத்த அத்துவைதம்தான் பேசப் போகிறேன்" என்ருர் சாஸ்திரியார்.

"போன தடவை உங்கள் சபையில் வைத்தியநாத தீட்சிதர் ஏதோ குழப்பிக் கொண்டு பேசினுர். சாஸ்திரமெல்லாம் படித்தவர். ஆனுலும், யஸ்து ஸர்வாணி பூதான் யாத்மன்யேவானு பச்யதி ஸர்வ பூதேஷு சாத்மானம் என்கிற மந்திரத்துக்கு ஏதோ அனுதாபம், கருணை என்றெல்லாம் வியாக்யானம்செய்து குளறிக் கொண்டிருந்தார். ஸர்வம் பரப்பிரம்மம் என்று சொல்லி யிருக்கும் அத்துவைத மந்திரத்தை, கேவலம் துவைத மார்க்கத்தில் வியாக்யானம் செய்து கொண்டு போனுர். இதுவெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை" என்ருர் பஞ்சாக்ஷரய்யர்.

"அதுவே என்னுடைய அபிப்பிராயமும். தெளிவாக இருப்பதைக் குழப்புகிருர்கள். எல்லாம் பரப்பிரம்மமாக முடிந்தபின் யார் யாருக்கு தயை காட்டுகிறது? யார் மேல் யார் இரக்கம் கொள்கிறது? கோமோஹஃகஃ சோகஃ ஏகத்வம் அனுபச்யதஃ" என்ருர் சாஸ்திரியார். முடிவில் அக்கிராசனம் வகிப்பதற்குப் பஞ்சாக்ஷர அய்யர் ஒப்புக் கொண்டார்.

** ** **

பிரவசனமும் அக்கிராசனர் முடிவுரையும் எல்லாம் ஆனபின் சபையோரின் விருப்பப்படி கிழவர் நடேசய்யர் வந்தனோபசாரம் சொன்னுர்: "ஆதி சங்கரர் கீர்த்தி வளர வேண்டும். அதற்கு இந்தக் காலத்தில் பலர் ஊக்கத்தோடு தொண்டாற்றி வருகிருர்கள். இது போற்றத்தக்கது. வறட்டு வேதாந்தத்தில் பயனில்லை. தயை, தாட்சண்யம், ஈரம், இரக்கம் இவற்றைத் தான் அதிகமாக இக்காலத்தில் வற்புறுத்த வேண்டும்" என்றும் இன்னும் சில விஷயங்களும் சொல்லி முடித்தார். வறட்டு வேதாந்தம் என்று சொல்லும்போது கூட்டத்தில் ஒரு மூலையில் சிலர் சிரித்தார்கள். தம்மைத் தான் குறிப்பிட்டுச் சிரித்தார்கள் என்று பஞ்சாக்ஷர அய்யர் முகம் சிவந்தது.

கோஆபரேடிவ் ஸ்டோர் மானேஜர் ராமலிங்க அய்யர் பஞ்சாக்ஷர அய்யருக்கு ரொம்ப வேண்டியவர். அடுத்த நாள் நடேச அய்யரை அழைத்து, "உம்மை குமாஸ்தாவாக வைத்துக் கொள்வதற்கு இல்லை. மன்னிக்க வேண்டும்" என்ருர்.

"ஐயோ! ஏன் இப்படி? என்ன தப்பு செய்தேன்?" என்று கேட்டார் கிழவர்.

"வயோதிக ஆள் வேண்டாம். யாராவது வயது ஆசாமியைப் பாருங்கள் என்று டைரக்டர்கள் சொல்லுகிருர்கள்" என்ருர்.

"இதுவே முடிவா?" என்று கேட்டார் நடேச அய்யர்.


"ஆமாம்; உங்கள் பேரில் பஞ்சாக்ஷர அய்யருக்கு ரொம்ப கோபம். ஏதோ சபையில் அவரை நீர் அவமதித்து விட்டீராம்" என்ருர்.


"சங்கரா!" என்று சொல்லிக் கிழவர் வீடு சென்ருர்.

** ** **

"சுவாமி! என்னுல் உங்களுக்குக் கஷ்டம் நேரிட்டது, எனக்கு அந்த பாபம் வேண்டாம். இந்தப் பதினைந்து ரூபாயை உங்களுடைய எஜமானருக்குக் கொடுத்து விடுங்கள்" என்று பால்கார வரதராஜ கோனுன் நடேச அய்யருக்குத் தந்தான்.

"அப்பனே! நீ மகாராஜனு யிரு. நீயே கொண்டு போய்த் தொகையை அய்யரிடம் செலுத்தி விடு. சங்கரர் பஜித்த கோவிந்தன் உன்னையும் உன் குடும்பத்தையும் காப்பான். உனக்கு ஒரு கஷ்டமும் வராமல் காப்பான்" என்ருர் கிழவர்.


மே 22உ முதல்...
பரமேஸ்வர் ஆர்ட் பிக்சர்ஸ் அளிக்கும்
பத்தரை மாத்து தங்கம்
டைரக்ஷன்
K.S. மணி
மணிவேல் பிக்சர்ஸ்
தயாரிப்பு...
ஸ்டுடியோ
பாரமவுண்ட்
Elegant



இந்தியாவில் ஏராளமான

சீட்டுக் கட்டுகள்


தயாரிப்பாளர்கள். அனைவருக்கும் ஏற்ற பற்பல ரகங்கள் வசீகரமான அனேகவித டிசைன்களில் கிடைக்கும்

விற்பனை விவரங்களுக்கு எழுதவும்

THE POPULAR FINE ART LITHO WORKS, Tardeo Road, BOMBAY-7

ஏஜண்டுகள் : வி. செ. ராமலிங்கம் அண்டு சன்ஸ், 2/422, தங்கசாலைத் தெரு, சென்னை-1

B·I



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதிவாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1959 மே 26	**1959 மே 27**

பிரயாணத்திற்குரிய தஸ்தாவேஜுகளைக் காண்பித்து வேண்டிய அளவு பங்க் வசதியுள்ள டிக்கட்டுகளையும், பர்த் வசதியற்ற டிக்கட்டுகளையும் (சாப்பாட்டுடனோ அல்லது சாப்பாடின்றியோ) எங்கள் கம்பெனியின் ஏஜண்டிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பினங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள் : பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

82

> ஓதி உணர்ந்தும்
> பிறர்க்(கு)உரைத்தும்
> தான்அடங்காப்
> பேதையின் பேதையார்
> இல்.

அறிவில்லாதவன் பேதை. ஒருவன் சாஸ்திரம் ஓதி உணர்ந்தும், பிறருக்கு அதன் பொருளை உபதேசித்தும் வருகிறான். ஆயினும் தன்னுடைய காமம், கோபம், அகங்காரம் முதலிய ரஜோ குணக் குற்றங்களை அடக்கமாட்டான். இத்தகையோன் அறிவுடையாத பேதையே ஆவான். இத்தகையோன் பேதைகளுக்குள் பேதையாவான். ஒரு படிப்பும் இல்லாதவர்களே இவனை விட மேலாவார்.

* * *

> மையல் ஒருவன்
> களித்தற்றால் பேதைதன்
> கைஒன்று உடைமை
> பெறின்.

அறிவில்லாதவனின் வசம் செல்வம் சேர்ந்தால் மிக அபாயம். பித்தன் கள்ளைக் குடித்து விட்டால் என்ன அபாயமோ அந்தவிதமான அபாயம்.

ஏற்கனவே பித்தன், அதன்மேல் கள்ளும் சேர்ந்துவிட்டது போல், பேதைமையோடு செல்வச் செருக்கும் சேர்ந்து விட்டால் மிக அபாயம்.

* * *

அறிவில்லாதார் சிலர் தமக்கு மிகுந்த அறிவு இருப்பதாகவே எண்ணுவார்கள். அதைப் பற்றிச் செருக்கும் கொள்வார்கள். இத்தகையோருடைய அறிவின்மையே பெரிய அறிவின்மை. தன்னுடைய குறையைத் தான் அறிந்து விட்டால் அது அந்தக் குறைக்கு ஓரளவு மருந்தாகும். அவ்வாறு அறியாமல் தான அறிவாளி என்று எண்ணிக் கொண்டு கர்வப்படுகிறவர்களைப் பற்றி முனிவர் சொல்கிறார்.

> வெண்மை எனப்படுவது
> யாதெனின் ஒண்மை
> உடையம்யாம் என்னும்
> செருக்கு.

வெண்மை-அறிவு முதிராமை; ஒண்மை - அறிவு முதிர்ந்து பொலிவு பெற்ற நிலை.

* * *

நான் நன்றாகக் கற்றறியாத விஷயங்களில் பிரவேசித்து அவை தனக்குத் தெரிந்துவிட்டதாக ஒருவன் மடத்தனமாக நடந்து கொண்டால் அவன் நன்றாகக் கற்றறிந்த விஷயங்களிலும் அவனுடைய அறிவை மக்கள் மதிக்க மாட்டார்கள். சந்தேகப்படுவார்கள். குற்றம் தீரப் படித்த படிப்பும் வீணாகப் போகும்.

> கல்லாத மேற்கொண்டு
> ஒழுகல் கசடுஅற
> வல்லதூஉம் ஐயம்
> தரும்.

படித்தவர்கள் பலர் இந்தக் குற்றத்துக்கு ஆளாவார்கள். முனிவர் எச்சரிக்கிறார். குற்றம் தீரப் படித்ததோடு நில்; அரைகுறையாகப் படித்ததை அறிந்து விட்டதாக பாவனை செய்ய வேண்டாம் என்கிறார்.

* * *

> உலகத்தார் உண்டுஎன்பது
> இல்என்பான் வையத்து
> அலகையா வைக்கப்
> படும்.

உலகத்தில் அறிவுடையார் பலர் சேர்ந்து உண்டு என்று கொள்ளும் பொருளை இல்லை என்று வாதிப்பவன் உலகத்தில் மனிதனாக மதிக்கப்பட மாட்டான். இவ்வுலகத்தில் திரிகிற ஒரு பேய் என்று கருதப்படுவான்.

இது கடவுள், இருவினைப் பயன் முதலிய உண்மைகளைப் பற்றிச் சொல்லிய குறள். நாஸ்திகவாதிகளைக் குறித்துச் சொல்லப்பட்ட குறள்.

மனத்துக்கு எட்டாத சூட்சும விஷயங்களில் அறிவுடையார்களோடு ஒன்றுபட்டு நடந்துகொள்ள வேண்டுமென்பது உபதேசம்.

★ இக்கட்டுரையை வழங்கும் திரு வி. பி. அப்பாதுரை சென்னை மாநில மின்சார போர்டின் தலைமை என்ஜினியர். பெரியாறு திட்டம் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவு பெறத் தாமதமாகலாம் என்று தோன்றியபோது, ஜெர்மனிக்குப் பறந்து சென்று யந்திர சாதனங்களைத் தவணை காலத்துக்கு ஆறுமாதம் முன்பாகவே வந்து சேர வகைசெய்தவர். குந்தா திட்டத்துக்குக் கானடா நாட்டு நிபுணர்களுடன் வாதித்துக் காரியத்தை வெற்றிகரமாக முடித்து வைத்தவர். ஒத்துழைப்பவர்களின் அன்பையும், அபிமானத்தையும் பூரணமாகப் பெற்றவர். நமது ராஜ்யத்தின் மின்சார அபிவிருத்தியின் ருசிகரமான வரலாற்றை அவர் வாயிலாகவே கேட்போம்.


— ஆசிரியர்

சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி

திரு வி.பி. அப்பாதுரை

பாரதத்திலுள்ள பதினான்கு ராஜ்யங்களில் பம்பாய்க்கும் மேற்கு வங்காளத்துக்கும் அடுத்தபடியாக அதிக அளவு மின் சக்தி நமது சென்னை ராஜ்யத்தில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்விரண்டு இராஜ்யங்களிலும் மின் உற்பத்திக்கான வாய்ப்புக்கள் அதிகம். சென்னையில் வாய்ப்புக்களும் வசதிகளும் குறைவு. ஆனால் கிடைத்துள்ள வாய்ப்புக்களை நாம் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். உற்பத்தி செய்வதற்கு இணக்கமான நடவடிக்கைகளும் திட்டமிட்டு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நாம் இத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றம் கணிசமானது. இவ் வளர்ச்சியின் வரலாறு இன்று நேற்று ஆரம்பமானதல்ல. சென்ற ஐம்பதாண்டுகளாகச் சிறுகச் சிறுக வளர்ந்து இப்போதுள்ள நிலைமையை அடைந்திருக்கிறோம்.

1908-ம் ஆண்டு வரையில் மின்சக்தியைத் தனிப்பட்டவர்கள் பரவலாக ஒன்று அல்லது இரண்டு இடங்களில் தங்கள் சொந்த உபயோகத்துக்கென்று உற்பத்தி செய்து கொண்டிருந்தனர். நீலகிரியிலுள்ள காட்டேரி என்னுமிடத்தில் மிகச் சிறிய யந்திரங்களை அமைத்துத் தேயிலைத் தோட்டங்களின் உபயோகத்துக்காகச் சொல்ப அளவில் அருகிலோடிக் கொண்டிருந்த அருவியைப் பயன்படுத்தி மின்சக்தி உண்டாக்கினார்கள். 1909-ம் ஆண்டில்தான் முதன் முதலாகச் சென்னை மாநகரில் பொது மக்கள் உபயோகத்துக்கென்று சென்னை மின்சாரசப்ளைகார்ப்பரேஷனுக்கு லைசென்சு வழங்கப்பட்டு மின்சார உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. அடுத்தது உதகமண்டல நகர சபையால் 1925-ல் லைசென்சு வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இரண்டும் நீராவி (தெர்மல்) மின்சார நிலையங்கள்.



திரு வி. பி. அப்பாதுரை

இதற்குப் பின்னரே நமது ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி திட்டப்படி வேகமாக முன்னேற ஆரம்பித்தது. இதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த பெருமை அக்காலத்தில் சென்னை அரசாங்கத்தில் மின்சார அபிவிருத்திக்குப் பொறுப்பேற்று, கௌன்சில் அங்கத்தினராகப் பணியாற்றிய திரு ஸி. பி. ராமஸ்வாமி அய்யருக்கு உரியது. மின்சார வளர்ச்சிக்கு ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தித் தந்தவரும் அவரே. நமது ராஜ்ய மின்சார போர்டின் அதிகர்த்தா ஒருவர் உண்டென்றால் இப்போது ஓய்வு பெற்று நம்மிடையே இருக்கும் டாக்டர் ஸி. பி. அவர்கள்தான்.

பைகாரா நீர் மின்சார நிலையம்

நீலகிரி பீடபூமியில் ஒரு பாகத்தில் பைகாரா நதி ஓடுகிறது. அங்கே வருஷத்துக்குச் சராசரி 80 அங்குலம் மழை பெய்கிறது. ஜீவநதி என்றாலும் ஆற்றில் ஓட்டம் வருஷம் முழுதும் ஒரே சமமாக இருப்பதில்லை. ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பெருக்கெடுத்தோடும். ஏப்ரல், மே மாதங்களில் வாய்க்கால் மாதிரி இருக்கும். ஆனால் மலைப்பிரதேசமாகையால் மேட்டிலும் பள்ளத்திலும் பாய்ந்தோடுகிறது. அங்கங்கே ஜலத்தைத் தேக்கிக்கொள்ள வசதிகள் நிறைந்த இடங்கள் பல உள்ளன. இப்

படி ஓரிடத்தில் 3082 அடி உயரத்திலிருந்து நீர் கீழே விழுகிறது. இதைப் பயன்படுத்திக்கொள்ள ஏற்பட்ட திட்டம்தான் பைகாரா திட்டம். மிகவும் பழைமையானது. 1929ஆம் ஆண்டில்மேற்கொள்ளப்பட்டது

ஆசியாவிலேயே இவ்வளவு உயரத்திலிருந்து நீர் விழுவது வேறெங்கும் இல்லையென்று சொல்லப்படுகிறது. இதிலிருந்துமின் உற்பத்தி அபிவிருத்தி செய்யும் வேலை மூன்று தனித்தனி திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. 1929ல் ஆரம்பித்து 1932ல் முடிவுற்றது முதல் கட்டம். நதியில் குறுக்கே எந்த இடத்திலும் அணை எழுப்பாமல் ஆற்றின் ஓட்டத்தை மட்டும் பயன்படுத்திக் கொண்டு இயற்கையாக அமைந்திருந்த கிளேன்மார்கன் தேக்கத்திலிருந்து குழாய்கள் வழியே நீரைக் கொணர்ந்து மின்சக்தி உண்டாக்கப்பட்டது. இதிலிருந்து 18,000 கிலோவாட் சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் முகுர்த்தி என்னும் இடத்தில் பைகாரா நதியில் அணை எழுப்பப்பட்டு ஒன்பது மைல் பரப்புள்ள நீர்த் தேக்கம் உண்டாக்கப்பட்டது. 1935ல் ஆரம்பித்து 1938ல் முடிவுற்ற இந்த இரண்டாவது கட்ட நடவடிக்கையின் பயனாக மேலும் 25,000 கிலோவாட் மின் சக்தி உண்டாக்கப்பட்டது. தேவை அதிகரிக்கத் தொடங்கியதால் இந்த நீர்த்தேக்கத்திலிருந்து முகுர்த்தி அணையின் வடிகால் வாய்கள் வழியாக வழிந்தோடும் ஜலத்தையும் தேக்கி வைப்பதற்காக இரண்டாவது அணை கட்டப்பட்டு 23 சதுர மைல் விஸ்தீரணமுள்ள மற்றொரு நீர்த்தேக்கம் உண்டாக்கப்பட்டது. இந்த மூன்றாவது கட்ட வேலை 1956ல் முடிவுற்றது. இதன் விளைவாக மேலும் 27,200 கிலோவாட் மின் சக்தி உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது.



ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்

சுமார் 6·75 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்ட இந்தத் திட்டத்தினால் கோவையிலுள்ள தொழிற்சாலைகளுக்கு முதன் முதலாக மின்சாரம் வழங்கப்பட்டது. படிப்படியாக அங்கிருந்து கிழக்கே திருப்பூருக்கும் ஈரோடுக்கும், அதேபோல் தெற்கே உடுமலைப்பேட்டை, செம்பட்டி, மதுரை முதலிய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஈரோட்டிலும் மதுரையிலும், பாபநாசம் மேட்டூர் திட்டங்களிலிருந்து கிடைத்துக் கொண்டிருந்த மின்சார சப்ளையுடன் இணைப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தப் பைகாரா மின்நிலையத்திலிருந்து பயனடைவோர்கள் ஜாபிதாவில் 74 பஞ்சாலைகளும், மதுக்கரையிலுள்ள சிமிட்டித் தொழிற்சாலையும் நீலகிரி, ஆனைமலை பிரதேசங்களிலுள்ள 58 தேயிலைத் தோட்டங்களும் இடம் பெறுகின்றன. இதைத் தவிர 24,514 விவசாயிகளுக்கும் நகரங்களில் பலதரப்பட்ட உபயோகத்துக்கென 117,868 பேர்களுக்கும் மின் வசதியளிக்கப் பட்டுள்ளது.


உதகையிலிருந்து 20 மைல்களுக்கு அப்பால் உள்ள சிங்காரா என்னுமிடத்தில் அமைந்துள்ள இந்த மின்நிலையம் பழைமையானதுடன் மிகப் பெரியதும்கூட. 70,000 கிலோவாட் சக்தி இப்போது உற்பத்தி செய்கிறது. உச்சபக்ஷமாக 75,000 கிலோவாட் சக்தி உற்பத்தி செய்து அளிக்கவல்லது. மகத்தான இந்த முதல் திட்டத்தைச் செயல்படுத்தித் தந்தவர் ஸர் ஹென்ரி ஹோவர்ட் என்னும் முதலாவது பிரதம என்ஜினீயர். பின்னால் இரண்டாவது திட்டமாகிய மேட்டூர் திட்டத்தையும் உருவாக்கிச் செயல் முறைக்குக் கொண்டு வந்தவர் இவரே. சென்னை ராஜ்ய மின் வளர்ச்சிக்குக் காரணமான உத்தமர்கள் வரிசையில் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவர் ஸர் ஹென்ரி. அவருடைய அபார சாதனைகளும் தொழில் திறனும் நுட்ப அறிவும் அவர் வழிவந்த பிற்காலத்திய பிரதம என்ஜினீயர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் எடுத்துக்காட்டாகச் சிறப்புற்று விளங்கின.

மேட்டூர் நீர் மின்சார நிலையம்

சென்னை ராஜ்யம் மேற்கொண்ட இரண்டாவது திட்டம் இது. சென்னைக்கு 200 மைல் தென்மேற்கேயுள்ள மேட்டூர் என்னும் இடத்தில் காவிரியாற்றின் குறுக்கே எழுப்பப்பட்ட அணை உலகத்திலுள்ள பெரிய அணைகளில் ஒன்று எனப் பிரசித்தி பெற்றது. 5300 அடி நீளமும் 176அடி உயரமுமுள்ள இந்த அணை ஏறக்குறைய 10,000 கோடி கன அடி அளவுள்ள ஜலத்தைத் தேக்கித் தருகிறது. முக்கியமாக விவசாயத்துக்கு நீர்ப்பாசன வசதி யளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டமென்றாலும், இதிலிருந்து மின் உற்பத்திக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான மின் உற்பத்தி நிலையம் அணைக்கட்டின் கீழே நான்கு 10,000 கிலோவாட் சக்தியுள்ள யந்திரங்களுடன் அமைக்கப் பட்டிருக்கிறது. அணைக்கட்டுக்குள்ளேயே பதித்து வைத்துள்ள நான்கு 8½ அடி இரும்புக் குழாய்கள் மூலம் தேக்கத்திலுள்ள தண்ணீர் கீழேயுள்ள யந்திரங்களுக்குச் செல்கிறது.

இந்த நிலையத்தில் உற்பத்தியாகும் மின் சக்தியின் அளவு தேக்கம் நிரம்பி யிருந்தால் 40,000 கிலோவாட்டுகள். நீர் மட்டம் குறைந்து போனால் 17000

கிலோ வாட்டுகள் வரை மின் சக்தி கிடைக்கும். இத் திட்டம் இரண்டு கட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு 1937ல் முதல் கட்டமும் 1944-ல் ஆரம்பித்து 1946 ல் இரண்டாவது கட்டமும் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் பூர்த்தி செய்யப்பட்டன.



பைகாரா மின்சார நிலையம் உட்புறத் தோற்றம்.


இங்கு உற்பத்தி செய்யும் மின்சாரம் வடக்கே சிங்காரப் பேட்டைக்கும், அங்கிருந்து ஒரு பக்கம் திருப்பத்தூர் மார்க்கமாக வேலூருக்கும், மறு பக்கம் விழுப்புரம் மார்க்கமாகத் திருவண்ணாமலைக்கும் செல்லுகிறது. மற்றொரு வழியாகக் காஞ்சிபுரம் மார்க்கம் செல்லும் மின்சாரப் பாதை சிங்காரப் பேட்டை வினியோக நிலையத்தைச் சென்னையில் உற்பத்தியாகும் நீராவி மின்சார நிலையத்துடன் இணைக்கிறது. இதனால் மேட்டூர் நிலையத்தின் மின்சார உற்பத்தி நீர்மட்டக் குறைவினால் குறைவடையும் போது, சென்னை தெர்மல் மின்சார நிலையம் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்கிறது.

மேட்டூர் மின்சாரத்தினால் முக்கியமாகப் பயன் பெறுபவை பதினொரு பஞ்சாலைகளும், ஒரு சிமிட்டித் தொழிற்சாலையும் நெய்வேலி லிக்னைட் திட்டமும். இவைகளைத் தவிர, 33,386 விவசாயிகளுக்கு மின் வசதியளிக்கப்படுகிறது. நகரங்களிலும் கிராமங்களிலுமாக 2,43,905 தனி நபர்களும் ஸ்தாபனங்களும் இதன் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

பாபநாசம் மின்சார நிலையம்

சென்னை ராஜ்யம் மேற்கொண்டிருந்த அடுத்த பெரிய திட்டம் பாபநாச மின்சார நிறுவனம். அம்பாசமுத்திரத்துக்கு எட்டுமைல் தூரத்திலுள்ள பாபநாசத்தில் 330 அடி உயரத்திலிருந்து விழும் தாம்பிரபரணி ஆற்றின் அருவியைப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பட்டது இத் திட்டம். இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப் பட்டது. இதனுடைய முதல் அம்சமாக 1944ல் நீர் மின்சார நிலையம் நிறுவப்பட்டது. 21,000 கிலோவாட் சக்தி இங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இத்துடன் இணைந்து மதுரையில் நிறுவப்பட்ட தெர்மல் மின்சார நிலையமும் பணியாற்றுகிறது. நீர் அருவியில் நீர்மட்டம் குறைந்தால் அதை ஈடு செய்ய இந்த முறையில் வகை செய்துள்ளது. இரண்டாவது கட்டமாகப் பாபநாசம் மின்சார ஸ்தலத்திலேயே மேலும் ஒரு யந்திர சாதனத்தை அமைத்து அதன் உற்பத்தியை 7000 கிலோவாட் அளவு அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள். இத்துடன் மதுரையிலுள்ள நீராவி மின்சார நிலையத்திலும் விரிவான யந்திர சாதனங்கள் அமைத்து 1953 – 54லிருந்து அதிக உற்பத்தி செய்யப்படுகிறது.

பாபநாசத் தேக்கத்தின் பரப்பு அதிகம். இந்தப் பிரதேசத்தில் மழை அதிகம். தென்மேற்குப் பருவக் காற்றும் வடகிழக்கு பருவக் காற்றும் இங்கே மழை பெய்வதற்கு அனுகூலம் செய்கின்றன. நீர்வீழ்ச்சிக்கு ஆறு மைல் மேலே தாம்பிரபரணி ஆற்றில் 814 அடி நீளமும் 176 அடி உயரமுமுள்ள அணைகட்டப்பட்டு 56,000 லக்ஷம் சதுர அடி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேக்கத்திலிருந்து 3500 அடி நீளமுள்ள இரண்டு 9 அடி இரும்புக் குழாய்கள் மூலம் ஆற்றில் தண்ணீரின் ஓட்டம் கட்டுப்படுத்தப்படுகிறது. அணைக்குச் சுமார் 5 மைல் கீழே ஆற்றின் தண்ணீர் மற்றொரு வாய்க்கால் மூலம் திருப்பப்பட்டு, இரண்டாவது சிறிய தேக்கத்தில் சேமித்து வைக்கப் பட்டு, அதிலிருந்து 643 அடி நீள




பாபநாச மின்சார நிலையமும் பென்ஸ்டாக் குழாய்களும்

மூள்ள நான்கு 69 அங்குலக் குழாய்கள் மூலம் நீர்வீழ்ச்சிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மின்சார நிலையத்துக்குச் செலுத்தப்படுகிறது. இந்த நிலையத்தில் 28,000 கிலோவாட் மின்சக்தி உற்பத்தியாகிறது.

சுமார் மூன்று கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் விளைவாக மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. பாபநாசத்திலிருந்து கயத்தாறு, கோவில்பட்டி வழியாக மதுரைக்கும், கயத்தாறிலிருந்து தூத்துக்குடிக்கும், தாழையூத்துக்கும், தென்காசி, ராஜபாளையம், திருமங்கலம் என்னும் இடங்களுக்கும் மின்வசதி குறையாது கிடைத்தாலும் இதனின்று அதிக பயனைப் பெற்றது மதுரைமாநகரந்தான். இங்கே பைகாரா மின்சார விநியோகத்துடன் பாபநாசம் மின்சார விநியோகமும் இணைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வட்டாரத்திலுள்ள சுமார் 34 பஞ்சாலைகளும் ஒரு சிமிட்டி உற்பத்திச் சாலையும் 8,311 விவசாயிகளும் இந்தத் திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். ஒரு லக்ஷத்துக்கும் அதிகமான நபர்களும் பல ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் மின்சாரத்தை உபயோகிக்கின்றனர்.



மேட்டூர் அணையும் நீர்த் தேக்கமும்.


ளுள்ளது. 1909 ஆம் ஆண்டில் சென்னை மின்சார சப்ளை கார்ப்பரேஷனால் ஸ்தாபிக்கப்பட்டு, 1947ம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்துக்குள் வந்தது.

மூன்று தனித்தனி நிலையங்கள் கொண்டது இந்த நிறுவனம். பிரம்மாண்டமான 'பாய்லர்கள்' பதினொன்று இங்கே செயல் புரிகின்றன. நிலக்கரியின் உபயோகத்தால் இயங்குகிறது. இதனுடைய அளவும் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு, மூன்று கட்டங்களில் வேலை நடந்து வந்தது. சென்ற 1958 ஏப்ரலில் தான் இது முடிவுற்றது. ஏறக்குறைய 10 கோடி ரூபாய் செலவில் உருவானது.

சென்னைக்கும், நகரின் சுற்றுப்புறமுள்ள இடங்களுக்கும் மின்சாரம் இங்கிருந்துதான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் பயன் பெறும் தொழில் ஸ்தாபனங்கள் பலப்பல. முக்கியமானவை என்ற ஜாபிதாவில் பக்கிங்ஹாம் கர்னாடிக் கம்பெனி, பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலை, சினிமா ஸ்தாபனங்கள், அடிஸன் பெயின்ட் தொழிற்சாலை, செம்பியம் மரத் தொழிற்சாலை, அசோக் லேலண்ட்

தெர்மல் மின்சார நிலையங்கள்

இந்த மூன்று நிலையங்களைத் தவிர இரண்டு பெரிய தெர்மல், அல்லது நீராவியால் இயங்கும் மின்சார நிலையங்களும் நமது ராஜ்யத்தில் நிறுவப்பட்டுள்ளன. மழை பெய்யாது ஆற்றில் பெருக்குக் குறைந்து தேக்கங்களின் மட்டம் குறைந்தால் மின்சார உற்பத்தியும் தடைப்பட்டுப் போகும். இதை நம்பிச் செயல் புரியும் தொழிற்சாலைகளுக்குக் கஷ்டங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவே இவை பக்கபலமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் முதலாவது சென்னை பேஸின் பிரிட்ஜ் ஸ்டேஷனுக்கு அருகி




பாபநாசம் அணையும் நீர்த் தேக்கமும்.

மோட்டார் தொழிற்சாலை, டி. ஐ. சைக்கிள்ஸ், செஞ்சுரி மாவுமில் முதலியன. கொரட்டூர் என்னும் விநியோக நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சாரம் மேட்டூர், மின்சாரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்தபடியாக இருப்பது மதுரை தெர்மல் மின்சார நிலையம். 1951-ல் துவக்கப் பட்டது. இதில் உற்பத்தியாகும் மின்சாரம் 14000 கிலோ வாட் சக்தியுள்ளது. செலவு சுமார் 1·82 கோடி ரூபாய்கள்.

முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மின்சார அபிவிருத்திக்காக 30.86 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, தனித்தனியாக ஆறு இனங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டன. இவற்றுள் விஸ்தரிப்பு இனங்கள் ஐந்து. மதுரை தெர்மல் மின் நிலையத்துக்கு அதிகப்படியாக 14000 கிலோ வாட் சக்தி உற்பத்திக்கான ஏற்பாடுகளும், பைகாரா திட்டத்தின் மூன்றாவது கட்ட விஸ்தரிப்பும் பாபநாச மின் நிலையத்தின் இரண்டாவது கட்ட வேலையும் இந்த வகையைச் சேர்ந்தவை. சென்னை தெர்மல் மின்சார நிலைய விஸ்தரிப்புக்கூட இதில் சேர்ந்ததே.



பெரியாறு நீர் மின்சார நிலையத்துக்குச் செல்லும் பென்ஸ்டாக் குழாய்கள்.

மோயார் நீர் மின்சாரத் திட்டம்

புதிய இனம் என்று சொல்லக் கூடியது மோயார் திட்டம். இதுதான் முதல் ஐந்தாண்டு திட்டத்தினால் நமது மாநிலம் பெற்ற பயன். இதைப் பைகாரா திட்டத்தின் தம்பி எனலாம். ஏனெனில் பைகாரா நதியிலிருந்து ஏற்கனவே உபயோகப்படுத்தின கழிவுத் தண்ணீரை மறுமுறை உபயோகத்துக்குக் கொண்டு வருகிறது இத்திட்டம்.

பைகாரா மின் நிலையத்துக்குக் கீழே ஓடும் பைகாரா ஆற்றுடன் பற்பல சிற்றாறுகள் வெவ்வேறு இடங்களில் கலக்கின்றன. இப்படிக் கலப்பவைகளில் கிளென்மார்கன் வாய்க்கால் ஒன்று. அவரைஹல்லா வாய்க்கால் மற்றொன்று. கிளென்மார்கன் கால்வாயில் 286 அடி நீளமும் 50 அடி உயரமுமுள்ள ஒரு அணை எழுப்பி, அதன் தண்ணீரை 7600 அடி நீளமுள்ள ஒரு செயற்கைக் கால்வாய் வெட்டி அதன் மூலம் அவரைஹல்லா ஓடையில் பாயச்செய்து அந்த ஓடையில் மரவக் கண்டி என்னும் இடத்தில் ஒரு அணை எழுப்பி விஸ்தாரமான தேக்கத்தை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இந்த அணை தான் இத் திட்டத்தில் முக்கிய அம்சம். 1360 அடி நீளமும் 75 அடி உயரமும் உள்ளது. இங்கிருந்துதான் மின்சார உற்பத்திக்குத் தேவையான நீரைக் குழாய்கள் மூலம் பத்து மைல் அப்பால் மோயார் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் நிலையத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள். சுமார் 1300 அடி உயரத்திலிருந்து பைகாரா ஆறு மோயார் பள்ளத்தாக்கில் கீழே இறங்குமிடத்தில் 4·64 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த மின்சார நிலையத்தில் 36,000 கிலோ வாட் மின்சார சக்தி உற்பத்தியாகிறது.

முதலாவது திட்டகால முடிவில் நமது மாநிலத்தின் மின் உற்பத்தி 1,56,000 கிலோவாட்டிலிருந்து 2,56,500 கிலோ வாட்டுக்கு உயர்ந்துவிட்டது. அதாவது 65 சதவிகிதம் உயர்ந்தது. திட்டத்தின்படி ஐந்து ஆண்டுகள் பூர்த்தியான பின்னரே எதிர்பார்க்கப்பட்ட இந்த முன்னேற்றம் நான்கு வருஷங்களுக்குள்ளாகவே கிட்டிவிட்டது. இதிலிருந்து நடவடிக்கைகள் எவ்வளவு தீவிரத்துடனும் சுறுசுறுப்புடனும் நடந்தன என்பது தெரியும். மின்சார விஷயமாகையால் மின்சார வேகத்தில் முன்னேறியதைக் குறித்துப் பெருமை கொள்ளவேண்டும்.

ஆனால் தேவையும் இதே வேகத்தில் உயர்ந்து கொண்டுதான் சென்றது. 180,000 கிலோவாட்டிலிருந்து 208,000 கிலோவாட்டுக்கு மின்சாரத்தின் உபயோகமும் உயர்ந்து விட்டது. இன்னும் அதிகமாக உற்பத்தி செய்திருந்தால்கூட முழுவதையும் உபயோகிக்க மக்கள் தயாராகவே இருந்ததாகத் தெரிகிறது.

இரண்டாவது திட்ட காலம்


இதனால்தான் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்காக இருமடங்கு நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டுப் புதுப்புது இனங்களை மேற்கொள்ள வகைசெய்யப்பட்டிருக்கிறது. முதல் ஐந்தாண்டில் ஒதுக்கப்பட்டது 30.68 கோடி யென்றால்

இரண்டாவது திட்டத்துக்கு 60.63 கோடி ஒதுக்கப்பட்டது. ராஜ்யத்தின் எல்லைப் புனரமைப்பு காரணமாகவும், செலாவணி நெருக்கடி காரணமாகவும் இது 53.25 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புது இனங்கள் ஐந்து என்றாலும் முக்கியமானவை இரண்டு மட்டுமே எனச் சொல்லலாம். முதலாவது குந்தா நீர் மின்சாரத் திட்டம்; இரண்டாவது பெரியாறு திட்டம்.

பெரியாறு திட்டம்

நமது ராஜ்யத்தில் மேற்கொள்ளப்பட்ட ஐந்தாவது திட்டம் இது. 10 கோடி ரூபாய் செலவில் ஆக்கப்பட்டுள்ளது. 1955-ம் ஆண்டில் துவக்கப்பட்டு 1959 பிப்ரவரியன்று முடித்து வைக்கப்பட்டது. இது ஒரு மகத்தான சாதனை. குறித்த காலத்துக்கு முன்னதாகவே ஒரு மாபெருந் திட்டத்தை முடித்து வைக்க வேண்டுமென்றால் இதைப் பற்றித் தனியாகக் குறிப்பிடவேண்டும். இதை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட கஷ்டங்கள் எவ்வளவு, அவைகளை எப்படிச் சமாளித்தனர் என்பதைக் கேட்க மெய் சிலிர்க்கும்.



பெரியாறு தேக்கத்திலிருந்து செல்லும் சுரங்கக் குழாயின் முகப்புத் தோற்றம்

பெரியாறு நதி சங்கரநயினார் கோயில் தாலுகாவிலுள்ள கொல்லி மலைச் சாரலில் உற்பத்தியாகி வடக்கு திசையாக 16 மைல் ஓடிப் பின்னர் மேற்கு முகமாகத் திரும்பி, 138 மைல்கள் சென்று இறுதியில் கிராங்கனூரில் அரபிக் கடலில் கலக்கிறது. 1898 ம் ஆண்டில் நமது மாமில மராமத்து இலாக்கா இந்நதியின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து 24 மைல் தூரத்தில் ஒரு அணையைக் கட்டினார்கள். இதனால் உண்டான நீர்த்தேக்கம்தான் பெரியாறு ஏரி. இந்தப் பிரதேசத்தில் வருஷவாரி சுமார் 100 அங்குல மழை பெய்வதால் இத்தேக்கத்தில் எப்போதும் நீர் நிரம்பி யிருக்கும். இத்தேக்கம் இருக்கும் பிரதேசம் நமது அண்டை ராஜ்யமான கேரளத்தின் எல்லைக்குள் உள்ளது. அப்படியிருந்தும் அந்தத் தண்ணீரை மலையில் குடைந்த ஒரு சுரங்கக் குழாய் மூலம் திருப்பி வைகை நதியில் சேர்த்துவிட ஒரு ஒப்பந்தம் கேரளாவுடன் நாம் செய்து கொண்டிருக்கிறோம். இது 1886 ஆண்டில். இதன்படி இந்தத் தேக்கத் தண்ணீர் மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள வயல்களுக்குப் பாசன வசதி யளித்து வந்தது.

இந்தச் சுரங்கக் குழாய் பிரும்மாண்டமானது. 5887 அடி நீளமுள்ளது. 96 சதுர அடி பரப்புள்ளது. விநாடிக்கு 1600 கன அடி தண்ணீர் பாயக் கூடியது. பாசனத்துக்கு உபயோகமாகும் நீரைத் தவிர வழிந்து மேடுயுள்ள கம்பம் பள்ளத்தாக்கின் வழியே ஓடி வீணாகும் தண்ணீர் கணிசமானது. இதைப் பயன்படுத்திக் கொண்டு மின்சார உற்பத்தி செய்தால் பலனுண்டு அல்லவா?

ஆனால் அந்தக் காலத்திய திருவாங்கூர் சர்க்கார் இதற்கு இணங்கவில்லை. சுரங்கத் தண்ணீர் பாசனத்துக்கேயன்றி மின் உற்பத்திக்கல்ல என்று சட்டம் பேசினார்கள். ஐம்பதாண்டுகளுக்கு நிலைமை இப்படியே தானிருந்தது. எதற்கும் ஒரு முடிவு ஏற்பட வேண்டுமல்லவா? 1954ம் ஆண்டில் இந்த நிலைமைக்கு ஒரு விமோசனம் பிறந்தது. பாசனத்துக்காக மட்டும் சென்னை ராஜ்யம் இதுவரையில் கேரள ராஜ்யத்துக்கு வருஷவாரி கப்பம் கட்டும் 40,000 ரூபாய்க்குப் பதிலாக ஆண்டுதோறும் நான்கு லக்ஷம் வரையில் கொடுக்க ஒப்புக்கொண்டு சுரங்கத் தண்ணீரிலிருந்து மின்சார உற்பத்தி செய்ய உரிமை பெற்றுக்கொண்டது நமது சர்க்கார்.

இந்த நல்ல காரியத்துக்குக் காரண புருஷர் முதல் அமைச்சர் திரு காமராஜ் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு முதல் வேலையாக 26 லக்ஷம் ரூபாய் செலவுசெய்து நீர்ப்பாசனத்துக்காக மட்டும் செல்லக்கூடிய சுரங்கத்தை அதிக தண்ணீர் செல்லும்படி பெரிதாக்கினோம். அடுத்தபடியாக, பழைய நீர்ப்பாசன சுரங்கத்துக்கு வெளியே 109 அடி உயரமுள்ள ஒரு அணை 40 லக்ஷம் ரூபாய் செலவில் அமைத்து 30 லக்ஷம் கன அடி தண்ணீர் தேக்கி வைக்க வகை செய்து கொண்டோம். இந்த நீர்த் தேக்கத்திலிருந்து 4000 அடி நீளமுள்ள மற்றொரு சுரங்கக் குழாய் 86 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது சுரங்கக் குழாயின் இறுதியில் 180 அடி உயரமும் 40 அடி விட்டமுமுள்ள நேர் செங்குத்துக் குழாய் ஒன்று பாறையிலேயே வெட்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நான்கு

குழாய்கள் மூலம் தண்ணீர் கூடலூருக்கு ஆறு மைலுக் கப்பாலுள்ள இடத்தில் அமைத்துள்ள மின்சார உற்பத்தி நிலையத்துக்குச் செலுத்தப்படுகிறது.

இதில் முதல் கட்டமாக இப்போது உற்பத்தியாகும் மின்சாரம் 105,000 கிலோ வாட்டுகள். இரண்டாவது கட்ட வேலையும் அடுத்த திட்ட காலத்தில் பூர்த்தி யடைந்த பின்னர் இதிலிருந்து 140,000 கிலோவாட் சக்தி மின்சாரம் கிடைக்கும். தற்போது உற்பத்தியாவதைச் சென்னையின் இணைப்புடனும், பாபநாசம், பைகாரா, மேட்டூர் நிலையங்களிலிருந்து கிடைத்துக்கொண்டிருக்கும் சக்தியுடனும் இணைத்திருக்கின்றனர்.

இத்திட்டத்துக்கு எதிர்பார்த்த செலவு 10¼ கோடி ரூபாய். திட்டம் வகுத்தபோது நீர்வீழ்ச்சியில் 950 அடி மாத்திரம் பயன்படுத்தி, 25,000 கிலோவாட் சக்தியுள்ள மின் இயந்திரங்கள்தான் பொருத்த இருந்தன. ஆனால் பின்னால் நடத்திய பரிசோதனைகளின் விளைவாக 35,000 கிலோவாட் சக்தியுள்ள மின் இயந்திரங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

எனினும் மொத்தச் செலவில் 186 லக்ஷம் ரூபாய் வரையில் சிக்கனம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் எதிர்பாராத வகையில் மின்சார யந்திரங்கள் ஜெர்மனியிலிருந்து வருவதில் காலதாமதம் ஏற்படும்போல் தோன்றியபோது, கணங்காமல் நேராக ஜெர்மனிக்கே சென்று உற்பத்தியாளர்களிட மிருந்து யந்திர சாதனங்களை ஐந்து மாதங்கள் முன்னதாகவே தருவிக்கச் செய்த ஏற்பாடும் குறிப்பிடத்தக்கது. மோயார் திட்டத்துக்குச் சுமார் ஏழு வருடங்களும் பைகாரா விஸ்தரிப்புத் திட்டத்துக்கு எட்டு வருஷங்களும், பாபநாசம் விஸ்தரிப்புத் திட்டத்துக்கு ஐந்து வருஷங்களும் பிடித்தன. ஆனால் இந்தப் பெரியாறு என்ற பெரிய திட்டத்தைச் சுமார் மூன்றரை ஆண்டுகளுக்குள்ளாகவே முடித்து வைத்தது பற்றி இதில் சம்பந்தப்பட்டவர் அனைவரும் பெருமை கொள்ளலாம்.


மின்சாரம் உபயோகிக்கும் நபர்களின்	எண்ணிக்கை
1950–51	2,50,000
1955–56	4,26,000
1956–57	4,59,000
1957–58	5.38,000
1958–59	6,20,000
1959–60 (எதிர்பார்ப்பது)	8,00,000

குந்தா நீர் மின்சாரத் திட்டம்

இத்திட்டம் மின்சார இலாகா மேற்கொண்ட ஆறாவது திட்டமாகும். சென்னை ராஜ்யத்திலேயே இதுவரை மேற்கொள்ளப்பட்ட மின்சாரத் திட்டங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் மிகப் பெரியதாகும்.

நீலகிரி மலைப் பிரதேசத்தில் 8000 அடி உயரத்திலுள்ள தேவபெட்டா, காரைக்காடா, கவனிபெட்டா, போர்த்திமண்டு முதலிய குன்றுகளிலிருந்து உற்பத்தியாகும் அவலாஞ்சி, எமரால்டு என்ற நீரோடைகள் ஒன்றாகக் கலந்து குந்தா நதியாக ஓடுகிறது. இந்நதி தென் கிழக்குத் திசையில் ஓடிக் கடல் மட்டத்துக்குமேல் 6000 அடி உயரத்தில் மண்டனை என்னுமிடத்தில் சில்லஹல்லா நதியுடன் சேர்கிறது. அங்கிருந்து 200 அடி சிறு நீர்வீழ்ச்சிகளாகக் கீழே இறங்கி 2000 அடி தூரம் மலை அருவியாக ஓடி, குந்தா கிராமத்துக்கு அருகில் காணவர்ஹல்லா நீரோடையுடன் கலக்கிறது. பிறகு இந்நதி பல மலையருவிகளாக ஓடிக் கடல் மட்டத்துக்குமேல் 2100 அடி உயரத்தில் பெரும் பஹல்லா ஓடையுடன் சேருகிறது. அங்கிருந்து ஒன்றரைமைல் தூரம் இந்நதி மிக வேகமாகவும், பிறகு சிறிது வேகம் குறைந்துமோடிக் கடல் மட்டத்துக்கு 1340 அடி உயரத்தில் பவானி ஆற்றுடன் சங்கமமாகின்றது. இந்த ஓடைகளில் பெருக்கெடுத்தோடும் தண்ணீரை அணையிட்டுத்தேக்கி அதிலிருந்து மின்சார சக்தி உற்பத்திசெய்யவே இந்தத் திட்டம் ஏற்பட்டது.

இத்திட்டம் இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் நான்கு மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட வகை செய்யப்பட்டிருக்கிறது. முதல் கட்ட வேலைதான் இப்போது நடந்து வரு



குந்தா நீர் மின்சாரத் திட்டத்தின் தோற்றம்.

கிறது. இதில் அடங்கியுள்ள பிரதான அம்சங்கள் நான்கு நீர்த்தேக்க அணைகள், இரண்டு செட்டு பென்ஸ்டாக் குழாய்கள், இரண்டு மின்சார உற்பத்தி நிலையங்கள் முதலியவை.

எமரால்டு, அவலாஞ்சி இரு அணைகளும் குந்தா நதியின் இரு புஜங்களான எமரால்டு—அவலாஞ்சி நீர் ஓடைகளுக்குக் குறுக்கே கட்டப்படுகின்றன. அவலாஞ்சி அணை சுமார் 182 அடி உயரமும் 1200 அடி நீளமும் கொண்டது. எமரால்டு அணை சுமார் 212 அடி உயரமும் 1060 அடி நீளமும் உள்ளது. இவ்விரண்டு நீர்த் தேக்கங்களும் சுமார் 22 சதுர மைல் பரப்பளவில் சேகரிக்கும் நீரைத் தேக்கும். தேக்கங்களின் கொள்ளளவு சுமார் 540 கோடி கன அடி தண்ணீர். இவ்விரண்டு நீர்த் தேக்கங்களும் ஒரு சுரங்கம் மூலம் இணைக்கப்படும். முதல் மின் நிலயத்துக்கான பிரதான நீர்ச்சுரங்கம் இவ்வணையிலிருந்துதான் வெளிப்படுகிறது.

மேல்பவானி அணை பவானி நதியின் குறுக்கே அதன் மேற்புறத்தில் கட்டப்படும். 266 அடி உயரமும் 1400 அடி நீளமும் 21 அடி அகலமும் உள்ள இவ்வணையினால் 12 சதுரமைல் பரப்பிலுள்ள நீர் தேக்கப்படுகிறது. இந்த நீர்த்தேக்கம் அவலாஞ்சி நீர்த்தேக்கத்துடன் 9740 அடி சுரங்கம் மூலம் இணைக்கப்படுகிறது.

குந்தா பாலம் கிராமத்துக்கு அருகில் குந்தா நதிக்கு வடக்குக் கரையில் 40,000 கிலோவாட்டுகள் சக்தி கொண்ட முதல் மின்சார நிலயம் கட்டப்படும். இந்த முதல் மின்நிலயத்திலிருந்து வெளிவரும் தண்ணீர் குந்தா பாலம் கிராமத்தின் அருகே குந்தா நதியில் கனரிஹல்லா நீரோடை சேருகிற இடத்தில் கூடுகிறது. இங்கேதான் இரண்டாவது மின் நிலயத்துக்கான ஒரு முன் நீர்த்தேக்க அணை கட்டப்படுகிறது. இந்தத் தேக்கத்திலிருந்து 11,477 அடி நீளமுள்ள சுரங்கப் பாதை வழியாக நீர் கொண்டு செல்லப்பட்டு பெரும்பஹல்லா நீரோடையின் இடது கரையில் இருக்கும் இரண்டாவது மின் நிலயத்துக்குப் போகிறது. இந்த இரண்டாவது மின் நிலயம் 2470 அடி உயரத்திலிருந்து விழும் நீர்வீழ்ச்சியை உபயோகித்து 140000 கிலோவாட்டுகள் சக்தியுள்ள மின்சாரம் உற்பத்தி செய்யும்.

இது என்ன ஓடைகள், அணைகள், சுரங்கக் கால்வாய்கள், குழாய்கள் என்று திருப்பித் திருப்பி வந்து கொண்டிருக்கின்றனவே என்று விழிக்கிறீர்களா? இந்த நீர் மின்சார விஷயமே அப்படித்தான். எங்காவது ஒரு ஓடையில் வாய்க்கால் மாதிரி ஜலம் ஓடும். அதிலிருந்து அணை எழுப்பி நீரைத் தேக்கி மின் நிலயம் அமைக்க வேண்டுமானால் செலவு அதிகமாகும். கட்டுப்படி ஆகாது. அதற்காக இரண்டு ஓடைகளை இணைக்க வேண்டும். இயற்கையாக ஒன்று சேராததைச் செயற்கைக் கால்வாய் மூலம்தானே இணைக்க வேண்டும். அதைத்தான் செய்ய இத்திட்டம் முற்பட்டுள்ளது.

இந்த விவரங்களிலிருந்து இத் திட்டம் எவ்வளவு விரிவானது என்பது விளங்கும். இதற்கு ஆகும் செலவு 35·44 கோடி ரூபாய். நமக்கு உதவி அளிப்பவர்கள் பலர். ஒத்துழைப்பவர் பலர்.

எனவே இதுதான் நமது திட்டங்களில் மிகப் பெரியது. 1955ல் ஆரம்பிக்கப்பட்ட வேலை மிகவும் துரிதமாக நடந்தேறி வருகிறது. 1960-61ல் முடிவு பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரியாறு திட்டத்தை வெற்றிகரமாகக் குறித்த காலத்துக்குள்ளாகவே முடித்த அனுபவத்தைக் கொண்டு பார்த்தால் இரண்டாவது திட்டகால இறுதிக்குள் இந்த வேலையும் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

வருங்காலத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகளை இடைவிடாது ஆராயப்பட்டுவருகின்றன. ஆராய்ச்சிக்குள் அடங்கிய இனங்களில் மேட்டூர் சுரங்கப் பாதை திட்டம், பழனி மலையிலுள்ள கம்பர்—அமராதி திட்டம், பாலாறு-பரண்டலாறு திட்டம் முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும். இவைகளைத் தவிர குந்தா திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலையும் மேற்கொள்ளப்படும். இவை யாவும் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கவனிக்கப்பட இருப்பவை.



கேரள நாட்டின் வனப்பு மிக்க ஏரிகளில் பெரியாறு ஏரியைக் குறிப்பிட வேண்டும். சாதாரணமாக மூன்று பக்கங்களிலும் ஒழுங்காகக் கரைகள் அமைந்த நீர் நிலைகளையே ஏரிகள் என்று கூறுகிறோம். சென்னையை அடுத்துள்ள புழலேரி, பொன்னேரி, தாம்பரம் பாக்கம் ஏரி இவற்றைப் போலவேதான் பெரியாறு ஏரியும் மேற்குத் தொடர்ச்சி மலைமீது அமைந்திருக்குமென்று நினைத்தேன். ஆனால் பெரியாறு ஏரியை நேரில் பார்த்தபின் ஏரி என்ற பெயர் அதற்குச் சற்றும் பொருத்தமில்லையென்று தோன்றிற்று.

ஏனெனில் ஏரி, சில இடங்களில் சென்னை கூவம் நதி அகலத்தில் நீண்டதோர் ஆறு போல் காட்சியளிக்கிறது. இந்த ஆறு போன்ற தோற்றம், வரவரப் பெரிதாகி மலைகளைச் சுற்றிச் சுற்றி வியாபித்திருக்கிறது. ஏரியின் மத்தியில் அடர்ந்த பெரிய காடுகளைப் பார்க்கலாம். மலைகளையும் காணலாம்.

காடுகளில் வசிக்கும் புலி, கரடி, யானை முதலிய மிருகங்கள் ஏரிக்கரையில் அவ்வப்போது தோன்றித் தண்ணீர் பருகிச் செல்கின்றன. இந்தக் காட்சியைப் படகுகளிலிருந்து பார்க்க யாத்திரிகர்கள் அங்கு சென்ற வண்ணமாயிருக்கிறார்கள்.

இந்த ஏரியின் மொத்தப் பரப்பளவு 240 சதுர மைல்களாகும்.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த இஞ்ஜினியர் ஒருவர் இந்த ஏரி நிரம்பிக் கரை புரண்டோடும் பகுதிக்கு மிருகங்களை வேட்டையாட வந்தார். ஏரியிலிருந்து அந்த இடத்திலேதான் தண்ணீர் வழிந்து பெரியாறாக ஓடுகிறது. அங்கு ஓர் அணைச் சுவரை எழுப்பினால் ஏரியில் இன்னும் அதிகமாகத் தண்ணீர் நிரம்பச் செய்யலாம் என்று நினைத்தார்.

சென்னை மாகாண சர்க்காரும், கேரளத்தில் அப்போது நிர்வாகத்தில் இருந்த சுதேச ஆட்சியினரும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள்.

பெரியாறு வழிந்தோடும் இடத்தில் ஓர் அணை கட்டினால், ஏரியின் நீர் மட்டம் அதிகமாகித் தமிழ் நாட்டின் எல்லை ஓரமாகத் தண்ணீரைக் கொண்டு வரலாம். இந்த உபரித் தண்ணீரை வைகை நதியில் திருப்பி மதுரை, ராமனாதபுரம் ஜில்லாக்களை வளம் பெறச் செய்யலாம் என்று கூறினார்கள்.

கேரள சுதேச சமஸ்தான அரசுகள் இதற்குச் சம்மதம் அளித்தன. பெரியாறு ஏரி வழிந்து பெரியாறு நதி புறப்படும் இடத்தில் சுமார் 120 அடி உயரத்துக்கு இரண்டு அணைச் சுவர்கள் எழுப்பப்பட்டன. ஒரு சுவரின் பெயரை 'பேபி அணை' என்கிறார்கள். இது மதகுகள் இல்லாத வெறும் சுவர் போன்றது. தண்ணீரைத் தேக்கவே பயன்படுகிறது. மற்றொரு சுவர் மதகு அமைப்புகள் கொண்டது. இதில் தண்ணீரை அளவாகத் திறந்து விடக்கூடிய கதவுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கதவுகள் மூலமாகப் பெரியாற்றின் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்த அணைகளின் நிர்வாகம் கேரளத்தின் கையிலிருந்து வருகிறது. அணைக் கதவுகளை எந்த அளவு திறந்துவிடலாமென்று தீர்மானிக்கும் உரிமையும் அவர்கள் கையிலேயே இருந்து வருகிறது. பெரியாற்றில் இப்போது விடப்படும் தண்ணீர், அங்கு விவசாயத்துக்குப் பயன்படவில்லை; அரபிக் கடலில்தான் கலந்து வீணாகிறது.

அணைக்கட்டு மதகுகளை இன்னும் சற்று மூடி, பெரியாற்றுத் தண்ணீரைத் தமிழ் நாட்டுக்கு அதிகமாக வரச் செய்யலாம்.

பெரியாறு அணை கட்டும்போது, நூற்றுக் கணக்கானவர்கள் உயிர் இழக்க நேர்ந்திருக்கிறது. அணைக் கட்டுக்கு வேண்டிய சகலவிதமான பொருள்களையும், உபகரணங்களையும் தலைச் சுமையாகவே அப்போது கொண்டு வர வேண்டியிருந்ததாம். துஷ்ட மிருகங்களுக்கு இரையானவர் பலர்; மலேரியா முதலிய நோய்களுக்கும் பலர் இரையாகி விட்டார்கள். அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைத்திருக்கிறார்கள்.

பெரியாறு ஏரி, அணைகளைப் பார்க்க மதுரை, தேனி, கம்பம் வழியாக பஸ் மூலம் பிரயாணம் செய்து முதலில் மலையடிவாரத்திலுள்ள "லோயர் காம்ப்" என்ற ஊரை அடைய வேண்டும். இந்த ஊரில்தான், மலைமீதுள்ள பெரியாறு ஏரித் தண்ணீரைப் பெரிய குழாய்கள் மூலம் கொண்டு வந்து மின்சார உற்பத்தி நிலையம் அமைத்திருக்கிறார்கள்.



ஜானகி — வைத்தியநாதன்

மணமகள்: பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவில் பிரதம ரிப்போர்ட்டராகப் பணியாற்றும் திரு எஸ். விசுவநாதன் அவர்களின் புதல்வி.

வாழ்க மணமக்கள்!

லோயர் காம்பிலிருந்து குமிளி சுமார் 4 மைல் தூரமே இருப்பதால் மலைமீது நடந்து செல்வது கடினமல்ல. மலை மீது செல்லும் சாலையின் இருபுறமும் கானகக் காட்சிகளைக் கண்டு களித்தவாறே நடக்கலாம்.

குமிளி என்ற ஊர் ஆரம்பமாகும்போது தமிழ்நாட்டின் எல்லையும் முடிவடைகிறது. ஊர் வாசலில் இந்த எல்லையைக் குறிக்கும் வளைவு கட்டியிருக்கிறார்கள்.

குமிளி ஊர் எல்லையிலுள்ள ஒரு பெரிய சோலை வழியாகச் சென்றால், சிறியதோர் நதிக்கரைக் காட்சி தென்படும். பெரியாறு இவ்வளவு சிறியதாகக் காணப்படுகிறதே என்ற ஆச்சரியம் முதலில் உண்டாகும். ஆனால் பெரியாறு ஏரியின் வால் புறத்தைத்தான் நாம் காண்கிறோம் என்பதை உணரும்போது ஆச்சரியம் மறைந்து விடும்.

நதியைப் போன்று விளங்கும் இந் நீர் நிலைப் படித்துறையில் மோட்டார் படகுகள் வாடகைக்குக் கிடைக்கின்றன. இங்கிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள அணைக்கட்டுக்குச் செல்லும்போது, ஏரியின் இரு கரைகளிலும் யானைக் கூட்டங்களையும், காட்டெருமைகளையும் காணலாம். இரவு நேரங்களில் புலிகளை இங்கு தாங்கள் பார்த்ததாகவும் சிலர் கூறுவார்கள்.

அணைக்கட்டு அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் மண் திட்டுமீது இருபது இருபத்தைந்து வீடுகள் கட்டியிருக்கிறார்கள். ஒரு சிறிய போலீஸ் படையும் இங்கு பந்தோபஸ்துக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள போலீஸ்காரர்கள் தாங்களாகவே சமையல் செய்து கொண்டு, காவல் பொறுப்பைக் கவனித்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கு வசிப்பவர்கள், உப்பு முதல் கற்பூரம்வரை எல்லாச் சாமான்களையும் குமிளியிலிருந்து படகுகளில்தான் கொண்டு வந்து குடும்பம் நடத்துகிறார்கள். இங்குள்ள அதிகாரி தாம் பதினைந்து ஆண்டுகளாக இந்த மண் திட்டில் சந்தோஷமாக வசித்து வருவதாகக் கூறினார். கேரள சர்க்கார் தங்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுப்பதாகக் கூறினார்.


அணைக்கட்டுகளைப் புகைப்படம் எடுக்கக் கூடாதென்று இங்கு விதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதி கண்டிப்பாக அமுல் நடத்தப்படுகிறது.

150 அடி உயரமுள்ள இந்த அணைக்கட்டின் மீதிருந்து கீழே பெரியாறு நதி ஆவேசமாக ஓடுவதைக் காணும்போது, "எங்கே தவறி விழுந்து விடுவோமோ?" என்ற அச்சம் உண்டாகிறது. தவறிப் போய்க் கீழே விழுந்தால் காலடி சேர வேண்டியதுதான். ஆண்டவன் காலடி சேர்வதைப் பற்றிக் குறிப்பிடவில்லை; காலடி க்ஷேத்திரத்தையே குறிப்பிடுகிறேன். சங்கரர் அவதரித்த காலடி க்ஷேத்திரம் இங்கிருந்துசெல்லும் பெரியாற்றின் கரையிலேதான் அமைந்திருக்கிறது.

பெரியாற்றுக்கு அணைக்கட்டு அமைத்த பின் அநேக மலைப் பகுதிகள் தண்ணீரில் மூழ்கி விட்டனவாம். குமிளி ஊர் அருகே தேக்கு மரங்கள் அடர்ந்த காடுகள் பல இந்தத் தண்ணீரில் மூழ்கி விட்டன. இதனாலேயே "தேக்கடி" என்ற பெயர் குமிளி அருகேயுள்ள படகுத் துறைக்கு உண்டாயிற்று.

படகில் செல்லும்போது மூழ்கிய மரங்களின் உச்சிகளை இன்றும் காணலாம். இந்த மரங்களின் மீது மோதாமல், படகுகளை மிகவும் ஜாக்கிரதையாக ஓட்டுகிறார்கள்.

தேக்கடியின் அருகே மலையைக் குடைந்து சுரங்கப்பாதை வெட்டியிருக்கிறார்கள். பெரியாறு தண்ணீர் இந்தச் சுரங்கத்தில் பயங்கர வேகத்தில் பாய்ந்து, பிறகு, பெரிய குழாய்களின் மூலமாகச் சென்று, லோயர் காம்பிலுள்ள மின்சார உற்பத்தி நிலையத்திலே புகுந்து, இங்குள்ள மூன்று ராட்சஸ ஜெனரேட்டர்களைச் சுற்றுகிறது. சுற்றி விட்டு இந்தத் தண்ணீர் வைகை அணையை வந்தடைகிறது. மின் உற்பத்தியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை இன்னும் ஒன்று அல்லது இரண்டு மடங்காகப் பெருக்க வசதிகள் இருக்கின்றன. பெரியாறு ஏரியிலிருந்து தேக்கடிச் சுரங்கத்தில் இன்னும் அதிகமாகத் தண்ணீர் விடுவதற்குக் கேரள சர்க்கார் அனுமதி தரவேண்டும். பெரியாறு நதியில் ஓடும் தண்ணீர் அளவைக் கொஞ்சம் குறைத்து இந்தப் பக்கம் சற்று அதிகமாகத் தண்ணீர் விடவேண்டும் என்று தமிழ்நாடு கோருகிறது. ஆனால், "அரபிக் கடலில் கொண்டு போய்க் கொட்டினாலும் கொட்டுவோம், உங்களுக்கு ஒரு டம்ளர் தண்ணீர்கூட இனி அதிகமாகக் கொடுக்க மாட்டோம்" என்ற மனப்பான்மை கேரளாவில் (எந்த சர்க்கார் ஏற்பட்டாலும்) நீங்கவில்லை. பெரியாறு ஏரியை விடக் கேரள சர்க்காரின் போக்கு அதிசயமாக இருந்து வருவதைப் பார்க்கிறோம்.


SATHE'S
Francis
BISCUITS
உண்மையில் நான் பிரியப்படுகிறேன்
ஸாதே பிஸ்கோத்துகள்
கடித்தால் இனிப்பு . . .
மற்றெல்லாவற்றையும் தோற்கடிக்கிறது"
ஸாதே பிஸ்கட் & சாக்லேட் கம்பெனி லிட்., பூனா-2.
Heros 93 TAM

இந்தக் கட்டுரையை எழுதிய திரு எச. கே. ராமசாமி சேஷாசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட் கம்பெனியில் டைரக்டராகப் பணியாற்றி வருகிறார். கிராமங்களில் மின்சாரத்தை விஸ்தரிக்கும் வேலையில் பல ஆண்டுகள் ஈடுபட்டுச் சேவை செய்துள்ள அவரது கட்டுரையை மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம். — ஆசிரியர்

கிராமங்களில் மின்சார வசதி

எச். கே. ராமசாமி

கிராமங்களில் வாழும் மக்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கோளாக நமது திட்டக் கமிஷன் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதை நிறைவேற்றி வைப்பதில் எல்லா ராஜ்யங்களும் முனைந்திருக்கின்றன. சென்னை மாநிலத்திலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டி யிருப்பதுதான். கிராமங்களில் பிழைக்க வகையில்லாமல் நகரங்களை நோக்கி ஜனங்கள் ஓடுவதால் கிராமங்கள் சீர்குலைந்து விட்டதோடு அவற்றின் புனரமைப்பு வேலையும் கஷ்டமாகி வருகிறது. இவற்றைத் தடுத்து, சின்னஞ்சிறு தொழில்களை அங்கெல்லாம் ஏற்படுத்தி அவர்களுக்குப் புதுவாழ்வளிக்க வேண்டியதைச் சர்க்கார் நன்கு உணர்ந்திருக்கின்றனர். மின்சார வசதியைக் கிராமங்களுக்கு விஸ்தரிப்பதனால் மட்டுமே இப் புனரமைப்பு வேலை சாத்தியமாகும். இந்தக் குறிக்கோள் எவ்வளவு தூரம் நிறைவேறியிருக்கிறது. எப்படி இது செய்யப் படுகிறது. யார் இப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பன போன்ற விஷயங்களைக் கவனிக்கலாம்.

நமது மாநிலத்தில் 19,911 கிராமங்கள் இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முதல் ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில் 1,730 கிராமங்கள் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன. ஆண்டுதோறும் குறைந்த பட்சமாக 250 கிராமங்களுக்காவது இவ் வசதியை விஸ்தரிக்க வேண்டுமென்று திட்டமிட்டனர். இதற்குச் சற்று அதிகமாகவே நிறைவேற்றி வைக்கப்பட்டுவிட்டது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். முதல் ஐந்தாண்டு இறுதிக் காலத்தில் 3,322 கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின் இதன் வேகம் அதிகரித்தது. 1958-59 ஆண்டில் (மார்ச்சு 31 வரையில்) 7,700 கிராமங்கள் மின்சார வசதி பெற்று வருகின்றன. அடுத்த இரண்டு வருஷங்களில் இதன் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கு உயர வேண்டுமென்று சுறுசுறுப்புடன் செயலாற்றப்பட்டு வருகிறது. இதை எட்டி விடும் என்றே எதிர்பார்க்கலாம். வருங்காலத்தைத் தனியே விட்டு விட்டு, தற்போதுள்ள நிலைமையைக் கவனித்தால் மூன்று கிராமங்களுக்கு ஒரு கிராமம் மின்சார வசதி பெற்றிருக்கிறது என்று சொல்லலாம். மற்ற இரண்டு கிராமங்களும் இதைப் பெறும் வரையில் இப்போதுள்ள முயற்சி இடைவிடாமல் நடைபெறும். பிறகு அந்தந்தக் கிராமம் உபயோகிக்கும் மின்சார அளவை எப்படி உயர்த்துவது என்பது பற்றிக் கவனிக்கப்படும்.



திரு வி. ராஜும்

மாவட்டவாரியாகக் கவனிக்கும்போது சில ஏற்றத் தாழ்வுகள் இருப்பது தெரிய வரும். கோயமுத்தூர் ஜில்லாவில் மின் வசதிபெற்ற கிராமங்களின் எண்ணிக்கை சுமார் 1,600. அடுத்த படியாக இருப்பது செங்கல்பட்டு மாவட்டம். 1,100 கிராமங்கள் இங்கே இவ்வசதி பெற்றுள்ளன. மூன்றாவதாக நிற்பது வட ஆற்காடு. அதற்குப் பின்னர் வரிசைக்கிரமமாக மதுரை, சேலம், ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்கள் மின்சாரத்தால் பயனடைந்துள்ளன.

இந்த ஏற்றத் தாழ்வினின்று சில உண்மைகள் புலப்படும். மின்சார வசதியை விவசாயத்துக்கே பயன் படுத்துவதால் எங்கெல்லாம் மழை இல்லையோ, எங்கெல்லாம் வறட்சி அதிகமோ அங்கெல்லாம் இவ்வசதியை அதிகமாகக் கோருகின்றனர். கோவையில் அதிகரித்திருப்பதற்கும் இதையே காரணமாகக் கூறலாம். மேலும் மின்சார இணைப்புத் திட்டத்தில் மின்சாரக் கம்பிகள் எந்தெந்த மார்க்கமாகச் செல்லுகின்றனவோ அதற்கு அருகிலுள்ள கிராமங்களுக்கு வசதி அளிக்கப்பட்டு வருகின்றன. தொலைவிலுள்ள கிராமங்களுக்குச் சிறிது தாமதமாகக் கிடைக்கிறது.

எட்டு நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சார சக்தியை வினியோகிப்பதில் மூன்று கட்டங்கள் உள்ளன. முதல் படியி

ளுள்ளது ராஜ்ய மின்சார போர்டு. எல்லா மின் சக்திகளையும் ஒன்றாக இணைத்து ஆங்காங்குள்ள விநியோக நிலையங்கள் மூலம் சக்தியையும் வேகத்தின் அளவையும் தேவைக்குத் தக்கபடி குறைத்து உபயோகத்துக்கு ஏற்றபடி விநியோகித்திருக்கிறார்கள். நெசவாலைகள் சிமிட்டித் தொழிற்சாலைகள், தேயிலைத் தோட்டங்கள் முதலிய பெரிய ஸ்தாபனங்களுக்கு போர்டு நேரடியாக மின்சார சக்தியை விநியோகிப்பதுடன் லைசென்ஸ்தாரர்களும் கணிசமான அளவு விநியோகம் செய்கின்றனர். இரண்டாவது கட்டத்திலுள்ளவர்கள் முனிசிபல் லைசென்சுதாரர்கள். இவர்கள் ராஜ்ய மின்சார போர்டாரிடமிருந்து மின்சார சக்தியை மொத்தமாகப் பெற்றுத் தங்கள் தங்கள் நகரங்களில் விநியோகிக்கின்றனர். இப்படிச் சென்னை ராஜ்யத்தில் லைசென்சு பெற்று மின்சார சக்தி விநியோகம் செய்யும் முனிசிபாலிடிகள் ஐந்து. மூன்றாவது படியிலுள்ளவர் தனிப்பட்ட லைசென்சுதாரர்கள். இவர்களும் ராஜ்ய போர்டினிடமிருந்து மின் சக்தியை மொத்தமாகப் பெற்று எந்தெந்த பிரதேசங்களுக்கு அவரவர்களுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் இவர்கள் இச்சக்தியை விநியோகிக்கின்றனர்.



திரு பி. நடேசன்


இந்தக் கம்பெனி லைசென்சுதாரர்களின் சேவையைப் பற்றிப் பிரத்தியேகமாகக் குறிப்பிட வேண்டும். கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கும் முக்கியமான வேலையை இவர்கள்தாம் முதன் முதலில் மேற்கொண்டனர். இதற்குத் தேவையான மின் கம்பிகள் போடுவதும், வீடுகளுக்கு இணைப்புகள் கொடுப்பதும், வயல்களில் நீர்ப்பாசனத்துக்கான கம்பங்கள் நாட்டி பம்புகளுக்கு மின்சார இணைப்பு தந்தும் உதவியது இப்படிப்பட்ட கம்பெனிகள். இருட்டடித்துப் போன கிராமங்களில் விளக்குப் போட்ட பெருமை இந்த மாதிரி லைசென்சுதாரர்களுக்கே உரியது. இத்துறையில் வழிகாட்டிகளாக இருந்தவர்கள் காலஞ் சென்ற திரு வி. ராஜம், வி. சேஷஸாயி, பி. நடேசன் முதலியவர்கள். கும்பகோணம் மின்சார சப்ளை கம்பெனியை ஆரம்பித்து அந்த வட்டத்தைச் சேர்ந்த கிராமங்களுக்கு மின்சார வசதியளித்து உதவியவர் திரு வி. ராஜம். இக்கம்பெனி இன்றும் இப்பணியைச் செய்து கொண்டு வருகிறது. இதே போல் தென் ஆற்காடு மின்சார சப்ளை கார்ப்பொரேஷனின் நடவடிக்கைகளைத் தமது மேற்பார்வையில் திறம்பட நடத்தியவர் திரு பி. நடேசன். தனித்தனிக் கம்பெனிகளாகச் செயல் புரிந்து வந்த பலவற்றைத் தென் மதராஸ் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பொரேஷன் என்ற பெயரில் ஒன்றாக இணைத்துக் கிராமப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதையே முக்கிய லட்சியமாகக் கொண்டிருந்தவர் திரு வி. சேஷசாயி. கிராம மின்சாரத்தைப் பற்றி எங்கே யார் பேசினாலும் இவர்களுடைய சேவையைப் பற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியாது. 1954-ம் ஆண்டின் சென்னை மாநில மின்சார ஸ்தாபனங்கள் ஆர்ஜித சட்டப்படி பல கம்பெனிகளையும் ஸ்தல ஸ்தாபன மின்சார உற்பத்தி சாலைகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட்டது. இப்போது தனித்து இயங்கிக் கொண்டிருப்பவை எட்டு லைசென்சுதாரர்களே.

இவ்வாறு வழங்கப்பட்ட மின்சார வசதியைக் கிராமங்கள் பம்பு செட்டுகளுக்காகத்தான் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. ஏற்கனவே 77,431 பம்புகள் நமது ராஜ்யத்தில் வேலை செய்கின்றன. ஒரு பம்புக்கு இணைக்கப்பட்டுள்ள மோட்டார் சராசரி 5 குதிரை ஓட்டம் சக்தியுள்ளது. ஒரு பம்பை ஆதாரமாகக் கொண்டு 6 முதல் 7 ஏக்கரா வரை உணவுத் தானிய உற்பத்தி செய்யப்படுகிறது. சில சமயங்களில் இவ்வசதிகளைப் பலவித காரணங்களினால் முற்றிலும் உபயோகிக்க முடிவதில்லை. அதற்காக விவசாயிகளுக்குப் பலவித சிறு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத்தைத் தவிர நெல் குத்துதல், மணிலாத் தோலை உரித்தல், எண்ணெய் ஆட்டுதல், கரும்பு ஆலை, நாடா நெய்தல், பருத்தியிலிருந்து விதை களைதல் ஆகிய பல கிராமத் தொழில்கள் மின்சாரத்தின் உதவியைக் கொண்டு நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு வேலை துரிதமாக அபிவிருத்தியடையும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.



திரு வி. சேஷசாயி

திருவாரூர்த் திருப்பணி




திருப்பெருந்திரு சோமசுந்தரத் தம்பிரான்


சோழப் பேரரசர்கள் முடிசூட்டிக் கொள்ளும் சிறப்புடைய ஊர்கள் ஐந்து. அவை காவிரிப்பூம் பட்டினம், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர், கருவூர் என்பனவாம். அவற்றுள் தொன்மை வாய்ந்ததும் வரலாற்றுச் சிறப்பும் தெய்விகச் சிறப்பும் ஒருங்கு அமைந்ததுமாய் விளங்குவது திருவாரூர். இவ்வூர் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும், முதன்மை பெற்று விளங்குவது. பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவி (மண்) தலமாய்ப் பிறங்குவது தன்னிடத்தே பிறந்தவர்களுக்கு முத்தி தரும் பெருமை வாய்ந்தது. இதுபற்றியே சுந்தரரும் "திருவாரூர்ப் பிறந்தார்கள எல்லார்க்கும் அடியேன்" என்று ஓதினார். இதன் கருத்து முத்திப் பேற்றிற்குரிய தகுதியுடையவர்களே திருவாரூரில் பிறப்பார்கள் என்பதாம். நமிநந்தி யடிகளுனார்க்குத் திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாரும் நமது கணங்கள் என்று இறைவனே உணர்த்தினமையாலும் இது நன்கு விளங்கும். பூங்கோயில் ஐந்து வேலி, கமலாலயத் திருக்குளம் ஐந்து வேலி, இறைவனுக்குச் சார்த்தப் பெறும் செங்கழுநீர் மலர் மலரும் ஓடை ஐந்து வேலி நிலப்பரப்பு என அமைந்திருப்பது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

திருமகளாகிய இலக்குமிதேவி இத்தலத்து இறைவனை வழிபட்டுத் தனது மங்கலம் நிலைபெறும் பேற்றைப் பெற்றனள். ஆதலால் திருமகள் இந்நகரில் வழிபடும் பொருட்டு எப்பொழுதும் தங்கியிருக்கிறாள். எனவே இத்தலம் திரு—ஆர்—ஊர்—திருவாரூர் எனப் பெயர் பெற்றது. (ஆர்தல்-தங்குதல், பொருந்துதல்) உயிர்களது உள்ளக் கமலத்தில் இறைவன் வெளிப்படுவது போல், பூமாதேவியினது இதய கமலமாகிய இக்கோயிலில் தியாகேசப்பெருமான் வெளிப்பட்டுத் தோன்றுகிறார். எனவேதான் இக்கோயில் பூங்கோயில் எனப்பட்டது.

விடங்கர் ஸ்தலங்கள் ஏழு. அவற்றை சப்தவிடங்க ஸ்தலங்கள் என வழங்குவர். அவை, திருவாரூர் (வீதிவிடங்கர்) திருநள்ளாறு (நகவிடங்கர்) நாகப்பட்டினம் (சுந்தர விடங்கர்) திருக்காறாயில் (ஆதி விடங்கர்) திருக்கோளிலி (அவனி விடங்கர்) திருவாய்மூர் (நீலவிடங்கர்) வேதாரண்யம் (புவனி விடங்கர்) என்பனவாம். மேற்கண்ட தலங்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுள் வீதிவிடங்கப் பெருமானே விஷ்ணுவாலும், இந்திரனாலும் பூசிக்கப் பெற்றவராவார். ஆதலால் அவரைச் சூழ ஆறு விடங்கர்களும் எழுந்தருளி யிருக்க வீதிவிடங்கப் பெருமான் இத்தலத்து நடு நாயகமாக வீற்றிருக்கின்றார். இதுபற்றிய வரலாற்றைச் சிறிது காண்போம்.


திருமால் மகப்பேறு குறித்து வழிபட்டு வந்த சோமாஸ்கந்தமூர்த்தியை இந்திரனுக்கு வாற்கலி என்ற அசுரனால் ஏற்பட்ட துன்பம் நீங்கும் பொருட்டுப் பூசித்து வருமாறு கொடுத்தார். அம்மூர்த்தியை இந்திரன் பூசித்து வந்தான். துன்பம் நீங்கி இன்புற்றான். பின்னொரு காலத்தில், வலாசுரனால் துன்புற்ற இந்திரன் பூவுலகத்திலிருந்த முசுகுந்த சக்கரவர்த்தியினது உதவியால் வலாசுரனை வென்றனன். வென்றபிறகு, இறைவன் உணர்த்திய வழியே முசுகுந்தன் இந்திரன் பூசித்து வந்த சோமாஸ்கந்த மூர்த்தியைக் கொடுக்குமாறு வேண்டினான். அதற்கு இணங்க மனமில்லாத இந்திரன் அதேபோல் ஆறு உருவங்களை அமைத்துக் கொடுத்தான். தியாகேசர் திருவருளால் உண்மை உணர்ந்த முசுகுந்தன் அவையெல்லாம் தாம் வேண்டிய மூர்த்திகள் அல்லவென்று கூறினான். கடைசியாகத் தான் பூசித்த மூர்த்தியைக் கொடுத்தான். அத்துடன், மற்ற ஆறு உருவங்களையும் எடுத்துக்கொண்டு பூவுலகில் வந்து, திருமாலும் இந்திரனும் பூசித்த பிரதானமூர்த்தியைத் திருவாரூர்ப்





பூங்கோயிலிலும். மற்ற மூர்த்திகளை அமைத்துச் சூழ்ந்துள்ள ஆறு தலங்களிலும் அமைத்து வழிபாடாற்றினன். இதுபற்றிய விரிவைக் கந்த புராணம் கந்த விரதப் படலத்தில் காணலாம். பார்வதி பரமேசுவரன் நடுவில் கந்தனுடன் விளங்கும் இவ்வுருவத்தை இவ்வேழு தலங்களிலும் தியாகராஜர் என வழங்கி வருகின்றனர். மற்ற ஊர்களில் இதே உருவில் உள்ள மூர்த்தியை சோமாஸ்கந்தர் எனவும் உற்சவமூர்த்தி எனவும் வழங்குவர். முகுந்தன் (திருமால்) வழிபட்டமையால் முகுந்தார்ச்சனை என்பதொன்றும், முசுகுந்தன் வழிபட்டமையால் முசுகுந்தார்ச்சனை என்ப தொன்றும் இத்தல வழிபாட்டு வழக்கில் இருந்து வருகிறது. எல்லா நலன்களுமுள்ள தேவலோகத்தை விடுத்துத் தம்மைப் பூவுலகிலுள்ள முசுகுந்தனுக்குக் கொடுத்த தியாகத்தால் இம்மூர்த்தி தியாகராஜா என்று வழங்கப் பெறுகிறார். ''அயிராவணம் ஏறாது ஆனேறேறி அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட அயிராவணமே'' என அப்பர் அடிகள் கூறியிருப்பதும் இக்கருத்தை வலியுறுத்தும். தண்டியடிகள் காயனார் பரவை நாச்சியார், கமலை ஞானப் பிரகாசர் முதலியோர் அவதரித்த பெருமை யுடையது இத்தலம். சங்கீத மும்மூர்த்திகள் எனப் போற்றப் பெறும் தியாகையர் அவர்கள், முத்துசாமி தீட்சிதர், சாமா சாஸ்திரிகள் என்ற மூவரும் தோன்றிப் புகழுடன் விளங்கியதும் இத்தலத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகும்.


இத்தலத்தில், திருவாதிரைத் திருவிழா மிக்க சிறப்புடையதாகும். அப்பர் சுவாமிகள் இவ்விழாவைத் தரிசித்துத் திருஞான சம்பந்தரிடம் ''முத்துவிதானம்'' என்ற பதிகத்தால் இவ்விழாவின் சிறப்பினை எடுத்தோதியுள்ளார்கள். இவ்வூர்ப் பெருமான் சுந்தரருக்குத் தம்மைத் தோழனாகக் கொடுத்து அவர் பொருட்டுப் பரவையார் மாளிகைக்குத் தூது நடந்தார். மண்ணில் வாழ்தரும் மன்னுயிர்களைக் கண்ணும் ஆவியும் எனக் காத்தல் காவலன் கடன் என்பதையும், தன்னாலும் தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், பிற உயிர்களாலும் வரும் பயம் ஐந்தையும் தீர்த்து ஆள்வதே மாநிலங் காவலனாவான் மன்னுயிர்களைக் காக்கும் முறை என்பதையும் தனது ஆட்சியில் நடத்திக் காட்டியவன் மனுநீதிச் சோழன். இவன் இந்நகரைத் தலைநகராகக் கொண்டு மாட்சியோடு ஆட்சி புரிந்தனன். தெய்வத் திருமுறைகளை வெளிப்படுத்திய அபயகுலசேகர சோழன் ஆட்சி புரிந்ததும் இத்தலமேயாம். தரும புர ஆதீன முதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தருக்கு ஞானோபதேசம் புரிந்த கமலை ஞானப்பிரகாசர் அருளரசு நிகழ்த்திய தலம் இது. இப்பரம்பரையில் குருஞான சம்பந்தரைப் பின்பற்றியே அம்மரபில் பின் சீடராக வந்தவரும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் ஸ்தாபகருமான







3



4

குமரகுருபரரும் மதுரையிலிருந்து வரும் போது திருவாரூர் சென்று தியாகேசரை வணங்கித் தருமபுரம் சென்ற நிகழ்ச்சி நினைந்து இன்புறத்தக்கதாகும். நாயன்மார்களில் சுந்தரருக்கு வலக்கண்ணையும், தண்டியடிகளுக்கு இரு கண்களையும் கொடுத்த சிறப்புடையது இத்தலம். சைவத்துக்கு மூலமாகவுள்ள திருத்தொண்டத் தொகையைச் சுந்தரர் வாயிலாக நமக்குக் கிடைக்கச் செய்தது இத்தலத்தின் தனிப் பெருமையாகும்.

இத்தலம், தஞ்சை மாவட்டத்தில் மாயூரம்—அறந்தாங்கி இருப்புப் பாதையில் புகைவண்டிச் சந்திப்பு நிலையமாக அமைந்து விளங்குகிறது. ஆறு ஆதாரத் தலங்களுள் மூலாதாரத் தலமாக விளங்குவது. இங்கு மாற்றுரைத்த விநாயகர் கோயில், குமரக்கோயில், சோமநாதர் கோயில், பிரமன் கோயில், பரவையுண் மண்டளி, திருநீலகண்டர் கோயில், பரவையார் கோயில் முதலிய பல கோயில்கள் இருக்கின்றன. தேவதீர்த்தம், (கமலாலய தீர்த்தம்) சங்கதீர்த்தம், முதலாக 21 தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன. பூங்கோயிலுக்குள் அசலேசம், ஆடகேசம், சித்தீச்சரம் எனப் பல உட்கோயில்கள் தனித்தனியாக அமைந்துள்ளன. சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில்தான் ஸ்ரீ குருஞான சம்பந்தர் தமது குருவாகிய கமலை ஞானப்பிரகாசரைக் கண்டு ஞானோபதேசம் பெற்றார். திருமூலட்டானநாதர் இங்கு புற்று வடிவில் அமைந்து விளங்குகிறார். இவர் வன்மீக நாதர் எனவும் வழங்கப் பெறுகிறார். நீலோத்பலாம்பாள், கமலாம்பிகை என்ற இரு அம்மன் சந்நிதிகள் உள்ளன. கமலாம்பிகையைத் தவக் கோலத்தில் கண்டு தரிசிக்கலாம்.

தியாகராஜர் ஆண்டுக்கொரு முறை திருத்தேரில் எழுந்தருளித் திருவீதி உலா வருவார். உலா வருங் காலத்துப் பாரிநாயனம், சுத்தமத்தளம், எக்காளம், வாங்கா, திருச்சின்னம், என்னும் பஞ்ச வாத்தியங்களே வாசிக்கப்படும். இங்கு பஞ்சமுக வாத்தியம் ஒன்று இருப்பது குறிப்பிடத் தக்கது. தேவாசிரிய மண்ட

---

1. திருவாரூர்த் தெப்பக்குள நீரை இறைக்க நிர்மாணிக்கப் பட்டுள்ள நவீன இயந்திரம். 2. எம்பார் விஜயராகவாச்சாரியாருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றனர். 3. அமைச்சர் திரு பக்தவத்சலம், திரு வி. எஸ். தியாகராஜ முதலியார், அறநிலையப் பாதுகாப்பு கமிஷனர் திரு உத்தண்டராம பிள்ளை, திருவாரூர் முனிசிபல் சேர்மன் திரு சாம்பசிவம், திரு எம். டி. தியாகராஜன் முதலியோர், 4. நீர் இறைக்கும் இயந்திரத்தை அமைச்சருக்குத் திரு வி. எஸ். டி. விளக்குகிறார். 5. அமைச்சரின் தலைமை உரை, 6. கூடியிருந்த மக்களில் ஒரு பகுதி. 7. திருப்பணிக் கமிட்டித் தலைவர் திரு ஜி. ரங்கநாத முதலியார்.





7

பம், பக்த காட்சி மண்டபம், ஊஞ்சல் மண்டபம், சபாபதி மண்டபம், வசந்த மண்டபம் முதலியன இங்கு உள்ளன.

இரண்டாம் இராஜாதிராஜன் பெரிய கோபுரத்தையும், சபாபதி மண்டபத்தையும் கட்டினான் என்பதும், இரண்டாம் இராஜேந்திரன் வீதிவிடங்கர் எழுந்தருளியுள்ள கருப்பக்கிருகத்தையும் வன்மீக நாதர் கருப்பக் கிருகத்தையும் பொன் வேய்ந்தான் என்பதும், திருமுறை ஆசிரியர்களின் திருநாட்களைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பதும், நம்பியாரூரரான சுந்தரரின் தாயாகிய இசை ஞானியார், கௌதம கோத்திரத்தாரான ஞான சிவாசாரியாரின் புதல்வியார் என்பதும், திருவிளக்குப் பணிக்காகவும் பூசை முதலியவற்றுக்காகவும் சோழ மன்னர்கள் நிலம் அளித்தனர் என்பதும், பிறவும் இங்குள்ள சில கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றன. தியாகேசர்கோயில் கல்வெட்டில் மனுவின் வரலாறு முழுவதும் காணப்படுகிறது.

இத்தலத்தில், தருமபுர ஆதீன ஆதிகுரு மூர்த்திகளின் குருவாகிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசருக்குத் தஞ்சை அரசனும், கிருஷ்ண தேவராயனும் அளித்த தேவதானங்களும், வீதிவிடங்கப் பெருமானுக்கும் வன்மீக நாதருக்கும் நித்திய வழிபாட்டுக்காகவும், பெரு நீராட்டுக்காகவும் அளிக்கப்பட்ட தேவதானங்களும் இராஜன் கட்டளை என்ற பெயரோடு விளங்கி வருகின்றன. ஞானப்பிரகாசர் அவற்றைத் தமது சீடராகிய தருமைக் குரு ஞான சம்பந்தரிடத்தில் ஒப்படைத்து விட்டனர். அக் கட்டளை இப்பொழுதும் தருமை ஆதீன அருளாட்சியிலேயே இருந்து வருகிறது.

இக்கோயில் வழிபாடுகள் பல அறக் கட்டளைகளின் பொருளைக் கொண்டு நடைபெறுகின்றன. 13 கட்டளைகள் இருப்பதாகத் தெரிய வருகின்றன. அவற்றுள் முக்கியமானவை, அபிஷேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை, இராஜன் கட்டளை, உள்துறைக் கட்டளை என்பவையாகும் உள்துறைக் கட்டளையைப் பரிபாலித்து வருபவர்கள் பரம்பரையாகத் திருமகன் அருள் நோக்குக்கு இலக்கானவர்களும், அறவுணர்வு மிக்குடையவர்களுமான வடபாதிமங்கலம் எஸ்டேட்டினராவர். இப்போது, இவ்வறத்தினைத் திறம்பட நடத்துபவர்கள் திரு வி. எஸ். தியாகராஜ முதலியாரவர்களாவார்கள்.

இவர்களது பெருமுயற்சியால் திருவாரூர்க் கமலாலயத் திருப்பணியும், திருக்கோயில் திருப்பணியும், திருத்தேர்த் திருப்பணியும் தொடங்கப்பட்டிருக்கின்றன. திருவாரூர்த் தேரழகு என்னும் பழமொழியும், திருவாரூர்த் தேரசைவது போல் அசைகின்றான் என்னும் உவமையும் தமிழகத்தில் வழங்கி வருவதை அனைவரும் அறிவர். "ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே" என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. இவற்றால் இவ்வூர்த் திருத்தேர்ப் பெருவிழாவின் சிறப்பினை நன்கு தெளியலாம். இங்குள்ள தேர் முழுத்தேராகும். மற்றத் தலங்களில் உள்ள தேர்களெல்லாம் முக்கால் தேர், அரைத்தேர் முதலாக அளவு குறைவு உடையனவேயாம். இதனாலும், ஆரூர்த் தேரின் அழகு இனிது விளங்கும். இத்தகைய பெருமை வாய்ந்த திருத்தேர்த் திருவிழா பன்னிரண்டு ஆண்டுகளாக நின்றிருப்பது மக்களுடைய சிரத்தைக் குறைவையே எடுத்துக் காட்டுகிறது.


மாற்றுரைத்த விநாயகர்

கோயிலோடு குளத்தையும் உடன் சேர்த்துச் சொல்வது நமது நாட்டுவழக்கு. இதன் கருத்து: தீர்த்தத்தால் ஓரளவு அகமும் புறமும் தூய்மை பெற்று மூர்த்தி தரிசனத்தால் முழுப் பயனையும் பெறலாம் என்பதாகும். பூங்கோயிலின் மேற்குப் பக்கத்தில் ஐந்து வேலி (அதாவது 1000 அடி நீளம் 700 அடி அகலம்) நிலப்பரப்பில் கமலாலயம் என வழங்கும் தேவ தீர்த்தம் அமைந்து விளங்குகிறது. இதைச் சூழ்ந்து அறுபத்து நான்கு புண்ணிய கட்டங்கள் அமைந்துள்ளன. இதன் நடுவில் மகரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்ட நடுவநாயனார் கோயில் சகல பரிவாரங்களுடன் விளங்குகிறது. மக்கள் பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக இறைவனது ஆணையால் ஆதியிலேயே அமைந்தது இத்தீர்த்தம். இது சுமார் ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்னர் மிகவும் பழுதடைந்திருந்தது. அப்பொழுது, இத்தலத்தில் அவதரித்தவரும், புறக்கண் இரண்டும் தெரியாதவருமான தண்டியடிகள் நாயனார் என்பவர் அமணர்களது

இடையூறுகளுக்கிடையே இத்திருக்குளத் திருப்பணியைச் செம்மையாகச் செய்து இரு கண்களும் தெரியப் பெற்றார். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலம்) பழமலைநாதர் கொடுத்த பன்னீராயிரம் பொன்னை அங்குள்ள மணிமுத்தா நதியில் இட்டு இக் கமலாலயத்தில் பரவையார் முன்பாகப் "பொன் செய்த மேனியினீர்" என்ற திருப்பதிகம் பாடி எடுத்துப் பரவையாரிடம் கொடுத்தார். இதற்கு அடையாளமாக, மாற்றுரைத்த விநாயகர் கோயில் இத் தீர்த்தக் கரையில் அமைந்து விளங்குகிறது.

பல்லாற்றானும் சிறப்பு வாய்ந்த பூங்கோயிலும், அதனிடத்துள்ள பல உட் கோயில்களும் பழுதடைந்துள்ளன. அவற்றைத் திருப்பணி செய்து புதுப்பிப்பது சிறந்த தர்மமாகும். நாட்டின் நலத்துக்கு ஏற்றதுமாகும். இத்தலத்தில் வாழும் முப்பதாயிரம் மக்களுக்கு இக்கோயிலும் குளமும் பலவிதத்திலும் பயன்பட்டு வருகின்றன. இதன் வடிகால் தூர்ந்திருக்கிறது. அதை முதலில் பழுதுபார்க்க வேண்டியதும், குளத்தில் படிந்துள்ள வண்டல்களை அப்புறப்படுத்த வேண்டியதும், படித் துறைகளைச் செப்பஞ் செய்ய வேண்டியதும் அவசியமாகிறது. பிறகு தெப்பத் திருவிழா நடைபெற வேண்டும். இவ்விரு பகுதிகளுக்கும் இரண்டு லட்சம் ரூபாய் செலவாகும். பழுதடைந்த திருக்கோயில்களைத் திருப்பணி செய்வதற்கும், திருத்தேரைத் திருப்பணி செய்து புது முறையில் ஆட்கள் அதிகமில்லாமல் ஓட்டுவதற்கு உரிய வசதிகளைச் செய்வதற்கும் மூன்று லட்சம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகக் கூடுதல் ரூபாய் ஐந்து லட்சம் தேவைப்படுகிறது.

திருப்பணிக்கான நிதி திரட்டவும், பணியாற்றவும், திரு ஜி. அரங்கநாத முதலியார் தலைமையில் திருப்பணிக் கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. கதாகாலக்ஷேபத்தில் சிறந்தவரான தருமபுர ஆதீனவித்துவான் எம்பார் விஜயராகவாச்சாரியாரைக் கொண்டு மலாயாவில் 70 கதைகள் செய்வித்து, அதன்மூலம் ரூபாய் 35,000 நிதி திரட்டப்பட்டிருக்கிறது. மலாயா மக்கள் பிற இடங்களிலும், தமிழகத்திலும் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக நடந்து காட்டியுள்ளார்கள்.




திரு வி. எஸ். தியாகராஜ முதலியார்

இவ்வரும்பெருந்திருப்பணித் தொடக்க விழாவைச் சென்னை மாநில அறநிலைய அமைச்சர் "நல்லறங் காவலர்" திரு எம். பக்தவத்சலம் அவர்கள் ஏப்ரல் மீ 12ந் தேதி அன்று தொடங்கி வைத்தார்கள். அப்பொழுது கோயில், குளம், திருத் தேர்த் திருவிழா முதலியன மக்கள் நலனுக்காகவே அமைந்திருப்பவை என்பதை விளக்கி எல்லோரையும் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். திருவாரூரில் நடைபெற விருக்கும் இப் பெருந் திருப்பணிக்கு மலாயாவுக்குச் சென்று அங்கு பல இடங்களிலும் கதா காலக்ஷேபங்கள் நடத்தியதன் மூலம் நிதி திரட்டுவதில் பேருதவி புரிந்த திரு எம்பார் விஜயராகவாச்சாரிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார் அமைச்சர் திரு பக்தவத்சலம். அத்துடன் தியாகமணி என்ற பட்டம் பொறிக்கப்பட்ட பதக்கம் சூட்டியும் பணமுடிப்பு அன்பளிப்பாகக் கொடுத்தும் அவர் நாட்டில் தெய்வ பக்தி வளரச் செய்து வரும் சேவைகளையும் பாராட்டிப் பேசினர்.

விழாவுக்குத் தலைமை வகித்த திருப்புகலூர் தேவஸ்தான அறங்காவலர் திரு எம். டி. தியாகராஜப் பிள்ளை எம். எல். ஏ., திருப்புகலூர் தேவஸ்தானத்திலிருந்து ரூபாய் 25,000 கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தினர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ரூ. 2000 அருட் கொடை வழங்கி ஆசி அனுப்பியருளினார்கள். தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் ஆசி அனுப்பி அருளினார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் ரூ. 1000 அருட்கொடை அளித்து ஆசி யருளியுள்ளார்கள்.

நிரம்பவும் பொருள் தேவைப்படுவதால் தமிழ்ப் பெருமக்களும் பொதுமக்களும் இத் திருப்பணிக்கு நிதியிருந்தவர் பொற்குவையும், நிதி குறைந்தவர் காசுகளும், வலிமை யுள்ளவர் உடல் உழைப்பையும் நல்கி நிறை செல்வத் தியாகேசர் திருப்பணியைப் பூர்த்தி செய்து திருவருளுக்குப் பாத்திரராவார்களாக.

[திருவாரூர்த் திருப்பணிக்கு நிதி உதவி புரிய விரும்புவோர் திரு ஜி. ரங்கநாத முதலியார், திருப்பணிக் கமிட்டித் தலைவர், ரங்க விலாஸ், திருவாரூர் என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம். — ஆசிரியர்.]



புதிய

RESA

ரீஸா

பாபுலர் மாடல்

P 59-6

★ 6 வால்வுகள் ஏ.஧ி. மட்டும் அகில உலக நிகழ்ச்சிகளுக்கு
★ கிராமபோன் பாட்டுக்கும் அதிகப்படியாக ஒரு ஸ்பீக்கரும் இணைக்க வசதியுள்ளது
★ பளபளப்பான மரப்பெட்டி
★ பிரகாசமான டயல்
★ எந்தவித சீதோஷ்ண நிலையிலும் வேலை செய்யும் உறுப்புகள்
★ ஒரு வருஷ உத்திரவாதம்

ரீஸா ரேடியோ ஷோ-ரூம்

"மியூஸி மியூஸிகல்" – 3/16, மவுண்ட் ரோடு – சென்னை-2

போன்: 84880   தபால் பெட்டி 3755   தந்தி: ASSEMBLER

Always

NICCO

Insist on **Cables**

FOR ANY WIRING WORK
..... BIG OR SMALL
FOR SAFETY AND SERVICE

★

Sole selling Agents for Madras State;

P. NATESAN & CO., LIMITED

Phone: 86449   10, MOUNT ROAD, MADRAS-2   Grams: PEENATESCO

Branches at FRAZER SQUARE, COIMBATORE - PONDY ROAD, VILLUPURAM

கண்கள் உறங்காவோ?



அத்தியாயம் 6

வீராவேசப் பேச்சு

இடுப்பில் குடத்துடனும், முகத்தில் மகிழ்வுடனும், நடையில் துள்ளலுடனும் ஆற்றை நோக்கிச் சிட்டாகப் பறந்து சென்ருள் மாலா. அவளுடைய நீண்ட கருங் கூந்தல் பின்னலின் குஞ்சம் நடந்து சென்ற போது இடது காலிலும் வலது காலிலும் மாறி மாறி விழுந்தது. கிராமாந்திரத்து வண்டிக்காரன் மாடுகளை விரட்டத் தார்க் குச்சியால் அவற்றை மாறி மாறித் தட்டிக் கொடுப்பதுபோல் இருந்தது அது.

கேசவபுரத்துக்காரர்கள் குடிதண்ணீருக்குப் புங்கனுற்றைத்தான் நம்பியிருந்தனர். அது ஒரு வற்ருநதி. எந்தக் காலத்திலும் நீர்நிறைந்து ஓடும். அவ்வூரில் வீட்டுக்கு வீடு கிணறும் கைப் பம்பும் உண்டு. ஆனல் அவற்றின் நீர் உப்பு நீர். ஆகையால் பெண்கள் இடுப்பில் குடத்துடன் ஊருக்குத்தெற்கே ஓடிய புங்கனுற்றை நோக்கி நடக்கும் காட்சியை அங்கே எப்பொழுதும் காணலாம்.

அப்பொழுது மாலை நாலு மணி. வெய்யிலில் இலேசாக மஞ்சள் நிறம் கலக்க ஆரம்பித்திருந்தது. கோடை நாளானல் அதுகூடச் சுள்ரென்று உறைத்திருக்கும். இப்பொழுது வசந்த காலம். மெத்தென வீசிய மந்தமாருதம் வெய்யிலின் சூட்டை வெகுவாகத் தணித்திருந்தது. தவிர, கேசவபுரத்தில் எங்கு பார்த்தாலும் மரங்கள். தெருவின் இருமருங்கிலும்கூடப் பன்னீர் மரங்கள். ஆகையால் அங்கே நிழலுக்கும் குளிர்ச்சிக்கும் கொஞ்சமும் குறைவில்லை.

ஆயினும் அப்பொழுது அவ்வூர்ப் பெண்கள் நீர் மொள்ளப் போகும் நேரம் அன்று. சாதாரணமாக அவர்கள் அதிகாலையிலும், பின் மாலையிலும்தான் கூட்டம் கூட்டமாக ஆற்றுக்குப் போவார்கள். பொன்னிறக் குடங்களை இடுப்பில் இடுக்கியவாறு, வண்ண வண்ணச் சேலைகளை உடுத்திய மாதர், பேச்சும் சிரிப்புமாக வழிநெடுகப் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருக்கும் காட்சியைக்காணக்காணத்தெவிட்டாது.

ஆனல் மாலாவின் போக்கே தனி. அவளுக்கு ஆற்றுக்குப் போக ஒரு நேரம் நியதி என்பதே இடையாது. வீட்டில் அலுப்புத் தட்டி விட்டால்

மாயாவி

வேண்டுமென்றே இருக்கிற தண்ணீரைக் கொட்டி விட்டு இடுப்பில் குடத்துடன் கிளம்பிவிடுவாள். இன்றும் அப்படித்தான் செய்தாள். வீட்டுக் கூடத்தில் தன் தாய், மாமா, வீணா, புஷ்பவனம் பிள்ளை ஆகியோர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவள் கூடத்தை அடுத்த தாழ்வாரத்தில் அமர்ந்து பூத்தையல் வேலை செய்து கொண்டிருந்தாள். கூடத்திலிருந்த கடிகாரத்தில் நாலு மணி அடித்ததோ இல்லையோ, தையல் சாமான்களையெல்லாம் அவசரம் அவசரமாக அள்ளி எடுத்துக் கூடையில் போட்டாள். அடுக்களையிலிருந்த அரைக் குடம் தண்ணீரையும் கை கழுவும் தண்ணீர்த் தொட்டியில் கொட்டினாள். குடத்துடன் கொல்லை வழியாக நழுவி விட்டாள். வீட்டைவிட்டு வெளியே வரும்வரையில் நடையில் சிறிது அமைதி இருந்தது. பிறகு இந்தத் துள்ளல்தான்; இந்தப் பாய்ச்சல்தான்.

நடுத் தெருவிலிருந்து ஆற்றுக்குச் செல்வதற்குத் தெற்குத் தெரு வழியாகத்தான் போக வேண்டும். எப்பொழுது ஆற்றுக்குச் சென்றாலும் சரி, மாலாவுக்குத் தெற்குத் தெருவில் ஒரு தங்கல் உண்டு. அங்கேதான் புஷ்பவனம் பிள்ளையின் வீடு இருந்தது. புஷ்பவனம் பிள்ளையின் மனைவி மரகதத்தம்மாளிடம் மாலாவுக்கு ஒரு தனிப் பற்று. "மரகத அத்தை! மரகத அத்தை!" என்று அவளிடம் பிராணனை விருப்பாள். வேண்டாம் என்னும்போதே வீட்டுக் காரியங்களில் அவளுக்கு உதவுவாள். மரகதத்தம்மாளுக்கும் மாலாவிடம் அளவற்ற வாஞ்சை உண்டு. ஒரு நல்ல நாள் என்றால் அவளை வீட்டுக்கு அழைக்காதிருக்க மாட்டாள்; ஒரு பண்டம் – பணியாரம் செய்தால் அவளைக் கூப்பிட்டு அனுப்பிக் கொடுக்காமல் இருக்க மாட்டாள்.

பாவம்! அந்த அம்மாளுக்கு மகளில்லாக் குறை. அவளுக்கு வயது கிட்டத்தட்ட நாற்பத்தைந்து ஆகிவிட்டது. இருபத்தாறு வருஷத்து இல்லற வாழ்க்கையில் அவள் வயிறு திறந்தது, ஒரே ஒரு தடவைதான். மணமான மறு வருஷத்தில். அந்தப் பிரசவத்தில் உதித்தவன் தான் சுந்தரம். அவர்களுடைய ஒரே செல்வம்; கண்ணின் கருமணி. ஒன்றே ஒன்று என்றாகிவிட்ட மகனிடம் உயிரையே வைத்திருந்தாள் மரகதத்தம்மாள். இருந்தாலும் இன்னும் ஒரே ஒரு பெண்ணை மட்டும் இறைவன் தங்களுக்குத் தந்திருக்கக் கூடாதா என்ற குறை அவளுக்கு நிறைய உண்டு. அந்தக் குறையை இப்பொழுது சிறிது [illegible] மாலா போக்கி வந்தாள்.

வழக்கம் போல் அன்றும் மாலா, "அத்தை! மரகத அத்தை!" என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

அடுக்களையில் பணியாரம் சுட்டுக் கொண்டிருந்த மரகதத்தம்மாள் அங்கிருந்தவாறே, "மாலாவா? வா, அம்மா; நானே உன்னைக் கூட்டிக்கிட் வரச் சொல்லணுமின்னு இருந்தேன்" என்றாள்.

"என்னைக் கூட்டிக்கிட்டு வரச்சொல்லுவானேன்? நான்தான் பொழுது விடிஞ்சா பொழுது போனால் இங்கே வராமல் இருக்கிறதில்லையே?" என்று சொல்லிக் கொண்டு அடுக்களைக்கு வந்தாள் மாலா.


"இல்லை, மாலா! ஒங்க அத்தான் செய்திருக்கிற வேலையைப் பாரு!" மரகதத்தம்மாளின் கை அடுக்களை அலமாரியைச் சுட்டிக் காட்டியது. அங்கே ஒரு பெரிய தேங்காய் அளவு பட்டினத்து கதம்பச் சரம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. "எதுக்கடா இத்தனை வாங்கிக்கிட்டு வந்திருக்கேன்னு, எல்லாம் நீ வைச்சுக்கிடத்தான்; அதிகமா இருந்தா மாலாவுக்குக் கொடு; வீணா வந்திருக்கிறா; அவளுக்குக் கொடு என்கிறான். என்னத்தைச் சொல்ல, இந்தப் புள்ளையை! செத்தே இரு அம்மா. கடைசி சுடு முறுக்கு வெந்துக்கிட்டு இருக்குது. எண்ணெய்ச் சட்டியை இறக்கி வைச்சுட்டு வந்து தலைபின்னிப் பூ வைச்சுவிடுறேன்."

"சரி, அத்தை!" என்று இடுப்புக் குடத்தை இறக்கி வைத்து விட்டு அடுப்படிக்கு வந்து சுதந்திரத்துடன் ஒரு முறுக்கை எடுத்துப் பிட்டுச் சிறிது வாயில் போட்டுக் கொண்டாள் மாலா. பிறகு, "அத்தை! உங்க கை முறுக்குக்கு ருசியே தனிதான். அதிலேயும் மகன் வந்திருக்கிறாரென்று பிரத்தியேகமாகச் செய்யுறீங்க; கேட்கவா வேணும்?" என்று கண்களைச் சிமிட்டிக்கொண்டு சிரித்தாள்.


"போக்கிரிப் பொண்ணுடி நீ! எந்தப் பயல் இந்த வாயாடியைக் கட்டிக்கிட்டுத் திண்டாடப் போகிறானோ?" என்று முறுவலித்தாள் மரகதத்தம்மாள்.

"போங்க அத்தை!" என்று நாணிக் கோணினாள் மாலா; பிறகு சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவள் போல், "அத்தான் எங்கே காணோம், அத்தை? வேலைக்குப் போயிட்டாங்களா, என்ன?" என்று கேட்டாள்.

"இன்னைக்கேயா? அதென்னமோ அவன் வந்த காலோட போகணுமின்னு



தான் பறந்தான். ஒங்க மாமா ஒரு நல்ல நாளு, பொழுது பார்த்துத்தான் போகணுமின்னு சொல்லிட்டாரு. நாளைக்கு நல்ல நாளாம்; போகப் போறான். மச்சிலிலே படுத்து உறங்கிக்கிட்டிருப்பான். ராத்திரி முழுக்கக் கண்ணு விழிச்சுக் காரு விட்டுக் கிட்டுவந்திருக்கிறானில்லே?" பேசிக்கொண்டே அவள் வெந்த முறுக்கைத் தட்டில் எடுத்துப் போட்டுவிட்டு, எண்ணெய்ச் சட்டியை இறக்கி வைத்தாள். பிறகு அடுப்பு விறகை வெளியே இழுத்து வைத்து விட்டு, கையைக் கழுவிக் கொண்டு



வந்து. "பூவை எடுத்துக்கிட்டு முற்றத்துக்கு வா மாலா; நான் சடை போட்டு விடுறேன்" என்றாள்.

அவர்கள் வீட்டின் நடு முற்றத்துக்கு வந்தனர். விசாலமான முற்றம் அது. கல்தளம் பாவப்பட்டிருந்தது. நடுவில் மூன்றடி உயரம் ஓரடிச் சதுரத்தில் ஒரு மேடை. அதில் ஒரு துளசிச் செடி தழைத்திருந்தது. அச் செடியின் அருகில் அரை அடி உயரத்தில் ஒரு பிள்ளையார் விக்கிரகம். காலையில் அருச்சித்த மலர்கள் அந்த விக்கிரகத்தைச் சுற்றிக் கிடந்தன. முற்றத்தைச் சுற்றி நாற்புறமும் தென்னங் கீற்றால் 'சாய்ப்பு' இறக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரேழியை அடுத்திருந்த சாய்ப்பில் வாசலுக்கு நேரேவந்து அமர்ந்தனர்.

மரகதத்தம்மாள் ஒரு காலை மடித்து, மற்றொன்றை நீட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். அவளுக்கு முன்னால் முழங்காலை மடித்து உயர்த்திக் கைகளால் கட்டிக் கொண்டு சற்றே பின்னால் சாய்ந்தவாறு அமர்ந்தாள் மாலா. அவளுடைய பின்னலை அவிழ்க்கப்போன மரகதத்தம்மாள் "அடி! இதென்ன மாலா. குஞ்சம்கிஞ்சம் வைச்சு யாரோ சடை போட்டு விட்டிருக்கிறாங்களே!" என்றாள் வியப்புடன்.

"ஆமாம், அத்தை! மறந்தே போயிட்டேன். பகலிலே சாப்பிட்டபிறகு வீணா அக்காள் பின்னிவிட்டா; இந்தக் குஞ்சங் கூட அவள் வாங்கி வந்ததுதான்."

"பார்த்தியா? நான்கூட அதைக் கேட்க மறந்துட்டேன்! எப்படி இருக்கா வீணா? கூட்டிக்கிட்டு வரக்கூடாது இங்கே?" என்று கேட்டபடியே மாலாவின் பின்னலை அவிழ்த்து ஆசைக்கு இன்னொரு முறை சடை போடத் தொடங்கினாள் மரகதத்தம்மாள்.

"அவங்க எல்லாம் கூடி என்னவோ பேசிக்கிட்டு இருக்கிறாங்க அத்தை. அக்காளை எனக்குப் பார்த்ததுமே பிடிச்சுப்போச்சு. ஆனால் அம்மாதான் அக்காள் வந்ததுமுதல் முகத்தைத் தூக்கிக்கிட்டு... அவள் குணம்தான் உங்களுக்குத் தெரியுமே." முகத்தில் விசனம் தேங்க மாலா திரும்பி உட்கார்ந்தாள்.

"பாவம்! உனக்கு என்னம்மா தெரியும்? அவள் பெற்ற வயிறு பற்றிக்கிட்டு எரியாது? ஒரே மகனை முழுசா அவளுக்கு அள்ளிக் கொடுத்தவளில்லையா?"

"அதுக்கு அக்காள் என்ன செய்வாள் அத்தை? எப்பவோ நடந்தது. நடந்தது நடந்து போச்சுன்னு மறந்துட்டு இருக்காமல் அக்காள் வந்ததும் அவளைக் கட்டிக்கிட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள். நல்ல வேளை! மாமா அதைக் கண்டு கொள்ளவில்லை. அவர் கூடத்தில்

அத்தானோட உட்கார்ந்து பேசிக் கிட்டிருந்தார். கண்டிருந்தா ரென்றால் அவரும் ஒரு பாட்டம் அழுதிருப்பார். வீடே அழுகை மயமாக மாறிப் போயிருக்கும். சுத்த மோசம் அத்தை! எனக்கு அம்மா அப்படிச் செய்தது கொஞ்சமும் பிடிக்கவே இல்லை."

"நீ குழந்தை; உனக்குத் தெரியாது அம்மா, பெற்றமனசின் புலம்பல். திரும்பு, பூ வைச்சு விடுறேன். எனக்கு நேரம் ஆகுது. அடுப்பிலே உலை ஏத்தணும். புள்ளையாண்டானுக்கு ராத்திரிக்கு நீர்ச் சோறு இறங்காது."

"நான் வேணுன்னு சோறாக்கி, ஒரு குழம்பு, கறி செய்து வைச்சுட்டுப் போகிறேனே, அத்தை!" என்றாள் மாலா திரும்பி உட்கார்ந்துகொண்டு.

சுந்தரம் வாங்கி வந்திருந்த கதம்பப் பந்தில் பாதிக்கு மேல் எடுத்துச் சுருட்டி மாலாவின் தலை கொள்ளாமல் செருகிக் கொண்டே, "வேண்டாம், அம்மா. ஒரு சோறு, குழம்பு ஆக்கத்தான் தொலையாதாக்கும். நீ விழுந்து விழுந்து வேலை செய்ய வேண்டிய காலந்தான் இருக்குதே இனிமேல். இப்போதைக்கு இப்படிச் சிட்டாகவே பறந்துக்கிட்டிரு" என்று கூறிவிட்டு, கைகளால் அவள் கன்னத்தைத் தடவி, விரல்களை நெற்றியில் மடித்துச் சொடுக்கித் திருஷ்டி கழித்தாள் மரகதத்தம்மாள். "என் கண்ணு! பதினாறும் பெத்து நல்லா இருக்கணும்" என்ற ஆசி உள்ளன்போடு அவளிடமிருந்து வந்தது.

மாலா எழுந்து அடுக்களைக்குச் சென்று குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். "போய் வரேன், அத்தை!" அந்த அத்தை அருகில்தான் நின்றாள்; இருந்தாலும் மாலாவின்குரல் உயர்ந்து ஒலித்தது.

"மகராசியாப் போய் வா, அம்மா! பொழுது இடைச்சா ராத்திரியோ, நாளைக்கோ வீணையைக் கூட்டிக்கிட்டு வா; என்ன?"

மாலா அவ்வீட்டு கடைக்கு வந்தாள். அங்கேதான் மாடிக்குச் செல்லும் படிக்கட்டு இருந்தது. அங்கே வந்ததும் நின்று மாடியை ஒரு தடவை நோக்கினாள்.

மேலே யிருந்து சுந்தரத்தின் முகம் எட்டிப் பார்த்தது. "போ, போ. வரேன்" என்று அவன் ஜாடையாகச் சொன்னான்.

மகிழ்ச்சி பொங்க மாலா சிட்டாய்ப் பறந்தாள் ஆற்றை நோக்கி.

* * *

ஆற்றுப் படித்துறை வெறிச்சோடிக் கிடந்தது. கரையிலிருந்த அரச மரத்தடியில் பிள்ளையார் உறங்கிக் கொண்டிருந்தார். அருகே யிருந்த மண்டபத்திலும் யாரோ ஒரு சோம்பேறிப் பரதேசி, ஒரு பாறாங்கல்லில் தலையைச் சாய்த்துப் பட்டப்பகலில் எட்டு மைல் கேட்கும்படி குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

அங்கே இரண்டு படித்துறைகள். ஒன்று ஆண்களுக்கு; மற்றொன்று பெண்களுக்கு. இரண்டையும் பிரித்துக் கொண்டு ஒரு குறுக்குச் சுவர். அந்தச் சுவரின்மீது குடத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்த மாலா, கண்களைத் தன்னைச் சுற்றிலும் ஓடவிட்டாள்.

மேற்குப் புறம் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஓர் ஈ-காகங்கூடக் காணப்படவில்லை. வெகு தூரத்தில், மூன்று மைல்களுக்கு அப்பால் மலைத் தொடரை யொட்டி அணை வேலை நடந்து கொண்டிருந்த இடத்தில் இயந்திரங்கள் எழுப்பிய ஒலி மட்டும் மென்மையாகக் காற்றில் மிதந்து வந்தது.

எதிர்ப்பக்கம் ஆற்றின் மறு கரை நெடுக அடர்ந்த தென்னந்தோப்பு. அத்தோப்பிலேயே ஆங்காங்கு வாழைகளும் பயிரிட்டிருந்தனர். வாழைத் தோட்டங்களில் வேலை செய்து வந்த இரண்டொருவரின் பேச்சுக் குரல் இடையிடையே கேட்டது. ஆனால் எவர் தலையும் அங்கே தென்படவில்லை.

கிழக்குப் புறம் திரும்பிப் பார்த்தாள் மாலா. அங்கே சிறிது தூரத்துக்கு அப்பால், ஆற்றின் ஆழமற்ற பகுதியில் எருமை மாடுகளை இறக்கி, அவற்றின் முதுகின்மீது சவாரி செய்தவாறு குளிப்பாட்டிக் கொண்டிருந்தனர் இரண்டு மாடு மேய்க்கும் சிறுவர்கள்.


இவ்வாறு முப்புறங்களிலும் நோக்கிய பிறகு மாலாவின் பார்வை, அவள் வந்த வழியில் நிலைத்தது. ஒரு நிமிஷம். இரண்டு நிமிஷம். பிறகு அவளுடைய பொறுமை இடம் பெயர்ந்து விட்டது. "இந்த ஆண் பிள்ளைகளே இப்படித்தான். வரட்டும், சொல்கிறேன்" என்று கோபத்துடன் கூறியஅவள் குடத்தை எடுத்துக்கொண்டு படிக்குள் இறங்கினாள். கடைசிப் படிக்கு முன்படியில் குடத்தை வைத்துவிட்டு, நீரை நோக்கி உட்கார்ந்தாள். பாதங்களைத் தண்ணீரில் விட்டு அளைந்தவாறு, அந்தத் தெள்ளத் தெளிந்த நீரில் மீன்கள் துள்ளி ஓடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அவள் உள்ளம், உடல் எல்லாம் பதறும் வண்ணம் ஓர் அலறல். திடுக்கிட்டு எழுந்த மாலா நிலைதடுமாறிக் கீழே விழப் போனாள். இரண்டு கரங்கள் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டன. கல - கலவென நகைத்தான் சுந்தரம். "என்ன பயம்! என்ன பயம்!"

"நல்ல வேடிக்கைதான், போங்கள். கீழே விழப் பார்த்தேனே; விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?" மாலா மெல்ல அவன் கைகளைத் தன் உடலிலிருந்து பிரித்து விட்டுப் பொய்க் கோபத்தோடு நோக்கினாள்.

"என்ன ஆகியிருக்கும்? உனக்குத்தான் நீந்தத் தெரியாதே! ஆற்றோடு போயிருப்பாய். அடியேன் பாடு குஷியாகி யிருக்கும்!" சுந்தரம் ஒரு படியில் அமர்ந்து அதற்கு அடுத்த படியில் காலை வைத்துக் கொண்டு, கைகள் இரண்டையும் தொடையில் ஊன்றி உள்ளங் கைகளில் தாடையைத் தாங்கிக் கொண்டான்.

"என்ன? நான் ஆற்றோடு போனால் உங்களுக்குக் குஷியா?" மாலாவின்



முகம் கறுத்தது; குரல் கம்மிற்று. புறக்கைகள் கண்களை நோக்கிச் சென்றன.

"ஆமாம், குஷிதான். பின் என்ன? ஆற்றில் குதித்து இந்தப் பூவுடலை இரு கைகளாலும் அள்ளி எடுத்து வருவது குஷியில்லையா?" அவன் மாலாவின் கைகள் இரண்டையும் பிடித்து இழுத்துத் தன் காலடியில் உட்கார்த்தினான்.

அவள் போக்குச் சட்டென்று மாறியது. "க்கூம்......ஆசையைப் பாருங்கள்!" என்று முகத்தை வலித்தாள். பிறகு, "ஆமாம்! ஏன் இவ்வளவு நேரம்? உங்களுக்காகக் காத்திருப்பேன் என்று எண்ணமோ?" என்றுகேட்டாள்.

"அடே, ரொம்பத்தான் பயமுறுத்துகிறாயே! காத்திராவிட்டால் போயேன். காலை முதலே வயிற்றைக் குமட்டிக் கொண்டிருந்தது. வீட்டை விட்டு வெளியே வந்தேன். தெருக்கோடிக்கு வந்ததும் பொறுக்க முடியவில்லை. வாந்தி எடுத்தேன். வாயைக் கழுவிக்கொண்டு வருவதற்குள்..."

"ஐயைய்யே!" மாலா அருவருப் படைந்தவள் போல் உடலை நெளித்தாள். "பச்சைக் குழந்தை மாதிரிக் கண்டதையெல்லாம் வாங்கித் தின்பது, வாயிலெடுப்பது! கொஞ்சமாவது வெட்கமாயில்லையே உங்களுக்கு?"

"வெட்கப்பட வேண்டியவன் நான் இல்லை கண்ணு; நீதான்!"

"நானு? எதற்கு?"

"என் வயிற்றை எது அத்தனை நேரமாகக் குமட்டியது தெரியுமா? காலையில்......" அவள் வலக் கையைப் பிடித்துக் கொண்டு அவன் தொடர்ந்தான். "இந்தப் பொற்கை கொடுத்த காப்பிதான்! அது என்ன மாலா, காப்பியா? இல்லை, மறந்து போய்க் கழுநீரைக் கொண்டு வந்து தந்து விட்டாயா?" சுந்தரம் முறுவலித்தான்.

அவளுக்கு அவன் தன்னைச் சீண்டுகிறான் என்பது தெரிந்து விட்டது. "சரி, அதுதான் கழுநீர் என்று வாயில் விட்டுக் கொண்டதும் தெரிந்திருக்குமே; உடனே வைத்து விடுவதுதானே? கடைசிச் சொட்டு வரையில் கவிழ்த்துக் கொள்வானேன்?" என்று அவனுக்குச் சரியாக வாதாடினாள் மாலா.

"அதைக் கொண்டு தந்த கையின் மணத்தில் காப்பியின் ருசியை மறந்து விட்டேன். இதோ பார், மாலா! நான் உங்கள் வீட்டுக்கு வரக்கூடாது என்றால் முன்கூட்டியே சொல்லிவிடு; வருவதை நிறுத்திக்கொண்டு விடுகிறேன். அதற்காக இம்மாதிரிக் கழுநீரையும், கஷாயத்தையும் தந்து......சே! சே! நான் என்னவோ சுலபமாக உன் கையைப் பிடித்து விடலாம் என்று நினைத்தேன். ஆனால், நீ தரும் காப்பியைச் சீரணிப்பதற்கு ஒரு நிரந்தர மருந்தைத் தேடிக் கொண்ட பிறகுதான் உன்னைக் கட்டிக் கொள்ளும் விஷயத்தை ஆலோசிக்க வேண்டும் போலிருக்கிறது."

மாலா, "உண்மையாகவே இன்று நான் தந்த காப்பி நன்றாக இல்லையா?" என்று வருத்தம் தொனிக்கும் குரலில் கேட்டாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

"சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன், மாலா! அருமையான காப்பியாக இல்லாவிட்டால், அப்படித் தம்ளரைக் கூட விழுங்க முயன்றிருப்பேனா?"

"அது என்னவோ? இன்றைக்குக் காப்பி நன்றாக இல்லையென்று நீங்கள் சொல்லியிருந்தாலும் நான் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். நீங்கள் கழுநீர் என்று சொன்னதும் எனக்குச் சிறிது திகிலாகக்கூடப் போய்விட்டது. ஏனென்றால் அங்கே அச்சமயம் நடந்த அல்லோல கல்லோலத்தில்......"

"அல்லோல கல்லோலமா?"

"ஆமாம்; வீணா அக்காளைக் கண்டதும், அம்மா அவளைக் கட்டிக்கொண்டு அழுத அழுகை! செய்த பிரலாபம்!"

"அழுதாளா? எதற்கு?"

"எனக்குந்தான் அவள் ஏன் இப்படி அழ வேண்டும் என்று தோன்றியது. சற்றுமுன் உங்கள் அம்மா சொன்ன பிறகுதான் புரிந்து கொண்டேன். அக்காளைக் கண்டதும் என் அம்மாவின் பெற்ற வயிறு பற்றி எரிந்ததாம்! ஐயோ, பாவம்! வீணா அக்காள் என்ன செய்வாள்? அது அவளுடைய தவறா?"

"இரு, இரு. நீ பாட்டுக்குப் பேசிக்கொண்டே போகாதே. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உன் அம்மாவின் பெற்ற வயிறு வீணாவைக் கண்டதும் பற்றி எரிந்ததா? எதற்காக? அது என்னவோ வீணாவின் தவறு என்றாயே; அது என்ன?"

"என்னைச் சீண்டுகிறீர்களா? அல்லது உண்மையிலேயே உங்களுக்கு ஒன்றும் தெரியாதா?"

"விஷயம் தெரியாது, மாலா! உண்மையாக." ஏதோ ஓர் அதிர்ச்சியை எதிர்பார்ப்பது போன்ற தோற்றம் சுந்தரத்தின் முகத்தில் வெளிப்பட்டது.

"இல்லை; நீங்கள் என் வாயைக் கிண்டத்தான் செய்கிறீர்கள். எனக்குத் தெரியும். விஷயத்தைக் கேள்விப்படாவிட்டாலும், நேற்று காலை முதல் இன்று காலை வரையில் அக்காளுடன் இருந்திருக்கிறீர்கள். முகத்தைப் பார்த்தாவது தெரிந்து கொண்டிருப்பீர்கள். எதற்கு மறைக்கிறீர்கள்?"

"நான் பொய் சொல்லவில்லை, மாலா! அந்த இருபத்துநான்கு மணி நேரத்தில் வீணாவின் முகத்தை நான் பல தடவைகள் பார்த்ததுண்டு. அந்த முகத்தில் தெளிவைத்தான் கண்டேன்; அழகைத்தான் கண்டேன். வேறு எதுவும் தென்படவில்லையே, மாலா!"

"அவள் நெற்றியைக் கவனித்தீர்களா? அதில் பொட்டு இருக்கிறதா?"

"இல்லை; அப்படியானால் அவள்......?"

"ஆமாம்; அவள் என் மதனி. எனக்கு ஓர் அண்ணா இருந்த விஷயமாவது உங்களுக்குத் தெரியுமா?"

சுந்தரம் எதிர்பார்த்த அதிர்ச்சி ஏற்பட்டே விட்டது. "தெரியும்" என்றான் அவன், குரலில் சுரத்தே யின்றி. "சிறு வயதில் கப்பல் விபத்தில் அவனும் உன் அப்பாவும் காலமாகிவிட்டார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது நடந்து வெகுகாலமாகி விட்டதே! அப்பொழுது வீணா மிகச் சிறிய பெண்ணாக அல்லவா இருந்திருப்பாள்!"

"ஆமாம்! அந்தச் சின்னப் பெண்ணுக்கும், சின்ன என் அண்ணாவுக்கும் இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பொம்மைக் கலியாணத்தை நடத்தி வைத்து விட்டு, விதி அவளை உருட்டிச் சென்ற பிறகு, பழியை அக்காள்மீது போடுகிறார்கள். நம் சமூகத்தில் விதவைகளின் நிலை எவ்வளவு பயங்கரமானது என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிய வருகிறது. இந்த அம்மாவைத்தான் பாருங்களேன். அவளும் நானும் தின்பது மாமாவின் சோறு; உடுப்பது மாமாவின் துணி. இருந்துங் கூட அக்காளின் பெயரைக் கேட்டாலே கரிக்கிறாள். நான் எப்பொழுதாவது வாய் தவறி அவளை மதனி என்று குறிப்பிட்டு விட்டால் எகிறிக் குதிக்கிறாள். அப்படிச் சொன்னால் அவளுக்கு என் அண்ணாவின் நினைவு வந்து விடுகிறதாம். மாமா கூட அவளுக்கு ஒத்துப் பாடுகிறாரென்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்! 'அவள் வயிற்றெரிச்சலை ஏன் கிளப்புறே மாலா? அவள் பிரியப்படி அக்கான்னுதான் சொல் விட்டுப் போயேன். இனிமேல் 'வீணா ஊர் உலகத்துக்கெல்லாம் அக்காள்தானே! வேறே உறவுமுறைதான் இல்லேன்னு ஆண்டவன் அவள் தலையிலே எழுதிட்டானே!' என்கிறார். இதை யெல்லாம் நினைக்கும்போது என் நெஞ்சு எப்படிக் கொதிக்கிறது, தெரியுமா?"

உண்மையிலேயே உள்ளக் கொதிப்புத்தான் அவளை இத்தனை நீண்ட பிரசங்கம் புரியச் செய்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டான் சுந்தரம். அவனுக்கும் இதெல்லாம் பெரிய அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆயினும் அவனுக்கு ஓர் ஆறுதல். வீணா படித்தவள். டாக்டராகத் தொழில் நடத்தப் போகிறவள். இளவயதினள். உள்ளத்தின் ஆவலெல்லாம் இனித்தான் அவளிடம் கொந்தளிக்க ஆரம்பிக்கும். அந்தக் கொந்தளிப்பு ஏற்படும்போது இந்தச் சமூகம், இந்த அப்பா, இந்த அத்தை எவரையும் லட்சியம் செய்ய மாட்டாள். நிச்சயமாகத் தன் வாழ்க்கைக்குத் தானே துணை தேடிக்கொண்டு விடுவாள்.

இதை அவன் மாலாவிடம் சொன்னபோது, அவள் நம்பிக்கையற்ற சிரிப்பு ஒன்றைச் சிந்திவிட்டு, "நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். அக்காள் மனதிலே ஆசைகள் எழலாம். கொந்தளிப்புகள் ஏற்படலாம். அவள் சமூகத்தைப் பொருட்படுத்தாமல் மறுமணம் செய்துகொள்ளக் கூடத் துணியலாம். ஆனால் யார் மணந்து கொள்ளுவார்கள் அவளை?" என்று கேட்டாள்.

"இது என்ன அசட்டுத்தனமான பேச்சு, மாலா! இது இருபதாம் நூற்றாண்டு, தெரியுமா? உன் கேள்வி பத்தொன்பதாம் நூற்றாண்டில் கேட்கப்பட வேண்டியது.

நன்றி அறிவிப்பு

மணமகன் : சுப்பிரமணி—மணமகள் : மோஹனு


எங்கள் செல்வி மோஹனுவுக்கும் டாக்டர் எத்திராஜுலுவின் செல்வன் சுப்பிரமணிக்கும் 27-4-59ல் திருப்பதி அலமேலுமங்காபுரத்தில் நடந்த திருமணத்துக்கு விஜயம் செய்தும் ஆசிச் செய்திகள் அனுப்பியும், கௌரவித்த நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எங்கள் நேயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எம். ஆர். வெங்கட்டராமன், கோவிந்தம்மாள்
வி. கே. ஆர். வி. நிலையம், மதராஸ் - 21




ADDISON
"Hallmark of Quality"

ஆபீஸ் மற்றும் வீட்டிற்கான ஆல் - ஸ்டீல் உபகரணங்கள்



ட்யூபுலர் மேஜை :
மிடுக்கான தோற்றம் வேலை செய்ய சௌகரியமானது. ஆபீஸ்களுக்கு உபயோகமானது.



ஸ்டாண்டர்ட் பீரோக்கள்:
ரம்மியமான கலர்களில் கிடைக்கும். சாமான்களை சுத்தமாகவும் பத்திரமாகவும் இருக்க உதவுகிறது




மடக்கும் நாற்காலி :
அழகானது. சுலபமாக மடக்கக் கூடியது. மற்றும் உறுதியானது.

அடிஸன் & கோ. (பிரைவேட்) லிமிடெட்
மதராஸ் - - - - - - பெங்களூர்

ஸ்டாக்கிஸ்டுகள் : விஜயலக்ஷ்மி & கோ., சேலம் ○ தண்டபாணி & கோ., ஈரோடு ○ கே. என். ஏ. குப்தா டிரேடிங் கோ., குடியாத்தம் ○ கோரா வொர்ண்ட் மர்க்கண்டைல் இண்டஸ்ட்ரியல் கோ.: மதுரை லக்ஷ்மி பர்னிச்சர் மார்ட், தஞ்சை ○ ஏ. ராஜமாணிக்கம், அவிநாசி ரோடு, கோயமுத்தூர்

மோட்டார்களின் பாதுகாப்பிற்கு சிறந்தவை



G.E.M



ஜி. இ. எம். ஸ்டார்டர் & சுவிச்சுகள்.

Ganapathi Engineering Manufacturers PRIVATE LTD
GANAPATHY, COIMBATORE - 6.

✲ அருள் வாக்கு ✲

ஆத்திச்சூடி என்று பரமேஸ்வரனுக்குப் பெயர். ஆத்திப் பூ சந்திரகலை போல் இருக்கும். மற்றொரு மலர் கொன்றைப் பூ. கொன்றை மலருக்கு ஆறு தளங்கள். பஞ்சாட்சர மந்திரத்துக்குப் பிரணவ மந்திரத்தைச் சேர்த்தால் ஆறு அக்ஷரம். கொன்றைப் பூவின் ஆறு தளங்களுக்கு ஆறு அக்ஷரம் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஈசுவரனுக்கு மிகவும் பிரீதியான மலர் கொன்றை. சிவபெருமான் இக் கொன்றை மலரை அணிவதை வர்ணித்து நாயன்மார்கள் தேவாரத்தில் மனமுருகிப் பாடியிருக்கின்றனர்.

–ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

இந்தக் காலத்தில் விஜயாவைப் போன்ற ஓர் அழகியை, பணமும் பதவியுமுள்ள ஒருத்தியை மணந்துகொள்ள ஆயிரம் இளைஞர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வருவார்கள் மாலா. நம் சமூகத்தில் முற்போக்கான கருத்து உடையவர்கள் இல்லாமற் போய் விடவில்லை.''

''எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை. சமூகம் என்ற கண்டிப்பான எசமானரின் முன் தலைநிமிர்ந்து நிற்க உங்கள் ஆண் குலத்துக்கு, இந்த இருபதாம் நூற்றாண்டில் மட்டுமன்று, அடுத்த நூற்றாண்டில் கூடத் தைரியம் ஏற்படும் என்று நான் கருதவில்லை. எங்கே விரல் மடியுங்களேன், பார்க்கலாம். இதுவரை எத்தனை இளைஞர்கள் மனப்பூர்வமாக விதவைகளை மணந்து கொண்டிருக்கிறார்கள்? நீங்கள் பட்டணத்தில் பத்து வருஷங்கள் இருந்திருக்கிறீர்கள். முற்போக்கான இளைஞர்கள் பலருடன் பழகியிருப்பீர்கள். சொல்லுங்கள், உதாரணத்துக்கு ஓர் இளைஞனாவது உள்ளச் சுத்தத்தோடு அக்காள் மாதிரி ஒருத்தியை மணந்து கொண்டிருக்கிறானா? எல்லாரும் வாய் கிழியப் பேசுவார்கள். விதவா விவாகம்–விதவா விவாகம் என்று பிறருக்குப் போதனை செய்வார்கள். ஆனால் தங்கள் சொந்த விஷயம் என்று வந்துவிட்டால், ஓட்டுக்குள் பதுங்கிக் கொள்ளும் நத்தையாகி விடுவார்கள். எனக்கு நன்றாகத் தெரியும் அத்தான், உங்கள் ஆண் சமூகத்தை. அவர்கள் கோழைகள்; சுயநலமிகள்; பேராசைக்காரர்கள்; தங்களுக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயம் என்று வகுத்துக் கொண்டிருக்கும் மோசக்காரர்கள்!''

மாலாவின் வீராவேசப் பேச்சு சுந்தரத்தை அதிர வைத்தது. அந்த உலகமறியாச் சிறுமியின் உள்ளத்தில் ஆண்களிடம் இத்தனை குரோதம் இருக்குமென்று அவன் நினைத்ததே இல்லை. அது அவனுக்குச் சிறிது ஆத்திரத்தை எழுப்பத்தான் எழுப்பிற்று. ஆயினும் அதை அடக்கிக்கொண்டு சொன்னான்: ''நீ சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கிறது மாலா. ஆனால் நாலும் தெரிந்த நல்லவர்களும் நம் சமூகத்தில் சிலர் இருக்கத்தான் இருப்பார்கள். அவர்கள் மூலம் விதவைகளுக்கு விமோசனம் ஏற்படும்.''

''விமோசனம்! விதவைகளுக்கு விமோசனம்! அவர்கள் அளிக்கும் அந்த விமோசனம் எப்படிப்பட்டதாக இருக்கும், தெரியுமா? ஒன்று அது உடல் மோகமாக இருக்கும்; இல்லாவிட்டால் பொருள் மோகமாக இருக்கும். இன்னும் கேவலமாகக்கூட இருக்கும். ஆனால் அதை நான் சொல்ல விரும்பவில்லை.''

''சும்மா சொல், என்னிடந்தானே சொல்கிறாய்.''

''கெடுத்து கட்டாற்றில் விடும் விமோசனமாக இருக்கும்!''

''மாலா!'' என்று கூவினான் சுந்தரம். ''ஆண்கள் என்ன அரக்கர்கள் என்பது உன் கருத்தா?''

''அரக்கர்களிலும் கொடியவர்கள்!''

''எங்களை அத்தனை கேவலமாக நினைக்காதே, மாலா. எங்களால்தான் இன்றைய உலகம் இயங்குகிறது; என்பது நினைவிருக்கட்டும்.''

''ஆமாம்; உலகத்தை நீங்கள்தான் இயக்குகிறீர்கள். உங்கள் வசதிக்கேற்ற விதத்தில்; உங்கள் இன்பத்துக்கேற்ற விதத்தில்; உங்கள் நலனுக்கேற்ற விதத்தில். இவ்வளவு தூரம் உங்கள் கட்சிக்காக வாதாடுகிறீர்களே? உங்களுடைய சூழ்ச்சிகளையும் சுயநலத்தையும் மூடி மறைக்கப் பார்க்கிறீர்களே? உங்களையே ஒன்று கேட்கிறேன்; மனச்சாட்சிக்கு விரோதமின்றிப் பதில் சொல்வீர்களா?''

''கேள், மாலா!''

''நீங்கள் ஒரு விதவையை மணந்து கொள்வீர்களா? இன்று என்னை மணந்து கொள்ள எத்தனை ஆவலுடன் இருக்கிறீர்களோ, இதே ஆவலுடன் ஒரு விதவையை மணந்து கொள்ளுவீர்களா?''

கூரிய ஊசியால் நெஞ்சின் மிக நுட்பமான பகுதியில் குத்தியது போலிருந்தது சுந்தரத்துக்கு. அவனால் உடனே இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

''ஏன் வாயடைத்துப் போய் விட்டீர்கள்? 'செய்வேன்' என்று ஒரு சொல்லைக் கூறக்கூட உங்களுக்குத் தைரியம் வரவில்லை, பார்த்தீர்களா?''

அவள் முகத்தில் மிதந்த ஏளனம் அவன் நெஞ்சப் புண்ணை இன்னும் கிளறியது. ''மாலா...!'' என்று அவன் ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால் சட்டென்று பேச்சுத் தடைப்பட்டது.

சுந்தரத்தின் எதிரில் அவன் தாய் மரகதத்தம்மாள் நின்று கொண்டிருந்தாள். அவள் இடுப்பிலே ஒரு குடம்; உதட்டிலே ஒரு கேலிச் சிரிப்பு! (தொடரும்)

நாடகமேடை

பாஞ்சாலி சபதம்

காந்தன்

மகாகவி பாரதியார் மகா அதிர்ஷ்டக்காரர். காலனைக் காலால் உதைப்பேன் என்றார். காலன் அவர் பூத உடலைத்தான் வீழ்த்தினான்; புகழுடம்பை அவனால் ஏதும் செய்ய இயலவில்லை. தமது பூத உடலோடு அன்று தமிழகத்தில் பல வித அல்லல்களுக்கு ஆளாகிக் குடத்தில் இட்ட விளக்கென இருந்து அமரத்துவமடைந்த கவிஞர் பெருமான், இன்று புகழுடம்போடு தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் குன்றிலிட்ட விளக்கென ஒளிர்கிறார். பராசக்தியிடம் காணி நிலம் வேண்டினார் கவிஞர்; தூணில் அழகிய தாய்த் தூமணி மாடங்கள் கேட்டார்; மகாகவியின் வேண்டுகோளைப் பேராசிரியர் கல்கி அவர்கள் மூலம் பிற்காலத்தில் பராசக்தி நிறைவேற்றி வைத்தான். கவிஞர் பெருமான் பிறந்த மண்ணில் இறவாத கீர்த்தியுடன் பாரதி மண்டபம் இன்று நிற்கிறது.

கவிஞரது காவியமான "பாஞ்சாலி சபத"த்தைக் கவிஞர் இயற்றியபோது அதனை அறிந்தவர் மிகச் சிலர்; இப்பொழுது "பாஞ்சாலி சபத"த்தின் புகழ் பாரெங்கும் பரவி நிற்கிறது. அக்காவியத்தைப் பலர் படித்துத்தான் சுவைத்து வந்தனர். இன்று அதன் பெருமையைக் கண்ணாரக் கண்டு அநுபவிக்கும் அரிய வாய்ப்பு தமிழ் மக்களுக்குக் கிட்டியிருக்கிறது. சுவைமிகு அக்காவியத்தை, நயமிகு நாடகமாக்கி நடித்த சேவா ஸ்டேஜ் குழுவினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சோர்வு கண்டபோதெல்லாம் நான் மகாகவி பாரதியார் கவிதைகளைப் படிப்பது வழக்கம். அக்கவிதைகளைப் படிக்கும்போதெல்லாம், பாவலர் பெருந்தகையைப் பார்க்கும் பாக்கியம் எனக்கு இல்லாமற் போய் விட்டதே என்று நினைத்து ஏங்குவதும் வழக்கமாகி விட்டது.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி சபாவின் ஆதரவில் சமீபத்தில் நடந்த "பாஞ்சாலி சபதம்" இசை நாடகத்தில் எனது அந்த நெடுநாளைய ஏக்கம் தீர்ந்து ஒரு பூரிப்பு ஏற்பட்டது.



பாரதியாராக சகஸ்ரநாமம்

நாடக ஆரம்பத்தில், மகாகவி மேடையில் தோன்றினார். ஆழ்ந்த சிந்தனையிலிருந்து காவியத்தைப் புனையலானார். சிறந்த குணசித்திர நடிகரான எஸ். வி. சகஸ்ரநாமம் மகாகவி பாரதியாராகவே மாறிவிட்டார்!

* * *

கவிதை நாடகம் என்றதும் என் ஆர்வம் சிறிது குன்றித்தான் போயிற்று. இது எப்படி அமையுமோ என்ற பயம் உள்ளூற அரித்துக் கொண்டிருந்தது. நாடகத்துக்குக் கூட்டம் கூடக் குறைவாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் என்னுடைய அபிப்பிராயம் எவ்வளவு தவறு என்பது அங்கே போனதும் தெளிவாகி விட்டது. தாற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த கீற்றுக் கொட்டகையில் ஜனக் கூட்டம் நிரம்பி வழிந்தது.

திரை விலகியது. நாடகம் ஆரம்பமாயிற்று. துரியோதனனும் சகுனியும் தோன்றினர். முதல் காட்சியிலேயே நாடகம் பளிச்சென்று களை கட்டி விட்டது.

ஆர். முத்துராமன் கௌரவர் தலைவனான துரியோதனன் வேஷம் தாங்கி மிகவும் கௌரவமாகவும் அரசர் குலத்துக்குரிய கம்பீரத்துடனும் நன்றாய் நடித்தார்.

பாரதியாரின் கவிதை வரிகளை நடிகர்கள் வசனம் மாதிரி தெளிவாகப் பேசினர். சீர், தளை முதலியவைகளையும் விட்டு விடாமல் வசன நடையில் நாடகம் முழுவதும் வெகு அழகாகச் சென்ற பாரதியின் கவிதை வரிகள் இன்னும் என் செவியில் ஒலிக்கின்றன.

ஜனங்களுக்கு இந்தக் கவிதை நாடகம் நன்கு விளங்குகிறதா என்பதையறியும் ஆவல் என்னுள் எழுந்தது. மக்கள் உள்ளப் பிரதிபலிப்பைக் கவனிக்கலானேன். சகுனியின் இடக்குப் பேச்சுக்களையும் துரியோதனின் மடக்குப் பேச்சுக்களையும் ரசிகர்கள் கேட்டு அவ்வப்போது பெரிதும் ரசித்தனர். நாடகம் முடிகிறவரையில் அமைதியோடு பார்த்தனர். நாடகத்துக்கு உயிர் கொடுத்தவர் திருதராஷ்டிரனாக நடித்த ஏ. கே. வீராச்சாமிதான். கண்ணிழந்த மன்னனாக வந்து அரசநீதிக்கும் புத்திர பாசத்துக்கும் இடையில் அகப்பட்டுத் தவித்த சந்தர்ப்பங்களில் வீராச்சாமி தகுந்த பாவங்களுடன் பிரமாதமாக நடித்தார்.



சகுனியும் துரியோதனனும் கூறிய சதித்திட்டம் கேட்ட திருதராஷ்டிரன் சீறினன்!

பாஞ்சாலி சபதத்துக்குக் காரணபூதனான சகுனி ஓர் இன்றியமையாத பாத்திரம். அத்துடன் மகாபாரதத்தின் வில்லன் சகுனி. அந்தப் பாகத்தை ஏற்ற ஏ. என். கிருஷ்ணனின் நடிப்பை மக்கள் பெரிதும் ரசித்தனர். சூதும், வாதும், பொய்யும், புனைசுருட்டும் சேர்ந்து வடிவெடுத்தமாதிரி அவரது முகபாவங்கள் பிரமாதமாயிருந்தன.

பீமனாக வந்த சந்திரசேகரன் கௌரவர் சபையில் கோபாவேசத்துடன் வசனங்களைப் பொழிந்ததையும், கொட்டுயிர்ப்போடு அசையாமல் நின்றதையும் இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

பாஞ்சாலியைப் பார்த்ததும், பத்தினித் தெய்வத்தின் ஆவேசம் என் நினைவுக்கு வந்தது. "ஆடை குலைவுற்று நிற்கிறாள்- அவள் ஆவென்றழுது துடிக்கிறாள்..." என்ற பாரதியின் வாக்கு என் கண்முன் வந்தது. பாஞ்சாலியின் பார்வையும், பேச்சும், முக பாவங்களும் சிகரத்தை எட்டி விட்டன. என். ஆர். சாந்தினி பாஞ்சாலி பாகத்தை ஏற்று எல்லோரையும் மெய்சிலிர்க்கச் செய்து விட்டார்.

சங்கடமும், சபதமும், வீரமும் கலந்து வரும் இந்நாடகத்தில் அர்ஜுனனுக்குத் தான் காதலிக்கச் சற்று அவகாசம் கிடைக்கிறது. பாஞ்சாலியும் அர்ஜுனனும் அஸ்தினபுரத்துக்குப் போகும் வழியில், நிலவொளியில் உல்லாசமாயிருக்கின்றனர். அந்தக் காட்சி மிகவும் நன்றாயிருந்தது. வி. கோபாலகிருஷ்ணன் அர்ஜுனன் பாத்திரத்துக்கு மிகவும் பொருத்தமானவர்.

இந்த நாடகத்தில் தருமபுத்திரனாக நடிப்பவர் பாடு மிகவும் சிரமம். நாடு நகரம், யானை, குதிரை, முத்து, பவளம், பொன்முதலிய சகல செல்வங்களையும் வஞ்சகச் சகுனியிடம் சூதாடி இழந்து தோல்வியின் சிகரத்தில் ஏறி நின்று சகோதரர்களின் கோபத்துக்கும், மனைவியின் ஏச்சுக்கும், துரியோதனாதியர்களின் ஏளனத்துக்கும் ஆளாகித் தலையில் கை வைத்துத் தரையில் உட்காரும்படி ஆகி விடுகிறது. அவர் நிலைமை. அந்தப் பாகத்தை ஈசுவரன் நன்றாக நடித்தார்.

கௌரவர் சபையில் விதுரன் சொல்லும் நீதி அழுத்தமாக அமைந்திருந்தது. பிரபாகர் விதுரனாகவந்து பிரமாதப் படுத்தி விட்டார்.

இத்தகைய கவிதை நாடகத்துக்கும் சாதாரண நாடகத்துக்கும் உள்ள வேற்றுமை சிந்தனைக்குரியது. சாதாரண நாடகத்தில் எத்தனை எதுகை, மோனை நிறைந்த வசனங்களாயிருந்தாலும் பேசி விடலாம்; சமயத்தில் மறந்து போகும் வசனங்களையும் சமயோசிதமாகப் பேசிச் சமாளித்து விடலாம். ஆனால் கவிதை நாடகத்தில் அந்த ஜபம் பலிக்காது! வசனத்திலேயே நினைவு இருக்க வேண்டும். நடிகனின் நினைவு வசனத்தில் தங்கிவிட்டால் நடிப்பின் கதி என்ன ஆவது என்கிறீர்களா? சிந்திக்க வேண்டிய விஷயம் தான். ஆனால் சேவா ஸ்டேஜ் குழுவினர் இந்தச் சங்கடத்தையே சிந்தித்துக் கொண்டிருந்து விடாமல் அற்புதமாக நடித்திருக்கின்றனர். ஒரு பாத்திரம்கூடச் சோடை போய்விடாமல், "பாஞ்சாலி சபதம்" நாடகம் நன்றாய் அமைந்து விட்டது. காவியம் முழுவதையும் சிரத்தையோடு படித்து, பாத்திரங்களின் உரையாடலாக அமைந்திருக்கும் கவிதைப் பகுதிகளை அழகாகப் பயன்படுத்திக் கொண்டு மேடையேற்றி மேன்மைப் படுத்திவிட்டனர்.

இந்தக் கவிதை நாடகத்தை நடத்தும் எண்ணம் சேவா ஸ்டேஜ் குழுவினருக்கு உதயமானதை மனமார நாம் வரவேற்க வேண்டும்.

கலாசாகரம் ராஜகோபால் கலையம்சத்துடன் திகழ்ந்த காட்சி அலங்காரங்களை அதியற்புதமாகச் செய்திருந்தார். அவரது கலைத் திறன் மகாபாரதம் நிகழ்ந்த காலத்துக்கே நம்மைக் கொண்டு செல்கிறது.

"பாஞ்சாலி சபதம்" கவிதை நாடகம் கவிஞர் பெருமானுக்குச் செலுத்தப்பட்ட பக்தி பூர்வமான அஞ்சலி.


பட்டின்
மென்மையை
உடைய
பாப்ளின்
SRM பாப்ளின்
கிடைக்கிற பல ரகங்கள்:
ரேடியம் டச்
ஆம்ர குஞ்ச்
மதுபன்
காப்டன் பாப்ளின்
பாக்ய லக்ஷ்மி (டார்க் ஷேட்)
ஜ்யோதி லக்ஷ்மி பாப்ளின் (டார்க் ஷேட்)
ராஜ் கார்டு பாப்ளின்
SHRIMONIZED
FULLY PRE-SHRUNK
SRM
ஸ்ரீ ராம் மில்ஸ் லிமிடெட்
பெர்குஸன் ரோட
பம்பாய்-13
S.R.M.58.4 Tamil
EVEREST



ப்ரௌன் அன்டு போல்ஸன் கார்ன்ப்ளவர் பேட்டன்ட் ஆக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பரிசுத்தத் தன்மைக்கு இப்பரிசோதனையைச் செய்து பாருங்கள் :–

இரண்டு மேஜைக் கரண்டியளவு ப்ரௌன் அன்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரை சேர்த்து ஆற வைத்து குளிர்ந்த ஜலத்தில் நன்றாகக் கலக்குங்கள். 24 மணி நேரம் இவ்விதம் வைத்த பிற்பாடுங்கூட கெட்ட வாசனை உண்டாகாமல், பரிசுத்தமாகவும், பேக்டீரியா முதலிய அசுத்த அணுக்களால் சேதப்படாமலும் இருப்பதைக் காண்பீர்கள். மற்ற ப்ரௌன் அன்டு போல்ஸனின் உயர்தர சாதனங்கள் என்னவென்றால்: ரெய்ஸ்ஸி, கஸ்டர்ட் பௌடர், ப்ளேவர்ட் கார்ன் ப்ளவர்.

பட்டர்ஸ்காட்ச் புட்டிங்

சாப்பிட்டுப் பாருங்கள்

¾ கப் காரோ ஸிரப், ½ தேக்கரண்டியளவு உப்பு, 5 மேஜைக் கரண்டி ப்ரௌன் அன்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன் ப்ளவர், 2½ கப் பால், 6 துளி வனில்லா எஸன்ஸ், ½ மேஜை கரண்டியளவு ரெக்ஸ் ஸாலட் ஆயில்.

பாலையும் ஸிரப்பையும் சேர்த்து சற்று கொதிக்க வைக்கவும். ரெக்ஸ் ஸாலட் ஆயிலைச் சேர்த்து உப்பும், ப்ரௌன் அன்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரையும் கொஞ்சம் பச்சைப் பாலில் நன்றாகக் கரைக்கவும். அடுப்பில் வைத்து குழம்பாகும் வரை விடாமல் குறைந்தது 20 நிமிட நேரம் கிளறிக்கொண்டிருக்கவும். பின் வனில்லா எஸன்ஸை சேர்த்து, வார்ப்பில் (Mould) ஊற்றி நன்றாக குளிர்ந்த பின்பு, செர்ரியும் (Cherries) தித்திப்பான க்ரீமும் சேர்த்து பரிமாறவும்.

இங்கிலீஷ், ஹிந்தி, அல்லது தமிழ் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அழகான சமையல் புஸ்தகம் இலவசமாக வேண்டுவோர் இத்துடனுள்ள கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்து விடவும்)



தபால் செலவிற்காக 15 நய பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்பு நான் இதோடு அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/செல..

....

விலாசம்...

டிப்பார்ட்மென்ட் : KLK 14

கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ.
(இந்தியா) ப்ரைவேட் லிமிடெட்
தபால் பெட்டி : 994, பம்பாய் 1

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ (இந்தியா) ப்ரைவேட் லிட்.

இந்தியாவில் ஏஜெண்டுகள் : பாரி அன்டு கோ. லிட்.

பாண்டிமாதேவி



அத்தியாயம் 10

பயங்கர உண்மை

இராசசிம்மன் பதற்றத்தோடு 'இப்போதே தாய்நாடு திரும்பப் போகிறேன்' என்று கூறியதைக் கேட்டதுமே சக்க சேனாபதிக்கு நிலைமை புரிந்துவிட்டது. 'தென்பாண்டி நாட்டில் பகைவர் படையெடுப்பு நெருங்கிக் கொண்டிருக்கிறது போலும்' என்பதை அவரால் உணர முடிந்தது.

சேந்தன் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்த தன்னுடைய கப்பல் ஊழியர்களையும் மாலுமிகளையும் கூப்பிட்டு, "பாய்மரங்களைச் சரி செய்து பாய்களை விரியுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் தயாராகட்டும்" என்று இரைந்து உத்தரவுகள் போட ஆரம்பித்தான். சக்கசேனாபதி இராசசிம்மனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார்.

"வந்ததும் வராததுமாக இப்படி உடனே திரும்பிப் போகிறேனே என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். என் தாயையும், நாட்டையும், காப்பாற்ற வேண்டுமானால் நான் போய்த்தான் ஆக வேண்டும். நெருக்கடியான சமயம் இது. காசிப மன்னரிடம் சொல்லுங்கள். அவருடைய படைஉதவியை நம்பித்தான் நான் போகிறேன். அந்தப் படையை நீங்கள் தலைமை தாங்கி வந்தால்தான் எனக்கு நம்பிக்கை பிறக்கும். இருக்கிற நிலைமையைக் கேள்விப்பட்டால் நான் போவதற்குள்ளேயே அங்கே போர் மூண்டுவிடுமோ என்று பயமாயிருக்கிறது" என்று அவரிடம் உணர்ச்சிகரமாக வேண்டிக் கொண்டான் அவன். அதைக் கேட்டுக் கொண்டு அவர் கூறுவார்:—"இளவரசே! காசிபமன்னர்கூட நீங்கள் சொல்லாமலும், விடைபெற்றுக் கொள்ளாமலும் திரும்பிச் செல்வதை மன்னித்து விடுவார். ஆனால் அந்தப் பெண் கனகமாலைதான் நான் திரும்பிச் சென்றதும், என்னைக் கேள்விகளைக் கேட்டுத் திணற அடிக்கப் போகிறாள். குறும்புக்காரப் பெண்ணாயிற்றே அவள்!"

"கனகமாலையிடமும் என் அன்னையிடமும் வாழ்த்துக்களையும் சொல்லுங்கள். பிழைத்துக் கிடந்தால் எல்லோரும், எல்லோரையும் மறுபடியும் சந்திப்போம்" என்று சொல்லும்போதே குரல் தழதழத்துக் கண்களில் ஈரம் கசிந்துவிட்டது இராசசிம்மனுக்கு.

கப்பல் புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகிவிட்டதாகச் சேந்தன் வந்து தெரிவித்தான். சக்க சேனாபதி குமாரபாண்டியனின் காதருகில் ஏதோ சொல்லிச் சற்று ஒதுக்குப்புறமாக ஒரு மூலைக்கு அழைத்துக் கொண்டு போனார். "இளவரசே! இவர்களோடு கப்பலில் வந்து தப்பி ஓடிப் போன வாலிபன் யாரென்று கொஞ்ச நேரத்துக்குமுன் இடையாற்றுமங்கலத்து அம்மணியிடம் கேட்டேன். அது சேந்தனுக்குத்தான் தெரியுமென்று வெறுப்போடு பதில் சொல்லி

நா. பார்த்தசாரதி

விட்டார்கள். நீங்கள் அதுபற்றிச் சேந்த னிடம் கேட்டீர்களோ?'' என்று கேட்ட அவருக்கு, ''நான் சேந்தனைக் கேட்ட முதல் கேள்வியே அதுதான். ஆனால் அவன் அந்த வாலிபனைப் பற்றிய இரகசியத்தைக் கப்பலில் போகும்போது விரிவாகச் சொல்வதாகக் கூறிவிட்டான். அந்த வாலிபனைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவலைவிடக் காட்டில் இறந்த பெண்ணைப் பற்றியே எனக்கு அதிகம் கவலையாயிருக்கிறது'' என்று குமார பாண்டியன் பதில் சொன்னான்.

''சரி. விடை தாருங்கள். இன்னும் சில நாட்களில் படையோடு வந்து விழிஞத்தில் சந்திக்கிறேன்'' என்று கைகூப்பி வணங்கி விட்டுச் சக்கசேனாபதி கப்பலிலிருந்து கீழே இறங்கினார். கப்பலின் நங்கூரக் கயிறுகள் அவிழ்க்கப்பட்டன. குழல்மொழி கோபத்தோடு ஒரு மூலையில் நின்றுகொண்டிருப்பதை இராசசிம்மன் பார்த்துக் கொண்டான்.

''கோபப்படுகிறவர்களெல்லாம் அதை என்மேலேயே செலுத்துவதென்று வைத்துக் கொண்டால் நான் ஒருவன் என்ன செய்ய முடியும்? குழல்மொழியின் கோபமில்லாத முகத்தையும், சிரிப்பையும் நான் பார்க்க ஆசைப்படுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவள் அருகில் சென்றான் இராசசிம்மன். அதே நேரத்தில் கப்பல் துறையிலிருந்து மெதுவாக நகர்ந்தது.

எங்கோ பராக்குப் பார்த்துக் கொண்டு நின்ற குழல்மொழி விருட்டென்று திரும்பினாள். அப்பப்பா! அந்த முகத்தில் தான் எவ்வளவு கோபம்?

''மகாமண்டலேசுவரருடைய கண் பார்வைக்குத்தான் ஆற்றல் அதிகம். இப்போது பார்த்தால் அவருடைய பெண்ணின் கண்கள் அதைவிட அழுத்தமாகப் பார்க்கும் சக்தி வாய்ந்தவை என்றல்லவா நினைக்கத் தோன்றுகிறது?''

''நினைப்பீர்கள்! நினைப்பீர்கள்! ஏன் நினைக்க மாட்டீர்கள்? துறவியைப் போல் வேடம் போட்டு வேண்டியதைத் திருடிக் கொண்டு சொல்லாமல் ஓடிப் போகிற இளவரசருக்கு எது வேண்டுமானாலும் நினைக்க முடியுமே? ஆண்களுக்கே வஞ்சகக் குணம் அதிகம். நெஞ்சு அழுத்தமும் அதிகம். இல்லாவிட்டால் அந்தக் குட்டை மனிதர் என்னுடைய அறையிலேயே என்னை நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி விட்டு உங்களோடு இரகசியம் பேசுவதற்குத் துணியமுடியுமா? திடீரென்று இரகசிய விஷயங்களை அறியத் தகுதியற்ற மூன்றாவது பேராக மாறி விட்டேன்போலிருக்கிறது நான்! அப்படித்தானே?''

''சேந்தன் செய்ததில் தவறென்ன குழல்மொழி! அரசாங்கக் காரியங்களைப் பற்றிப் பேசும்போது பெண்கள் கூட இருப்பது நல்லதில்லைதானே?''

''அப்படியானால் என் தந்தை சேந்தனை மட்டுமே தனியாக இந்தக் கப்பலில் அனுப்பியிருக்கலாமே!''

''உண்மைதான்! நீ ஏன் வீணாக அலைய வேண்டும்?'' என்று இராசசிம்மன் சொன்னதும் குழல்மொழியின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! குங்குமச் சிவப்பில் இளைத்த அந்த முகம்



சினத்தின் எல்லை இதுதான் என்று சொல்வது போலிருந்தது.

"குழல்மொழி! இப்போது உன்னுடைய முகம் இந்தச் சங்கின் நிறத்தைப் போல் அழகாக இருக்கிறது" என்று வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டே தன் பட்டுப் பையிலிருந்து வலம்புரிச் சங்கை வெளியே எடுத்தான் குமார பாண்டியன்.

அந்தச் சங்கை அவனுடைய கையில் பார்த்ததும் அவள் முகத்தில் சினத்தின் சுவடு குன்றி வியப்பின் சாயல் படர்ந்தது. செம்பவழத் தீவில் வரும்போது சந்தித்த படகுக்காரப் பெண் கூறியதை நினைத்துக் கொண்டாள் அவள். அப்போது சேந்தனும் அங்கே வந்தான்.

"ஆ! செம்பவழத் தீவில் அந்தப் பெண் கூறியபோதே நினைத்தேன். இதை இவ்வளவு விலை கொடுத்து வாங்கியவர் நீங்களாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் நினைத்தது சரியாகவே இருக்கிறது" என்று சேந்தன் கூறினான்.

இராசசிம்மனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் வருகிற வழியில் தாங்கள் செம்பவழத் தீவில் இறங்கியதையும், அந்தப் பெண்ணைச் சந்தித்துவிட்டு வந்ததையும் கூறினார்கள்.

"அவள் ஒரு அபூர்வமான பெண்! ஒரு விதத்தில் நான் இப்போது உயிருடன் இருப்பதற்குக் கூட அவள்தான் காரணம். அவளை என்னால் மறக்கவே முடியாது" என்று குமாரபாண்டியன் மதிவதனியைப் பற்றி உருக்கமாகப் புனைந்து சொன்னபோது குழல்மொழியின் புருவங்கள் வளைந்து கண்கள் கருங்கின.

'ஒரு பெண்ணிடம் இன்னொரு பெண்ணைப்பற்றி மனம் விட்டுப் புகழ்ந்து பேசுவதில் எவ்வளவு இடர்ப்பாடு இருக்கிறது?' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு வாய்த்துடிப்பை அடக்கினான் இராசசிம்மன்.

"குமார பாண்டியருக்கு என்ன? எல்லாப் பெண்களும் அவருக்குப் போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்ய முன் வருகிறார்கள்! தெரிந்தும், தெரியாமலும், சுய உருவிலும், மாறு வேடத்திலும், அவரைத் தேடிக் கொண்டு வருகிறார்கள். பெண்களின் உதவியை அமோகமாகப் பெறுகின்ற இந்த ஒரு அம்சத்தில் அவர் கொடுத்து வைத்தவர்தான்" என்று கண்களிலும், இதழ்களிலும் குறும்பு மிளிரக் குத்தலாகச் சொன்னாள் குழல்மொழி.

"எந்தப் பெண்ணும் நீ சொல்லுகிற



அருள் வாக்கு

அம்பிகையின் சரணாரவிந்தம் ஒன்றிலே நம் மனம் எப்போதும் லயிப்பதுதான் சிரஞ்சீவித்வம். சித்த சுத்தியோடு இருந்து கொண்டு அம்பிகையின் குழந்தையாக இருந்து அவளுடைய உருவத்தை மனத்திலே நிறுத்தி ஆத்மாவை என்றும் பரமானந்தத்திலேயே திளைக்கச் செய்ய வேண்டும். நாம் செய்த பாவத்துக்கு அழ வேண்டாம். அம்மாதிரி தப்புக் காரியங்களுக்கு நமக்குப் புத்தி கொடுக்க வேண்டாமென்று மனம் கசியப் பிரார்த்திக்க வேண்டும். நாம் செய்கிற தப்புக்கு அம்பிகைதான் சாட்சி. வேறு ஒருவருக்குத் தெரிய வேண்டியதில்லை. அவளுடைய பாதங்களில் மானசீகமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டு பிரார்த்தனை செய்தாலே போதும்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

மாதிரி மாறு வேடம் போட்டுக் கொண்டு எனக்கு உதவி செய்ய இதுவரை வரவில்லையே குழல்மொழி! நீ உன்படச் சுய உருவுடன்தான் எனக்கு உதவி செய்திருக்கிறாய்!" என்று நகைத்தவாறே அவளுக்குப் பதில் சொன்னான்.

"ஏன்? தங்களுக்கே மாறு வேடத்தில் அதிகப் பற்று உண்டென்று சமீப காலத்து நிகழ்ச்சிகளால் தெரிய வருகிறதே" என்றான் சேந்தன். அவன் சொற்களை இடைமறித்துக் குழல்மொழி, "ஐயா, தென்பாண்டி நாட்டு இளவரசே! கொஞ்சம் நான் சொல்கிறபடி கேட்டு என்னோடு கீழ்த்தளத்து அறைக்கு வந்தீர்களானால் உங்களை ஆண் வேடத்தோடு சந்திக்க வருகிற பெண்களும் உண்டு என்பதற்குச் சரியானதொரு அடையாளம் என்னால் காட்டமுடியும்" என்று இராசசிம்மனை அறைகூவி அழைத்தாள்.

அவள் ஏதோ விளையாட்டுத்தனமான பொய்க் கோபத்தோடுதான் அப்படிச் சொல்கிறாள் என்று எண்ணிக் கொண்டு, "ஆகா! நான் தாராளமாக உன்னோடு கீழ்த்தளத்து அறைக்கு வரத் தயாராயிருக்கிறேன்! கப்பல் விழிஞத்தை அடைகிற வரையில் நீயும் சேந்தனும், எதை எதைச் சொல்கிறீர்களோ அதையெல்லாம் அப்படியே கேட்டு விடுவதென்று இருக்கிறேன். விழிஞத்தை அடைந்து அரண்மனைக்குப் போன பின்தான் என் தாயாரும், மகாமண்டலேசுவரரும் சொல்கிறபடி கேட்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கித் தளத்துக்குப் போவதற்காக நடந்தான் இராசசிம்மன். குழல்மொழியும், சேந்தனும் அவன் பின்னால் சென்றார்கள்.

"அம்மணி! சற்றுமுன் குமாரபாண்டியரிடம் தங்கள் தந்தையின் அவசரச் செய்தியைக் கூறுவதற்காக அழைத்துப் போனபோது தங்களை அறைக்குள் விடாமல் கதவைத் தாழிட்டதற்கு மன்னிக்க வேண்டும். தங்களை அவமானப் படுத்த வேண்டுமென்று நான் அப்படிச் செய்யவில்லை. தங்கள் தந்தையின் கட்டளைக்கு மரியாதை செய்யவே அப்படிச் செய்தேன். தாம் கூறியனுப்பிய செய்தியை இளவரசரிடம் நான் சொல்லும்போது எங்கள் இருவரையும் தவிர வேறெவரும் உடனிருக்கலாகாதென்பது மகாமண்டலேசுவரரின் கட்டளை" என்று போகும்போது குழல்மொழியின் அருகில் நடந்து கொண்டே கூறினான் சேந்தன்.

குழல்மொழி அதற்கு ஒன்றும் பதிலே சொல்லவில்லை. வேகமாகத் தன் அறைக்குள் போய் ஆண்கள் அணிந்து கொள்ளக்கூடிய அங்கி, தலைப்பாகை முதலிய சில உடைகளை எடுத்துக் கொண்டு வந்து குமாரபாண்டியனுக்கு முன்னால் போட்டாள். சேந்தனும் அருகில் நின்றான்.

அவற்றைப் பார்த்து விட்டு, "இவை யாருடையவை?" என்று கேட்டான் இராசசிம்மன்.

"எங்கள் கப்பலில் எங்களுக்குத் தெரியாமல் மாறுவேடம் போட்டுக் கொண்டு ஏறிக் கடைசியில் எங்களையே ஏமாற்றி விட்டுப்போன ஒரு நயவஞ்சகப் பெண்ணினுடையவை இவை. அந்தப் பெண் இந்த வேடத்தில் உங்களைத்தான் தேடிக் கொண்டு வந்திருக்கிறாள். இதற்குள் உங்களைச் சந்தித்தாலும் சந்தித்திருப்பாள். என் வாயில் துணியைத் திணித்து என்னைக் கட்டிப் போட்டுத் தப்பிப் போகும்போது அந்த நன்றி கெட்டவள் உங்களைச் சந்திப்பதற்குப் போவதாகத் தான் கூறினாள்" என்று சினம் பொங்கப் படபடப்போடு வார்த்தைகளை இரைந்தாள் மகாமண்டலேசுவரரின் பெண்.

"குமாரபாண்டியரே! தப்பிப் போன இளைஞனைப் பற்றி என்னிடம் தனியாகக் கேட்டீர்களல்லவா? அதை இப்போது தெரிந்து கொள்ளுங்கள். இந்த உடைகளில்தான் அந்த இரகசியம் இருக்கிறது" என்று சொல்லி விட்டுச் சேந்தனும் சேர்ந்து கொண்டு சிரித்தாள்.

"விளங்கும்படியாகத்தான் சொல்லுங்களேன்! நீங்கள் இரண்டு பேருமாக என் சிந்தனையைக் குழப்புகிறீர்களே? இந்த உடைகளை அணிந்திருந்தது யார்? இப்போது எங்கே?" என்று கேட்டான் இராசசிம்மன்.

"வேறு யாராயிருக்க முடியும்? தீரச் செயல்களையும், முரட்டுக் காரியங்களையும், வீரர்களின் உடன்பிறந்தவர்களால் தானே செய்ய முடியும்? தென்பாண்டி நாட்டுத் தளபதி வல்லாள தேவனின் அருமைத் தங்கை பகவதிதான் இந்த வேடத்தில் வந்து இந்தக் கப்பலில் கூத்தன் என்று பெயர் பூண்டு நடமாடினான். கப்பல் ஈழ நாட்டுக் கடற்படை வீரர்களிடம் பிடிபட்டதும் வேடத்தைக்

கலைத்து விட்டுத் தப்பி விட்டான். அவள் வேடத்தைக் கலைத்த இரகசியம் எங்கள் இருவருக்கும்தான் தெரியும்."

இவ்வாறு சேந்தன் சொல்லிக் கொண்டே வந்தபோது குமாரபாண்டியனின் வாயிலிருந்து சோகக் குரல் ஒன்று எழுந்து ஒலித்தது. பொறியற்ற பாவைபோல் சோர்ந்து கப்பலின் தளத்தில் வீழ்ந்து இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டான் அவன். சேந்தனும், குழல்மொழியும் இராசசிம்மனின் நிலையைக் கண்டு பதறிப்போனார்கள்.

"என்ன? அந்தப் பெண் உங்களையும் சந்தித்து ஏதாவது ஏமாற்றி விட்டாளா? ஏன் இப்படிச் சோர்ந்து போய்த் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டீர்கள்? அல்லது கப்பல் செல்கிற வேகத்தில் மயக்கம் உண்டாகிறதா?"— என்று சேந்தன் கேட்டான்.

"ஐயோ! இதென்ன? இப்படி அல்லித் தண்டுமாதிரித் துவண்டு விழுகிறீர்களே? உங்கள் உடம்புக்கு இருந்தாற்போல் இருந்து என்ன வந்துவிட்டது?" என்று கூறிக்கொண்டே கீழே குனிந்து ஆதரவாகக் குமார பாண்டியனின் உடம்பைத் தாங்கிக் கொண்டாள் குழல்மொழி.

குமாரபாண்டியன் விழிகள் இமையாமல் சூன்யத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டே தலையில் வைத்த கைகளை எடுக்காமல் நெடுநேரம் கிடந்தான்.

பின்பு நிதானமாக வாய் திறந்து அவர்கள் இருவரையும் பார்த்து ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னான்: "தமனன் தோட்டத்துக்கும் பொலன்னறுவைக்கும் இடையிலுள்ள காட்டில் மரணமென்று அந்தப் பெண்ணுக்கு விதி இருந்தது போலிருக்கிறது. பாவம்! இங்கிருந்து தப்பியோடி என்னைச் சந்திக்க வந்த வழியில் இயற்கையின் கூத்துக்குப் பலியாகி இறந்து போய்விட்டாள் அவள்."

அத்தியாயம் 11

படைகள் புறப்பட்டன

வடதிசை மன்னர்களின் பெரும் படையை அணி வகுக்கவும், திட்டமிடவும்; — கொடும்பாளூரில் இரண்டு மூன்று நாட்கள் கழிந்துவிட்டன. தெற்கேயுள்ள குழப்பமான நிலைகள் ஒவ்வொன்றாகத் தெரியத் தெரிய வடதிசையரசர்களின் மனத்திடம் அதிகமாயிற்று.

படையெடுப்புக்கு முன்னால் கடைசியாக அவர்களுக்குக் கிடைத்த செய்தி, 'மகா மண்டலேசுவரருக்கும், தென்பாண்டி நாட்டின் ஏனைய கூற்றத் தலைவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது' என்பது ஆகும்.

"இராசசிம்மன் அரசுரிமைப் பொருள்களைத் திருடிக் கொண்டு ஓடிப் போய் விட்டான். முத்துக்குளி விழாவில் குழப்பம் நடந்துவிட்டது. மகாமண்டலேசுவரரைக் கூற்றத் தலைவர்கள் மதிக்கவில்லை. கரவந்தபுரத்துப் படையும், தங்கள் படையும் தவிர வேறு படையுதவி இதுவரையில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அந்தரங்கமான பிணக்கு ஒன்று தளபதி வல்லாள தேவனுக்கும், மகாமண்டலேசுவரருக்கும் மனத்தளவில் இருக்கிறது" என்ற இந்தச் செய்திகளெல்லாம் மொத்தமாகச் சேர்ந்து தங்களுடைய வெற்றிக்கு மிகவும் சாதகமான சூழ்நிலையைத் தென்திசையில் உண்டாக்கி வருவதாகச் சோழன் முதலிய ஐந்து வடதிசையரசர்களும் எண்ணினர்.

திட்டமிட்டிருந்தபடியே படைகளை இரண்டு பிரிவாகப் பிரித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள் அவர்கள். சோழனும், கொடும்பாளூரானும் எதிர்பார்த்தது போல் தென்பாண்டி நாட்டுப் படைகள் மதுரைக்கோ, அதற்கு அப்பாற்பட்ட இடத்துக்கோ எதிர்கொண்டு வந்து தாக்கவில்லை. நெல்வேலிக் கோட்டத்துக்குள் புகுந்து தென்பாண்டி நாட்டு எல்லையை நெருங்குகிறவரையில் அவர்களுக்கு எதிர்ப்பே இல்லை.

ஆனால் வெள்ளூருக்கு அருகில் கரவந்தபுரத்துப் படை எதிர்த்து நின்றது. அதோடு சேரநாட்டுப் படைவீரர்களும் பெருவாரியான அளவில் தென்பட்டனர். வடதிசைப் படையை நடத்திக் கொண்டு வந்தவர்களுக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. "ஓகோ! விட்டுப் பிடிக்கும் சூழ்ச்சியை மனத்திற் கொண்டு பாண்டி நாட்டுப் படைகள் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கின்றன. ஆனாலும் மகாமண்டலேசுவரர் கெட்டிக்காரர்தான். சேர நாட்டுப் படை உதவி இவர்களுக்குக் கிடைத்திருக்க முடியாது என்று நாம் நினைத்து மகிழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே வந்து பார்த்தால் எதிர்த்து நிற்கும் படைகளில் அதிகமானவை சேரநாட்டிலிருந்து வந்திருக்கின்றன" என்று போர் ஆரம்பமாகுமுன் களத்தில் நின்று கொண்டு தன் நண்பர்கள் நால்வரிடமும் கூறினான் சோழ மன்னன்.

"இன்னொரு செய்தியையும் நாம் கவனிக்க வேண்டும். இதுவரையில் தளபதி வல்லாள தேவனும், அவன் பொறுப்பிலுள்ள படைகளும் களத்துக்கு வந்து சேரவில்லையென்று தெரிகிறது. இதைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்!" என்றான் கொடும்பாளூர் மன்னன்.

அவன் கூறியது மெய்தான்! வடதிசைப் படைகளைத் தடுத்துப் போர் செய்வதற்காக நெல்வேலிக்கும் கரவந்தபுரத்துக்கும்

தொடர்ச்சியான ஆறு விளம்பரங்களில் கடைசி இது.

கயிறின் கதை



இடையே எதிர்கொண்ட பாண்டியப் பெரும்படையில் தளபதி வல்லாளதேவன் தென்படவில்லை. கரவந்தபுரத்துக் குறுநில வேள் பெரும்பெயர்ச்சாத்தனும், சேர நாட்டிலிருந்து வந்த படையை நடத்திக் கொணர்ந்த படைத்தலைவன் ஒருவனும்தான் போர்க்களத்தில் பொறுப்பானவர்களாக முன்னால் நின்றார்கள். சேர நாட்டுப் படை பொதியமலை வழியாகக் கரவந்தபுரத்தில் வந்து பெரும்பெயர்ச் சாத்தனின் படையோடு சேர்ந்து கொண்டிருந்தது.

இரண்டு படைகளும் சந்தித்த இடத்தில் தாமதமின்றிப் போர் தொடங்கி விட்டது. தளபதி வல்லாள தேவன் களத்தில் தென்படாததனால் அவன் எந்தக் கணத்திலும் வேறொரு திசையிலிருந்து படைகளுடன் வந்து தங்களைத் திடீர்த் தாக்குதலுக்கு ஆளாக்கலாமோ என்று வடதிசை மன்னர்களுக்கு உள்ளூற ஒரு பயம் இருந்தது. எந்த விதத்தில் எத்திசையிலிருந்து திடீர்த் தாக்குதல் ஏற்பட்டாலும், அதைச் சமாளிக்கத் தக்கபடி தங்கள் பெரும் படையைப் பிரித்து வகுத்துக் கொண்டு போரைச் செய்தனர் வடதிசை மன்னர்.

அதே நிலையில் அதே இடத்தில் சில நாட்கள் போர் நீடித்தது. முதலில் இரு பக்கத்திலும் வெற்றி தோல்விகள் அதிகமின்றி மந்தமாக இருந்த போர் மூன்றாம் நாள் காலையில் நிலை மாறிவிட்டது. முதல் இரண்டு நாட்களிலும் தாக்குதலை நன்றாகச் சமாளித்த கரவந்தபுரத்துப் படை சற்றே தளர்ந்தது. சேரர் படை உடனிருந்தும் பயனின்றிப் பின்வாங்குகிற நிலைமை ஏற்படும் போலிருந்தது. பெரும்பெயர்ச் சாத்தன் நிலைமையின் நெருக்கடியை உடனே மகாமண்டலேசுவரருக்குச் சொல்லியனுப்பினான். பாவம்! மகாமண்டலேசுவரருக்கு உண்டாகியிருந்த வேறு நெருக்கடிகளைப் பற்றி அவனுக்குத் தெரியாதல்லவா? போர்க்களத்திலிருந்து பெரும்பெயர்ச்சாத்தன் அனுப்பிய அவசரத் தூதன் போய்ச் சேருவதற்கு முன் மகா மண்டலேசுவரரும், மற்றவர்களும் எந்த நிலையில் இருந்தார்கள் என்பதை முன்னால் சென்று காணலாம்.

* * *

மனிதனுக்கு அறிவின் பலம் அதிகமாக, ஆகத் தன்மேலுள்ள நம்பிக்கையும், சுய பலமும், குறைவது போல் ஒரு பயம் அந்தரங்கமாக உண்டாவது இயற்கை.

கூற்றத் தலைவர்களின் எதிர்ப்பால் தமக்கு எத்தகைய தொல்லைகள் விளையுமென்பதை மிகக் குறுகிய காலத்திலேயே மகாமண்டலேசுவரர் புரிந்து கொள்ள நேர்ந்தது.

''குமாரபாண்டியனும் திரும்பி வரவில்லை. கொடும்பாளூரில் வடதிசைப்படைகள் ஒன்று சேர்ந்து விட்டதாகத் தகவல் தெரிகிறது. நம்மிடம் இருக்கிற படை வீரர்களின் தொகை குறைவு. ஆகவே தென்பாண்டி நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கிடைத்தவரை வீரர்களைச் சேர்த்துக் கொண்டு படையின் தொகையைப் பெருக்குவது உன் கடமை. எனவே என்னுடைய இந்தத் திருமுகத்தைப் படித்தவுடன் நீயே ஊர் ஊராகச் சென்று என் விருப்பத்தைச் சொல்லிப் புதிய படை வீரர்களைச் சேர்க்கவும்'' என்று மகா மண்டலேசுவரர் கோட்டாற்றுப் படைத்தளத்திலிருந்த தளபதிக்கு ஒரு அவசரக் கட்டளை அனுப்பியிருந்தார். அதற்கு முதல் நாள்தான் அம்பலவன் வேளான் இடையாற்று மங்கலத்திலிருந்து ஆயுதங்களைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, மகாமண்டலேசுவரரின் திகைப்பான உண்மையடங்கிய ஓலையையும் தந்து போயிருந்தான். அவற்றால் அவர்மீது பயமும், வெறுப்பும் தளபதிக்கு உண்டாகியிருந்தாலும், கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டான். தன் அதிகாரத்துக்கு உட்பட்ட சிறு படைத்தலைவர்களில் சிலரையும் உடன் அழைத்துக் கொண்டு முக்கியமான ஊர்களில் சுற்றினான் அவன்.

மூன்று தினங்களுக்குப்பின் தளபதியிடமிருந்து மகாமண்டலேசுவரருக்குக் கீழ்க்கண்ட பதில் ஓலை வந்து சேர்ந்தது.

''தங்கள் கட்டளைப்படியே படைவீரர்கள் சேர்ப்பதற்கு ஊர் ஊராகச் சென்று அலைந்தேன். அலைந்ததற்குப் பயனில்லை. தங்கள் பிரதேசமாகிய மருங்கூர்க்கூற்றம் ஒன்றில்தான் சிலநூறு ஆட்கள் படையில் சேர்ந்தனர். மற்றக் கூற்றங்களிலெல்லாம் யாருமே படையிற் சேர முன்வரவில்லை. அங்கங்கே கூற்றத் தலைவர்களைச் சந்தித்துப் படைக்கு வீரர்கள் சேர்க்கும் முயற்சியில் எங்களோடு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டு தங்கள் கட்டளையைக் காண்பித்தேன். அவர்களில் எவரும் ஒத்துழைக்க இணங்கவில்லை. தங்கள் பகுதிகளிலிருந்து யாரும் போருக்கு ஆட்கள் சேர்க்க விருப்பமில்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டனர். நான் திரும்பிவிட்டேன். தங்களுடைய அடுத்த கட்டளையை எதிர்பார்த்துக் கோட்டாற்றுப் படைகளோடு காத்திருக்கிறேன்.''

இந்தப் பதிலைக் கண்டு அவர் திகைக்கவில்லை. ஏனென்றால் தளபதியின் மேற்கண்ட பதில் கிடைக்கு முன்பே மகா

மண்டலேசுவரர் வேறு ஒரு வகையிலும் படை உதவிக்கு ஏற்பாடு செய்திருந்தார். மகாராணி வானவன்மாதேவி கைப்படவே படை உதவி செய்யுமாறு வேண்டுதல் திருமுகம் ஒன்று எழுதி வாங்கி அதை மிக அவசரமாகச் சேர நாட்டுக்குக் கொடுத்து அனுப்பினார்.


அவர் எதிர்பார்த்ததை விடச் சேர மன்னனிடமிருந்து மறுமொழி கிடைத்தது. ''தனக்கு உடல் நலமில்லாமையால் தானே நேரில் போரில் உதவி செய்ய வர முடியவில்லையென்றும் தன் படைகளைப் பொதியில் மலைவழியாகக் கரவந்தபுரத்துக் கோட்டைக்கு உடனே அனுப்பி வைப்பதாகவும் சேர மன்னன் தெரிவித்திருந்தான். அதன்படியே சேரர்படைகள் கரவந்தபுரத்துக்குப் புறப்பட்டு விட்டன.


உடனே மகாமண்டலேசுவரர் கரவந்தபுரத்துக் குறுநிலவேள் பெரும் பெயர்ச் சாத்தனுக்குச் சேரர் படை உதவி வருவதைக் குறிப்பிட்டு எந்தக் கணத்தில் வடக்கேயிருந்து பகைவர் வந்தாலும் எதிர்க்கத் தயாராயிருக்குமாறு அறிவித்து ஒரு தூதனை அனுப்பினார்.

தென்பாண்டி நாட்டுப் படைகளையும் தளபதி வல்லாள தேவனையும் மட்டும் வடக்கு எல்லையில் எதிர்த்தாக்குதலுக்குப் போக விடாமல் கோட்டாற்றிலேயே நிறுத்தி வைத்திருந்தார் அவர். அதற்கும் ஒரு காரணமிருந்தது. சேந்தனும், குழல்மொழியும் குமார பாண்டியனுடன் விழிஞத்துக்கு வந்துசேரும் கப்பலை அவர் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அதைப் பற்றி மகாராணியிடமும் கூறி அவருடைய ஆவலை வளர்த்து விட்டிருந்தார். குமார பாண்டியன் வந்ததும், கோட்டாற்றிலுள்ள படைகளையும், தளபதியையும், அவனைக் கலந்துகொண்டு போர்முனைக்கு அனுப்பலாமென்பது மகாமண்டலேசுவரரின் நினைப்பாயிருந்தது. எந்த விநாடியில் குமாரபாண்டியன் கப்பலில் தம் பெண்ணுடனும் சேந்தனுடனும் வந்து இறங்கினாலும், அதை உடனே ஓடி வந்து தமக்குத் தெரிவிப்பதற்காக விழிஞத்துக்கு ஆள் அனுப்பியிருந்தார் அவர். தளபதிக்குத் தெரியாமல் அவருடைய ஆள் விழிஞத்தில் காத்திருக்க ஏற்பாடு செய்திருந்தார் அவர். அவருக்குத் தெரியாமலே தன்னுடைய சார்பில் ஆபத்துதவிகள் தலைவனை விழிஞத்தில் காத்திருக்க ஏற்பாடு செய்திருந்தான் தளபதி. குமார பாண்டியன் தம் மகளுடனும், சேந்தனுடனும் வந்து சேர வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார். குமார பாண்டியன் தன் தங்கை பகவதியோடு விழிஞத்தில் வந்து இறங்க வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான். அவர்கள் இருவருக்கும் அப்பால் ஒவ்வொரு கணமும் ஆசையும், பாசமும் துடிக்கத் தாய்மைப் பேராவலுடன் மகாராணியும் அந்த வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இந்த நிலையில்தான் வெள்ளூருக்கு அருகில் இரண்டு படைகளும் கைகலந்த செய்தி தெரிந்தது. நிலைமை அவ்வளவுக்கு முற்றிய பின்பும் கோட்டாற்றிலுள்ள சேனைகளையும், தளபதியையும் போர்முனைக்கு அனுப்பாமல் வைத்துக் கொண்டிருப்பது நியாயமா?' என்று எண்ணித் தயங்கினார் மகாமண்டலேசுவரர். • போர் தொடங்கிச் சில நாட்கள் கழிந்த பின்பும் குமார பாண்டியன் வரவு பற்றி ஒன்றும் தெரியவில்லை. என்ன செய்வதென்று அவர் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, போர்முனையிலிருந்து பெரும் பெயர்ச் சாத்தன் அனுப்பிய தூதன் அவசரமாக வந்து அபாய நிலையைத் தெரிவித்தான். அவன் தெரிவித்ததிலிருந்து வடதிசைப் படையை எதிர்க்கக் கரவந்தபுரத்து வீரர்களும், சேர நாட்டுப் படைகளும் காணவில்லை என்று தெரிந்தது. மகாமண்டலேசுவரரே நேரில் புறப்பட்டுக் கோட்டாற்றுப் படைத் தளத்துக்குப் போனார். அவசரமாகத் தளபதியைச் சந்தித்தார். போர்முனை நிலையைக் கூறினார்.

''தளபதி! படைகளை மட்டும் இப்போதே அவசரமாகக் கரவந்தபுரத்துக்கு அனுப்பு. நீ சிறிது பின் தங்கிப் போகலாம். எனக்கு உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்'' என்றார் மகாமண்டலேசுவரர். அவர் சொற்படியே தான் போகாமல் படைகளை மட்டும் அனுப்பி விட்டு அவரைத் தனியே சந்தித்தான் தளபதி. மகாமண்டலேசுவரர் கண்கள் சிவக்க ஆத்திரத்தோடு அவனைப் பார்த்தார்.

''குமார பாண்டியர் வந்து உன்னை விசாரித்துத் தீர்ப்புக் கூறுகிறவரையில் போருக்குத் தளபதியாக நீ தலைமை தாங்கி நிற்க விடமாட்டேன் நான். நீ குற்றவாளி. என் ஆணையை மீறி எனக்குத் தெரிந்தும், தெரியாமலும் பல சதிக் குற்றங்களை நீ செய்திருக்கிறாய்'' என்று திடீரென்று எரிமலை வெடித்தது போல் கடுங் குரலில் இரைந்தார் அவர். அறிவின் அடக்கத்தை மீறி அவர் ஆத்திரமாகப் பேசுவதை வல்லாளதேவன் அப்போதுதான் முதன்முறையாகக் கண்டான். அவனுடைய கண்களும் சினக் குறிப்புக் காட்டின. அவன் முகத்தில் கோபம் படர்ந்தது. (தொடரும்)


Exide




Cashmere
Bouquet
TALCUM POWDER

தென்கரை

ஆர்வி

அத்தியாயம் 11

அந்தப் படம் ஆடியது

சொர்ணம்பாளுக்கு அன்று சிறிது நேரம் கூட இளைப்பாற முடியவில்லை. காலையிலிருந்தே யாராவது அவளைப் பார்க்க வந்து போய்க் கொண்டேயிருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் கால்மணி நேரமாவது பேசியனுப்பத்தான் வேண்டியிருந்தது.

சில சமயங்களில் அட்படி நேர்ந்து விடுவதில்லையா? வந்தால் சோதனையாக, சங்கிலித் தொடர் போல் ஒருவர் கிளம்புவதும் ஒருவர் வருவதுமாக இருப்பார்கள். வராத நாட்களில் ஒருவருமே வரமாட்டார்கள். அப்பொழுது யாராவது வந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போக மாட்டார்களா என்று கூட இருக்கும். ஆனால் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டமாதிரி யாருமே வராமல் இருந்து விடுவார்கள்.

இன்று என்னவோ அவளுக்குத் தெரிந்தவர்கள் பலர் ஒருவர் மாற்றி ஒருவர் வந்து கொண்டேயிருந்தார்கள். பங்களாவின் வாசலில் நாலைந்து மோட்டார் வண்டிகள் நின்று கொண்டேயிருந்தன. மாடிக்கும் கீழுக்குமாக ஏறியிறங்கி, பொன்னிக்குக் கால் ஒடிந்தே விட்டது. நிறை மாதக் கர்ப்பிணி என்று பார்க்க வந்தவர்கள் வாங்கி வந்த பழங்களைக் கொண்டு இரண்டு கடைகளே வைத்து விடலாம். விதம் விதமான பழங்களின் வாசனை மூக்கைத் துளைத்தது. சொர்ணம்பாளுக்கு வராதவர்கள் எல்லாரும் வந்ததில் ஒருபுறம் ஆறுதலாகவும் மற்றொரு புறம் ஆயாசமாகவும் இருந்தது; ஒரு புறம் பெருமையாகவும், மற்றொருபுறம் சிறுமையாகவும் இருந்தது. கொடுக்க வந்த தெய்வம் இந்தப்பிள்ளையைக் காலா காலத்தில் கொடுத்திருக்கக் கூடாதா? இத்தனை பேர்களுக்கு நடுவில் இந்த வயதில் வயிற்றைத் தூக்கிக் கொண்டு சாய்ந்திருக்க அவளுக்கு அவமானமாகத்தான் இருந்தது. லஜ்ஜையினால் அவள் பேசக்கூட முடியாமல் திணறினாள். உடல் வேதனை பாதியென்றால் உள்ளத்து வேதனை பாதி யிருந்தது.


அன்று காலையில் எழுந்ததுமே அவள் தன் முகத்தைக் கண்ணாடி முன் போய் நின்று பார்த்துக் கொண்டாள். அவள் கண்கள் தற்செயலாகக் காதோரம் சென்றன. அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. சேர்ந்தாற் போல் ஐந்தாறு வெள்ளிக் கம்பி ஓடுவது போலத் தென்பட்டது. அவளுடைய பலவீனமான இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இது எப்பொழுது முதல் இப்படியிருக்கிறது? இவ்வளவு நாட்களும் ஏன் கண்ணில் படவில்லை? அட ராமா! இதோ உச்சி வகிட்டில் இந்தப் பக்கம் ஒன்று; அதோ அந்தப் பக்கம் ஒன்று. நடுவில் ஒன்று, இரண்டு, மூன்று...ஆறு, ஏழு! இத்தனைக்கும் உடலில் இளமை திரும்பி வந்து விட்டது போல் சில மாறுதல்களை அவளே உணர்ந்திருந்தாள். பசுமையும் நீரோட்டமும் முகத்துக்கு ஒரு புதுப் பொலிவைத் தந்திருந்தன; அங்கங்களுக்கெல்லாம் ஒரு புது அழகைப் பூசியிருந்தன. பரமசிவம் பழைய சொர்ணம்பாளைப் பார்ப்பதாக அவளுக்குப் படவில்லை. பத்து வயதேனும் பாலியம் திரும்பிய சொர்ணம்பாளைப் பார்ப்பதாகத்தான் அவள் எண்ணிக் கொண்டாள். பூவும் பிஞ்சுமாகக் குலுங்கும் புது வருஷத்து மாவைப் போலச் சொரிந்து நிற்பதாக அவள் பாவனை செய்து கொண்டாள். ஆனால் இது என்ன வெள்ளி நரை இழைகள்? அவள் இரு கைகளாலும் காதோரங்களை மறைத்துக் கொண்டு திரும்பி விட்டாள். அப்புறம் அரை நாழிகை நேரம் அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. அட்வகேட் அருணாசலத்தின் மனைவி அபயம் வந்தாள்; லேடீஸ் கிளப் பின் பொதுக் காரியதரிசி லீலா நீலகண்டன் வந்தாள்; சிட்டாட்டத் தோழி சித்திரமாலா வந்தாள். அப்புறம் யார் யாரோ வந்து கொண்டேயிருந்தார்கள். பேச்சிலே அவள் அதை மறந்து விட்டாள். ஆயினும் யாராவது தன் முகத்தைப் பார்ப்பது போல் தோன்றினால் அவளுக்கு அந்த நினைவுதான் வந்தது. இரு காதோரங்களையும் மறைத்துக் கொண்டாள். இந்த விசாரம் அவளுக்குக் கடைசி வரையில் இருந்தது.

கர்ப்பிணிகளுக்குக் கவலை என்பது இருக்கலாமா? பணம், காசு வசதிகள் இல்லாத ஏழைகளுக்குத்தான் கவலை; இது அந்த வகையில் கவலையில்லை என்று எண்ணிவிட முடியுமா? சொர்ணம்பாளுக்கு அதுவே பெரிய மன உளைச்சலாக இருந்தது.

இப்போது அவளுக்கு அவசியம் ஓய்வு தேவை என்று லேடி டாக்டர் ராஜபூஷணம் வற்புறுத்தி வந்தாள்.

"அம்மா! இது பத்தாவது மாதம். எப்போதும் உற்சாகமாக இருக்க வேணும். அந்தக் கவலை, இந்தக் கவலை என்று எதுவும் படக் கூடாது. இல்லையோ, எக்கச்சக்கமாகப் போய் வீண் தொந்தரவாகப் போகும்; சொல்லி விட்டேன்!" என்று அடிக்கடி கூறி வந்தாள். இப்பொழுதெல்லாம் ராஜபூஷணத்துக்கு நல்ல மதிப்பு இருந்தது. மூன்றாவது மாதத்தில் தான் சொன்னதை நம்பாமல், சொர்ணம்பாளும் பரமசிவமும் மிஸஸ் ஜேம்ஸிடம் போய்ப் பார்த்துவிட்டு வந்தது அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் அவள் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாகச் சமயம் வரும் போதெல்லாம் தனக்கு இணையாக இன்று வேறு யாரும் சென்னையிலேயே இல்லை என்று தொனிக்கும்படி ரோசமாகவும் கேலியாகவும் குத்திக் காட்டினாள்.

"இது கர்ப்பமில்லை; கட்டி என்று சொன்னீங்களே, பாத்தீங்களா இப்போ? என்னைவிடப் பெரிய பெரிய டாக்டர்கள் இருக்கலாம். ஆனால் நான் போட்ட புள்ளியை யாராலும் இல்லை என்று மாற்றிவிட முடியாது. யாராக இருந்தாலும் சரிதான். முதலில் இப்படித் தான் என்னிடம் ஒரு கேஸ் வந்தது. அப்புறம் சுற்றியடித்து டாக்டர் ஜேம்ஸிடம் போயிற்று. கடைசியில் திரும்பவும்



என்னிடமே வரும்படியாக ஆகிவிட்டது; இதுக்கு என்னசொல்றீங்க?"

டாக்டர் ராஜபூஷணம் இவ்வாறு சொன்னபோது, அவள் வேறு யாரையோ சொல்கிறாள் என்றுதான் சொர்ணம்பாள் எண்ணிக் கொண்டாள்.

"டாக்டரென்றால் நம்பிக்கைவேணும்!"

"பின்னே வேண்டாமோ?"

"யாரும் இருக்கிறதை மாற்றிச் சொல்லி விடப் போவதில்லை. என் அநுபவத்திலிருந்து சொல்கிறேன். என்னுடைய 'பேஷண்ட்ஸ்' எல்லாம் எங்கே வேணுமானாலும் போகட்டும்; பார்க்கட்டும்; கடைசியில் அவர்கள் எங்கிட்டேதான் திரும்பி வருவாங்க. இதை நான் பார்த்து விட்டேன்!" என்றாள் ராஜபூஷணம்.

சொர்ணம்பாள் அப்பொழுதும் உண்மையில் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ராஜபூஷணத்தை விட்டால் வேறு வழியில்லை என்பதுவரையில் அவளுக்குப் பட்டு விட்டது. அவள் ஓய்வு வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பது சரிதான்; ஆனால் பார்க்க வருபவர்களிடம் பேசாமல் இருந்துவிட முடியுமா?

உட்கார்ந்து உட்கார்ந்து அவளுக்கு இடுப்பெல்லாம் விட்டுப் போயிற்று. மைமை வலியாக ஒரு வேதனை இருந்து கொண்டேயிருந்தது. மணி மூன்று அடித்தபோதுதான் அவள் சிறிது கண்ணயர்ந்தாள். ஆனால் உடனேயே அவளுக்கு விழிப்புக் கொடுத்து விட்டது. படுக்கையில் இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து உட்கார்ந்து பார்த்தாள். சாய்ந்துகொண்டு பார்த்தாள். எதுவும் அவளுக்கு வாட்டப்படவில்லை.

"பொன்னி! உடம்பை என்னமோ செய்கிறதடி!"

"இன்னிக்கு ரொம்பக் களைச்சுப் போயிட்டீங்க, அம்மா!"

சொர்ணம்பாள் மறுபடியும் படுத்துக் கொண்டாள். முதுகையும் மூளையையும் இணைத்த ஒரு நரம்பு பளீரென்று வெட்டி இழுப்பது போலிருந்தது. கால்களிலும் கைகளிலும் ரத்த ஓட்டம் இல்லாதது மாதிரி ஒரே குடைச்சலாகக் குடைந்தது.

"பொன்னி! ஐயா எங்கே?"

"தூங்கறாங்க!"

"உம்...அவர்கள் பாடு தேவலை. கவலையில்லாமல் தூங்கலாம். நமக்குத்தானே எல்லாம்! படவேண்டிய அவதியெல்லாம் அவர்களுக்கு என்ன தெரியும்?"

பொன்னி எஜமானியின் கால்களை மெதுவாக அமுக்கிப் பிடித்துக் கொண்



டிருந்தாள். சொர்ணும்பாளின் பார்வையும் போக்கும் இயற்கையாக இல்லை. என்னவோ பரிதாபமாகவும் பயமாகவும் இருந்தது.

"ஐயாவைக் கூப்பிடட்டுமா?"

"ஊஹூம்; வேண்டாம்...உட்கார்ந்து பேசிக் கொண்டேயிருந்தது உடம்புக்கு ஆகவில்லை."

பொன்னி இடுப்பைப் பிடித்தாள்; கையைப் பிடித்தாள்; காலைப் பிடித்தாள். சொர்ணும்பாள் நிலைகொள்ளாமல் எழுந்து உட்காருவதும் சாய்ந்து கொள்வதுமாக இருந்தாள். வெய்யில் சிறிது தணிந்தும் வெப்பம் தணியாமல் உடலெல்லாம் புழுங்கியது. சோலைக்கு நடுவேயிருந்த அந்தக் கட்டடம் குளிர்ச்சியாகத்தான் இருந்தது. விசிறிகள் இரண்டும் வேகமாகச் சுழன்று கொண்டுதான் இருந்தன. அப்பொழுதும் மேலேயிருந்த ஆடை வேர்வையால் நனைந்துவிட்டது.

சொர்ணும்பாள் கால்மாட்டுப் பக்கமாக வைத்திருந்த புகைப்படத்தைப் பார்த்தாள். உஷா கைக் குழந்தையாக இருந்த போது அவள் தூக்கி வைத்துக் கொண்டு எடுத்த படம் அது. சொர்ணும்பாளுக்கு மிகவும் பிடித்த படம் அது. ஒரு தாயின் பரிவும் பெருமையும் அந்த முகத்தில் பளிச்சென்று தெரிந்தன. உஷாவோடு எடுத்துக் கொண்ட எந்தப் படத்திலும் அவள் இவ்வளவு அழகாகத் தோன்றவில்லை. அதனால்தான் அதற்கு வர்ணம் கொடுத்து, சட்டம் போட்டு, தன் படுக்கைக்கு எதிரே மாட்டியிருந்தாள். தினம் ஒரு முறையாவது அது கண்ணில் பட்டுக் கொண்டுதானிருக்கும். ஆனால் இப்போதெல்லாம் அது அங்கே இருப்பதாகவே அவளுக்குப் படவில்லை. பார்த்துப் பார்த்துப் பழகிப் பழகி அதுவும் மற்றவைகளைப் போல் சாதாரணப் பொருளாகி விட்டது; படம் ஒன்றைப் பார்க்கிற உணர்ச்சியே மரத்துவிட்டது. ஆனால் இன்று எப்படித் திரும்பினாலும் அந்தப் படம்தான் கண்ணில் பட்டுக் கொண்டிருந்தது. அந்தப் படத்திலிருந்த முகத்தில் நிலவிய மகிழ்ச்சியெல்லாம் இப்பொழுது இருந்த வேதனையில் எரிச்சலையுண்டாக்கியது. 'எல்லாம் பொய்! எல்லாம் வேஷம்! ஏமாற்று!' என்று உள்ளத்துக்குள்ளே ஒரு குரல் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்தப் படம் இவ்வளவு காலும் போல் இல்லாமல் இன்று மட்டும் கண்ணுக்கும் கருத்துக்கும் இருப்பது படுவானேன்?

"பொன்னி!"

"அம்மா!"

அந்தப் படத்தையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த சொர்ணும்பாள் பொன்னியை அழைத்ததோடு நிறுத்திக் கொண்டாள். மேலே அதைப் பற்றிச் சொல்ல அவளுக்குத் துணிவு வரவில்லை. அது அங்கே கண்ணில் படாமல் இருந்தால் தேவலை போலிருந்தது. ஆனால் பொன்னி தன் தவற்றை உணர்ந்தவளைப் போல் எழுந்து சென்று, அந்தப் படத்தை நன்றாகத் துடைத்துவிட்டு வந்தாள்.

பாரிஸ்டர் கிளப்புக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். உஷா கட்டுவனுறை எதிர்பார்த்துக் கொண்டு கீழே ஹாலில் காத்திருந்தாள். ஒருவராவது அவளை மேலே வந்து பார்க்கவில்லை. அவர்கள் வந்தார்களோ என்னவோ, அவளுக்குத் தெரியாது. காப்பியை எடுத்துக் கொண்டு பொன்னி வந்ததுதான் அவளுக்குத் தெரியும்.

"பொன்னி—எதற்கும் மிஸஸ் மீனுட்சிக்குப் போன் செய்வேன்......ஒரு தடவை வந்து விட்டுப் போகட்டும்!"

அப்பொழுதுதான் பொன்னிக்குச் சிறிது திகில் உண்டாயிற்று. வெகுநாட்களாக எதிர்பார்த்த அந்த நேரம் வந்து விட்டதோ என்ற கலக்கம் ஏற்பட்டது. "அம்மா! அப்படியே டாக்டருக்கும் போன் செய்திடட்டுமா?" என்று கெஞ்சக் கெஞ்சக் கேட்டாள்.

"ஊஹூம்..." சொர்ணும்பாள் தலையை அசைத்து விட்டாள். ஆனால் அவள் நினைவு வேறு எங்கோ பதிந்திருந்ததாகத் தோன்றியது.

அத்தியாயம் 12

மழையும் புயலும்

சொர்ணும்பாள் அந்தப் படத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். நினைவின் படிக்கட்டுகள் அவளைச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு போய் விட்டன. அப்பொழுது அவள் எப்படியிருந்தாள் என்பதைப் படத்திலிருந்த உருவமே காட்டியது. அவள் நடுத்தர வயதை எட்டிக் கொண்டிருந்தாள். பார்ப்பதற்குப் பூசினாற் போல் இருந்தாலும் உள்ளூற அவள் இதயத்தைக் கவலை அரித்து வந்தது.

எத்தனை இரவுகள் அவள் தலையணை நனையக் கண்ணீர் வடித்திருக்கிறாள்! அவளுக்குப் பாரிஸ்டரின் தேறுதல் மொழிகளெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. அவர் மட்டும் அன்பு வார்த்தைகளால் அவளைத் தேற்றாமல் இருந்திருந்தால் அவள் உள்ளம் எப்போதோ சுக்கல் சுக்கலாக வெடித்து, பருத்திக் காயாகச் சிதறியிருக்கும்.

அவளுக்குக் கல்யாணம் ஆனதெல்லாம் இன்று மறந்து கூடப் போய்விட்டது. கல்யாணமாகி எத்தனையோ ஆண்டுகள் அவள் கவலையே இல்லாமல் இருந்திருக்கிறாள். ஆனால் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சும்மா இருந்து விடுகிறார்களா?

அவளுக்கு அந்தச் சம்பவம் நன்றாக நினைவில் இருந்தது. கணவர் புகழேணி

யில் விறுவிறுவென்று ஏறிக் கொண்டிருந்தது என்னவோ அவனுக்குப் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால் எல்லாரும் அவளைப் பொறாமையோடு பார்க்கத் தொடங்கியதை அவள் உணர்ந்தாள். அவர்களை யெல்லாம் கண்டு அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. வேதனையை மென்று விழுங்கிக் கொண்டு அவர்கள் மேலுக்குப் பிரியத்தைக் காட்ட முயன்றார்கள். வேண்டியவர்கள் முன்னுக்கு வந்து கொண்டிருந்தால் இப்படியா இவர்கள் வேதனைப்படுவார்கள்?

பரமசிவத்தின் பெயரும் புகழும் ஓங்க ஓங்க, அவளிடம் அடக்கமும் எளிமையும் மிகுந்திருந்தன. எல்லாரிடமும் வேற்றுமையின்றி எப்போதும் போலத்தான் பழகி வந்தாள். தனக்கு ஒரு வாழ்வு வந்துவிட்டதாக அவள் செருக்குக் கொண்டு விடவில்லை.

அவளுடைய கணவர் பரமசிவமும் அட்வகேட்டு அருணஜடையும் ஒரே சமயத்தில்தான் தொழிலைத் தொடங்கினார்கள். ஒரு வருஷத்தில்தான் அவர்களுக்குக் கல்யாணமாகி யிருந்தது. ஒரே தெருவில், ஒரே மாதத்தில்தான் குடும்பம் வைத்தார்கள். அவர் மனைவிக்கும் அவளுக்கும் பல விதங்களில் இப்படி எவ்வளவோ ஒற்றுமை யிருந்தது போலத் தோன்றியது. இருவரும் உறவினர்களுக்கு மேலாக அந்நியோந்நியமாகப் பழகினார்கள். ஆனால் அவரவர்களுடைய அதிருஷ்டப்படிதானே எல்லாம் நடக்கும்? அந்த விஷயத்தில் அது அவர்களுடைய வேற்றுமையை உணர்த்தியது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே பரமசிவம் பங்களாவும் காருமாகக் கொழிக்கத் தொடங்கினார். அருணஜடை அன்றிருந்த நிலையில் அப்படியேதான் தேங்கி நின்றார். மற்றொரு விதத்திலும் அவர்களுடைய வேற்றுமை வெளித் தெரியத் தொடங்கியது. பரமசிவத்தின் வருவாய் அதிகரித்தது போல் அருணஜடையின் குடும்பம் பெருகிவரத் தொடங்கியது. வருஷம் தவறினாலும் குழந்தை பிறப்பது தவறாது.

சொர்ணம் காய்க்காத, பூக்காத மரமாகத்தான் விளங்கினாள். நாளாக நாளாகக் குழந்தை வேண்டும் என்ற ஆசை கொடி போலப் படர்ந்து வந்தது. குழந்தை இல்லாமல் செல்வம் வளருவது கூட அவளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கவில்லை. "என்ன வந்து என்ன, என்ன போய் என்ன?" என்று அவள் அருணஜடையின் மனைவி அபயத்திடம் சொல்லிப் பெருமூச்சு விடுவாள். அப்படிச் சொல்லும்போதே கண்களில் கண்ணீர் துளும்பி விடும். அபயம் அப்போதெல்லாம் அவளைத் தேற்றுவாள்.

ஐந்தாவது பிள்ளைப் பேற்றின் போது அபயத்துக்கு ஆபத்தாகப் போய் விட்டது. செத்துப் பிழைப்பது போலத்தான் அவள் ஒரு பெண்ணைப் பெற்றெடுத்தாள். சொர்ணம் ஆசையோடு அவளைப் பார்த்து வரச் சென்றிருந்தாள். குழந்தை புசுபுசு வென்று பார்க்க அழகாக இருந்தது. தன்னையும் அறியாமல் அவள் அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். அவள் திரும்பிவரும் போது அபயத்தின் தாயார் கூறிய வார்த்தைகள் அவளைச் சுட்டு விட்டன. "மூதல் மூதல் அந்த மலடி வந்து தூக்கி விட்டாளோ, இல்லையோ? நீ ஏன் தூக்க விட்டாய்? 'தொடாதே' என்று பட்டென்று சொல்வதற்கு என்ன?" என்று பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள் அவள்.

சொர்ணத்துக்கு இதைக் கேட்டதும் அதிர்ச்சி உண்டாகி விட்டது. தலை 'கிர்' ரென்று சுற்றத் தொடங்கி விட்டது. கால் தடுமாறிக் கீழே விழாமல் அவள் வண்டியில் ஏறிக் கொண்டதே பெரிய சாதனையாகத்தான் இருந்தது.

அன்றையச் சம்பவத்திலிருந்து அவள் பிறருடைய வீடுகளுக்குப் போவதையே நிறுத்திக் கொண்டாள். பிறரிடம் முன் போலக் கலகலப்பாகப் பழகுவதையும் குறைத்துக் கொண்டு விட்டாள். அவளுடைய இளமையின் உற்சாகமெல்லாம் விளையாட்டுக் குணமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஒளிந்து கொண்டு விட்டன. அவளிடம் தென்பட்ட மாறுதலைக் கண்டு பரமசிவம் முதலில் கேலிதான் செய்து கொண்டிருந்தார். ஆனால் நாளாக ஆக, மனைவியின் விருப்பத்தில் அவருக்கும் அநுதாபம் பெருகத் தொடங்கியது. இரவு பகல், இடைவெளி கிடைத்த போதெல்லாம் இந்தப் பேச்சுத்தான் அவர்களுக்குள் நடைபெற்றது. பரமசிவத்தின் வேட்கை தொழில் முன்னேற்றத்தில் இருந்ததைப் போலவே, சொர்ணம்பாளுக்குக் குழந்தை ஆசையில் இருந்தது.

பணத்தைத் தண்ணீராகத்தான் அவர்கள் செலவழித்தார்கள். எதை எதையெல்லாமோ பணத்தைக் கொண்டு சாதித்து விடலாம் என்கிறார்களே, இதை மட்டும் ஏன் சாதிக்க முடியவில்லை என்பதை நினைக்கும்போது அவளுக்கு ஆச்சரியமாயும் துக்கமாயும் இருந்தது.

எல்லாவித வைத்திய முறைகளையும் பார்த்தாகி விட்டது. இனி, தெய்வாநுகூலம் இருந்து குழந்தை என்று உண்டானாலொழிய வேறு வழியில்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள். வயது, விஷம் போல் முப்பது முப்பத்தைந்து என்று ஏறிக் கொண்டிருந்தது. கோயில் குளம் என்றும் புண்ணிய ஸ்தலங்கள் என்றும் தீர்த்தங்கள் என்றும் போய்ப் பார்த்து விட்டார்கள். சேர்ந்து பெருகி வந்த செல்வமெல்லாம் குழந்தையில்லாத குறையை உரம் போட்டு, கொட்டமாகத்தான் வளர்த்து வந்தது.

அவளை அந்தக் குறை அதிகமாகப் பாதிக்காதவாறு பரமசிவம் அரும் பாடுபட்டார். ஆறுதலாகவும் தேறுதலாகவும் பலப் பல கூறினார். அவளிடத்து உள்ள அன்பில் மாற்றுக் குறையாமல் உரையாடினார். தம்மிடம் அவளுக்கு வீண் சந்தேகம் எதுவும் உண்டாகாதவாறு அவளுடைய மனம் கோணாமல் நடந்து

கொண்டார். கையைக் கோத்துக் கொண்டு சமுத்திர நீராடினர். உபவாச விரதங்களுக் கெல்லாம் ஊமையைப் போல் உடன்பட்டார்.

ஆயினும் சொர்ணம்பாளின் மனக் குறை நீங்கும் வழியையே காணோம்!

ஆனால் நோற்ற நோன்புகள் எல்லாம் அடியோடு வீணாகவில்லை என்பதுபோல் அவர்களுக்கு வேறு ஒரு வழியைக் காட்டியது தெய்வம். முத்தையாவைப் பார்த்து, துக்கம் விசாரித்து விட்டு வரவேண்டிய ஒரு சந்தர்ப்பம் அப்போதுதான் வந்தது. பாரிஸ்டரும் சொர்ணம்பாளும் கவலையை மூட்டை கட்டி வைத்து விட்டு, முத்தையாவின் துக்கத்துக்கு ஆறுதல் கூற, சிங்கப்பூருக்குப் பயணமானார்கள். முத்தையா குழந்தையைப் போலக் கதறியதைக் கேட்டு அவளுக்குத் தன் குறை ஒரு துரும்பாகப் பட்டது. மலேயாச் சீமையை யெல்லாம் சுற்றிவிட்டு அவர்கள் நல்ல நாள் பார்த்துக் கப்பல் ஏறினார்கள். கண்ணபிரான்தான் அப்போது கப்பலேற்றிவிட வந்திருந்தான். கப்பல் புறப்பட்ட வேளையும் நல்ல வேளையாகத்தான் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாகைக்கு அருகில் வந்ததும் உண்டான புயல் நடு வழியிலேயே வீசத் தொடங்கியிருக்கும். சென்னைக்குப் போய்ச் சேர வேண்டிய கப்பல் நாகப் பட்டினத்துக்கு வந்ததும் பிரயாணிகளை யெல்லாம் இறக்கிவிட வேண்டியதாகி விட்டது. சாதாரணமாக நாகப்பட்டினத்தில் பெண்களை இறக்கி விடுவதில்லை. ஆண்களை மட்டுமே கப்பலிலிருந்து படகுகளில் கயிற்றைக் கட்டி இறக்குவார்கள். கப்பல், கரையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் நிற்கும். அங்கிருந்து படகுகளில்தான் வந்து கரை சேரவேண்டும். ஆனால் இன்று பெண்களையும் குழந்தைகளையும் நிர்ப்பந்தமாக இறக்கிவிட வேண்டிய அவசியம் வந்து விட்டது. கால நிலை அபாயகரமாக மாறிவிட்டது தான் அதற்குக் காரணம்.

மாலை மங்கும் நேரத்தில்தான் அவர்களைப் படகுகளில் இறக்கினார்கள். கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. வானம் இருண்டு குமுறிக் கொண்டிருந்தது. பிரசண்ட வேகத்தில் மழை பிடித்துக் கொண்டு பொழிந்தது. நாகைக்குக் கிழக்கே முந்நூறு மைல் தூரத்தில் வங்காளக் குடாக் கடலில் உருவான புயல் வர வர வலுத்து மேற்குத் திக்கு நோக்கி வீசத் தொடங்கியது. மழையும் காற்றும் மாறி மாறி அந்தக் கீழ்க்கரையைத் தாக்கத் தொடங்கின.

எப்படியோ ஒருவிதமாக எல்லாப் பிரயாணிகளும் கையில் அகப்பட்ட உடைமைகளை எடுத்துக் கொண்டு கரையை வந்து அடைந்தார்கள். கடற் சுங்கக் காரியாலயமும் துறைமுகக் காரியாலயமும் அப்போது வீசிய காற்று ஒன்றில் அலங்கோலமாகப் பறந்து விட்டன. யாரெல்லாம் இறங்கினார்கள், யாரெல்லாம் இறங்கவில்லை என்ற விவரங்களையே அறிய முடியாத பெரும் குழப்பம் உண்டாகிவிட்டது. கரை வந்தடைந்த பிரயாணிகள் உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் இருண்டு கிடந்த நகருக்குள் தஞ்சம் புகுந்து கொண்டார்கள்.

பாரிஸ்டர் தம்பதிக்குக் கடற்கரைக்கு அரை மைல் தூரத்திலுள்ள ஹோட்டல் ஒன்றிலேயே இடம் கிடைத்து விட்டது. இரவு எட்டு மணி ஆவதற்குள் இயற்கை பேய்ச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு, தலை விரித்தாடியது. பரமசிவமும் சொர்ணம்பாளும் உயிருக்குப் பயந்து ஒடுங்கிப் போய் உட்கார்ந்திருந்தார்கள். மரங்கள் சடசடவென்று முறிந்து விழுந்தன; மாடியின்மேல் கூரைகள் பெயர்ந்து, காற்றிலே பறக்கத் தொடங்கின. இரவு எப்படிக் கழியப் போகிறதோ என்ற பயப் புயலில் சிக்கி அவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். வெளியே நீல வானும் கடலும் கருநீலமாக மாறிக் கலந்து கங்குலைக் குழைத்துப் பூசியது போல் மொந்தகாரமாக விளங்கின. காற்றின் சீறலும் அலைகளின் பேராரவாரமும் கலந்து காதுகளையே செவிடுபடச் செய்வது போல் முழக்கின.

சொர்ணம்பாளுக்கு அதை நினைத்த போதே உடலை ஒரு புரட்டுப் புரட்டியது. சென்னையில், தன்னுடைய பங்களாவில் சொகுசான படுக்கையில், பத்து ஆண்டுகள் கழித்துப் படுத்திருக்கிறோம் என்ற நினைப்பே உண்டாகவில்லை. மழையும் புயலும் மரண தாண்டவமாடும் அந்தக் கொடிய இரவிலே, நாகப்பட்டினத்து ஹோட்டல் ஒன்றின் மேல்மாடி அறையிலே, கணவரும் அவளும் நெருங்கி உட்கார்ந்துகொண்டு கண் கொட்டாமல் நடுங்கிக் கொண்டிருப்பது போலவே உணர்ந்தாள்.

சற்றைக்கெல்லாம் அவர்கள் தங்கியிருந்த அறைக்கு எதிரிலே தடதடவென்ற பெருத்த சத்தமும் அதைத் தொடர்ந்து அழுகைச் சத்தமும் கேட்டன. அதே சமயத்தில் வெளியே புயலையும், மழையையும் மீறிக்கொண்டு ஒரு பெருத்த ஆரவாரம் கேட்கத் தொடங்கியது. அவளும் பரமசிவமும் அதைத் தெளிவாகக் கேட்டார்கள்.

"கடல் பொங்கி வருகிறது. கடல் பொங்கி ஊருக்குள் வருகிறது!"

சொர்ணம்பாள் அந்தக் கூக்குரலை இன்று கேட்பது போலவே காதுகளைப் பொத்திக் கொண்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள். யாரோ நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்கவே அவள் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தாள். நீதிபதி ராமசுந்தரத்தின் மனைவி மிஸஸ் மீனாட்சிதான் பரக்கப் பரக்க அவளை நோக்கி வந்து கொண்டிருந்தாள். உடல் எல்லாம் ஒரே மரண வலி. அசையவும் முடியவில்லை; வாயை அசைக்கவும் முடியவில்லை. காதிலே அந்தப் பயங்கர ஓலமே ஒலித்துக் கொண்டிருந்தது. (தொடரும்)

தங்க நகரம்

அகிலன்



முன்னுரை

இந்தக் கதையைத் தமிழ் நாட்டுச் செல்வங்களான உங்களுக்காகப் பல ஆண்டுகளுக்கு முன்பே எழுதினேன். புதுக்கோட்டை தமிழ் நிலையத்தாரான திரு வெ. சுப. நடேசன் அவர்கள் இதைச் சிறு புத்தகமாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். 'கல்கி' பத்திரிகையில் வெளி வந்தால் லட்சக் கணக்கான குழந்தைகள் படித்து மகிழ வாய்ப்பிருக்கு மென்று ஆசிரியர் ஸ்ரீ டி. சதாசிவம் அவர்கள் கருதுகிறார்கள்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'மலர் மாமா' என்ற பெயரில் உங்களுக்காக எழுதி வந்த நான், இப்போது மீண்டும் உங்களுடன் உறவாடி மகிழ முடிகிறது.

அன்புச் செல்வங்களே! தமிழகத்தின் தங்கக் குழந்தைகளே! வாருங்கள் தங்க நகரத்துக்குள் சில வாரங்கள் உலவி வருவோம்.

— அகிலன்

1. பூந்தோட்டம்

பொழுது பலபலவென்று விடிந்தது. எந்த ஊரில் அப்படி விடிந்தது என்று கேட்பீர்கள்; தங்க நகரம் என்ற பெயருள்ள ஊரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது ஒரு சிறிய ராஜ்யத்தின் தலைநகரம். அங்கேதான் அப்படிப் பொழுது விடிந்தது.

அது ஒரு அழகான காலைப் பொழுது.

ஊருக்கு வெளியே ஒரு பெரிய அரண்மனை. அந்த அரண்மனையைச் சுற்றிலும் பூந்தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் இல்லாத பூச்செடிகளை இந்த உலகம் முழுவதிலும் இல்லை என்று சொல்லலாம். அத்தனை விதமான பூச்செடிகள்! ரோஜா, முல்லை, மல்லிகை, சம்பங்கி இந்த மாதிரி பூக்களைத்தானே நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்? அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்தால் ஆயிரக்கணக்கான பூங்கொத்துக்களைப் பார்க்கலாம். ஆமாம், ஆயிரக்கணக்கான விதங்கள்.

சிவப்பு, பச்சை, ஊதா, மஞ்சள், வெள்ளை, நீலம் - இப்படிப் பல நிறங்களில் அங்கே தினந்தோறும் பூச் சொரியும். ஒரே பூவில் பற்பல வர்ணங்கள் சேர்ந்து குலுங்கும். அந்தப் பூக்களின் வாசனையோ சொல்லி முடியாது. 'கம்' மென்று எந்த நேரத்திலும் வீசிக்கொண்டேயிருக்கும்.

தோட்டத்துக்குள் நீங்கள் மட்டும் ஒரு தரம் வந்து விட்டால், அப்புறம் உங்கள்

பாடு போகந்தான். நீங்கள் அந்த இடத்தை விட்டுத் திரும்பியே வர மாட்டீர்கள். உங்களுக்கு அத்தனை விதமான அழகிய மலர்களையும் விட்டுப் பிரிய மனமே வராது. சாப்பாட்டையும், படிப்பையும், தூக்கத்தையும் மறந்து அங்கேயே இருந்து விடலாம் போல் தோன்றும்.

வெள்ளை இதழில் ஊதாப் பொட்டுப் போட்டாற்போல் ஒரு பூங்கொத்து இருக்கும். அது உங்களையே கண் கொட்டாது பார்ப்பது போல் தோன்றும். அந்தப் பூ காற்றில் அசையும்போது உங்களைப் பார்த்து அது சிரிப்பதாகவே தோன்றும். கடுகை விடச் சிறிய பூக்களும் அங்கே உண்டு. உங்களைப் போல் — ஆமாம், உங்கள் உருவத்தைப் போல் பெரிய பூக்களும் அங்கே உண்டு. இமயமலையிலே மலரும் பூ, ஆப்பிரிக்கா தேசத்துக் காட்டுப் பூ, இங்கிலாந்து தேசத்துக்குச் சொந்தமான தங்க ராணிப் பூ, பாரசீக தேசத்து அடுக்கு ரோஜா, ஜப்பான் மரங்களிலே குலுங்கும் நெருப்பைப் போன்ற அழகிய பூ - இப்படிப் பல பூக்களையும் நீங்கள் அந்தப் பூந்தோட்டத்திலே கண்டு மகிழலாம்.

இத்தனை விதமான பூக்கள் அந்தத் தோட்டத்துக்குள் எப்படி வந்தன? தங்க நகரத்தின் அரண்மனைக்குள் மட்டும் இத்தனை தேசத்துப் பூக்களும் எப்படி மலர்கின்றன? யார் இவைகளை இங்கே கொண்டு வந்து வளர்க்கிறார்கள்? இந்தக் காலத்துப் பிள்ளைகளாகிய நீங்கள் கூடக் கட்டாயம் இந்த மாதிரிக் கேள்விகளையெல்லாம் கேட்பீர்கள்.

தங்க நகரத்து ராஜா இருக்கிறாரே, அவருக்குப் பூ என்றால் உயிர். அவர் தான் இந்த ஏற்பாடெல்லாம் செய்தது. அரண்மனைப் பணத்தை எடுத்துக்கொண்டு உலகமெங்கும் சுற்றினார். தங்க நகரத்துக்குத் திரும்பி வந்த போது ஒரு பெரிய தோட்டம் போடுவதற்கான சாதனங்களுடன் திரும்பி வந்தார். விதைகள், பதியன்கள், கன்றுகள், கொடிகளுடன் வந்து சேர்ந்தார். அந்த ராஜாவின் பெயர் ராஜ மார்த்தாண்டன். அவருடைய ராணியின் பெயர் கமலாவதி.

நமக்கு இப்போது ராஜாவும் முக்கியமில்லை; ராணியும் முக்கியமில்லை. அவர்கள் இரண்டு பேருமே பெரியவர்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. சந்திரன் என்ற ராஜகுமாரன்; மல்லிகா என்ற ராஜகுமாரி. சந்திரனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயது இருக்கும்; மல்லிகாவுக்கு அவனை விட இரண்டு வயது குறைவாக இருக்கும். இவர்கள் இரண்டு பேரும் உங்களைப் போன்ற சிறு குழந்தைகள்.

கதையின் ஆரம்பத்தில் பொழுது பலபல வென்று விடிந்ததென்று சொன்னேனல்லவா? அந்தக் காலைப் பொழுதில் அரண்மனைப் பூந்தோட்டத்தில் சந்திரனும் மல்லிகாவும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். இளஞ் சூரியனின் மஞ்சள் வெய்யில் அவர்களைத் தொட்டுத் தொட்டு விளையாடியது. அவர்கள் அங்கே தோட்டத்துப் பூச்செடியில் பூவை மொய்க்க வரும் இரண்டு வண்ணாத்திப் பூச்சிகளைப் போல் பறந்து திரிந்தார்கள். தேனீக்கள் மாதிரி சுறுசுறுப்பாக ஓடிப் பிடித்தார்கள்.

மல்லிகா கண்ணைப் பறிக்கக் கூடிய அழகில், ஒன்பது வர்ணங்கள் கலந்த பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டிருந்தாள். அதே பட்டில் மேல் சட்டையும் அணிந்திருந்தாள். அவளுடைய உடை துணியால் தைத்தது என்றே சொல்ல முடியாது. அத்தனை அழகு! அந்தத் தோட்டத்துப் பூக்களால் ஒரு பாவாடையும், சட்டையும் தைத்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது அவள் உடை. ஆனால் சந்திரன் வெள்ளை 'சில்க்' துணியில் தைத்த மேல் சட்டையும் நிஜாரும் போட்டிருந்தான். இளம் வெய்யிலில் அது பளபளவென்று மினுமினுத்தது தங்கத் தகடு போல் டால் அடித்தது.

சற்று நேரம் கழித்து இருவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். சிறிது களைப்பாக இருந்தது. பேசாமல் சிரித்துக் கொண்டார்கள். உடனே நல்ல காற்று குளுகுளுவென்று அடித்து இருவருக்கும் களைப்பைப் போக்கியது. சந்திரன் திடீரென்று மல்லிகாவிடம் பேச ஆரம்பித்தான்.

"ஏன் மல்லிகா! உனக்கு இந்தத் தோட்டத்தையும்



சிரிக்காதே

"காமெல்லாம் குரங்கி ருந்து வந்தோமென்று எங்கப்பா சொன்னார்!"

"உங்க குடும்ப விஷயத்தில் எங்களையும் சேர்க்கணுமா என்ன?"

★

"இந்த 'லைப் இன்ஷியூரன்ஸு'க்குப் பணம் கட்டுவதற்குள் என் உயிரே போயிடும் போல இருக்கு, சார்!"

★

"ஏன் ஒருமாதிரியா இருக்கிறீர்கள்?"

"உயர்ந்த ரகக் குடை ஒன்று வைத்திருந்தேன். போயிடுத்து சார்!"

"ஏன், எங்கேயாவது விட்டு விட்டீர்களா?"

"இல்லே சார்! அதன் சொந்தக்காரரே எடுத்துக் கொண்டு போய்விட்டார்!"

★

"என்ன அண்ணே! காளைமாடு ஒரு ஜோடி போனவாரம் வாங்கிக்கிட்டு வந்தீங்களே, நல்லா வேலை செய்யுதுங்களா?"

"அட, போங்க! அது என்னை நல்லா வேலை வாங்குதுங்க!"

★

"பாகவதரே! கொஞ்சம் மங்களம் பாடிவிடுங்கள்."

"என்ன, அதற்குள்ளேயா?"

"என் அங்கவஸ்திரத்தின் மேல் அந்த அம்மாள் உட்கார்ந்திருக்காங்க. அவர்கள் எழுந்தால்தான் நான் வெளியே போக முடியும்!"

★

"ஒரே பொட்டல் காடு. நல்ல வெய்யில். நிழலுக்கு ஒரு மரம் செடி இடையாது!"

"நிழலே இல்லேயா?"

"என் நிழலைத் தவிர வேறு நிழல் இடையாது!"

"அதில் உட்கார்ந்து இளைப்பாறுவது தானே!"

★

முதல் கைதி: இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு ஏதாவது பயன் இருக்குமா?

இரண்டாவது கைதி: ஏன் இல்லே? இந்தப் பழைய கம்பியெல்லாம் போய் நல்ல ஸ்டிராங்கான புதிய கம்பி போடுவாங்க!

★

"சேட்டாடுவதனாலே எவ்வளவு 'டைம்', 'வேஸ்டா' கிறது பார்த்தேளா?"

"ஆமாம்! முக்கியமா சீட்டை எல்லாம் கலைத்து ஒவ்வொருவருக்கும் போடுவதில் ரொம்ப 'டைம்' வேஸ்டாகி விடுகிறது!"



அரண்மனையையும் தவிர வேறு ஒன்றுமே தெரியாதே?"

"ஊஹூம்; தெரியாது. உனக்கு மட்டும் தெரியுமோ?"

"இல்லே; எனக்கும் தெரியாது! அதனால் தான் உன்னைக் கேட்டேன்."

"நீ பெரிய பிள்ளை. உனக்கே தெரியாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும்?"

சந்திரன் கொஞ்சம் யோசனை செய்தான். பிறகு, "நம்முடைய தங்க நகரத்தை நாம் ஒரு தரம் சுற்றி வரலாமா? நமக்கெல்லாம் வயசாகி விட்டது. இன்னமும் நாம் அரண்மனைக்குள்ளேயே இருக்கக் கூடாது. வெளியில் போய் நம்முடைய ஊரைப் பார்த்துவரவேண்டும்" என்றான்.

"எனக்கும் இந்த ஆசை ஏற்பட்டது. நான் கூட உன்னிடம் இதைச் சொல்ல வேண்டும் என்றிருந்தேன். அப்பாவிடம் கேட்டுக்கொண்டு ஒரு நாள் வெளியே போவோமா?" என்றாள்.

"ஓ! போவோம்; நாளைக்கே போவோம்" என்றான் சந்திரன்.

குழந்தைகளுக்கு அன்றைக்குத் திடீரென்று ஏற்பட்ட இந்த ஆசையால், பின்னால் என்ன ஏற்படப் போகின்றது என்று அவர்களுக்கே தெரியவில்லை.


ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே வந்தது. தங்கள் தந்தையாரிடம் கேட்பதற்காக விரைந்து அரண்மனைக்குள் ஓடினார்கள். ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு, தாங்களே முதலில் கேட்க வேண்டுமென்ற துடிதுடிப்போடு ஓடினார்கள்.

அரண்மனைக் குழந்தைகளான சந்திரனுக்கும் மல்லிகாவுக்கும் ஊர் சுற்றிப் பார்ப்பதில் இவ்வளவு ஆவலா என்று நீங்கள் கேட்பீர்கள். எல்லாக் குழந்தைகளுக்குமே இதில் உற்சாகம் உண்டு. அதிலும் அவர்கள் கூண்டுக் கிளிகளைப் போல் அந்த அரண்மனைக்குள்ளேயே வாழ்ந்தவர்கள். அங்கேயே வளர்ந்தவர்கள்.

அவர்களுக்கு அந்த அரண்மனையையும், தோட்டத்தையும் விட்டால் வெளி உலகமே தெரியாது. தங்க நகரத்தைக்கூட அவர்கள் சரியாகப் பார்த்ததில்லை. அவர்களுக்கு என்ன தேவையாக இருந்தாலும் அது அரண்மனைக்கே வந்தது. பாடம் சொல்லிக் கொடுக்க ஆசிரியர்கள் அரண்மனைக்கு வந்தார்கள். சினிமாவோ, நாடகமோ பார்க்க வேண்டுமென்றால், அரண்மனைக்குள்ளாகவே அது போட்டுக் காண்பிக்கப்பட்டது. காரில் கொஞ்ச தூரம் போய்ச் சுற்றி வர விரும்பினாலும், அவர்கள் தோட்டத்துக்குள்ளேயே சுற்றி வந்தார்கள். (தொடரும்)

என் மனைவி மிக

திவ்யமாகச்
சமைக்கிறாள்.



துஷார்

வைடமின் நிறைந்த வனஸ்பதி

துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ. டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.



துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்,
கர்நூல்



தேவனஞ்சேரிப் பண்ணை

துரோணன்

ஆடுதுறையானுக்குக் காவேரியின் மேல் அன்பு. காவேரிக்கும் அந்த அன்பு இல்லாமல் போகவில்லை. ஆனால் இரண்டு பேருடைய அன்புக்கும் நடுவில் ஒரு குழப்பமும் இருந்ததே!

வெய்யிலுக்கும், காற்றுக்கும் போட்டி நிகழும் ஆடி மாதம்!

அந்த நடுப்பகல் நேரத்தில்-தலையில் சுமந்த சாக்கு மூட்டையுடன் வீட்டை நோக்கி, 'வேகு வேகு' என வந்து கொண்டிருந்தான் பச்சைமுத்து. அவனது வரவையே எதிர் பார்ப்பவள் போன்று வீட்டு வெளியில் நின்று கொண்டிருந்த பாஞ்சாலி, விரைவாக எதிரே சென்று, அவனது தலைச்சுமையை ஏந்த முயன்றாள். அவன் கைச்சாடையாக மறுத்து விட்டு, வீட்டை நெருங்கினான். சுமையைத் திண்ணையின்மீது தள்ளிவிட்டு ஆயாசத்துடன் அமர்ந்தான்.

"ஏன், அது - காவேரி பின்னாடி வருதா?" என்றாள் பாஞ்சாலி அவனைக் கனிவாகப் பார்த்தபடியே.

அவன் தன் புருவங்களை நெரித்துப் பார்த்த படி, "காவேரியா? அது எங்கே வந்திச்சு? என்னைத் தேடிக்கிட்டா?" என்றான் சந்தேகம் தொனிக்கும்படியாக.

"ஐயா வீட்டிலேருந்து உங்களைக் கூட்டிப் போகறத்துக்காக ஆறு மேலே ஆளா மூணு வாட்டி வந்தாங்க. அங்கே நாத்தங்கால் பக்கம் கூட வந்திருப்பாங்களே? அதுக்காகத் தான் காவேரியும் உங்களைக் கண்டு சொல் லிப் போடலாம்னு தேடிக்கிட்டு வந்திச்சு."

அவன் முகத்தில் கவலைக்குறி பிரதிபலிக்க, "ஏன், ஐயாவுக்கு ஒடம்புகிடம்பு ஏதாச்சும்..." என்றான்.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லீங்க: ஐயாவே, ஏதோ அவசரமா கூட்டியாரச் சொன்னாங்கன்னுதான் வந்தவங்க சொன்னாங்க" என்றாள்.

பச்சைமுத்து பெருமூச்செறிந்தான். "இவ்வளவு அவசரமாக் கூப்புடறதுன்னு......உம்? இந்தப்பய விசமந்தான் ஏதாச்சும் நடந்திருக்குமோ என்னமோ?" அவன் முகத்தின் கவலைக்குறி பலவிதப் பொருள்களையும் சுட்டிக் காட்டியது.

"நான்தான் அப்போபுடிச்சு சொல்றேனுங்களே, 'ஆடுதுறையான்' சங்காத்தியமே நமக்கு வேணாம்னுட்டு? 'அதுலே' என்னமாச்சும் குடுத்துத் தொலைச்சிருந்தா இப்போ."

பச்சைமுத்து சீறினான்! "த! எதுலேருந்து குடுக்கிறது? ஒனக்கும் அறிவு கிறிவு இல்லியா? அதெல்லாம் ஒரு சல்லிக் காசு அவனுக்குக் கிடையாது!"

அவள் அவனை ஏற இறங்கப் பார்த்தபடி, "நீங்க செய்யிறதும் - நாயமில்லே!" என்றாள்.

"தா! நீ ரொம்ப நாயத்தைக் கண்டுட்டியில்லே? போவியா!" இவ்வாறு கூறிவிட்டுத் திண்ணையின்மீது கிடந்த துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பினான். அவனது நடையின் வேகம் அவன் ஐம்பதாம் பிராயத்தை எட்டியவன் என்பதையே மறைத்துவிட்டது.

2

ஆடிக் காற்றின் சுழற்சியில், மண்ணியாற்றுப் புது வெள்ளம் கரை வழிந்தோடிக் கொண்டிருந்தது. படுகையை யொட்டினாற் போலிருந்த வாழைத் தோட்டங்களும், வெற்றிலைக் கொடிக்கால்களும், அவ்வாற்றின் இரு விளிம்புகளுக்கும் பெரும் அணிகலனைக் காட்சியளித்தன.

தென்புறத்துப் படுகையை யொட்டியிருந்த மஞ்சள் கொல்லையினுள், இருவர்களுக் கிடையே பலத்த விவாதம் நிகழ்ந்து கொண் டிருந்தது. ஒருவன் தெரு நாட்டாண்மைக் காரனான கிழவன். மற்றொருவன் - பெரிய பண்ணை மிராசுதார் வைரவம் பிள்ளையின் பண்ணையாளான 'ஆடுதுறையான்'. அவனது இயற்பெயரான 'அப்பாறு' என்பதை ஊரில் சிலர்தான் அறிவார்கள்.

கிழவன் தனக்கே உரியதான முறையில் அவனிடம் நயந்தும் கடிந்துமாக அறிவு புகட்டிக் கொண்டிருந்தான். ஆனால், ஆடுதுறையானிடமிருந்தோ ஆணவமும், செருக்கும், அருவைப் புகைச்சலுமான வார்த்தைகள் தெறித்து வெளியாகிக் கொண்டிருந்தன. அவன்-காளைப் பருவமான வாலிபன்!

நீண்ட நேரமான சர்ச்சைக்குப்பின் கிழவன் மிகக் கடுமையுடன் ஆரம்பித்தான்: "ஏய், தம்பி! நீயும் கொஞ்சம் - முன்னைப் பின்னே யிருந்ததை நினைக்கப் பார்க்கணும்டா! போன மாமாங்கத்தும் போது - தகர வட்டாவும் கையுமா - ஆடு துறை டேசன்லே - அக்காளும் தம்பியும் அறுதக்கிட்டு நின்னத்தை மறந்துடலாமா? ஏதோ, ஒங்களைப் புடிச்ச நல்ல காலம் - இந்தப்பய மவன் எதேச்சையா அங்கே வந்து சேர்ந்தான்! 'ஐயோ'ன்னு இரக்கப்பட்டு, ஒங்களைக் கொண்டாந்து இங்கே பூரவிட்டான். இந்தப் பன்னெண்டு வருசத்துக் குள்ளாறே, வீடுன்னும், வாசலுன்னும் ஏற்பட்டு, நீயும் இப்போதான் மனுசனா யிருக்கிறே! இப்படி யிருக்கையிலியே..." கிழவன் தன் வார்த்தையை முடிக்காது ஏளன நகைப்பை விடுத்தான்.

ஆடுதுறையானின் முகம் சற்றே சிறுத்தது. ஆனாலும், மிடுக்குக் குறையாமலே, '' ஆமா, இப்போ என்ன செய்யிணும்கிறே?'' என்றான் உறுத்து விழித்தபடியே.

'' உம்...என்ன செய்யிணும்னு கேட்கிறே? ஒன்னுடைய பொறுமையை யெல்லாம், இந்த மண்ணித்தண்ணியிலே கரைச்சுட்டு, கடவுளுக் கும் பொதுவா நடந்துக்குணும்னு தான் சொல்லுறேன்! நீ இந்த ஊருக்கு அடிவைச் சப்போ, ஒனக்கு வயசு பன்னண்டு. ஒனக்கு வாய்க்காலைத் தெரியுமா; வரப்பைக் கண் டியா? நீ யிப்போ என்னுடான்னா நான்தான் விவசாயத்துலயே பெரும் புளின்னு சொல் லிக்கிறே! நானும் இல்லேங்கல்லே. ஆனால் இந்த அளவுக்கு ஒன்னைப பளக்கிக் கொண் டாந்தது யாரு, தெரியுமா ?''

ஆடுதுறையான் பதில் அளிக்காமல் ஒரு தடவை காறியுமிழ்ந்து விட்டு நின்றான்.

கிழவன் மீண்டும் தொடர்ந்தான்: ''போகட் டும், அப்படி யெல்லாம் ஒனக்கு வேலே கத்துக் குடுத்து முதலாளிகிட்டே அப்பப்போ ஒன் னைப் பத்தி யெல்லாம் நல்ல விதமா சொல்லக் கொண்டுதானே அவருக்கும் ஒன்கிட்டே அலாதியான வாஞ்சை ஏற்பட்டுச்சு? இல் லாட்டிப் போனால் நீங்க இருக்கிற நிலைமை எப்படியிருக்கும்னு தெரியுமா ?



''இப்படி யெல்லாம் உதவி செய்யற பச்சை முத்துவைப் போயி நீ வைரியா நினைச்சுப் பகைச்சுக்கிட்டிருக்கிறே! 'வளர்த்த கடா மார்பிலே பாய்ஞ்சுதாம்'ங்கிறாப்பிலே, அவன் பேரிலே காண்டு வைச்சுக்கிட்டு, இல்லாது பொல்லாததை யெல்லாம் போயி முதலாளிக் கிட்டே கோள் மூடிஞ்சுவுட்டு, அவருக்கும் அவனுக்கும் ஆகவுட்டாமே அடிச்சுக்கிட் டிருக்கிறே! நல்ல வேலையா அந்தப் புண் ணியவான், கேட்பார் பேச்சைக் கேட்கிறவ ராக இல்லே! இவ்வளவுக்கும் காரணம் என்ன? போன வருஷம் நீலத்தூர் மாட்டுச் சந்தையிலே ஏருக் குத்தகை விஷயம்தானே?''

'' ஆமாம்! பச்சைமுத்துவுக்கு இத்தனே பரிஞ்சு பேசிறியே ஏருக் குத்தகைக் கணக்கை அவன் முதலாளிகிட்ட ஒழுங்காகக் காண் பிச்சானா? தெரியுமா ?''

'' ஏய்! அந்த வாயைக் கழுவிட்டுப் பேசு! ஒரு தும்பிக் காசு மறைச்சிருப் பானா அவன்? அந்தக் குத்தகையிலே கிடைச்ச ஆயிரத்திரு நூறு ரூவா லாபத்தையும் வைச்சுக்கிட்டுத்தான் சிவன் கோயிலு திருப்பணி வேலையை ஆரம்பிச்சிருக்காரு பண்ணையாரு.''

''நீ தெரிஞ்சுக் கிட்டது இவ்வளவு தான்; அவரு தெரிஞ்சுக்கிட்ட தும் அவ்வளவு தான்.''

'' ஏன் பின்னே என்ன ?''

'' பச்சை நோட் டுலே பத்துப் பதுங்கிப் போயிருக்குது கும்மோ ணத்துலே! ஒன்னுல்லே, இரண் டுல்லே! தெரிஞ்சுக்க.''

கிழவன் சீறினான்: '' அட, ஏண்டா! கண்ணுலே காணுமே கடும் பழி சொல்லுறே? நீ சொல்றது கடவுளுக்கே அடுக்காது !''

'' தாத்தா! கண்ணுலே காணுமச் சொல்லுற வன் நானில்லே; அவன்தான் அடுத்துக் கெடுக்கிறவன்கிறதைத் தெரிஞ்சுக்க !''

' ஏய், நீ நினைக்கிறதெல்லாம் நன்னி கெட்டத்தனம்; பேசறதெல்லாம் போக் கிரித்தனம் ! ஏதோ வயசான காலத்திலே நல்லத்தைச் சொல்ல வந்தா, நீ திருந்திக்கு வேன்னு நினைச்சேன். அப்புறம், கெட்ட மாட்டுக்குப் பட்டதுறுதிதான் !''-இவ்வாறு கூறிவிட்டு 'விடு விடு'வென்று கிளம்பிச் சென் றான் கிழவன்.

அவன் சென்ற மிடுக்கையே அலட்சியமாகப் பார்த்தபடி நின்றான் ஆடுதுறையான். பிறகு கீழே கிடந்த அரிவாளையும், கலைக் கொட்டை யும் எடுத்துக் கொண்டு கிளம்பினான். அப் போதுதான் 'ஐயோ! ஐயோ!' என்ற ஓலக் குரல் அவனது செவிகளுக்குக் கேட்டது.

ஆடுதுறையான் திடுக்குற்று நின்று, நாலா புறங்களையும் பார்த்தான். பின்னர் படுகை மேட்டின் மீது ஏறிப் பார்க்கையில் அவனது விழிகளுக்கு ஒரு ஆச்சரியம் கிடைத்தது !

பஸ்ணியாற்று மூங்கிற் பாலத்தின் நடுவில் உட்கார்ந்தபடி ஓலமிட்டுக் கொண்டிருந்தாள் ஒரு பதினேழு வயது பெண்! பாலத்தின் நடுவில் மக்கி மடிந்திருந்த ஒரு மூங்கிற்சிம்பு நொடித்ததின் விளைவாக அவளது ஒரு கால் கீழே அழுந்திச் செருகப்பட்டிருந்தது. தன் காலை மேல் இழுத்து விடுவித்துக் கொள்ள முடியாது அவள் தவித்தாள். அவளது முயற்சியும் அடிக்காற்றும் ஒன்றுசேர்ந்து பாலம் தான் பயங்கரமாக ஆடியது. பயத்தின் மிகுதியால் அவள் தன்னையும் மீறிக் கூச்சலிட்டு விட்டாள்.

விஷயத்தை யறிந்துகொண்ட ஆடுதுறையான் மறுவிநாடியே பாலத்தை நோக்கி ஓடினான்.

அவளது காலை மேலிழுக்க மாட்டாதவாறு நெருங்கியிருந்த மற்றையச் சிம்புகளை, அரிவாளின் உதவியால் அகற்றினான். இடைவெளி பெரிதாகி அவளது காலுக்கு விடுதலை கிடைத்தது. நாணத்தின் செம்மை முகத்தில் படர நன்றிப் பெருக்கின் ஒளி விழிகளில் மிளிர, அவள் பாலத்தை விட்டுக் கரைக்குத் திரும்பினாள்.

"நீ, நீங்க எந்தூருக்குப் போறவங்க?" என்ற தடுமாற்றமான வினாவுடன் தொடர்ந்தான் அவன்.

அவள் பதிலளிக்காமலே அவன் மீதொரு பார்வையை வீசி விட்டுத் தலை கவிழ்ந்தாள். பெருமூச்சு அவளது நாணத்தை அவனுக்கு அறிவித்தது.

"காலிலே ஆணி கீனி கிளிச்சிடுச்சோ?" என்றான் கனிவாக.

அவள் தலையசைத்தபடியே "இல்லீங்க" என்று கூறிக் கொண்டே படுகையை விட்டுக் கீழிறங்கி வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

அப்போதுதான் படுகையின் இப்புறத்தருகே வந்து கொண்டிருந்த நாட்டாண்மைக்காரக் கிழவன் அவளை எதிர்ப்பட்டு விட்டான். சூரிய ஒளியைத் தன் கையால் மறைத்தபடி அவளை உற்று விழித்து, "அட! நீயா? நீ எப்போ இங்கிட்டு வந்தே?" என்று கேட்டான் வியப்பைச் சொரிந்தவண்ணம்.

படுகையின் மீது வந்து கொண்டிருந்த ஆடுதுறையானுக்குத் திடீரென்று கிழவனின் குரலைக் கேட்டதும் பெருத்த ஏமாற்றமாகி விட்டது. அப்படியே அங்கிருந்த மாமரத்துடன் ஒன்றி நின்று விட்டான்.

அவளது பதிலை எதிர்பாராமலே மீண்டும் கிழவன், "நீ...நீ பொன்னம்மா மகள்தானே?" என்றான் சந்தேகம் தொனிக்க.

அவள் 'ஆம்' என்றவாறு தலையசைத்தாள்.

"அதுதானே பார்த்தேன்! ஆளு ஜோரா செக்கச் செவக்க ஒங்க ஆயி யாட்டமாவே வளர்ந்துட்டியே! இச்



இனி நாளா மாமன் வீட்டிலேதான் இருந்தியா?'' என்று கேட்டான் கிழவன்.

அதற்கும் அவள் தலையசைத்தாள்.

''சரி, வெய்யில் நேரத்திலே நிக்காதே, அப்புறமா சாவகாசமா வர்றேன்!'' எனக் கிழவன் கூறவும், அடுத்தகணம் அவள் ஆடிக் காற்றின் துரும்பாக மறைந்து விட்டாள்!

3

அந்த வெய்யிலில் பண்ணையாரின் வீட்டை நோக்கிப் பதைத்தபடி சென்ற பச்சைமுத்துவுக்குப் புதுமையான வரவேற்பு கிடைத்தது. சாய்வு நாற்காலியில் படுத்திருந்த அவர், பச்சைமுத்துவைக் கண்டதும், நிமிர்ந்தபடி வரவேற்றார். அவன், தன் தோள் துண்டை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டு, கைகட்டியபடி அவர் எதிரில் வந்து நின்றான்.

''என்ன பச்சைமுத்து! காலையிலே புடிச்சு எங்கே போயிருந்தே?'' என்றார் கனிவுடன்.

''இன்னைக்கிக் கருக்கல்லியே எந்திரிச்சு, நாத்தங்கால் பக்கம் போயிட்டேனுங்க. நாளைக்கி, ஆடிப் பதினெட்டு இல்லீங்களா? சேத்துலே இறங்க முடியாது: இன்னைக்கே கொஞ்சம் வேலை செஞ்சிருந்தா, வர்ற மூணு நாளு அம்மாசியன்னைக்குக் குறுவை தெளிச்சுடலாம்னு இருக்கிறேனுங்க.''

''அதான், உழவு வேலையெல்லாம் முடிச்சிட்டியே, நீ?''

''அதெல்லாம் முடிஞ்சு, அண்டைவெட்டு வேலையும் தீந்து, இப்போ-சந்தனம் மாதிரியா நிக்கிதுங்க!''

''அப்புறம் என்ன?...''

பச்சைமுத்து, வெட்கம் தோய்ந்த முகத்துடன், தம் கழுத்தைச் சொறிந்துகொண்டே சொன்னான்: ''கடைசி எரு ஒண்ணு இந்த வருசம் புதுசா வைச்சிருக்கிறேன்: அதையும் தூவிட்டுத்தான் விரை விடணும்னு இருக்கிறேனுங்க.''

பண்ணையார் 'கலகல'வென நகைத்தார். ''போடா பைத்தியக்காரா! உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவிச்சாங்கிறப்பிலே இருக்குது! இப்போ-போன பசலி குறுவைச் சம்பாவுலே மாவுக்குப் பதினாறரை காண்பிச்சயே, இது நம்ப தஞ்சாவூர் ஜில்லாவுக்கே இன்னையத் தேதிக்கி அதிசயம்டா! சர்க்காரு பண்ணையிலே உரம் விக்கிறவங்கள்ளாம் அப்படியே மூக்குமேலே விரலைவச்சு அசந்துட்டானுங்க! சரி, எப்படியாச்சும் ஒன் பாடு பதினாயிரம்! இப்போ ஒன்னைக் கூப்புட்ட சங்கதி,என்னன்னா...வர வர எனக்கும் வயசாயிடிச்சி பாரு. அடிக்கடி ஒரு மயக்கம் வேறே வந்திடுது. ஆகையினாலே, நம்பமூச்சு ஒழுங்கா இருக்கக்குள்ளாறயே, இந்த நிலம் நீச்சு வகையறாவை ஒரு தினுசாப் பங்கிடு பண்ணி வைச்சுடலாம்னு நினைச்சிருக்கிறேன். நம்ப வாரிசுங்களுக்கெல்லாம் எதையெதைப் பிரிக்கிறது: எவ்வளவு குடுக்கிறது - இதுக்கெல்லாம் ஒன் அபிப்பிராயம் என்ன?''

''இதுலே சந்தேகம் என்னங்க? நிலம் நீச்சு சாடாளையும் ஆறு கூறு போட்டுடுங்க. நம்ப சின்னக் குழந்தை அபிராமி கண்ணாலத்தை இந்த வருசமாவது நடத்திட வேண்டாங்களா? அதுக்கு என்னமாச்சும் மொத்தத் தொகையா ஒதுக்கிடுங்க. அவ்வளவுதான்!''

பண்ணையார் அவனை நோக்கிக் குறும்புப் புன்னகை விடுத்தார். ''ஏய்! இவ்வளவு சல்லிசா ஒரே வார்த்தையிலே முடிச்சிட்டியே மண்ணிக்கரை நாத்தங்காலு என்ன சேதி?''

''அதையும் சேர்த்துத்தான்!''

''நல்லாச் சொன்னியே கதையை! அது என் சொந்த முயற்சியிலே வாங்கினதுடா! அந்தப் பத்து மாவையும் நானு என்னவானாலும் செய்யிலாம் - ஒருத்தரும் அசைக்க முடியாது!''

''ஏன், அதை நம்பச் சின்னக் குழந்தைக்கு மஞ்சைக் காணியாத்தான் வையுங்களேன்? எனக்கும் மனசு ரொம்ப சந்தோசப்படும்!''

பண்ணையார் இடுக்குற்றபடி அவனைப் பார்த்தார். ''யாருக்கு - அபிராமிக்கா?''

''ஆமாங்க!''

''அட போடா பித்துக்கொள்ளி! நல்லா புடிச்சிருக்குது ஒனக்கு அபிராமிப்பித்து! அதுங் கண்ணாலத்துக்காகத்தான் 'இருவது' ரூபாயை ரொக்கமா நகத்திட்டேனே; அப்புறம் இன்னம் வேறயா?''

பச்சைமுத்து பரபரப்படைந்தான். ''ஐயையோ, எசமானே! அதை வேறே ஒண்ணும் செய்துடாதீங்க! அதை அதுக்குத்தான் வைக்கணுமுங்க!'' என்றான் கைகுவித்தபடி.

வைரவம் பிள்ளை குறும்புப் புன்னகை விடுத்தார். ''ஏய், பச்சை, ஒன் மனசும் சூதுவாதில்லாத பச்சைதான்டா! மண்ணிக்கரை நாத்தங்காலு ஒருத்தருக்கு மில்லே - என் தலை மறைஞ்ச பிறகு, அது இந்த ஊரு சிவன் கோயிலுக்குத்தான்!''

பச்சைமுத்து ஏமாற்றத்துடன் பெருமூச்செறிந்தான்!

''அதிருக்கட்டும், பச்சை! போன வருஷத்து நம்ப நாத்தங்கால் குறுவைச் சம்பா நெல்லைக் குத்திச் சாப்புட்டுப் பாத்தியா நீ?'' என்று கேட்டார்.

''அது அரிசியாத் தெரியல்லீங்க! கைக்குக் கிடைக்காத நட்சத்திரமாகத்தான் இருக்குதுங்க!'' என்றான் பச்சைமுத்து.

''நமக்கு விளைஞ்சு வந்த நெல்லுலியே இதுதான்டா ரொம்ப அயனான சரக்கு! அந்த நாத்தம்பது கலமும் சேறு பிரிக்காமலே அப்படியேயிருக்குது!''

''அதை நம்ப சின்னக்குழந்தை கண்ணாலத்தும்போது தாங்க பிரிக்கணும். அதுக்கு முடையிலே அதுவிட்டே போயிக்கூட மூச்சுவிடக் கூடாதுங்க!'' அவனது வார்த்தையிலிருந்த கண்டிப்பான வேண்டுகோளைக் கேட்டுப் பண்ணையார் 'கணுக்'கென நகைத்தார். தொடர்ந்து, ''ஏன், நாளைக்கி - ஒன் மவனுக்குக் கண்ணாலம்னாலும் பிரிச்சுட வேண்டியதுதான்'' என்றார் சற்றும் களங்கமின்றி.

''என் மவ கண்ணாலத்துக்கு இம்மாம் ஏங்க? ஏனெட்டுக் கலமிருந்தா ஒட்டற வோட்டம்! அதுவும், என்கிட்டேயிருக்கிற நச்சுக்கூலி மிச்ச நெல்லிலே கூட....''

அவர், பட்டென்று இடைமறித்தபடி, ''போடா பைத்தியக்காரா! உன் கையாலே பாடுபட்டு விளைஞ்ச நெல்லு - உன் மவன் கண்ணாலத்துக்கு இல்லாமே இங்கே யாருக்குடா வேணும்?'' என்று அதட்டலாகக் கூறவும்,

பச்சைமுத்து மௌனியானான். அவர் எழுந்து நின்றபடி, ''பச்சை, இன்னைக்கி ராத்திரி வண்டிக்கி நான் திருநெல்வேலி ரோட்டுக்கூடத் தெற்கே போறேன். மதுரையிலே - நம்ப பழைய உறவுக்காரங்க பையன் ஒருத்தன் இருக்கிறான். அவனைத்தான் நம்ப அபிராமிக்கு முடிச்சுக்கிட்டு வந்துடலாம்னு யோசனை பண்ணியிருக்கிறேன்!'' என்றார்.

பச்சைமுத்துவின் முகம் திடீரென்று மலர்ந்தது! ''அப்படிச் சொல்லுங்க நல்ல சேதியை! நல்லபடியாப் போயி, கண்ணாலச் சேதியோட வாங்க!'' என்றான் நெஞ்சு தழுதழுக்க.

அன்றிரவு - ரயிலடிக்குப் போய்ப் பண்ணையாரை அனுப்பிவிட்டு, வீடு திரும்பியிருந்த பச்சைமுத்து, ஓர் புதிய மனிதனாகவே மாறியிருந்தான்!



''என்னுங்க! தேர்தல்தான் முடிஞ்சு போச்சே! பின்னே அங்கே என்ன ஒரே கூட்டமாயிருக்கு?''

''அதுவா? கூட்டம் போட்டுத் தேர்தல்லே தோத்துப் போனவங்களுக்குத் தேறுதல் சொல்றாங்களாம்!''

4

அன்று - ஆடிப்பதினெட்டாம் பெருக்கு!

முதல் நாள் மத்தியானம் - மண்ணியாற்று மூங்கிற் பாலத்தில் சிக்கல் தவிர்க்கப் பெற்ற அந்த மோகினி - ஆடுதுறையானின் உள்ளத்தில் பெரும் பெரும் சிக்கலை ஏற்படுத்தி விட்டாள்! அன்றிரவு முழுமையும் அவன் உறங்கவேயில்லை! ஊருக்குப் புதியவளாக இருந்த அவள் யார் வீட்டைச் சேர்ந்தவளென்பதையறிந்து கொள்ளாமல் அவனது இளமையுள்ளம் ஏக்கமுற்றுப் பொருமியது!

வழக்கம் போல், காலையில் ஆற்றங்கரைப் பக்கம் வந்தான் ஆடுதுறையான். அங்கே புதுப்புனலுக்குப் பூசைபுரிந்து, பச்சை படைத்துக் கொண்டிருந்த ஊர்ப் பெண்மணிகளின் கூட்டத்திடையே அவனது விழிகள் சென்றன. அவனது உள்ளம் சிலிர்த்தது. அம்மோகினியும் அங்கு இருந்தாள். அவளது உருட்டையான முகத்திலும், கருங் குவளை போன்ற விழிகளின் ஒளியிலும் அவனது விழிகள் சிக்கித் திரும்பி வரத் தோன்றாது நிலைத்து விட்டன. எதேச்சையான பார்வையில் அவளுடைய வேல்விழிகளும் கூட ஒரு கணம் அவனை ஊடுருவி நோக்கின. அவள் அவனுக்கு வைரியாக இருந்த பச்சைமுத்துவின் மகள் என்பதை அங்கிருந்தவர்களின் சம்பாஷணைகள் சந்தேகமற்று விளக்கி வைத்தன.

ஆடுதுறையான் வந்தவழியே திரும்பி விட்டான். மறுநிமிஷம் கத்திரிக் கொல்லை வேலைகளை முடித்துக்கொண்டு பகல் பதினெட்டு நாழிகையளவுக்கு ஆற்றங்கரைப் பக்கத்துக்குத் திரும்பியிருந்தான் ஆடுதுறையான். அங்கே எதிர்பாராக் காட்சியாக அவள் தோன்றியிருந்தாள்! அவளும் அவனை ஏமாற்ற நினைக்க வில்லை போலும். கையில் ஆகாரம் இருந்த தூக்குவாளியுடன் அவள் பாலத்தின் முனையில், நாலா புறங்களிலும் விழியை ஓட்டியபடி நின்றாள். அவன் உள்ளம் 'இரு இரு'த்தது. கையில் சேற்றுடன் இருந்த களைக் கொட்டியும் அரிவாளையும் அரச மரத்து ஓரம் எறிந்து விட்டு அவளை நோக்கி ஓடினான். அவன் வருவதைக் கண்டதும், அவளது முகம் மலர்ந்தது. அதைத் தொடர்ந்தே நாணமும் குடிகொண்டது.

''இந்தாங்க! இதை நேத்தியே புடிச்சு வைச்சிருந்தேன்'' எனக் கூறியபடியே அவள் தன் மடியிலிருந்த காகிதப் பொட்டணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

ஆடுதுறையான் அவசரம் அவசரமாய்ப் பொட்டணத்தைப் பிரித்தான். அதில், மாவும் தேனும், நெய்யும் ஒன்றாகக் கலந்த படைப்புப் பண்டம், குங்கும வண்ணம் தோன்றக் காணப்பட்டது. அவன் அதில் சிறிது எடுத்து வாயில்போட்டுக்கொண்டான். அவனது முகத்திலும் இனிமை வழிந்தது.

''நேத்து இது காவேரி அம்மனுக்குப் படைச்சது!'' என்றாள் அவள்.

அவன் தன் வாயிலிருந்ததைச் சட்டென்று விழுங்கியபடி, ''காவேரியம்மனுக்குப் படைச்சதை, இப்போ காவேரியம்மனே எனக்குக் கொண்டாந்திருக்கிறாளோ?'' என்றான் குறும்புத்தனம் முகத்தில் அரும்பிட.

''அப்புறமென்ன?'' என்றாள் அவள் தன் புருவங்களைக் கூட்டியபடி.

மறுமுறை மாவையள்ளி வாயில் கொட்டிக் கொண்டிருந்த அவன், அவளைக் கையால் சுட்டிக் காட்டியபடி, ''இதோ, இந்தக் காவேரியம்மனைத் தான் சொன்னேன்!'' என்று கூறினான்.

''ஓஹோ, அப்படியா சங்கதி? என் பேரு அப்புறமின்னு எப்போ சொன்னேன் ஒங்கிட்டே?'' என்றாள் வெடுக்கென்று.

''நேத்து ராத்திரி கனவுலே!'' எனக் கூறிவிட்டு, அவன் 'கலகல' வென நகைத்தான். அவள் தலைகுனிந்தவண்ணம், காலால் தரையில் கோலமிட்டாள். மீண்டும் அவன், ''அதெல்லாம் இருக்கட்டும், காவேரி! நான் யாரோ, நீ யாரோ இந்த மாவை எனக்குக் கொண்டாந்துகுடுக்கணும்னு ஏன் நினைச்சே?'' என்றான் கனிவுடன்.

''என்னமோ தோணிச்சு, கொண்டாந்தேன்!'' என்று கூறியபடி, அவள் வேறு புறம் திரும்பிக் கொண்டாள். அப்போது அவளது அகத்தின் நிறைவைக் கண்ட ஆடுதுறையான் உள்ளம் பூரித்து நின்றான். அவள் மீண்டும் அவனைக் குறிப்பாக நோக்கிவிட்டுப் பாலத்தின்மீது அடியெடுத்து வைத்தாள்.

''காவேரி! இரு இரு! இதோ போயி, அரிவாளை யெடுத்தாந்துடறேன்; அப்புறம் நீ பாலத்து மேலே நடக்கலாம்'' எனக் கூறியபடி ஏளனம் சிந்த நகைத்தான் அவன்.

அவள், நாணம் குழைந்த சிறு நகைப்பைச் சொரிந்தாள். பின்னர், சட்டென முகத்தை மாற்றிக் கொண்டு, "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும்!" என்றாள் குமிழ்ச் சிரிப்புடன். அவன் 'கலகல' வென்று நகைத்தான்!

இவ்வாறாக நிகழ்ந்த இரண்டாம் சந்திப்புக்குப் பின், காவேரி தினமும் அவ்வழியே வந்து போய்க் கொண்டிருந்தாள். மூன்று தினங்களுக்குள்ளாக, அவ்விளம் இதயங்கள் இரண்டும் இயல்பாக ஒன்றிவிட்டன.

அன்று நூங்கிற்பாலத் தருகில் காவேரிக் காகத் தவம் கிடந்தான் ஆடுதுறையான். 'சடசட' வென யாரோ நடக்கும் ஓசை கேட்கவும், திரும்பிப் பார்த்தவன், "காவேரி! காவேரி!" என்று குரல் கொடுத்தான்.

பாலம் கடந்து சென்ற அவள், அக்கரைப் படுகையை அடைந்தபின்தான் திரும்பினாள். அதற்குள் ஆடுதுறையான் அவளைச் சமீபித்தான்.

"த! இனிமேப்பட்டு, என்னைக் கூப்பிடாதீங்க! நீங்க யாரோ, நான் யாரோ? ஒங்க அலுவலைப் பார்த்துக்கிட்டு நீங்க போவுலாம்!" இவ்வாறு ஒரு விநாடிக்குள்ளாகப் பொரிந்து தள்ளி விட்டாள் அவள். அவள் முகத்தில் வைராக்கியம் சீறியது!

"காவேரி, திடீருன்னு என் பேருலே ஏன் உனக்கு - நானு..." அவன் வார்த்தை தெரியாது குழம்பித் தவித்தான்.

"நீங்க யாருன்னு தெரியும்! வீணு, என் சோலிக்கு வரவேண்டாம். உண்ட வீட்டுக்கு ரெண்டு நினைச்சவரு எங்கப்பாரு! முதலாளி வீட்டுப் பணத்தை யெல்லாம் மறைச்சு வைச்சு, துரோகம் பண்ணினவரு மவனோட, ஒங்களுக்குச் சங்காத்தியமே வேணும்! நீங்க போங்க - ஒங்க பாட்டைப் பார்த்துக்கிட்டு." அவள் பேயைக் கண்டு அரண்டு ஓடுபவள் போன்று வேகமாக ஓடினாள்.

ஆடுதுறையானின் இதயத்துக்குள் அவளது வார்த்தைகள் காய்ச்சிய கொழுவைச் செருகியது போன்று உறுத்தின!

5

பத்து தினங்களுக்குப் பின்.

தேவனுஞ்சேரி பெரிய பண்ணை முதலாளி வைரவம் பிள்ளையின் வீட்டு முன்புறத்தில், கிராமத்து அதிகாரிகளெல்லாம் கூடியிருந்தனர். இரண்டு தினங்களுக்கு முன், மதுரையிலிருந்து திரும்பியிருந்த பண்ணையார் அவர்களுடன் மிகச் சல்லாபமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தார். அவரது மகளான அபிராமியின் கலியாணத்துக்கு இன்னும் பத்து தினங்களே யிருந்தன. பச்சைமுத்து ஆவேசம் கொண்டவன் போன்று அங்கே ஓடி வந்து, பண்ணையாரின் கால்களைப் பற்றிக் கொண்டு கதறத் தொடங்கி விட்டான்!

"எசமாங்களே! சின்னக் குளந்தை கண்ணாலச் சேதியைக் கேட்டதிலிருந்து, இந்த ஏளைக்கிருந்த சந்தோசம் சொல்லி முடியாதுங்க. ஆனால், நீங்க நேத்து வந்ததும் வராததுமா, சேர் கட்டி வச்சிருந்த நெல்லை யெல்லாம் புள்ளனி, ராமநாதபுரத்துப் பஞ்சத்துக்கு வாரிவுட்டத்தை இப்பொதான் அறிஞ்சே

னுங்க! என் நெஞ்சு பதறுதுங்களே! நம்ப ஊரிலே, நம்ப வயல்லே—அரும் பாடுபட்டு விளைஞ்ச நெல்லே, நாம்பளு' உண்ணுமே, நமக்கு வரப் போற கண்ணுைச் சனமும் உண்ணுமே - இப்படி எங்கோ யிருக்கிற பஞ்சத்துக்கு வாரியிறைச்சுட்டீங்களே, எசமானே!" வார்த்தைகள் அவனது இதயத்தினின்றும் வெடித்து வெளியாயின.

பச்சைமுத்துவின் ஓலம் உண்மைதான்!

"ஏய், வைத்தியக்காரா! இப்போ என்னடா நடந்துடுச்சி? ராமநாதபுரம் பக்கம் போனேன். அங்கே-அரை வயத்துக் கஞ்சி கூட இல்லாமல் செத்துக்கிட்டிருக்கிற சனங்களைக் கண்ணாலே பார்த்தேன்! ஊருக்கு வந்ததும் இந்தக் காரியத்தை முதல்லே செஞ்சேன்! இந்நேரம்-நம்ப நெல்லு இன்னைக்கல்லு தாண்டிப் போயிருக்கும்!"—என்றார் அடக்கமும், பெருமிதமும் கொண்ட பண்ணையார்.

பக்கத்திலிருந்த நண்பரான தாசில்தார் கனைத்துக் கொண்டு கூறினார்: "வைரவம் பிள்ளை! நீங்க இந்த உலகத்துக்கே ஒரு வைரம் தான். பச்சைமுத்துவின் பேச்சிலே நாயம் இருக்குது! தன் இலைச் சோற்றையும் கூசாமல் வாரிப் பிறருக்குப் போட்டுட்டு, பெருமையோடு தாம் பட்டினி கிடக்கிறதுதான் தஞ்சாவூர் ஜில்லாக்காரன் குணங்கிறதைநீங்க காண்பிச்சுட்டீங்க!"

அப்போது—வெளிப்புறத்திலிருந்து மற்றொரு குரல் கேட்டது: "ஐயா! ஐயா! அது மட்டுமில்லீங்க! அசல் வாளுத்தால் அந்த நாள் பட்டினி கிடக்கிறதும் இந்த ஜில்லாக்காரன் தாங்க!"—இச்செய்தியை முழக்கியபடி வந்து கொண்டிருந்தான் அனுபவம் படைத்தவனுன நாட்டாண்மைக்காரக் கிழவன்! அவனைத் தொடர்ந்து, கை கட்டியபடி, ஆடுதுறையானும் உள்ளே வந்தான்.

அடுத்தகணம்—அங்கு பொருத்த அமளியே நிகழ்ந்துவிட்டது அங்கிருந்தோர் அனைவரும் வியப்புற்று அவர்களை நோக்கினர்.


கிழவன் ஆடுதுறையானைத் தட்டி, "அப்புறம் ஏன் நிக்கிறே? நடந்ததை யெல்லாம் சொல்லி, ஐயா காலிலே விழு! நல்ல வேளையா, பொண்ணைப் பெத்தவனும் இங்கியே இருக்கிறார்" என்றான் செருக்கு பிரதிபலிக்க.

ஆடுதுறையான் பண்ணையாரின் கால்களில் விழுந்து விட்டு, பச்சைமுத்துவின் புறம் நோக்கியும் விழுந்து எழுந்தான்.

பண்ணையார் திகைப்புற்றபடி, நாட்டாண்மைக் காரரையும், பச்சைமுத்துவையும் மாறி மாறிப் பார்த்தார். அப்போது-கிழவனின் மூலம், ஆடுதுறையானின் செய்திகள் முழுமையும் அம்பலமாயின.

* * *

அன்று—மண்ணியாற்றங்கரைப் படுகையில் காவேரியின் கொடுஞ் சரமான வார்த்தைகள் வெளியான பின், ஆடுதுறையான் மனமுடைந்து கீழே படுத்தவன்தான்—மூன்று தினங்கள் வரையில் எழுந்திருக்கவேயில்லை! கிழவனும் திருத்த முடியாத அவனது இளமைச் செருக்கையும், பொறுமைக் குணங்களையும், காதல் மாய்த்து விட்டது! காவேரியின்



மகளானாலும் காவேரி அவனைத் தேடி வந்து ஆட்கொண்ட காதல் தெய்வமல்லவா!

மூன்று தினங்களுக்குப் பின் படுக்கையை விட்டெழுந்த ஆடுதுறையான், அடக்கமும் மனச்சாட்சியும் கொண்ட புது மனிதனாகவே மாறி விட்டான். நேரே இறைவனின் வீட்டுக்குச் சென்று, அவனிடம் தமது அறியாமையைக் குறித்தும் புலம்பித் தீர்த்தான். அதன் பின்னரே, இறைவன் புகட்டிய சமாதானங்களால், அவனுக்கும் பச்சைமுத்துவுக்கு மிடையேயிருந்த வேற்றுமைகள் நீங்கின. அப்போதுதான், வீட்டின் அறையினுள்ளிருந்தபடி அனைத்தையுமறிந்த—அக்கிருட்டுக் கன்னி, இறைவனின் எதிரில் வந்து தனது சம்மதத்தையும் வெளியாக்கினாள்!

ஆடுதுறையான்—தன் இருமாப்புக் குலைந்ததற்காக வெட்கவில்லை; வெற்றியடைந்த காதலை எண்ணிப் பெருமிதம் கொண்டான். இறைவனோ, தன் எண்ணம் நிறைவேறியதை எண்ணிச் செருக்குற்றான். இவற்றுக்கெல்லாம் எதிராகப் பச்சைமுத்துவோ ஆடுதுறையானின் மனமாற்றத்தைப் பண்ணையாரின் எதிரில் தான் ஒப்புக் கொள்ளுவதாக வாக்களித்து விட்டான். இவையெல்லாம் — இரண்டு தினங்களுக்குமுன்பு நிகழ்ந்தவை!

* * *

சேதிகள் அனைத்தையுமறிந்த பண்ணையார், புன்னகை பூத்தபடி அமர்ந்திருந்தார். பின்னர், பச்சைமுத்துவை நோக்கி, ''உம்! நடந்து போனதைப்பத்தி ஏன் நினைக்கிறே? ஒன் மகளை ஆடுதுறையானுக்குக் கட்டிக் குடுக்கச் சம்மதம்தானே?'' என்றார்.

பச்சைமுத்து பெருமூச் செறிந்தபடி தலையசைத்தான்.

''நல்லா யோசனை பண்ணிச் சொல்லு — அப்புறம் — சட்டியில்லே, பானையில்லே மாத்த. அவன் ஒன்னை எதிரியாக நினைச்சிருந்தான்!'' என்றார் கிண்டலான நகைப்புடன்.

''எஜமாங்களே? 'வினை விதைச்சவன் வினையைத்தான் அறுப்பான்!' அவனுக்குப் பயந்துக்கிட்டோ, இல்லாட்டி, என் மகளுக்கு இஷ்டமிருக்குது என்கிறதுக்காகவோ, நானு சம்மதிக்கல்லேங்க! ஆனா, அவனும் என்னைப்போல் 'பாட்டாளிக் கட்டைங்'கிறதுக்காகத் தாங்க!'' என்றான் அவனை வெறிச்சிட்ட பார்வையுடன் நோக்கியபடி.

பண்ணையார், ஆடுதுறையானின் புறத்துக்குத் திரும்பி, ''என்னப்பா, ஆடுதுறையான்! நீலத்த நல்லூர் குத்தகையிலே பச்சைமுத்துவுக்குத் தனிப்பட என்ன 'உவரி' கண்டுச்சு! அதையெல்லாம் நீயாவே கண்டு புடிச்சியா; இல்லாட்டி, அவனுவே ஒனக்கும் பங்கு குடுத்தானு?—'' என்றார் கண்களைச் சிமிட்டியபடி!

''எசமாங்களே! ஒங்களுக்குத் தெரியும் என் மனசு: அடுத்தபடியா, தலைக்கி மேலே ஒருத்தன் எரிஞ்சுக்கிட்டுப் போறானே-அவனுக்குத் தான்-தெரியும்! ஆனா, இன்னைய வரைக்கும் எசமான் என்னைப் பார்த்து ஒரு வார்த்தை கேட்டிருப்பீங்களா? இப்போ சொல்லிட்டேனுங்க நானு செய்த இல்லுமல்லு வேலையை! அந்தக் குத்தகையிலே, திருட்டுப் போன எருவையெல்லாம் கண்டுபுடிச்சு, வரும் பண்ணினத்துலே-ஆயிரம் ரூவா உவரியாக் கிடைச்சது உண்மைதாங்க! இதையும் எசமான் கண்ணுலே காண்பிச்சிருந்தா எல்லாத்தையும் தருமத்துக்கு வாரிவிட்டிருப்பீங்க! இதோ இருக்குதுங்க எல்லாம்!—'' இவ்வாறு கூறிக் கொண்டே, தன் மடியிலிருந்த ஒரு கத்தை காகிதக் கருவியும் எடுத்து அவர் எதிரில் போட்டான்.

அவ்வளவும், ஐந்து மாதங்களுக்கு முன்பே சந்தை முடிந்த காலத்தில், பண்ணையாரின் மகளான அபிராமியின் பெயருக்கு வாங்கப் பட்டிருந்த சர்க்கார் கடன் பத்திரங்கள்!

அடுத்த கணம், ஆடுதுறையான் பச்சைமுத்துவின் எதிரே--நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கால்களைப் பற்றிக் கொண்டான்!

* * *

இருபது தினங்களுக்குள், தேவனூர்ச்சேரியில் நடந்த சிறப்பான இரண்டு திருமணங்களைப் பற்றி, ஊரார் வெகு நாட்கள் வரை சிறப்பாகப் பேசிக் கொண்டார்கள். அவை, பண்ணையார் வீட்டுக் கல்யாணமும், 'ஆடுதுறையா'னாக வழங்கப்பட்ட அய்யாறுவுக்கும், காவேரிக்கும் நிகழ்ந்த கல்யாணமும்தான்.

மாடும் மனிதனும்

கு. பஞ்சாபகேசன்

★ காளை மாட்டுக்குச் சுழி இருந்தால் பெருமை அதிகம். மனித மனத்தில் சுழியும் கறையும் இருந்தாலோ ?....



அன்னம்மா வெற்றிலைத் தட்டை ஏந்தி வந்து வாசற்புறத்தில் நின்றாள்.

தட்டில் வண்ணச் சுண்ணாம்பிருந்த புட்டியை முதலில் எடுத்துக் கொண்டே மூடியைக் 'கரகர' வென்று சுழற்றலானார் அண்ணாமலை. அவர் வாய் 'கடுகடு' வென்று பேசியது.

"சந்தையில் ஆயிரத்துக்கும் மேலே தள்ளிவிடலாமென்று இராசாச் சுழிக் காளையைக் கொண்டு போனான். நப்பாசை எந்த மனிதனைத்தான் விட்டது? அன்னம்மா! வெத்திலைத் தட்டை எடுத்து வாவென்று வெத்திலே போடவா உன்னைக் கூப்பிட்டேன் வாசலுக்கு? உன் பெயருக்குத் தகுந்தாற்போல் உனக்கு அன்ன நடைதான் அன்னம்மா! கொஞ்சம் முன்னாடி வராமல் போனாயே! அந்தப் பயல் இராசாச் சுழிக் காளையை ஓட்டிக்கிட்டுத் தெருவோடே போன அழகைப் பார்க்க வில்லையே...பழுத்துப் போன வாழை இலை மாதிரி தலை தொங்கிப் போயிருந்தது!"



கொஞ்சம் வாசனைப் பாக்கை வாயில் போட்டுக் கொண்டு, இரண்டு துளிர் வெற்றிலைகளைக் கையில் எடுத்துக்கொண்டே ரோஜா நிறச் சுண்ணாம்பைத் தடவலானார் அண்ணாமலை.

பாக்கின் சுவையோடு பேச்சின் சுவையும் சேர்ந்து கொண்டது.

"அன்னம்மா! அருமையான இராசாச் சுழிக் காளை அது. ஆனால் அதற்குச் சோடி சேர்க்கத் தெரியவில்லை அவனுக்கு. காங்கயம் ரகமென்று எந்தக் கழுதையையோ சோடி சேர்த்து விட்டான் இராசாச் சுழிக்கு! சந்தையிலேகூடச் சோடி மாற்ற வேணுமென்று அநேகர் சொன்னார்களாம். பயல், 'என் இராசாச் சுழிக் காளைக்குக் காங்கயம்தான் சரியான சோடி'ன்னு சொல்லி விட்டு விலையை ஆயிரத்துக்கும் மேலே உயர்த்தினானாம். விலை கேக்காமல் அவன் வார்த்தையைக் கேட்டு விட்டுத்தான் போனார்கள் அத்தனை பேரும்!"

அண்ணாமலையின் வாயில், நாக்குக்கு நல்ல ருசி கொடுத்துக் கொண்டு வெற்றிலை புரண்டு கொண்டிருந்தது. தான் பேசிக்கொண்டே போக, தமது மனைவி

அன்னம்மா பேசாமலே நிற்பது அப்போதுதான் அவரது உணர்வுக்குத் தட்டுப்பட்டது.

நிமிர்ந்து பார்த்தார். அன்னம்மாவின் கண்களில், இரு கடைகளிலும் கண்ணீர் கட்டி நின்று, வாசற்புறத்திலிருந்து வந்த வெய்யிலில் 'பள பள' வென்று மின்னியது.

"என்ன, அன்னம்மா! ஒன்றுமே சொல்லவில்லையே! உடம்பு சரியாயில்லையா? வெத்திலையை நானே உள்ளே வந்து எடுத்திருப்பேனே..." அண்ணாமலை முடிக்கவில்லை. அன்னம்மா முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு 'விருட்'டென்று வெற்றிலைத் தட்டத்துடன் வீட்டுக்குள் போய்விட்டாள்.

"இதென்ன, பைத்தியக்காரப் பிள்ளையாக இருக்கிறாயே..." என்று சொல்லிக் கொண்டே எழுந்து மனைவியைத் தொடர்ந்து வீட்டுக்குள் சென்றார் அண்ணாமலை.

2

ஊரில் மாட்டுச் சந்தை வெகு கெடுபிடியுடன் நடந்தேறியது. இந்த வருஷம் நாலா திசைகளிலிருந்தும் சந்தைக்கென்று வந்திருந்த காளைச் சோடிகளுக்குக் கணக்கு வழக்கில்லை

சோடிகள் அதிகம் வர வர விலையும் மவுசும் சற்று இறங்கும் என்று எதிர் பார்த்தவர்கள் ஏமாந்தார்கள். விலை இறக்கம் அத்தனை சுலபமாக நேர்ந்துவிடவில்லை: மாட்டின் மேலுள்ள ஆசையை, விலையை அதிகப்படுத்திப் பேரம் செய்து தீர்த்துக் கொண்டார்கள் மனிதர்கள்.

அத்தனை பெரிய சந்தையிலும் இராசாச் சுழிக் காளைகள் மிகக் கொஞ்சமாகத்தான் வந்திருந்தன. நாலைந்து என்று விரல் விட்டு எண்ணி விடலாம். இராசாச் சுழி ரகத்தைக் கண்டு விட்டால் கண்ணை மூடிக்கொண்டு கொள்ளை விலை கொடுத்தும் வாங்கி விடலாம் என்று தூரத்து ஜில்லாக்களிலிருந்தெல்லாம் வந்திருந்தார்கள் 'பிராசுகள்.'

சந்தையில் கிழக்கு மூலையில் கம்பீரமாக நின்றிருந்தது அந்தக் காளை. வலது பக்கக் கழுத்தில் வைரப் பட்டையைப் போல் தீர்க்கமான இராசாச் சுழி. சந்தையின் கிழக்குப் பக்கத்தில் சூரிய தேவன் நின்று கொண்டிருந்தமாதிரி இருந்தது காளை.

சற்றுத் தூரத்தில் வெய்யிலுக்குக் காப்பாகச் சிறு கூடாரமடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் மேகலிங்கம். ஐம்பது வயது இளைஞராக 'இராசாச் சுழிக்கு' அதிபர் என்ற பெருமிதத்தில் தம்முடைய பெரிய ஆகிருதியுடன் அமர்ந்திருந்தார் அவர். 'ஆயிரத்து இருநூறில் ஒரு சல்லிக் காசுகூடக் குறையக் கூடாது' என்று கண்டித்துச் சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

மேகலிங்கம் உள்ளூர்ப் பேர்வழி. அண்ணாமலைக்குத் தூரத்து உறவு. நாலைந்து பிள்ளைகளும் இரண்டு மூன்று பெண்களும் உண்டு அவருக்கு.

அவர்களில் ஒரு பிள்ளையைத்தான் அண்ணாமலைக்கும் அன்னம்மாவுக்கும் அவர் தத்து கொடுத்திருந்தார். தமது ஐம்பதாவது பிராயத்தில் அண்ணாமலை, மேகலிங்கத்தின் பதினாறு வயதுப் பிள்ளை சிவகுமாரனைத் தத்து எடுத்தார்.

கொடுக்க மனமில்லாதவரைப்போல் மகனை மேகலிங்கம் அண்ணாமலைக்குக் கொடுத்தார். அண்ணாமலைக்கும் நல்ல சொத்து இருந்தது.

கொடுத்த இரண்டு வருஷங்களாக இரு குடும்பங்களுக்கு மிடையில் ஒரு தகராறுமில்லை. பதினெட்டு வயதுப் பையனானாலும் பார்ப்பதற்கு இருபத்தி ஐந்து வயது இளங்காளையைப் போலிருப்பான் சிவகுமாரன். அண்ணாமலையின் செல்வத்துக்கு அவன் ஒரே வாரிசு இப்போது.

சிவகுமாரன் மிக நல்ல பிள்ளை. இந்தக் குடும்பத்துக்கு வந்த பிறகு, 'அந்த'க் குடும்பத்தின் ஒட்டுதலை அவன் கத்திரித்துக் கொண்டு விட்டான். அது நியாயமானாலும், மேகலிங்கத்துக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இது முதல் காரணம்.

இரண்டாவது, இந்த இராசாச் சுழிக் காளை. பிறந்தது மேகலிங்கத்தின் வீட்டுத் தொழுவத்தில்; பிறந்தபோதே அண்ணாமலைக்கு அந்தக் காளைக் கன்றின்மேல் ஒரு கண்—அதிலும் அந்த இராசாச் சுழியின் மேல் இரு கண்ணும்-விழுந்து விட்டது. இப்போது வளர்ந்து மதர்த்த காளையாக அந்த இராசாச் சுழி நின்ற போது அண்ணாமலையின் ஆசையைக் கேட்க வேண்டுமா, என்ன!

சந்தைக்கு முன்னாலேயே காளையைத் தனக்குக் கொடுக்கும்படியாக அண்ணாமலை மேகலிங்கத்தைக் கேட்டபோது, ஆயிரத்து இருநூறுக்கு இறங்கவில்லை மேகலிங்கம்.

அண்ணாமலைக்கு அது மிகவும் கோபம். 'அருமைப் பிள்ளையைத் தத்துக் கொடுக்க வரும் மனிதன் ஒரு மாட்டுக்குப் போய் இத்தனை விலை கேட்கிறானே! இவன் மாடா, மனிதனா?' என்று அண்ணாமலையின் உள்ளம் கறுவியது. 'உள்ளூரில் விலை பெறாதது, சந்தையில், வெளியூராளிடமா விலை போய்விடப் போகிறது?' என்றிருந்தார் அவர்.

தரகு பேசியவர்கள் எல்லாரும் விலையைக் கண்டு பிரமிக்காமல் போகவில்லை. குறைத்துக் காட்ட வந்தால் மேகலிங்கம் முறைத்துப் பார்த்தார், தரகரையும் தரகு பேசியவரையும்.

சந்தையின் கடைசி நாள். இராசாக் கழிச் சோடி இன்னும் விலை போகவில்லை. இதைச் செவியாறக் கேட்ட அண்ணாமலைக்கு இதயத்தில் இரும்பூது.

பிற்பகல் வேளை. வெய்யில் இறங்கிக் கொண்டு வந்தது.

அப்போது அங்கே வந்தான். சிவகுமாரன் — அவருடைய மைந்தன் தான்; ஆனால் இப்போது அண்ணாமலையின் 'மைந்தன்'. மேகலிங்கத்தின் இதயத்தில் சற்றுச் சலனம்: 'இவன் எங்கே இங்கே வந்தான்?' ஒரு குழப்பம்.

மடியை அவிழ்த்து நூறு ரூபாய் நோட்டுக்களை எண்ணினான் சிவகுமாரன். ஆறு நோட்டுக்கள். அறுநூறு ரூபாய். கூடாரத்துள் மேகலிங்கத்தின் எதிரே போய் உட்கார்ந்து கொண்டான்.

அவருடைய வலது உள்ளங் கையை இழுத்துப் பிரித்து நோட்டுக்களை அவர் கையில் திணித்தான் சிவகுமாரன். மேகலிங்கம் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

''வைச்சுக்குங்க,......'' கடைசியில் 'அப்பா' என்ற வார்த்தை அவன் தொண்டைக்கு வந்து விட்டது; ஆனால் அதைச் சிவகுமாரன் சொல்லவில்லை.

''என்னத்துக்கு இது, சிவகுமாரா?'' வார்த்தைகளில் அவசரப்பட்டார் மேகலிங்கம்.

''இராசாக் கழிக் காளைக்குத்தான்! அப்பாவுக்குக் காளைமேல் உசிர் விழுந்து விட்டது!'' அதாவது அவனது 'அப்பாவுக்குத்தான்!'

ஆத்திரத்தின் உருவமானார் மேகலிங்கம். நோட்டுகளை இருவருக்கும் நடுவே இருந்த பூமியில், தொடாததைத் தொட்டதைப்போலப் போட்டார்!

''டேய், சிவகுமாரா! அந்த அப்பன் பாசம் இத்தனை தூரத்துக்கு வளர்ந்து விட்டதா? உன்னைக் கொடுத்து வாங்கினதைவிட ஒரு நூறு இப்போது மேலே மதித்து விட்டான் என் காளையை! இந்த ரூபாய் ஒரு முழுச் கழி போடக் காணுதடா, சிவகுமாரா! என் இராசாக் கழிக்கு விலையா இது? கொண்டு போய் அவன் முகத்தில் விட்டெறிந்துவிடு. ஆம்மாம்.....!''

இராசாக் கழி, மேகலிங்கத்தின் கண்ணை மறைத்து விட்டது. இல்லாவிட்டால் அப்படிப் பேசுவாரா?

சிவகுமாரன் இளைஞன். துடியான பிள்ளை. தன்னை விடவும், ஒரு மாட்டுக்கு மதிப்பு வைப்பவரைப்போல் அல்லவா அவர் பேசுகிறார்? பெருமையில் ஒரு மனிதருக்கு மதி இப்படியும் அழிந்து விடுமா, என்ன?

முகத்தில் ரத்தம் கன்ட, ஆறு நோட்டுகளையும் பொறுக்கிக் கொண்டு எழுந்தான் சிவகுமாரன். அப்படியே வெளியே வந்து விட்டான்.

நேரே வீட்டுக்கு வந்தவன், அன்னம்மா கடச் கடத் தோசை வார்த்துப் போடவே கோபப் பசியில் சாப்பிட உட்கார்ந்தான். 'உள்ளூரில் விலைபெறாத பொருள்!' அப்பா நன்றாய்ச் சொன்னார்! அது வெளியூரில் விலை பெறவா போகிறது?.....'' பொங்கி வந்த ஆத்திரத்துடன் வார்த்தைகளை உதிர்த்தவாறே சாப்பிட்டான்.

அன்னம்மாவுக்கு இது ஒன்றும் பிடிக்க வில்லை. அவர்களுக்கு அருமை




யாகக் கிடைத்த மகன்தான். இருந்தாலும் சொந்த அப்பனிடம் இப்படிப் பகைமை பாராட்டுவதா?

பாசத்தின் உண்மையான உருவம் ஒரு குழந்தையைப் பெறாத அன்னம்மாவுக்கு நன்றாகத் தெரியும். அவள் கண்களில் நீர் நிறைந்து நின்றதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவள் வாய்திறந்து ஏதுமே பேசவில்லை.

3

பொழுது நள்ளிரவைத் தாண்டிச் சென்று விட்டது.

அண்ணாமலைக்கு முன்னிராப் பொழுதில்தான் நல்ல தூக்கம் இருக்கும். இரவு





ஒரு மணிக்கு மேலே கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டு விடியற் காலம் வரை பொழுதை ஓட்ட முடியாமல் தவித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார் அவர்.

வாசல் திண்ணையில் அன்றைக்கென்று பிடிவாதம் பிடித்துப் போய்ப் படுத்துக் கொண்டிருந்தான் சிவகுமாரன்.

வீட்டுக்குள்ளே கண் விழித்த அண்ணாமலைக்குக் குளிர்வேறே எடுக்குது. 'இந்தப் பிள்ளை நன்றாகப் போர்த்திக்கொண்டு படுத்திருக்கிறானோ' என்ற சந்தேகம் ஏற்படவும், எழுந்து வாசற் கதவைத் திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்த்தார்.

படுக்கை காலியாகக் கிடந்தது!

சிவகுமாரனைக் காணவில்லை! பதை பதைத்தது அண்ணாமலையின் உள்ளம். "அன்னம்மா!" என்று அவர் சத்தம் போட்டார்.

வந்து பார்த்த அன்னம்மாவும் திகைத்தாள். "எனக்கு ஏதும் பிடிக்கவில்லைன்னு அப்போதே சொல்ல வேணும்னு நினைச்சேன். உங்க கோபம் தான் ஒரு முரட்டு மாட்டுக்கோபம் ஆச்சே? அந்த இராசாச் சுழிக் காளையைப் பத்திப் பேசிப் பேசி ஆத்திரப் பட்டான் மகன்..." என்று தடுமாறினாள் அன்னம்மா.

"என்ன அன்னம்மா! சிவகுமாரன் இராசாச் சுழிக் காளையைப் பத்திப் பேசினானா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அண்ணாமலை.

"நீங்கதான் காளை கிடைக்கவில்லைன்னு கருவிக்கிட்டே இருக்கீங்களே! நேத்து சந்தைக்கு அறுநூறு கொண்டு போனான் மகன், உங்களுக்காக அதை வாங்கிடலாம்னு..."

ஒரு நிமிஷம் அண்ணாமலை தம் நிலை மறந்தார்:

"அப்படியா? எனக்கு அவன் சொல்லவே இல்லையே! அன்னம்மா! சிவகுமாரன் 'அந்த' அப்பனுக்காகப் பிறந்த மகன் இல்லை; 'இந்த' அப்பனுக்காக வளர்ந்த மகன் அல்லவா?...மேலே என்ன ஆச்சு?"

"ஆகிறது என்ன? அவர் நம் மகன் புண்பட ஏதோ பேசியிருக்காரு...கோபத்திலே கன்னு பின்னுவென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தான் பிள்ளை. என்றைக்குமில்லாமல் திண்ணையில் வந்து படுத்துக் கொண்டான்....ஏன், இன்னும் நிக்கிறீங்க? மேகலிங்க அண்ணாச்சியின் வீட்டுக்கு ஓடிப் போய்ப் பாருங்க! அவன் அங்கே ஏதாச்சும் ரகளை பண்ணப் போயிருக்கானோ என்னவோ!"

"ஆமாமாம்..." என்று சொல்லிக் கொண்டே, அண்ணாமலை துண்டைப் பிரித்து உடம்பில் போர்த்திக் கொண்டு புறப்படத் தயாரானார்.

அப்பொழுது வீட்டுப் புழக்கடைத் தொழுவத்தில் அரவம் கேட்டது!

"கலகல' வென்று மணி ஒலி; இருவரும் ஓடினார்கள் மாட்டுத் தொழுவத்துக்கு, கையில் லாந்தருடன்!

அங்கே சிவகுமாரன் பெருமையுடன் அந்த இராசாச் சுழிக் காளையை ஓட்டிக் கொண்டு வந்து கட்டியிருந்தான்.

அந்த உயர்ந்த ரக மாடு அவனோடு கூடவும் கொஞ்சம் பழகியிருக்கிறதல்லவா? அவன் இரவில் வந்து ஓட்டிப் போன போது, கொஞ்சமேனும் உறுமாமல், முறைக்காமல் அவனுடன் வந்து விட்டது.

"ஓட்டி வந்திட்டேன், அப்பா! இனிமேல் அவரு வந்து காளையை மீட்டுக் கிட்டுப் போகட்டும், பார்க்கலாம்!" என்று கறுவினான் சிவகுமாரன். அவனுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

"டேய், மகனே! இது என்னடா காரியம்?..." அலறினார் அண்ணாமலை.

முகத்தை மூடிக் கொண்டு விம்ம ஆரம்பித்தாள் அன்னம்மா.

இவர்கள் தன்னை மெச்சுவதற்குப் பதிலாக இப்படிச் செய்வதைக் கண்டு அதிசயித்தான் சிவகுமாரன்.

அப்போது திறந்திருந்த வாசற்கதவின் வழியாகக் குரல் கொடுத்துக் கொண்டே பாய்ந்தோடி வந்தார் மேகலிங்கம்!

இதைக் கண்டு மூவரும் ஆச்சரியமடைந்த போது, மேகலிங்கம் நேரே சிவகுமாரனிடம் வந்து அவனை அணைத்துக் கொண்டார்.

"இப்படி நீ செய்யலாமா, சிவகுமாரா! ஊரில் நாளைக்கு உன்னை நாலு பேர் கள்ளனென்றால் எனக்கும், உன் 'அப்பனுக்கும்' கௌரவமாகுமா? இந்தப் பிராணி நன்றி விசுவாசத்தோடு நீ கூப்பிட்டதற்கு மறுக்காமல், ஓசை செய்யாமல் வந்து விட்டது; ஊரில் இந்த விசுவாசம் எதிர்பார்க்க முடியுமா? இராசா போன்ற உன்னை விடவும் எனக்கு இந்த ராசாச் சுழிக்காளை பெரிதில்லை, அப்பனே! ஓட்டி வந்து விடு, அப்பா! நாளைக் காலையில் மேளதாளத்துடன் உன் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்..."–கண்ணீரில் மிதந்த கண்களுடனும், தழுதழுத்த வார்த்தைகளுமாக மேகலிங்கம் பேசினார்.

இராசாச் சுழிக் காளையோ, மனிதர்களை உண்மையான மொழி பேசவைத்துப் பெருமையில் கம்பீரமாக நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது.

"கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறது, மீனாட்சி?" என்று கேட்டாள் மரகதத் தம்மாள்.

"மாப்பிள்ளைதான் எழுதி யிருக்கிறார்."

"அப்படியா! கடைசியில் இப்பொழுது தான் அவருக்கு மனம் இரங்கி யிருக்கிறதாக் கும்" என்றாள் தாயார். அவள் குரலில் நம்பிக்கையும் மகிழ்ச் சியும் தலைகாட்டின.

மகள் மீனாட்சி சொன்னாள்: "அம்மா! நீ நினைக்கிறபடி அதிசயம் ஏதும் நடந்து விடவில்லை. உன் மாப்பிள்ளை ஐந்நூறு ரூபாய், ஐந்நூறு ரூபாய் என்று பழைய பல் லவியைத்தான் பாடி யிருக் கிறார் இந்தக் கடிதத்திலும்."

மரகதத்துக்கு முகம் இறங் கிப் போயிற்று. கேவலம் ஐந் நூறு ரூபாய்க் காக! பழைய



மழை பிடிக்கிறது

துறைவன்

காலம் என்றால், பெட்டியைத் திறந்து தூக்கி வீசி யிருப்பாள்! இப்பொழுது காலச் சக்கரம் ஒரு வட்டம் சுழன்று விட்டது. சொத்தும் சுகமும் பழைய கனவாக மறைந்து விட்டன! வீடு ஒன்றுதான் மிச்சம். கொல்லைத் தோட் டத்தில் நாலைந்து குடிசைகள். அந்த வாடகை வருமானத்தில்தான், மரகதத் தம்மாள் காலம் தள்ளிக் கொண்டிருந் தாள். இந்த நிலையில் மகள் கையில் கொடுத்து மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்புவதற்கு ஐந்நூறு ரூபாய்க்கு எங்கே போவாள்?

மாரியப்பன் வந்தான். ஊரில் அவன் ஒருவன்தான் பழைய விசுவாசம் மறக் காமல், மரகதத்தம்மாளுக்குச் சிறு சிறு ஒத்தாசைகள் செய்யக் கூடியவன். ஒரு காலத்தில் போக்கிரி என்ற பெயர் வாங்கி இப்பொழுது ஆட்டபாட்டமெல் லாம் ஒய்ந்து போன மனிதன்!

"மாரியப்பா! கொல் லைப்புறத் தோட்டத்தை விற்று விடலாமென்று யோசிக்கிறேன். வாங்கு வதற்கு ஆள் பார்த்துக் கொண்டு வா" என்றாள் மரகதம்.

மீனாட்சி இடுக்கிட்டாள். "அது மட்டும் வேண்டாம், அம்மா! உன்னை நிர்க்கதி யாக்கிவிட்டு, நான் புருஷன் வீட்டில் போய் அப்படி என்ன வாழ்ந்து விடப் போகிறேன்?"

மாரியப்பன் விஷயத்தைப் புரிந்து கொண்டான்.

"மீனாட்சியை அவள் மாப்பிள்ளை வீட் டுக்கு அனுப்பி வைக்க ஐந்நூறு ரூபாய் வேண்டும். அவ்வளவுதானே?"

மரகதம் தலையை அசைத்தாள்.

"நீங்கள் நான் சொல்லியபடி, சொக்க லிங்கம் பண்ணையாரிடம் போய்க் கேட் டால் மறு வார்த்தை இல்லாமல் பணம் தந்து விடுவார். ஒவ்வொரு ரூபாயாக வேண்டுமானாலும் திருப்பிக் கொடுக்க லாம். நீங்கள்தான் ஐயாவுக்கும் அவ ருக்கும் இருந்த பழைய பகையை எண் ணிப் பிடிவாதம் பண்ணு கிறீர்கள். பண்ணையார் எல்லாவற்றையும் எப் போதோ மறந்து விட் டார். தர்மவான்." மரக தத்தம்மாளின் கண்களில் கோபம் ஜொலித்தது.

பணத் தேவைக்காகத் தோட்டத்தை விற்கலாம். ஆனால் மானத்தை விற்க முடியுமா?

''மாரியப்பா! இன்னொரு முறை அந்த வார்த்தையை என் காதில் போடாதே. இந்த ஜன்மத்தில் அவரிடம் போய் நான் கையை நீட்ட முடியாது! இந்த வீட்டு ஐயாவின் ஆவி பிறகு என்னைச் சும்மா விடாது. இன்னும் பெரிய மோசமான நிலைமை ஏற்பட்டாலும் சரி, பண்ணையாரிடம் யாசகம் கேட்கிற பேச்சு மட்டும் இல்லை!''

மாரியப்பனுக்கு மரகதத்தின் முரண்டு ஆச்சரியமாக இருந்தது. பொல்லாத்தனத்துக்கே ஒரு உருவமாக இருந்து, இறந்து போன கணவரின் மேல் இந்த அம்மாளுக்குத்தான் என்ன விசுவாசம்!

''குழந்தை மீனாட்சி போய்க் கேட்டாலும் போதும். பண்ணையார் வீட்டு அம்மாளிடம்'' என்று தன் யோசனையை மேலும் வற்புறுத்தினான் மாரியப்பன்.

''வேண்டாம், மாரியப்பா! தோட்டத்தை விலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய புண்ணியவான் யாராவது இருந்தால் அழைத்துக் கொண்டு வா. அது தான் பெரிய உபகாரம்'' என்றாள் மரகதம் சற்றுக் கோபமாக.

''தோட்டமாவது விலை போகிறதாவது! எவன் அப்படிப் பணத்தைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறான்? அதெல்லாம் நடக்கிற காரியமில்லை. நான் சொல்லுவது ஒன்றுதான் வழி. மீனாட்சியின் வாழ்வு வீணாகி விடக் கூடாது, அம்மா!''

''உங்கள் இஷ்டம்'' என்று உள்ளம் நொடிந்தாற் போல் சொல்லி விட்டு எழுந்து போனாள் மரகதத்தம்மாள்.

** ** **

சொக்கலிங்கப் பண்ணையாரின் மனைவி தேவானையம்மைக்குக் கணவரின் செய்கை ஒன்றும் பிடிக்கவில்லை.

''அப்பாவிப் பெண் மன்றாடிக் கேட்டுப் பார்த்தும், பணம் கொடுக்க மாட்டேன் என்று கையை விரித்து விட்டீர்களே! பாவம், பார்க்கப் பரிதாபமாக இருந்தது.''

''நிஜமாக என் கைவசம் பணம் கிடையாது'' என்றார் சொக்கலிங்கம்.

''உங்கள் கையில் இல்லாவிட்டால் என்னிடம் கேட்டு வாங்கிக் கொடுத்திருக்கலாமே! உங்களுக்குக் கொடுக்க இஷ்டமில்லையா?'' — தேவானை தன் கணவரின் குணத்தை நினைத்து மிகவும் வெட்கப்பட்டாள்.

''மரகதத்தம்மாள் குடும்பம் தலைகீழாகக் கவிழ்ந்து போய் விட்டது. எல்லாம் அவள் புருஷன் செய்த அக்கிரமத்துக்கு ஆண்டவனாகப் பார்த்துக்கொடுத்த தண்டனை. ஆனால் மரகதம் ஒரு ஈ, எறும்புக்குக் கெடுதல் செய்தறியாதவள். சொத்து சுகம் எல்லாம் பறி கொடுத்து விட்டு, இப்படிக் கஷ்ட தசையில் இருக்கிறாள். மகளையும் மாப்பிள்ளைக்காரன் துரத்தி விட்டான். இந்தச் சமயத்தில் நாம் ஏதோ பணவுதவி செய்தால் என்ன குடி மோசம் போய் விடும்? ஐந்நூறு ரூபாய் தானே! எத்தனையோ வேண்டாத செலவு செய்கிறோம். ஒரு பெண்ணின் வாழ்வைக் காப்பாற்றுவதற்கு, இது கூடச் செய்யக் கூடாதா நாம்?'' என்று தேவானை நெடுகப் பேசிக் கொண்டே போனாள்.

சொக்கலிங்கம் மனைவியை முறைத்து ஒரு பார்வை பார்த்தார்.

''ஏது ஏது! நீ பேசுகிற பேச்சைப் பார்த்தால் ஐந்நூறு ரூபாய்க்கு ஆயிரம் ரூபாயாக நீயே தூக்கிக் கொடுத்து விடுவாய் போலிருக்கிறதே!''

''கொடுத்தால், தலையை வாங்கி விடுவீர்களோ?'' என்று கொஞ்சம் ஆத்திரமாகவே கேட்டு விட்டாள் தேவானை.

''கொடுத்துப் பார், தெரியும். அதிகமாகப் பேசாதே. எனக்குக் கெட்ட கோபம் வரும்'' என்று அதட்டினார் பண்ணையார்.

** ** **

''அந்தப் பண்ணையார் இவ்வளவு மனுஷத்தன்மையில்லாத கருமி என்று எனக்குத் தெரியாமல் போச்சு, அம்மா! எல்லாம் என் முட்டாள்தனம்'' என்று மரகதத்திடம் மன்னிப்புக் கேட்டான் மாரியப்பன்.

மீனாட்சியும் அம்மாவைக் கட்டிக் கொண்டு கண்ணீர் பெருக்கினாள்.

''அழாதே, குழந்தை! நீ உன் அப்பாவின் எதிரியிடம் போய்ப் பணம் வாங்கி வந்திருந்தால், ஒரு வேளை நான் உன்னை விட்டு விட்டுக் காடோ செடியோ என்று தேசாந்தரம் புறப்பட்டிருப்பேன். உனக்குப் பணம் கிடைக்காமற் போனது எனக்கு ஒரு வகையில் சந்தோஷம் தான். நீ மாப்பிள்ளை வீடு போக, நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று மகளைத் தடவிக் கொடுத்தாள் பெற்றவள்.

** ** **

ஒரு வாரம் கழித்து, மாரியப்பன் கையில் ஐந்நூறு ரூபாயோடு வந்தான்.

''ஏது பணம்?'' என்று மரகதம் ஆச்சரியத்தோடு கேட்டாள்.

''நம்ம ஐயாவுக்கு நான் அந்தக் காலத்திலே பாண்டு எழுதிக் கொடுத்துப் பணம் கடன் வாங்கியிருந்தேன். அதைத் திருப்பிக் கொடுக்கிறேன், வாங்கிக் கொள்ளுங்க'' என்றான்.

"உனக்குப் பணம் எப்படி வந்தது, மாரியப்பா?"

"என் பேரிலே அரை ஏக்கரா புஞ்சை இருந்தது. அதை விலைக்குத் தள்ளி விட்டு விட்டேனுங்க. உங்களுக்கு இந்தச் சமயத்திலே உதவாத சொத்து, எனக்கு எதற்காக?"

பாண்டுப் பத்திரத்தைத் தேடி யெடுத்துக் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள் மரகதம்.

அடுத்த பத்து நாட்களுக்குள், கிராமத்துக்குள் ஒரு பழைய மோட்டார் வந்தது. மீனாட்சியை அவள் கணவன் வந்து அழைத்துப் போனான். மரகதத்தின் கவலை தீர்ந்தது.

** ** **

தேவானையம்மாள் தன் கணவரிடம் சண்டை போடத் தொடங்கினாள்

"பார்த்தீர்களா? நாம் உதவி செய்ய மறுத்து விட்டோம். அந்த ஏழை மாரியப்பன் தன் நிலத்தை விற்று மரகதத்துக்கு ஐந்நூறு ரூபாய்கொடுத்து உதவியிருக்கிறான்! அதுதான் மனிதத்தன்மை என்று படுகிறது எனக்கு."

"ஓகோ!" என்றார் பண்ணையார் கவலையில்லாமல்.

"என்ன ஓகோ என்கிறீர்கள்? அந்த மாரியப்பனுக்கு உள்ள இரக்கங்கூட, நமக்கு உண்டாகாமல் போச்சு" என்று தேவானைமேலும் இடித்துப் பேசினாள்.

மீண்டும் ஒரு 'ஓகோ' போட்டார் பண்ணையார் அலட்சியமாக.



தேவானைக்கு எரிச்சல்வந்தது. "எதிரிக் குடும்பம் இவ்வளவு அதோகதியாகப் போச்சு. இன்னும் உங்களுக்குப் பழைய பகை நெஞ்சை விட்டு மறையவில்லை. எப்போத்தான் பெருந்தன்மை வரப் போகிறதோ, தெரியவில்லை. எல்லாரும் இப்படியே வர்மம் வைத்துக் கொண்டிருந்தால் மழைகூடப் பெய்யாது" என்று கூறினாள்.

"தேவானை. அதிகமாகப் பேசாதே! அந்த மரகதம் எவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள், தெரியுமா? வாழ்விலும் தாழ்விலும் புருஷன் கிழித்த கோட்டைத் தாண்டாமல் வாழ்க்கை நடத்தியவள். அவளுக்கு நாம் பணம் கொடுத்து உதவி செய்கிறதாவது! அவள் கேட்டாலும், நாம் கொடுக்கிறது தான் தப்பு. என்னைப் பகைத்துக் கெட்டுப் போனவன் அவள் புருஷன். இப்பொழுது நான் பணம் கொடுத்து அவள் அதை ஏற்றுக் கொண்டால், அவள் பெருமையும் கௌரவமும் மனுஷத் தன்மையுமே மண்ணோடு மண்ணாயிருக்கும். அவளை அந்த ஈன நிலைமைக்கு ஆளாக்கிப் பார்ப்பது, எனக்கே மனகக் கஷ்டமாக இருந்தது. இந்த ஜன்மத்திலே அவள் யாருக்காகவும் சொந்த மகளுடைய வாழ்வுக்காக இருந்தாலுமே சரி, பிறத்தியாரிடம் கைநீட்டி உதவி பெறுகிற கேவலத்துக்கு இறங்கி விடக் கூடாது. அதற்காகத்தான்; நான் பணம் தர மறுத்து விட்டேன். இப்பொழுதாவது புரிகிறதா உனக்கு?"

பண்ணையாரின் இந்தத் தத்துவப் பேச்சு வெறும் கபடம் என்று பட்டது தேவானைக்கு.

"என்னமோ போங்கள். ஒரு பெரிய தப்புக் காரியம் பண்ணி விட்டீர்கள்" என்றாள்.

"என் காரியத்திலே நீ தப்புக் கண்டு பிடிச்சது போதும். இதைக் கொண்டு போய் அலமாரியிலே வைத்துப் பூட்டு" என்று ஒரு பத்திரத்தை அவள் கையில் கொடுத்தார்.

"இருக்கிற நிலமும் நீச்சும் போதாதென்று புது நிலம் வாங்கினீர்கள் போலிருக்கிறது. எவ்வளவு நிலம்?"

"அரை ஏக்கரா புஞ்சை."

"என்ன விலையோ?"

"அதிகம் ஒன்றுமில்லை. ஐந்நூறு ரூபாய்தான்" என்றார் பண்ணையார்.

** ** **

அன்று சாயங்காலம் மாரியப்பன் வந்தான். பண்ணையார் வீட்டில் இல்லை.

"என்ன மாரியப்பா!" என்றாள்.

"இந்தாருங்கள் அம்மா நீங்கள் கொடுத்த ஐந்நூறு ரூபாய். மீனாட்சிக்குக் கொடுத்து அனுப்ப, வேறே பணம் ஏற்பாடு செய்து விட்டோம். உங்கள் நல்ல மனசுக்காகத்தான் அம்மா இந்த ஊரிலே மழை பெய்கிறது" என்றான் மாரியப்பன் நன்றியோடு.

37. கட்டுண்ட மாயன்

கண்ணன் பிறந்து மூன்று மாதங்கள் ஆயின. குழந்தை கவிழ்ந்து படுக்க ஆரம்பித்த தினம் அதை ஒரு திருநாளாகக் கோகுலத்தில் எல்லோரும் கொண்டாடினார்கள். அன்று ரோகிணி நட்சத்திரம். யசோதை கண்ணனை நீராட்டி அலங்காரம் செய்தாள். பெண்கள் பாடினார்கள். அந்தணர் மந்திரம் ஓதினார்கள். வந்தவருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. குழந்தை அலுப்பால் கண் மூடியது. உறங்கும் கண்ணனை யசோதை தொட்டிலில் விட்டாள். தொட்டில் ஒரு வண்டியின் கீழே வைக்கப்பட்டிருந்தது

அன்று நந்தன் வீட்டுக்கு வந்த விருந்தினர் அநேகர். அவர்களைக் கவனிப்பதிலேயே மனம் செலுத்திய யசோதை உள்ளிருந்து கண்ணன் தாய்ப்பால் வேண்டிக் கரைந்து காலை உதறியதைக் கவனிக்கவில்லை. துளிரிலும் மெல்லிய மாதவன் பாதம் பட்ட வண்டி குடை சாய்ந்து விட்டது. அதன் மீதிருந்த தயிர் வெண்ணெய் பால் பாத்திரங்களெல்லாம் கீழே விழுந்து சிதறுண்டன. வண்டியின் அச்சு முறிந்து கிடந்தது. சத்தத்தைக் கேட்டு எல்லோரும் உள்ளே ஓடினார்கள். கோபரும் கோபியரும் நந்தனும் யசோதையும், ''இதென்ன விந்தை? வண்டி எப்படிக் கவிழ்ந்தது?'' என்று வியந்தனர். அங்கிருந்த சிறுவர்கள் கண்ணனுடைய கால் பட்டுக் கவிழ்ந்தது என்று கூறினார்கள். அதைக் குறித்துச் சிறிதும் சந்தேகம் வேண்டாம் என்றனர். கண்ணனை யாரென்று அறியாத ஆயர் மக்கள் இதை நம்பவில்லை. சிறு பையன்களுடைய பிதற்றல் என்று கருதினார்கள்.

அழும் குழந்தையை யசோதை எடுத்துக் கொண்டாள். ஏதோ கெட்ட தேவதையின் செயலென்று எண்ணிப் பாலகனுக்குப் பரிகாரங்கள் பல செய்தாள். நந்தன் முதலியோர் வண்டியைத் திருப்பி வைத்து அதன் மீது தயிர் பால் வெண்ணெய் பண்டங்களைத் திரும்பவும் அடுக்கி வைத்துத் தங்களுடைய செழிப்புக்குக் காரணமான அப்பொருள்களுக்குப் பூஜை செய்தார்கள். நந்தனும் அந்தணருக்கு அநேக தானங்கள் செய்தான்.

கண்ணனுக்கு ஒரு வயதாயிற்று. ஒரு நாள் யசோதை கண்ணனைத் தன் மடி மீது வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் திடீரென்று அவளால் குழந்தையின் பாரம் தாங்க முடியவில்லை. ஒரு பெரிய மலையின் பாரத்தைத் தாங்குவது போல் தோன்றியது. குழந்தையைப் புவி மீது வைத்துப் பரமனை மனத்தில் எண்ணினாள். இதுவும் ஒரு விந்தை என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

கம்ஸனுடைய அசுர நண்பர்களுள் ''திருணாவர்த்தன்'' என்பவன் ஒருவன். கம்ஸன் அவனைக் கோகுலம் சென்று கண்ணனைக்கொன்று வரும்படி ஏவினான். புயல்காற்று வேடம் பூண்டு 'ஓ'வென்று அலறிக் கொண்டு புழுதியால் புவியை மறைத்து ஊரெல்லாம் நடுங்க, இவ்வரக்கன் தரையில் கிடந்த கண்ணனைத் தூக்கிச் சென்று விட்டான். ஒரு மணி நேரம் வரை கோகுலம் இருளால் மறைந்திருந்தது. பிறகு யசோதை தான் விட்டிருந்த இடத்தில் குழந்தை இல்லையே என்று அலறினாள். சேயைப் பறிகொடுத்த ஆவெனக் கீழே சாய்ந்தாள். அதற்குள் புயல்காற்றின் வேகம் ஓரளவு அடங்கியது. கோகுலவாசிகளுக்கு ஒருவரையொருவர் காண முடிந்தது. கண்ணனைக் காணாத கோபிகள் யசோதையோடு தாமும் கண்ணீர் சொரிந்தனர்.

திருணாவர்த்தன் கண்ணனை வானம் வழியாக எடுத்துச் சென்றான். ஆனால் அவனால் வேகமாகச் செல்ல முடியவில்லை. தனது வேகம் குன்றுவதை அறிந்தான். கையில் எடுத்துச் செல்லும் குழந்தை மலைபோல் கனமாக இருந்தது. புயல் உருவை விட்டுத் தன்னுருவை எடுத்துக் கொண்டான். ஆனால் கண்ணனை உதற முடியவில்லை. மரகத மலையெனக் கண்ணன் அவன் கழுத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அரக்கனால் அசையவே முடியாமற் போய்



"உங்க வீட்டுக்கு மின்சாரம் வரப்போவதாகச் சொன்னீரே, வந்ததா?"
"இல்லே, ஐயா! என் சம்சாரம்தான் வந்துண்டிருக்கா!"

விட்டது. நெருக்கித் தவிக்கும் குரலில் முனகினான். கண்விழி பிதுங்கி வெளியே வந்து விட்டது. ஊருக்கு வெளியே தாங்கிய சிகவுடன் புவிமீது விழுந்தான்.

அழுது கொண்டிருந்த கோபிகள், கல் மீது விழுந்து உடல் சிதறி உயிர் துறந்த அரக்கனைக் கண்ணுற்றனர். அடிபடாது மேனி திகழத் தோற்ற மளித்த கண்ணனையும் கண்ணுற்றனர். "என்ன ஆச்சரியம்! தன் வினையால் அரக்கன் மாண்டான். நாம் என்ன தவம் புரிந்தோம், காயமொன்றும் படாமல் குழந்தை பிழைத்ததே!" என்று ஆனந்தம் அடைந்தனர்.

கர்கர் என்பவர் யதுகுலத்துக்கு குரு. கண்ணனுடைய முதல் ஆண்டு விழா முதலிய நற்சடங்குகளை வைப்பதற்காக அவர் வசுதேவரால் ஏவப்பட்டு நந்த குலம் வந்தார். நந்தன் கர்கரை வணங்கி மரியாதைகள் செய்தான். "வினைப் பயனைத் தெரிவித்து நல்வழியும் கூறும் சோதிடச் சாத்திரத்தில் தேவரீர் நிக ரற்றவர். ஆகவே பலராமனுக்கும் கண்ணனுக்கும் 'பேர் இடும்' கல்யா ணத்தை நீங்கள் செய்து வைக்க வேண் டும்" என்று வேண்டிக் கொண்டான்.

கர்கர் சிறிது நேரம் ஆலோசனை செய்தார். "நான் யது குலத்துக்குக் குருவாயிற்றே! சடங்குகளை நான் செய்து முடித்தால் உன் மகளைத் தேவகி யின் மைந்தன் என்று எண்ணுவார்களே. உங்களுக்கும் வசுதேவருக்கும் உள்ள நட்பை அறியும் கம்ஸன் என்ன தீங்கு இழைப்பானோ?" என்று பதில் உரைத் தார் கர்கர். "ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாகப் பசுமடத்தில் சடங்குகளைச் செய்து விடுவோம்" என்றான் நந்தன். சரியென்று கர்கரும் சம்மதித்தார். அவ் வாறே ரகசியத்தில் பேரிடும் கல்யாண மும் நடந்தேறியது. பிறகு கர்கர் பின்வருமாறு கூறினார்:

"ரோகிணியின் மைந்தனை இம்முதல் குமாரன் அனைவரையும் ஆனந்தப் படுத்துவான். ஆகவே இவனுக்கு 'ராமன்' என்று பெயர் வைப்போம். (வடமொழியில் "ராமன்" என்றால் 'ரமிக்கச் செய்பவன்' என்று பொருள்) இவன் பலம் பொருந்தியவனாகவும் இருப் பான். ஆதலால் இவனை 'பலராமன்' என்று அழைப்போம். யசோதை மகனை இரண்டாவது குமாரன் ஒவ்வொரு யுகத் திலும் ஒவ்வொரு வர்ணத்தில் தோன்றி யிருக்கிறான். முதல் யுகத்தில் வெண்மை நிறத்துடனும், இரண்டாவது யுகத்தில் சிவப்பு நிறத்துடனும், மூன்றாவது யுகத் தில் மஞ்சள் நிறத்துடனும் தோன்றி யிருக்கிறான். இப்பொழுது கரு நிறத்தில் தோன்றியிருக்கிறான். சில நாட்களுக்கு முன் இந்தக் குமாரன் வசுதேவர் வீட் டில் பிறந்தான். இவ் வுண்மையை அறிந்தபெரியோர் இவனை 'வாசுதேவன்' (வசுதேவன் மைந்தன்) என்று அழைப் பார்கள். இவனுக்கு எண்ணுக்கடங் காத நாமங்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒரு மேன்மையைக் குறிக்கும். அவை களை நான் அறிவேன். பொதுமக்கள் அறியார். இவ்வழகன் உங்களைக் களிப் புறச் செய்வான்; இவன் உதவியால் நீங்கள் இன்னல்களைத் தாண்டுவீர்; இவனை வழிபடுவோரின் பகைவர் மாண்டு போவார். ஆகவே நந்தனே! இக் குமாரன் நாராயணனுக்குச் சமான மான குணங்கள் படைத்தவன்" என்று கூறினார்.

இவ்வாறு அவதார ரகசியத்தைக் கர்கர் ஓரளவு மறைத்து நந்தனுக்குச் சொன்னார் என்பது கருத்து.

* * *

சில மாதங்கள் கழிந்தன. பலராம னும் கண்ணனும் தவழ ஆரம்பித்தார் கள். இடையில் அணிந்த சலங்கையும், கால் கொலுசும் கிண்கிணிச் சத்தம் செய்ய, அவ்வோசையைக் கேட்டுத் தாமே களிப்புற்றுச் சிரித்துக் கொண்டு, இரு குழந்தைகளும் ஆயர்பாடியில் வருவோர் போவோர் பின் சென்று, பயந்தாற் போல் பாசாங்கு செய்து பின்னர் தாயிடம் திரும்பி வருவார்கள். புழுதி படிந்த மேனியைக் கண்டு கோகுலத்துத் தாய்மார் அடையும் ஆனந்தத்துக்கு அளவே இல்லை!

இப்படிச் சில காலம் சென்றது. பல ராமனும் கண்ணனும் நடக்கவும் ஓடவும் கற்றுக் கொண்டனர். கன்றின் வாலைப் பிடித்து இழுப்பார்கள். கன்று இவர்களை இழுத்துச் செல்லும். ஆடிஆடிக் கன்றின் பின் செல்வார்கள். இதைக் கண்டு ஊர் மங்கையர் வீட்டை விட்டு வெளிவந்து பார்த்துப் பார்த்து நகைத்து மெய் மறந்து நிற்பார்கள். தாய்மார் மட்டும்


மே 16 முதல்
...சென்னை...
சித்ரா
கிரௌன்
சயானி
முற்றும்
தென்னாடெங்கும்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
பத்மினி
பிக்சர்ஸ்
வீரபாண்டிய
கட்டபொம்மன்
முழு நீள கேவா கலரில் தயாரித்து
டெக்னி கலராக்கப்பட்டிருக்கிறது
தயாரிப்பு-டைரக்ஷன் : B.R.பந்துலு
கதை, வசனம் :
சக்தி கிருஷ்ணசாமி
ஸ்டுடியோ : பரணி
ஏ எல் எஸ்
H.R. RAO
ARUNA

ஒரு சிறிது பயம் கொண்டு குழந்தை களைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருப்பர்.

பிறகு இவ்விருவரும் சம வயதான பையன்களுடன் விளையாட ஆரம்பித்தார்கள். இவர்கள் படுத்தும்பாட்டைக் கண்ட ஆயர்குல மங்கையர் யசோதையிடம் சென்று முறையிட்டார்கள். "தாயே! உன் மகன் செய்யும் ஜாலங்களைக் கேளாய்! நாங்கள் வேறு வேலையில் முனைந்திருக்கையில், பால் கறக்கும் வேளைக்கு முன்னமேயே கன்றுகளை அவிழ்த்து விட்டுப் பசுக்களின் பாலை ஊட்டி விடுகிறான். வைதால் நகைக்கிறான். கள்ளத்தனம் பல செய்து பால், வெண்ணெய், தயிரைத் திருடித் தின்று விடுகிறான். தான் உண்பதுமின்றி ஊரில் இருக்கும் குரங்குகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறான். குடிக்காத குரங்கின் மீது சினம்கொண்டு பானையைப் போட்டு உடைக்கிறான். தயிர் இல்லை என்றால் வீட்டில் இருக்கும் குழந்தைகளைக் கிள்ளி அழ வைத்து விட்டு ஓடிவிடுகிறான். எட்டாத பானையை எட்டிப் பிடிக்கத் தந்திரங்கள் பல செய்கிறான். அப்படியும் அகப்படாத பானைகளில் கீழே யிருந்து கொண்டே மூங்கிலால் துளை செய்கிறான். இருட்டறையில் தான் அணிந்த மணி ஒளியால் பண்டங்களைக் கண்டு கொள்கிறான். இத்தனையும் செய்துவிட்டு ஒன்றுமறியாச் சிறுவனைப் போல் உன் அருகில் வந்து உட்கார்ந்து கொள்கிறான்" என்று பலவாறு பரமன் மீது பழி பகர்ந்தனர். "இதென்ன விந்தை! நான் ஒன்றும் அறியேன்" என்று கூறுவதைப் போல் கண்ணன் இந்தக் கோபிகளைக் கண்ணுற்றான். யசோதை கோபியர் சொன்னதை நம்பவில்லை. வாய் விட்டு நகைத்தாள்.

ஒரு நாள் கோபாலச் சிறுவரோடு கண்ணனும் பலராமனும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பலராமனும் மற்றச் சிறுவர்களும் யசோதையினிடம் வந்து "கண்ணன் மண்ணைத் தின்றான்" என்று உரைத்தார்கள். கற கற வென்று கையைப் பிடித்துக் கண்ணனை யசோதை இழுத்து வந்தாள். "ஏன் ரகசியமாக நீ மண்ணைத் தின்றாய்? உன் அண்ணன் உள்பட எல்லோரும் நீ தின்றாய் என்கிறார்களே?" என வினவினாள்.

"அம்மா! நான் மண்ணைத் தின்னவில்லை. இவர்கள் எல்லோரும் பொய் பேசுகின்றனர். இதோ! நீயே என் வாயைப் பார்" என்றான் கண்ணன்.

இவ்விதம் உரைத்து முகுந்தன் தாய் முன் நின்று கொண்டு தனது வாயைத் திறந்து காண்பித்தான். யசோதை தன் மகன் வாயை உற்று நோக்கினாள். அங்கு அண்ட சராசரங்கள் அனைத்தையும் கண்டனள். அசைபொருளும், அசையாப் பொருளும், வானமும் திக்குகளும், மலை, ஆழி பல வாய்ந்த புவியும், வீசலாடும் காற்றும், மின்னும் மின்னல் கொடியும், வெண்மதியும் நட்சத்திரமும், தானும் தானிருக்கும் ஆயர்பாடியும் இருக்கக் கண்டாள். இதென்ன கனவோ என்று வியந்தாள். இல்லையேல் எனது மைந்தனது தெய்வீகமா என்று சந்தேகம் கொண்டாள். மதியினால் மதிக்க முடியாத மாயனைத் தோத்திரம் செய்தாள். உடனே அவர் இவளுக்கு அளித்த சக்தியை மறைத்து விட்டார். மறுபடியும் சிறு குழந்தையெனக் கண்ணனைக் கருதினாள். தன் மடிமீது போட்டுக் கொண்டு மகன் என்று கருதியே மாதவனிடம் மிகுந்த அன்பு பாராட்டினாள்.

இதுவரை சுகரிடம் கண்ணனின் கதையைக் கேட்ட பரீக்ஷித்து மன்னனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "இத்தகைய பெரும்பாக்கியத்தை அடைவதற்கு நந்தன் என்ன தவம் செய்தான்?

தன் பாலைத் தாயெனக் கண்ணனுக்கு அளிக்கும் பேறு யசோதைக்கு எக் காரணம் கொண்டு கிடைத்தது? பெற்ற தாய் தந்தையருக்கு இப்பேறு கிட்டவில்லையே?" என்று கேட்டார்.

அதற்குச் சுகர் பதில் அளித்தார்: "பூமியானவள் பசு வேடம் பூண்டு பிரமனிடம் சென்று முறையிட்டாள் என்று முன்னமேயே நான் கூறியிருக்கிறேன். அச்சமயம் தேவர்களை ஆயர் குலத்தில் பிறக்கும்படி நாராயணன் கட்டளை இட்டார் அன்றோ? வசுக்களில் முதல்வரான துரோணர் என்பவரும், அவருடைய மனைவி தரா என்பவளும் நந்தனாகவும் யசோதையாகவும் பிறந்தார்கள். அவர்களுடைய அளவில்லாத பக்திக்குக் கைம்மாறாகக் கண்ணன் அவர்கள் வீட்டை அடைந்தனன்.


ஒருநாள் வீட்டு வேலைக்காரப் பெண்கள் வேறு அலுவல்களில் ஏவப்பட்டிருந்தனர். யசோதை தானே தயிர் கடைந்து கொண்டிருந்தாள். கண்ணனைக் குறித்து ஆயர் மங்கையர் பாடும் பாட்டுகளைத் தானும் பாடிக் கொண்டிருந்தாள். இடையிலே பட்டாடை, பால் நிறைந்து அசையும் இரு ஸ்தனங்கள், வேர்வைத் துளி முத்து முத்தாய்த் தோன்றும் முகம், காதிலே ஆடும் குண்டலம், கையிலே கயிற்றை இழுக்கும் கால் ஏறி இறங்கும் கை வளைகள், தலையில் நின்று உதிரும் மல்லிகை-இவ்வளவு அழகுடன் யசோதை தயிர் கடைந்தாள். அச்சமயம் கண்ணன் தாயிடம் வந்து மத்தைப் பிடித்துக் கடைவதைத் தடுத்தான். மடிமீது அமர்ந்தான். தாய்ப் பாலை அருந்தினான். ஆனால் திடீரென்று அடுப்பில் பால் பொங்கும் சத்தம் கேட்கவே, யசோதை மகனைத் தரையில் இருத்தி விட்டு விரைந்தாள். கண்ணனுக்குக் கோபம் வந்தது. தன் செவ்வுதடைக் கடித்தான். தயிர்ப் பானையை உடைத்தான். உள்ளே சென்று வெண்ணெயைத் திருடித் தின்றான்.

பாலை இறக்கிவிட்டு யசோதை திரும்பவும் தயிர் கடைய வந்தாள். பானை உடைந்திருப்பதைப் பார்த்தாள். இதுவும் கண்ணனது செயல் என்று அறிந்தாள். தனக்குள் சிரித்துச் சந்தோஷம் அடைந்தாள். உள்ளே சென்று நோக்கினாள். அங்கே கண்ணன் ஒரு உரலின் மீது உட்கார்ந்து கொண்டு தானும் வெண்ணெய் தின்று கொண்டு ஒரு குரங்குக்கும் கொடுத்துக் கொண்டிருந்தான். தாயைக் கண்டதும் பயந்தவன் போல் நடித்தான். யசோதை மெதுவாக அவன் பின் சென்றாள். கண்ணன் உரலினின்று இறங்கி ஓடினான். யசோதை அவனைப் பின் தொடர்ந்து தானும் ஓடினாள். கண்ணனைப் பிடித்தாள். கண்களில் நீர் ததும்பக் கையால் பிசைந்து கண் மை முகமெல்லாம் படர வெருண்டவன் போல் கண்ணன் தாய் முன் நின்றான். அடிப்பேன் என்று ஓங்கினாள் யசோதை. கண்ணன் முகத்தைப் பார்த்தாள். அடிக்க மனம் வரவில்லை. இவனைக் கயிற்றால் கட்டுவது என்று தீர்மானம் செய்தாள். ஆண்டவனுக்கு உள் என்பதும் புறம் என்பதும் முன் என்பதும் பின் என்பதும் உண்டோ? பிறப்பில்லாப் பரமனைத் தன் மகனெனக் கருதிய ஆயர் மாது ஒரு கயிற்றால் மர உரலில் கண்ணனைக் கட்ட முயன்றாள். ஆனால் கயிறு போதவில்லை. ஓர் அங்குலம் குறைவாக இருந்தது. மற்றொரு கயிற்றோடு பிணைத்துக் கட்ட முயன்றாள். அப்பொழுதும் ஒரு அங்குலம் குறைந்தது. மூன்றாவதொரு கயிற்றோடு பிணைத்துக் கட்டியும் ஒரு அங்குலம் போதவில்லை. எத்தனை கயிறுகளைச் சேர்த்துக் கட்டியும் கண்ணனைக் கட்டக் கயிறு போதவில்லை. யசோதை வியந்தாள். வேர்வை பெருகச் சோர்ந்து நிற்கும் தாயின் துயரைக் கண்டு மனம் கசிந்தான், பக்தருக்குச் சேவகனான கண்ணன். உள்ளம் உருகத் தானாகவே கட்டுண்டான். **(தொடரும்)**


L. R. Swami

O. S. R.


தற்கால
ஆடை
அலங்காரத்தின்
தரங்களுக்குத்
தக்க
மாதிரி
நீங்கள் எவ்வித ஆடை அணிகிறீர்கள்? வழக்கமான சாதாரண மாதிரியா அல்லது கலர் உடுப்புகளில் விருப்பமா? எவ்விதமானாலும் உங்கள் மனதிற்குகந்த விதத்தில் காலத்திற்கேற்ப ஸ்டாண்டர்ட் மில்ஸ் பாப்லின்கள் கிடைக்கின்றன. இவை மிகவும் சரசமான விலைகளில் கிடைக்கின்றன. நீங்கள் கொடுக்கும் விலையைக் கவனிக்கையில் உங்களுக்குக் கிடைக்கும் துணியின் தரம் எவ்வளவோ மேலானதாகும்.
STANDARD
ஸ்டாண்டர்ட் மில்ஸ் பாப்லின்கள்
சாதாரண—சாயந் தோய்ந்த
மற்றும் கோட்டிங் • லாங்கிளாத் • லேனிங்கிளாத் • பான்சி பிரின்ட்ஸ் • சாயந்தோய்ந்த, பிரின்டட் கிரேப் குடைகளுக்கான துணி • புக் பைண்டிங் துணி
தி ஸ்டாண்டர்ட் மில்ஸ் கம்பெனி லிட்.
நியு பிரபாதேவி ரோட், பம்பாய்-28


மின்சார வெடிகள்
"'ஜாலி'ஷூட்'டிலே நின்று கொண்டிருந்த ஒரு நடிகை, மின்சாரத்தினால் தாக்கப்பட்டாளாம்!"
"என்ன ஆச்சரியம் சார்! 'ஷூட்' மேலே நின்று கொண்டிருந்தால் 'ஷாக்' அடிக்காதுன்னு சொல்றேளே!"
"உங்க விசிறி ஏ. சி. விசிறியா? டி. சி. விசிறியா? இல்லாட்டா ஓ. சி. விசிறியா?"
"மூன்றும் இல்லே. இது காசி விசிறி!"
"பொண்ணு ரொம்ப நன்றாக இருப்பாள் என்று சொன்னீர்களே, போட்டோவில் பார்த்தால் ஒரே எலும்பும் தோலுமா இருக்காளே!"
"நீங்கள் அவளுடைய 'எக்ஸ்ரே' போட்டோவைப் பார்த்திருப்பீங்க!"
"என்ன சார் குத்துவிளக்குக்கெல்லாம்தான் பல்பு பொருத்தி விட்டீர்கள்...கற்பூரத்துக்கும் பல்பு போடணுமா என்ன?"
"ஆஹா! உன் முகம் 1000 வாட் விளக்கு மாதிரி இருக்கு ... சிரித்தால் சீரியல் செட்டு பல்புகள் போட்ட மாதிரி இருக்கு ... உன் பேச்சோ ரேடியோ பேச்சு மாதிரி இருக்கு...!"
"மின்சாரம் இடை சென்று நின்று விட்டதால் 'மைக்' வேலை செய்யவில்லை. அதனால் என் பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்!"
கூட்டத்தில் ஒருவர்: சபாஷ்! மின்சாரம் வாழ்க!
சாமா

"உங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த நாற்பத்தைந்து வருஷ காலமாக நீங்கள் எத்தனை புடவை வாங்கிக் கொடுத்தீர்கள் என்று கணக்கு போட்டுப் பார்த்தேன். ஆரம்ப காலத்தில் அப்பா வாங்கிக் கொடுத்தார். பிற்பாடு பிள்ளையாண்டான் கவனித்துக் கொள்கிறான். உங்களுக்கு என்னை எப்பொழுதுதான் எடுத்துப் போர்த்தத் தெரிந்தது? இன்னும் கொஞ்சம் பச்சடி வேணுமா?" என்று



பிணக்கு

சர்வ சாதாரணமாகப் பேசிக் கொண்டே போனாள் மங்களம்.

சாம்புவுக்கு என்ன கோபம் வந்தது? அப்படியா? கணக்குப் போட்டுப் பார்த்தாளா? ஒரு பிள்ளையையும் பெண்ணையும் பெற்றுப் பேரன் பேத்திகளை எடுத்த பின்னரா கணக்கும் கையுமாக நிற்கிறாள்? நேற்று வரை எதிர்த்துப் பேசத் தெரியாத கழுதைக்கு இப்படி வாய் கொழுக்கக் காரணம் என்ன? 'எதிர் வீட்டுப் பார்வதியோடு சிநேகிதம் வைத்துக் கொள்ளாதே' என்று தலையில் அடித்துப் பார்த்தாயிற்று. கேட்டால் தானே? சந்தர்ப்பம் பார்த்து வத்தி வைத்து விட்டாள்! பிடித்து எரிகிற ஜன்மத்துக்குப் புத்தி வேண்டாம்? ஐம்பத்தைந்து வயது வரையில் அணைந்து கிடந்துவிட்டு, பிறகு போகிற காலத்தில் என்ன இளமைப் பாய்ச்சல் வேண்டிக் கிடக்கிறது?'

சாம்பு ஒட்டிக்கொண்டிருந்த நாலைந்து பற்களை மறந்து விட்டார். இல்லாவிட்டால் அந்த மிளகாய், உச்சி மயிரைப் பிடுங்கி எரிகிற மாதிரி கடிபட்டிருக்குமா? ஒரு வாய் தண்ணீரைக் குடித்து விட்டு, "உனக்குச் சமயா சமயம் பார்த்துப் பேசத் தெரியவில்லை!" என்றார்.

"இனிமேல்தான் நான் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டும்! ரஸம் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டு விட்டுச் சமையல் அறையை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மங்களம், அவர் முகத்தைப் பார்க்கவில்லை.

"ரஸம்கொண்டு வா! குழம்புகொண்டு வா! பச்சடி கொண்டு வா! பாயசம் கொண்டு வா! எல்லாவற்றையும் கொண்டு வா! இந்தச் சாக்கடையில் கொட்டு" என்று கூறிவிட்டுத் தடாலென்று எழுந்து விட்டார் சாம்பு.

அவர் ஆத்திரமாகக் கையைக் கழுவுவதையும், பிறகு ஈரக் கையைத் துடைத்துக் கொள்ளாமலே துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே வருவதையும், அந்தச் சமையல் அறை வாசற்படியில் கற்சிலைபோல் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள் மங்களம்.

ஏன் இவருக்கு இத்தனை கோபம் வர வேண்டும்? பல்லும் போய், சொல்லும் போய் நிற்கிற காலத்தில் தன்னை ஒரு சிறு பையன் என்று நினைத்துத் துள்ளி விழுகிறாரா? கோபம் வர வேண்டிய காலத்திலேயே பிடித்து வைத்த கொழுக்கட்டையாக இருந்தவர்தானே? இவர் அப்பா இறந்தபொழுது பெரியப்பாக்காரர் எல்லாச் சொத்தையும் பிடுங்கிக் கொண்டு, 'போடா வெளியே' என்று விரட்டி விட்டபோது மங்களத்தையும், சின்னுக் குட்டியையும் கையில் பிடித்துக் கொண்டு வெளியேறியவர்தானே? அப்பொழுதுகூடக் கண் சிவக்கவில்லை; நாலு வார்த்தைகளை ஆத்திரமாகப் பேசவில்லை. மங்களத்தின் அப்பா ஆதரிக்கவில்லை யென்றால் இந்த தர்மபுத்திரர் சங்கதி என்னவாயிருக்கும்! மங்களமாக இருக்கக் கொண்டு இத்தனை தூரத்துக்குக் குடும்பத்தைக் கோபுரமாக உயர்த்தியிருக்கிறாள். இந்தமனிதருக்குத்தாமாகப் போய் ஒரு வேஷ்டி எடுக்கத்தெரியுமோ?

வேஷ்டி எடுக்க மங்களம் வேண்டும்; வெற்றிலை இடித்துக் கொடுக்க மங்களம் வேண்டும்; குடும்ப விவகாரங்களைக் கவனிக்க மங்களம் வேண்டும்; அப்பா

பெரு மனத்தோடு கல் போட்டுக் கொடுத்த காணி கரைகளைக் கவனிக்க மங்களம்வேண்டும்; பெண்ணைப் போற்றி வளர்க்கவும், பிள்ளையை அடித்து வளர்க்கவும் மங்களம் வேண்டும்; பெண் சின்னக்குட்டியை ஆன இடத்தில் தள்ளி விட மங்களம் வேண்டும்; பிள்ளையாண்டானைப் பட்டப்படிப்புப் படிக்கவைத்து, உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்தி வைக்க மங்களம் வேண்டும்; அவனுக்குப் பெண்கொள்ள மங்களம் வேண்டும். ஒரு குடும்பத்துக்கு வேண்டியிருந்த மங்களங்கள் எத்தனை? அத்தனை மங்களங்களிலும் இந்த ஒரே மங்களம் இருந்தாள்.

சாம்பு எதிலும் ஒட்டவில்லை. சத்திரத்தில் சாப்பிட வந்தவர் போலத்தான் அவருக்கு நினைப்பு பொறுப்பில்லை. இராணியும் இல்லை. எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் காலம் ஓடிவிட்டது.

இப்பொழுது சாம்புவுக்கு எழுபது வயது. ஆனாலும் என்ன? அக்கறை வரவில்லை. பசிப்பதாவது தெரிய வேண்டாமா? மங்களம் அவருக்கு அதைச் சொல்ல வேண்டும்.

அதைப் பற்றி யெல்லாம் மங்களத்துக்குத் துளிக் கவலைகூட இல்லை. அவரைக் கைப்பிடித்ததே பாக்கியம் என்று மகிழ்ந்தாள். அவருடைய அசட்டுத்தனம்கூட அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

நாற்பத்தைந்து வருஷங்களாகக் குடும்பத்துக்காக வாழ்ந்த மங்களத்தைச் சுயநலப் பேய் பிடித்து ஆட்டியது. அது அப்படி ஒன்றும் பிரமாதமானதில்லை. 'அவர் கையால் ஒரு புடவை வாங்கி வந்து கொடுக்க வேண்டும். அதை என் கையால் கட்டிக் கொள்ள வேண்டும்.'

இந்த வயதில் இப்படியொரு இளமை எண்ணம் திடீரென்று தோன்றவில்லை இளமைக் காலத்தில் தோன்றி அழிந்து போன ஆசை, எப்படியோ வேர்விட்டு இத்தனை வயசுக்கு அப்புறம் இளமைப் பொலிவுடன் பசுமை பாய்ந்தது.

இப்பொழுது பிள்ளையும், மருமகளும், பேரக் குழந்தைகளும், மங்களத்தின் தமையனுடைய பெண் கல்யாணத்துக்குப் போயிருக்கிறார்கள்.

பிள்ளைகள் இல்லாத வீட்டிலே இப்பொழுது அந்தக் கிழங்கள் தாம் பிள்ளைகள். இளந்தம்பதிகள் இல்லாத வீட்டிலே அந்தக் கிழங்கள் தாம் இளந் தம்பதிகள்.

சாம்பு குளித்துக் கொண்டிருக்கும் போது, மங்களம் தன் ஆசையைச் சிரிப்புடன் வெளியிட்டாள். ''எனக்கொரு புடவை வேண்டுமே?''

அவர் சொன்ன பதில் அவருக்கே உரிய பதில்தான்: ''வாங்கிக் கொள்ளேன். புதிதாக என்னை எதற்குக் கேட்கிறாய்?''

''நான் பணம் தருகிறேன். உங்கள் கையால் எடுத்து வாருங்கள்.''

''மகாராணிக்குக் கடைக்குப் போகக் கால் வலிக்கிறதோ?''

'' அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!''

''என்னை என்ன உன் வேலைக்காரனாக நினைத்துக் கொண்டாயோ?''



''நாற்பத்தைந்து வருஷங்களாக நான் வேலைக்காரியாக இல்லையா? ஒரேயொரு நாள் நீங்கள்தான் வேலைக்காரராக இருக்கக் கூடாதா?''

''எழுபதாவது வயதில் என்னை அடிமைப்படுத்த நினைக்கிறாயா? அதற்கெல்லாம் நாளும் போய்விட்டது; வயதும் போய் விட்டது. போய் உன்னுடைய வேலையைப் பார்.''


தாக்குதலுக்கு ஆளான மங்களத்தின் நெஞ்சம், சற்றுச் சூடாகவே ஓசை யிட்டது. ''உங்கள் வாய் வக்கணைக்கு எப்பொழுதுதான் குறைச்சல் இருந்தது? எந்தக் காலத்தில்தான் நீங்கள் ஆண்

★ எழுபது வயது முதிர்ந்தால்தான் என்ன? பிணக்குகள் தீர்ந்து அமைதி வரும்போது இளமையும் வந்து விடுகிறதே !



பிள்ளையாக நடந்து கொண்டிருக்கிறீர்கள்? என் புடவைத் தலைப்பில் வளர்வதைத் தவிர வேறே என்ன தெரியும்?''

மங்களம் எப்பொழுதும் இப்படிப் பேசியவள் இல்லை. அப்பொழுது தியாகத்தால் எழுந்த வாழ்க்கை தியாகத்தால் மலர்ந்தது. இப்பொழுது உணர்வால் எழுப்பிக் கொண்ட ஆசை, உணர்ச்சியால் ஆடியது. சாம்பு உடனே வெளியே ஓடியிருக்க வேண்டியவர். அவள் புடவைத் தலைப்புக்கு அப்பால்உலகமே இல்லையா? உண்மையிலேயே சாம்புவுக்குத் தெரியாது. ஆனால் அவள் முகத்தில் விழிக்கக்கூடாது என்ற ஆண்மை உணர்ச்சி மட்டும் எழுந்தது உண்மை. எப்படியோ அவர் அதை அடக்கிக் கொண்டார். 'இந்த மங்களம் தன்னைப் பதினாறு வயதுப் பெண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்!'



அப்புறம்தான் சாப்பிட உட்கார்ந்தார். அதற்கப்புறம்தான் அவளும், 'உங்களுக்கு எப்பொழுதுதான் என்னை எடுத்துப் போர்த்தத் தெரிந்தது?' என்று கேட்டாள்.


இப்படிக் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? இதற்காகப் பாதிச் சாப்பாட்டில் எழுந்து ஒருவர் ஓடுவதா? எழுபது வயதானால் என்ன? ஓடவாவது தெரியுமா? திரும்பத் திரும்ப இந்த மங்களத்தைத்தானே சுற்றியாக வேண்டும்?

மங்களம் இந்தமாதிரி எண்ணிக் கொண்டிருக்கும் போது, நிஜமாகவே இரண்டு பக்கங்களிலும் அலறிக்கொண்டு வந்த கார்களுக்கு இடையே எப்படி விலகுவது என்று புரியாமல் திணறிக் கொண்டிருந்தார் சாம்பு.

எப்படியோ ஒரு வழியாக ஒதுங்கிப் பிழைத்துக் கொண்டபோது அவருக்குத் தைரியம் ஏற்பட்டு விட்டது. வாழ்க்கையும் இதைப்போல் நெருக்கடி மிகுந்த தெருதான். இரண்டு பக்கங்களிலும் உரசிக் கொண்டு வந்த கார்களைப் போலச் சோதனைகள் அடுக்கலாம். இப்பொழுது மட்டும் கார்களுக்கிடையே இருந்து விலகிக்கொள்ள அறிவு முன் வரவில்லையா? இதே அறிவு வாழ்க்கையின் இடிபாடுகளை யெல்லாம் தகர்த்தெறியவும் முன் வந்திருக்கும். ஆனால் அப்படி அறிவைக் கட்டி ஆளலாம் என்ற தைரியம் இதற்கு முன்னால் அவருக்கு எப்போதுமே வந்ததில்லை.

வஞ்சகி மங்களம்! அவள் அந்த அறிவை அவரிடம் வரவொட்டாமல் மறைத்து நின்று விட்டாள். அவரை உதவாக் கரையாக்கி உட்கார வைத்து விட்டாள். எதையும் சுயமாகச் செய்ய முடியாதபடி அவரைப் பல வீனப்படுத்திக் கோழையாக்கி விட்டாள்.

ஓர் ஆணின் எழுபது வருஷ வாழ்க்கையைஇடுப்பொடிய வைத்துவிட்ட அந்த அரக்கி, இப்பொழுது வெற்றி விழாக் கொண்டாடுகிறாள்! குத்திக்காட்ட ஒரு புடவையைக் கருவியாக வைத்துக் கொண்டு அவள் எப்படிச் சீறிப் பாய்ந்து விட்டாள்?



இனி அவரை வஞ்சிக்க முடியாது. அவர் அவராகி விட்டார்! அவரிலிருந்த அவள் வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

சிந்தனை முணுமுணுத்து அடங்கியதும் வாய் முணுமுணுத்தது. சாப்பிட்ட பிறகு வெற்றிலையே போடவில்லையே! எதிர்த்தாற் போலக் கடை இருந்தது. ஆனால் இடிக்கும் உரல் வீட்டில் அல்லவா இருக்கிறது? திரும்பி நடந்தார்.

வீட்டுக் கதவு திறந்தே யிருந்தது. ஒரு புது பலத்துடன் உள்ளே நுழைந்தார்.

இவர் சாப்பிட்ட தட்டு அப்படியே ஈ மொய்த்துக் கிடந்தது. பாத்திரங்களைத் தன்னைச் சுற்றிப் பரப்பி வைத்துக் கொண்டு, பேரப் பிள்ளையின் சின்னஞ் சிறு தட்டில் சம்பிரமமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் மங்களம்.

அதை யெல்லாம் கவனிக்காதவராய் மாடிக்கு ஏறிப் போனார் சாம்பு. இடி உரலையும், வெற்றிலைக் கொட்டானையும் எடுத்துக்கொண்டு கீழே இறங்கியபோது ஆண்மை நிறைந்த கண் வீச்சு ஒன்றை மங்களத்தின் மேல் வீசி யெறிந்தார்.

சாம்பு போர் முரசம் அறைந்த மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு வெளியே நடக்க எத்தனித்தார். எதிர்த் தரப்பில்எதிர்பாராமல்முரசம்ஒலித்தது.

''கோபம் வந்து விட்டால் வெற்றிலையும் இடிக்கத் தெரியும் என்ற எண்ணமோ? உங்களுக்குச் சுண்ணாம்பு

தடவைத் துப்பிருந்தால், நான் ஏன் இந்தக் குடும்பத்தில் ஆண்பிள்ளையாக இருந்திருக்கப் போகிறேன் ?''

''நீ ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி ; பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி. எனக்கு அக்கறை இல்லை. ஆனால் இனி மேல் நீ எனக்கு மனைவியாக இருக்க வேண்டாம்.''

''எழுபது வயதில் வந்திருக்கிற இந்த ஞானம், இருபது முப்பதில் வந்திருக்க வேண்டும். இப்பொழுது புத்தி வந்து என்ன செய்யப் போவதாக உத்தேசம்?''

''காசிக்குப் போகப் போகிறேன்.''

''கர்மத்தைத் தொலைக்கவா ?''

இல்லை. உன்னைத் தொலைத்துத் தலை முழுகுவதற்கு.''

''அதற்கு நீங்கள் அவ்வளவு தூரம் போவானேன் ? இங்கேயே குளம் குட்டை இருக்கிறதே !''

''நீ இல்லாமல், உன் தயவு இல்லாமல் நான் எவ்வளவு தூரம் போக முடியும் என்பதை நிரூபிக்கவே காசிக்குப் போகிறேன். பிறகு தலை முழுகுவதற்காக இங்கே திரும்பி வருவானேன் ?''

''நல்ல உத்தேசம்! இல்லை வெளியில் நந்தன் கலந்தான் ; நீங்கள் காசியில் கலக்கப் போகிறீர்கள். அந்த அதிர்ஷ் டம் எல்லோருக்கும் வருமா ?''



சாம்புஉள்ளே நெருப்பைக் கனியவைத்துக் கொண்டிருந்தாரா? மங்களம் அதை நன்ருக ஊதிவிட்டு ஆயிரம் பதினுயிரம் நாக்குகளை வீசிப் பிடித்து எரிய வைத்து விட்டான். ஒன்றும் பேசவில்லை. அடர்ந்த புயலைப் போல் வெளியேறினர்.



மங்களம் நாக்கைச் சொட்டான் போட்டுக் கொண்டு சாப்பிட்டு முடித்தாள். தன்னுடைய கணவனுக்கு அப்படி எல்லாம் செய்ய முடியாது என்பதில் அவளுக்குக் கொஞ்சம் கூடச் சந்தேகம் இருக்கவில்லை. 'வெறும் சலசலப்பு ! இத்தனை காலமாக அடங்கிக் கிடந்த கிழத்துக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. நாலு தெருக்களைச் சுற்றி விட்டு, 'கால் வலிக்கிறது, மங்களம். வெந்நீர் வைத்து ஒத்தடம் கொடேன்' என்று வந்து நிற்கப் போகிறது !''

இருள் கூடும் சந்தி நேரத்தில் வாசலில் சாம்புவின் குரல் கேட்டது. மங்களம் ஜன்னல் ஓரமாக நின்று கொண்டு அந்தக் கிழத்தின் வக்கணையைப் பார்த்தாள். முகத்தில் சோர்வில்லை. காலத்தின் ஜால வித்தையை ஏமாற்றிவிட்டுக் கருணைக்கிழங்கைப் போன்ற தேகவாகைப் பெற்றிருந்த அவர், மார்பைத் திறந்து கொண்டு நின்றபோது மங்களத்துக்கு இளமைக் கனவுகள் நினைவில் எழுந்து மிதந்தன.

சாம்புவுக்குப் பக்கத்தில் அடுத்த வீட்டுப் பஞ்சுத் தாத்தா நின்று கொண்டிருந்தார். 'தன்னைப் பார்வதியோடு பேசக் கூடாது என்று சொல்லிவிட்டு இவர் மட்டும் பஞ்சுத் தாத்தாவோடு பேசலாமா ? அவருக்குக் கலைசல் பண்ணுவதே வேலை. இந்தக் கிழம் அந்தக் கிழத்திடம் மசிந்து விடக் கூடாதே !' மங்களத்துக்குக் காலையில் தோன்ருத வருத்தமெல்லாம் இப்பொழுதுதான் பல கிளைகள் வெடித்துப் படர்ந்தது. 'ஈசுவரா, அவரைக் காப்பாற்று.'

பஞ்சுத் தாத்தா மூக்குப்பொடியைத் திணித்துக்கொண்டே கம்மலும் தும்மலுமாகக் கேட்டார். ''இன்றைக்கே காசிக்குப் புறப்படுகிருயா, சாம்பு ?''

''டிக்கெட் எடுத்து விட்டேன்.''

''எப்பொழுது திரும்புவாய் ?''

''திரும்பப் போகிறதில்லை.''

''நல்ல காரியம், போ! சாகப் போகிற காலத்திலேயாவது உனக்கு நல்ல புத்தி வந்ததே ! சந்தோஷம். குடும்ப பாசம் உன்னைத் துரத்த நினைக்கும். ஓடி வந்து விடாதே. உனக்கு வாய்த்திருப்பது போல் எனக்கு மனைவி வாய்த்திருந்தாள் என்ருல், என்றே தற்கொலை செய்து கொண்டிருப்பேன். நீ சரியான எருமை. ஸ்மரணை வர இத்தனை நாட்களாகி இருக்கின்றன. ஆனாலும் இப்பொழுது நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன்தான்.''


''இல்லையா பின்னே ? பேயிடமிருந்து விடுதலை...''

அப்புறம் பேச்சில்லை. காலை நடை நடந்து கொண்டு உள்ளே வந்த சாம்பு, மாடிக்கு ஓடினர்.

திரண்டு வந்த கண்ணீரை அடக்க முடியாமல் தத்தளித்தாள் மங்களம். இது வெறும்சலசலப்பில்லை. உண்மையிலேயே புலி புறப்பட்டு விட்டது! அவள் வாழ்க்கையை அது நொறுக்கிவிடுவது போல் மூர்த்தண்யமாகச் சீறுகிறது. அதைக் கிளப்பி விட்டவள்



B·O·A·C COMET 4 JETLINER



பி.ஓ.ஏ.ஸி. காமட் 4 ஜெட் லைனர்
ஐரோப்பாவுக்கும்,
தூரகிழக்கு நாடுகளுக்கும் :

இப்பொழுது இங்கிருக்கிறது!

காமட் 4 விமானங்களில், டூரிஸ்ட் மற்றும் முதல் வகுப்புகளில் பிரத்தியேக கட்டணம் இல்லாமல் பிரயாணம் செய்ய இப்பொழுதே டிக்கட்டுகளை புக் செய்து கொள்ளுங்கள்.

தேர்ந்தியான ஜெட் லைனர்களுக்கும், அருமையான சர்வீஸுக்கும் பி.ஓ.ஏ.ஸி. விமானங்களில் பறந்து செல்லுங்கள். பி.ஓ.ஏ.ஸி.யாரால் நியமிக்கப்பட்ட உங்கள் உள்ளூர் ஏஜெண்டையோ அல்லது பி.ஓ.ஏ.ஸி. பம்பாய், கல்கத்தா, டில்லி, மதராஸ் இவர்களையோ விசாரித்து விவரமறிந்து கொள்ளுங்கள்.

உலக முழுவதிலும் பி.ஓ.ஏ.ஸி.

B·O·A·C

உங்கள் நலனைப் பேணுகிறது

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேய்ஸ் கார்பரேஷன்

அவள் தானே? புடவை கேட்டாள். தவறில்லை. ஆனால் பருவத்துக்கே உரிய படபடப்புடன் கேட்டது தவறு. அதைவிட இன்னொன்று அதிகம். 'என் புடவைத் தலைப்பில் வளர்வதைத் தவிர உங்களுக்கு வேறே என்ன தெரியும்?' என்று கேட்டிருக்கக் கூடாது. அவர் உணர்வைச் சீண்டி விட்டு விட்டாளே! நாற்பத்தைந்து வருஷங்களாக ஒரு பொன் கோபுரத்தை எழுப்பியவள், ஒரே நொடியில் இடித்துத் தகர்த்து விட்டாளே! இனி பொங்கிப் புறப்படவிருக்கிற அவரைக் கண்ணீரோ, மற்ற எதுவோ தடுத்து நிறுத்த முடியுமா?

அவள் மனம் புரள, கண்கள் வாய்க்கால் வகுத்தன. அதற்கப்புறம் கால்கள் தள்ளாட 'வீல்' என்ற ஒரு பெரிய அலறலுடன் கீழே சாய்ந்தாள்.

மாடியில் துணிமணிகளை டிரங்குப் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டிருந்த சாம்புவின் காதில் அந்த அலறல் மோதி, உள்ளத்தில் குமிழியை எழுப்பியது. 'என்ன வந்து விட்டது அவளுக்கு? இத்தனை வருஷ வாழ்க்கையில் இப்படி ஒரு தடவை கூட அவள் அலறியது இல்லையே! என்ன ஆபத்து? எதுவாக இருந்தால் என்ன? குடும்பத்தை உதறி விட்டுப் போகிறவனுக்கு ஏன் பாசமும் பந்தமும்? சம்பந்தப்படாத யாரோ ஒருத்தி அலறுகிறாள். யாரோ ஒருத்தியோ? தன் சதையையும், ரத்தத்தையும், எலும்பையும் சாம்புவுக்காகக் கொடுத்தவள். ஜடமாகக் கிடந்த சாம்புவுக்குள் உயிராகப் புகுந்தவள். அவள் அலறுகிறாள். உயிர் அலறுகிறது! வீட்டில் யாருமே இல்லையே! அநாதையாகத் துடித்துக்கொண்டிருப்பாளே! 'மங்களம், மங்களம்.' தவித்தது அவர் உள்ளம்.

துணிகள் பறந்தன. பெட்டி உடைந்தது. கீழே ஓடினார்.

அந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் அலங்கோலமாகக் கிடந்தாள் மங்களம். பேச்சில்லை. மூச்சு தைந்து குறுகி வந்து கொண்டிருந்தது. சாம்புவின் வீர்ய நெஞ்சம் அவள் மேல் விழுந்து புரண்டது. "மங்களம்! மங்களம்...!" என்று அலறி அலறி ஓய்ந்தார். அவள் நிலை புரிந்து கொள்ள முடியாத நிலை. சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே அவள் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

சாம்பு பழைய சாம்புவாக மாறிக் கலங்கினார்; திணறித் தவித்தார். 'இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இவளை இப்படியே தனியாகப் போட்டு விட்டு டாக்டரிடம் ஓடுவதா? அல்லது, இவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து



மனைவி: என்ன காத்து! 'எலெக்டிரிக் பான்' கண்டுபிடித்த மகானுபாவனைப் பாராட்டணும்! என்ன சொல்கிறீர்கள்?

தெய்வத்திடம் மன்றாடிக் கொண்டிருப்பதா? இதெல்லாம் அந்த மங்களத்துக்குத்தான் தெரியும். எனக்கு அவள் புடவைத் தலைப்பில் வளரத்தான் தெரியும். மங்களம்! இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? கண்ணைத் திறந்து சொல்லேன்.'


இரண்டு மணி நேரம் இரண்டு யுகங்கள் போல வளர்ந்து சென்றது. கிழித்து எறிந்த நாரைப் போலத் தொய்ந்து கிடந்த மங்களம், காலை விறைப்பாக நீட்டிக் கொண்டே, கண்களைத் திறந்தாள். உதடுகளைக் குவித்து ஏதோ பேச முயன்றாள்; முடியவில்லை.

"கொஞ்ச நேரத்துக்குள் என்னை மோசம் செய்து விட்டுப் போக இருந்தாயே, மங்களம்!" என்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு தேம்பினார் சாம்பு.

பெரும் பிரயாசையுடன் எழுந்து உட்கார்ந்தாள். ஆயாசத்துடன் அவள் குரல் உயர்ந்தது: "நீங்கள் மட்டும் என்னை மோசம் செய்து விட்டுத்தானே காசிக்குப் போக இருக்கிறீர்கள்? 'உன்னைக் கைவிட மாட்டேன்' என்று அருந்ததிக்கும், அக்கினிக்கும் முன்னால் உறுதி கூறி விட்டு, இப்பொழுது நீங்கள் என்னைக் கைவிட்டு விட்டுக் காசிக்குப் பயணமாகிறீர்கள்?" வெம்பனி திரண்டது அவள் இமைகளில்.

"நான் போகப் போவதில்லை, மங்களம்! உன்னுடைய பிரிவு எத்தனை கொடிதாக இருக்கும் என்பதை இந்த இரண்டு மணி நேரத்தில் நான் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டேன்."

"அதே போல் உங்களுடைய பிரிவு எனக்கு எத்தனை கொடியதாக இருக்கும்



என்பதை எண்ணிப் பார்த்தீர்களா? நீங்கள் பஞ்சுத்தாத்தாவிடம் "காசிக்குப் போகிறேன்' என்று சொல்லியதைக் கேட்டதற்கே எனக்கு மரண மயக்கம் ஏற்பட்டு விட்டது. நீங்கள் மட்டும் போயிருந்தால்?......'' அவள் உடல் நடுங்கிக் குப்பென்று வியர்த்தது.

"எனக்கு மங்களம்தான் காசி, கைலாசம் எல்லாம். ஆயிரம் கஷ்டங்களைத் தாங்கும் இரும்பு இதயம் படைத்த என் மங்களத்துக்கு, என் பிரிவைத் தாங்க முடியவில்லை என்றால் அது நான் செய்த பாக்கியம் அல்லவா? நான் நிச்சயமாகப் போக மாட்டேன். உடம்பு நடுங்கவும் வேண்டாம்; வியர்க்கவும் வேண்டாம். வா, காற்றுட மாடிக்குப் போகலாம்.''

பௌர்ணமிப் புறப்பாடு வானத்தில் தடபுடலாக நடந்து கொண்டிருந்தது. பால் நிலவு மாடியில் ஓடிக் கிடந்தது. மங்களமும் சாம்புவும் கட்டைச் சுவரில் எதிர் எதிரே இளந் தம்பதிகளைப் போல உட்கார்ந்திருந்தனர்.

"நான் உன் புடவைத் தலைப்பில் வளர்கிற பழைய சாம்புதான். சும்மா சொல்லு!'' என்று நறுக்குத் தெறித்தாற் போல் நாலு பற்களைக் காட்டிச் சிரித்தார் கிழவர் சாம்பு.

"நான் நிஜமாகவே மயக்கம் போட்டு விழவில்லை. உங்களைக் காசிக்குப் போக விடாமல், குறைந்த பட்சம் ரயில் தவறிப் போகிற நேரம் வரை தடுத்து நிறுத்தவே அப்படி நாடகம் போட்டேன். அந்தச் சமயத்தில் நான் எதைச் சொல்லியிருந்தாலும் நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள்!''

"நிச்சயம் கேட்டிருப்பேன்! காலையில் நிஜமாகவே எங்கேயாவது போய் விட வேண்டும் என்றுதான் தீர்மானித்தேன். ஆனால் உன்னையும், இந்தக் குடும்பத்தையும் விட்டு அத்தனை சுலபமாகப் பிரிந்துபோக மனம் இடம் கொடுக்குமா? காலையில் அத்தனை ஆர்ப்பாட்டம்செய்து விட்டு அடங்கிப்போவது சரியல்ல என்று தோன்றியது. புறப்படுவது போலப் பாவனை செய்து, உன்னைப் பயமுறுத்திப் பணியச் செய்யவேண்டும் என்று எண்ணினேன். 'என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று நீ குறைந்தபட்சமாகச் சொல்லி யிருந்தாலும், நிறைந்த மனத்தோடு பயணத்தை நிறுத்தத் தயாராக இருந்தேன். நான் காசிக்குப் 'போவதை' உன் காதில் விழ வைக்க வேண்டுமே! அதற்காகத்தான் நீ ஜன்னல் பக்கம் நின்றபோது பஞ்சுத் தாத்தாவிடம் என் பயணத்தைப்பற்றி அளந்து கொண்டிருந்தேன். பிறகு நான் மாடிக்குச் சென்று பெட்டியில் துணியை எடுத்து வைக்கும் வரையில் நீ வரவும் இல்லை; கெஞ்சவும் இல்லை. 'நிஜமாகவே நாம் புறப்படத்தான் வேண்டுமா?' என்று நான் [illegible]ந்து கொண்டிருந்த போது, நீ அலறி[illegible]ய். நான் நிஜமாகவே பயந்து போனேன்!'' என்ற சாம்பு, மங்களத்தின் கையைப் பிடித்துக் கொண்டார். "மங்களம்! நாம் அந்தக் காலத்தில் ஆட வேண்டிய நாடகத்தைக் காலம் கடந்து ஆடிவிட்டோம். ஆனால் இன்பத்துக்குக் குறைவில்லை. வாழ்க்கையில் பிணக்கு என்ற ஒரு கட்டத்தை ஏற்படுத்தி, உன் அருமையை எனக்கு உணர வைத்த உனக்கு நாளைக்குப் பட்டுப் புடவை எடுத்துக் கொடுக்கப் போகிறேன், அதுவும் என் பணத்தைப் போட்டு, என் கையால்.'' அப்பொழுது அவருடையகை எழுபது வயதுக் கிழவருடைய கையாக இல்லை; இருபது வயது வாலிபனுடைய கையைப் போல அது மங்களத்தின் கையை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தது.

"விடுங்கள்'' என்று சிணுங்கிய மங்களத்துக்கு அப்பொழுது ஐம்பத்தைந்து வயதில்லை—பதினாறு வயது!

வானத்துச் சந்திரனுக்கு வயசு எவ்வளவு என்பது நமக்குத் தெரியாது. அந்த வெட்கம் கெட்ட கூனிப் பயல், எழுபது வயதில் விழித்துக் கொண்டவர் 'இளமை உலக'த்தைக் கண்டு சிரிப்பாய்ச் சிரித்தான்!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

உங்களுக்கும் சினிமா நட்சத்திரங்களின்

மாசற்ற மேனியழகு



பெண்மையழகி-
ற்கு ஆதாரம் மாச
ற்ற மேனியே என்பது
பத்மினி போன்ற அழ
கிற் சிறந்த சினிமா
நட்சத்திரங்கள் அறி
ந்த உண்மை.
பத்மினி கூறுகிறர் :
" எனது மேனியைத்
தெளிவுடனும் மென்
மையுடனும் வைத்திரு
க்க நான் உபயோகி
ப்பது தூய, வெண்-
மையான லக்ஸ்
டாய்லெட் சோப்."
நறுமணமிக்க லக்ஸ்
டாய்லெட் சோப்பை
உங்கள் மேனியழகிற்
கும் ஏன் உபயோகிக்
கக்கூடாது ? லக்ஸ்
டாய்லெட் ஸ்நானத்
தின் இன்பமே இன்பம்!

தூய, வெண்மையான

லக்ஸ்

டாய்லெட்

சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. 601-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon